# இதழாளர் ஆதித்தனார்



முனைவர் அ. மா. சாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இதழாளர் ஆதித்தனார்

முனைவர் அ. மா. சாமி
ஆசிரியர்
'ராணி' வார இதழ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113

அமரர் ஆதித்தனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-1
(22, 23-5-1990)

**Amarar Athithanar Endowment Lecture No. 1**
Endowment Lectures - Publication No. 23

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Italāḷar Atittaṉār |
| Author | : | Dr. A. Ma. Samy<br>Editor, Rani Weekly<br>Madras |
| Publishers & Copy right | : | International Institute of Tamil Studies<br>T. T. T. I. (Post) Taramani<br>Madras-600 113 |
| Publication No. | : | 152 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | July 1990 |
| Edition | : | First |
| Paper Used | : | Cachar 14.7 kg. |
| Size | : | 21 × 14 Cms |
| Printing types | : | 10pt |
| Number of Copies | : | 1200 |
| Number of Pages | : | VII + 194 |
| Price | : | Rs. 26 |
| Printers | : | Kavinkalai Achagam,<br>Kandhasami Nagar<br>Palavakkam<br>Madras 600 041.<br>Phone : 41 71 41 |
| Binding | : | Board Binding |
| Artist | : | Chandhanam |
| Subject | : | Athithanar as a Journalist. |


---

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

**சிலம்பொலி சு. செல்லப்பன்**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

தமிழுணர்வு தலைப்பட்ட ஆதித்தனாரின் பெயரால் அமைந்துள்ள நிறுவன அறக்கட்டளையின் முதற் சொற்பொழிவு அவரது தமிழ்ப்பணியைத் தமிழுலகிற்கு எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும் என விரும்பினோம். அதற்கு ஏற்புடையவர் 'ராணி' இதழாசிரியர் முனைவர் அ. மா. சாமி என்பதுணர்ந்து அவரை அணுகியபோது, காலக்குறுமையைப் பொருட்படுத்தாது அன்புடன் ஏற்றுக் கொண்டார். ஆதித்தனாரின் இதழ்ப்பணியை முன்னிறுத்தி, அவரின் ஒருமுக வரலாறாக, 'இதழாளர் ஆதித்தனார்' எனும் பொருளில் சிறந்த சொற்பொழிவாற்றி, அருமையான நூலாக்கமும் தந்துள்ளார். ஆசியாவிலேயே மிக அதிக அளவில் விற்பனையாகும் நாளிதழ் எனப் பெருமை கொண்ட 'தினத்தந்தி'யை உருவாக்க மேற்கொண்ட முயற்சிகளையும், வளர்ப்பதில் பெற்ற இன்னல்களையும், காட்டிய சலியாத உழைப்பினையும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். ஊழையும் உப்பங்கண்ட உயர்வினராக மாறிய சாதனையாளரை இந்நூல் வழி போற்றியுள்ள நூலாசிரியரைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

'அமரர் ஆதித்தனார் அறக்கட்டளையை', 'ஆதித்தனார் கல்வி நிறுவனம்' வழி நிறுவனத்தில் நிறுவியுள்ள அன்னாரது அருமைப் புதல்வர் திரு. சிவந்தி ஆதித்தனுக்கு நிறுவனத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவிக்கிறேன். நிறுவன வளர்ச்சியில் தனி அக்கறை காட்டும் நிறுவனத் தலைவர், கல்வியமைச்சர், மாண்புமிகு முனைவர் க. அன்பழகனாருக்கும் எங்கள் நன்றி. மற்றும் அறக்கட்டளைச் சொற்பொழிவுப் பொறுப்பாளர் ச. சிவகாமி; அச்சுப் படி திருத்தம் செய்த ஆய்வு மாணவர் தி.மு. கந்தசாமி; சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்துள்ள கவின்கலை அச்சகத்தார் ஆகியோருக்கும் நன்றி.

சென்னை
27-7-90

அன்புடன்
சு. செல்லப்பன்



# ஆசிரியர் அறிமுகம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருணாசலம் மாரிச்சாமி |
| பிறந்த நாள் | : | 8-7-1935 |
| சொந்த ஊர் | : | கோப்பைநாயக்கன்பட்டி, காமராசர் மாவட்டம். |
| பணி | : | உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்ததும், 1955 இல் திருச்சியில் 'தினத்தந்தி' செய்தியாளராகச் சேர்ந்தார். 1958 இல் சென்னையில் 'தினத்தந்தி' நிர்வாக ஆசிரியர் ஆனார். 1962 முதல் ''ராணி'' வார இதழின் ஆசிரியராக இருக்கிறார். ''ராணி முத்து'' (1969)., 'ராணி காமிக்ஸ்'' (1988) ஆகிய இதழ்களின்ஆசிரியராகவும் பணியாற்றிவருகிறார் இதழியல்பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்து கிறார். |
| நூல்கள் | : | பெருங்கதைகள் 65. சிறுவர் கதைகள் 20. ''அமைச்சர் ஆதித்தனார்'' (1969) ''நாள்தாள் எழுத்தாளர் கையேடு'' (1971-தொகுப்பாளர்), ''தென்பாண்டிச்சீமை'' (1986), ''தமிழ் இதழ்கள் தோற்றம்-வளர்ச்சி'' (1987). |
| பயணம் | : | கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் பயணம் செய்துள்ளார். இந்திய மாநிலங்களிலும் பல பயணங்களை மேற்கொண்டுள்ளார். பயணப்பாடுகளை நூல்களாக எழுதியுள்ளார். ''குட்டித் தீவை எட்டிப் பார்த்தேன்'' என்ற பயண நூலுக்குத் தமிழ்நாடு அரசின் பரிசு கிடைத்தது, (1984). |
| பரிசுகள் விருதுகள் | : | வி. ஜி. பி. இலக்கியப் பரிசு (1988), பாண்டி பல்கலைக்கழகம் பரிசு (1989), ''அருந்தமிழ் வல்லவர்'' (1986), ''முனைவர்'' (1987), ''இதழ்த்தமிழ் வல்லவர்'' (1987). ''மதுரத் தமிழ் மாமணி'' (1988) பாரதிதாசன் விருது (1990). |
| முகவரி | : | 1, கிரசண்டு சாலை, செனாய் நகர், சென்னை-30 |

# முன்னுரை

இரட்டை மகிழ்ச்சியைச் "சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல" என்று சொல்லுவார்கள். எனக்கோ பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்தது போலப் பலவகை மகிழ்ச்சி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக முனைவர் ஆ. நா. பெருமாள் அவர்கள் இருந்தபொழுது எங்கள் அய்யா சிவந்தி ஆதித்தன் அவர்களைச் சந்தித்து, இந்த அறக்கட்டளை அமைத்தார்கள். அப்பொழுது இதற்கு நானும் ஒரு கருவியாக இருந்தேன்......

இப்பொழுது எனக்கே அந்த அறக்கட்டளைச் சொற்பொழி வாற்ற அரும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது......

அதிலும் அறக்கட்டளையின் முதல் சொற்பொழிவு, இது...

இதிலும் வணக்கத்துக்குரிய எங்கள் பெரிய அய்யா ஆதித்தனார் அவர்களைப் பற்றிப் பேச வாய்ப்பு...

மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனேன்.

இத்தனைக்கும் காரணமான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இன்றைய இயக்குநர், அன்பு நிறைந்த அறிஞர், ஆற்றல்மிகு முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்!

அவர்கள் இந்நூலுக்கு அழகிய அணிந்துரை ஒன்றும் அளித் திருக்கிறார்கள். நூல்களில் முன்னுரை அணிந்துரைகளைப் படிக்கும் வழக்கமுடையவன், நான். இவர்கள் எப்படித்தான் ஒரு மாணவனைப் போல நூல் முழுவதும் படித்து, ஆய்வு செய்து, ஆழமான முன்னுரையாக எழுதுவார்களோ! எனக்குத் தெரிந்து இவர் அளவுக்கு உண்மையாகவே நூலைப் படித்து, அதன் சிறப்பு களை வெளிப்படுத்தி முன்னுரை எழுதுகிறவர் வேறு எவரும் இலர். இந்த அணிந்துரைக்காகவும் இவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறக்கட்டளை அமையக் காரணமாக இருந்த ஆ. நா. பெருமாள் அவர்களையும் இந்த இனிய வேளையில் நினைவு கூர்ந்து நன்றி கூறுகிறேன்.

மதிப்புக்குரிய அய்யா எஸ். டி. ஆதித்தன் அவர்கள் தனது முதுமையையும் (85 வயது) பொருட்படுத்தாது, பழைய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தி என்னிடம் கூறினார்கள். அஞ்சல்களிலும் எழுதி அனுப்பினார்கள். தினத்தந்தியின் தலைமை மேலாளர் சோமசுந்தரம் அவர்கள், தலைமைக் காசாளர் பால்வண்ணன் அவர்கள் ஆகியோரும் நிறையச் செய்திகளைச் சொல்லி எனக்கு உதவினார்கள். இவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

பேராசிரியை முனைவர் செல்வி அ. சாந்தா அவர்களின் முனைவர் பட்டத்துக்கான 'தினத்தந்தியின் இதழியல் உத்திகள்' என்ற ஆய்வு ஏட்டை நான் தாராளமாகப் பயன்படுத்தியிருக்கிறேன். இவருக்கும் எனது நன்றி.

நான் உரை நிகழ்த்த இருக்கும் செய்தியைச் சொன்னதும் எங்கள் அய்யா சிவந்தி ஆதித்தன் அவர்கள் மிக மிக மகிழ்ந்தார்கள். இந்த ஆதித்தனார் அறக்கட்டளையை அமைத்தவர்களும் அவர்களே. என் சொற்பொழிவு சிறப்படைய வழக்கம் போல எல்லா வகையிலும் அவர்கள் எனக்கு உதவி செய்தார்கள். பழைய ''தமிழன்'', ''தந்தி'', ''தினத்தந்தி'' இதழ்கள், பழைய கோப்புகள் முதலியவற்றைப் பார்த்துக் குறிப்பு எடுத்துக் கொள்ளவும், நகல் எடுக்கவும் அன்புடன் அனுமதி அளித்தார்கள். அவர்கள் வெளியிட்டுள்ள ஆதித்தனாருக்கு அஞ்சலி, அமைச்சர் ஆதித்தனார், தினத்தந்தி வெள்ளிவிழா சொற்பொழிவுகள், தினத்தந்தி வெள்ளிவிழா மலர், ''ராணி'' வெள்ளிவிழா மலர், நெல்லை மாலைமுரசு வெள்ளிவிழா மலர், ஆதித்தனார் கல்லூரி வெள்ளிவிழா மலர் முதலிய வெளியீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் தயவுடன் அனுமதி தந்து உதவினார்கள். அவர்களின் அனுபவங்களையும் தெரிவித்தார்கள். வேறு வசதி வாய்ப்புகளையும் செய்து கொடுத்தார்கள். அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அய்யா ஆதித்தனார் அவர்கள் தங்கள் அனுபவங்களை எழுதி வைத்துப் போகவில்லையே என்ற ஏக்கம் எனக்கு எப்பொழுதுமே உண்டு. அவர்களுடன் பழகியவர்கள்—அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள்—அவர்களிடம் பணியாற்றியவர்கள் தங்கள் அனுபவங்களையாவது எழுதினால்தான் அந்தக் குறை தீரும். அதற்கு இவ்வுரை முன்னோடியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

7-5-1990
சென்னை

அ. மா. சாமி
(ஆதித்தனாரின் மாணவன்)

# உள்ளுறை


| | பக்கம் |
| --- | --- |
| எழுத்தாணியுடன் பிறந்தவர் | 1 |
| முதல் இதழ் | 13 |
| தனிச்சிறப்புப் பெற்ற தமிழன் | 20 |
| நமது நோக்கம் | 55 |
| தந்தி பிறந்தது | 63 |
| உழைப்பால் உயர்ந்தார் | 75 |
| அருங்கொடைகள் | 90 |
| தினத்தந்தித் தமிழ் | 112 |
| செய்...தி! | 123 |
| இதழாளர் கையேடு | 147 |
| சில செய்திகள் | 162 |
| விருதுகள் | 177 |
| ஆதித்தனார் ஆண்டுகள் | 185 |
| துணைநூற்பட்டியல் | 190 |
| சொல்லகராதி | 193 |

# எழுத்தாணியுடன் பிறந்தவர்

இந்த ஆண்டு (1990) மார்ச்சு 4ஆம் நாள் திருச்செந்தூரில் உள்ள ஆதித்தனார் கல்லூரியின் வெள்ளி விழா கொண்டாடப் பட்டது. நாட்டுப்புற இளைஞர்களும் கல்வி கற்று, பட்டம் பெற்று, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ் நாட்டின் தென்கோடியில் உள்ள சிற்றூரில் தமிழர் தந்தை அமரர் ஆதித்தனார் அமைத்த கல்லூரி, இது. அவர்களுக்குச் சிறப்புச் செய்யும் முறையில் "தமிழர் தந்தை ஆதித்தனாரின், புகழுக்குப் பெரிதும் காரணம் அவரது இதழ்ப் பணியா? அரசியல் பணியா?" என்ற தலைப்பில் வெள்ளி விழாவில் பட்டிமன்றம் நடந்தது.

பேராசிரியர் பெரும்புலவர் நமசிவாயம் இப்பட்டி மன்றத் துக்கு நடுவராக இருந்தார். அரசியல் பணியே என்ற அணிக்குப் பேராசிரியை சக்திப்பெருமாளும், இதழ்ப் பணியே என்ற அணிக்குப் பேராசிரியர் சொல் விளங்கும் பெருமாளும் தலைமை தாங்கி வாதிட்டார்கள். ஏறத்தாழ இரண்டரை மணி நேரம் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. முடிவில் நடுவர் தமது தீர்ப்பை வழங்கினார். அவரது தீர்ப்பு,

"ஆதித்தனாரின் புகழுக்கு மிகுதியும் காரணமாக அமைவது இதழ்ப்பணியே. அவரது அரசியல் பணிக்குக் கூட உறுதுணை யாக இதழ்ப் பணியே இருந்தது".

அரங்கிலே கூடியிருந்தோர் அகமகிழ்வுடன் கைதட்டி ஆரவாரம் செய்து இத்தீர்ப்புக்கு ஆதரவு அளித்தார்கள். அப் பொழுது நானும் அரங்கிலே இருந்தேன், "சுதந்திரத் தமிழ்

நாடு'' என்ற கொள்கைதான் அவர்களுக்கு எதிர்காலத்தில் உலக ளாவிய நிலையான புகழைத்தரப் போகிறது என்ற கொள்கை கொண்டவன், நான். நானும்கூட, 'இப்போதைக்கு இத்தீர்ப்பு சரியானதுதான்' என்று ஏற்றுக்கொண்டேன்.

''ஆதித்தனாரின் பணிகள் பலவாக இருப்பினும், 'இதழாளர் ஆதித்தனார்' என்பதே அவருக்குக் கிடைத்தத் தனி முத்திரை யாக நிலைத்து விட்டது'' என்பார், பேராசிரியர் முனைவர் சாலை. இளந்திரையன் (''ஆதித்தனாருக்கு அஞ்சலி'') அவர் களுக்குச் சுதந்திரத் தமிழ்நாடும், தினத்தந்தியும் இரு கண்களைப் போன்றவை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

## மலரும் மணமும்

''உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு'' என்ற அரசியல் கொள்கையுடன் வாழ்ந்தவர், ஆதித்தனார். ஆனால், அவரின் உடலோடும், உயிரோடும் பரம் பொருளாக இரண்டறக் கலந்து, மலரும் மணமுமாக ஒன்றிப்போனது தினத்தந்தி இதழே என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆதித்தனார் "தினத்தந்தி''யைப் பற்றி நினையாத நேரமே கிடையாது. அப்படிச் சொல்வதுகூடத் தவறு ''உள்ளினேன்' என்றதும், ''ஏன் மறந்தீர்?'' என்று ஊடினாளாம், வள்ளுவர் காட்டும் வஞ்சிக் கொடி ஒருத்தி. மறந்தால் அல்லவா நினைப் பதற்கு! அவர் ஊண் மறந்ததுண்டு, உறக்கம் மறந்ததுண்டு, மனைவி மக்களை மறந்ததுண்டு. ஆனால், ஒரு கணமும் தினத் தந்தியை மறந்ததேயில்லை! அவரின் நெஞ்சமெல்லாம் நிறைந் தது, ''தினத்தந்தி''. அவரின் பேச்சும் மூச்சும் 'தினத்தந்தி'யே.

அவர் காலையில் கண் விழிப்பது ''தினத்தந்தி''யின் முகத்தில் தான். நான் சொன்னால், நம்புவது கடினமாகத்தான் இருக்கும். ஆனால், நண்பர்களே, நம்பித்தான் ஆக வேண்டும். ''தினத் தந்தி''யின் அதிபர் அவர்தான். ஆனால், நாள்தோறும் காலை யில் பையனைக் கடைக்கு அனுப்பிதான் ''தினத்தந்தி'' வாங்கி வரச் சொல்லுவார்கள். சில நாளில் அவரே கடைக்குச் சென்று ''தந்தி'' வாங்கி வருவது உண்டு. அலுவலகத்தில் இருந்து அவர் வீட்டுக்குக் கொடுத்து அனுப்பினால் நல்ல படியாகப் பார்த்து அனுப்பிவைத்துவிடுவார்களாம்! வாசகர்களுக்குப் போகும் படி களில் உள்ள குற்றம் குறைகள் அவருக்குத் தெரியாமல் போய்

விடுமாம்! அதனால்தான் அவர் நாள் தோறும் காலையில் ''தந்தி''யைக் கடையில் வாங்கிப் படிக்கும் வழக்கத்தைக் கைக் கொண்டிருந்தார்.

தந்தியுடன் காலையில் தொடங்கும் அவரின் ஒவ்வொரு நாளும் ''தந்தி''யுடன்தான் முடியும். இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் அலுவலகத்துடன் ''பேசி'' வழியே தொடர்பு கொண்டு, புதிதாக என்ன செய்திகள் வந்துள்ளன—எட்டுப் பத்திச் செய்தி என்ன என்பவை போன்ற விவரங்களை ஆசிரியரிடம் கேட்டுவிட்டுத்தான் தூங்கச் செல்லுவார். வெளியூர்களில் இருக்கும் நாட்களில் கூட—அரசியல் தொண்டனாக, அவைத் தலைவராக, அமைச்சராகப் பணியாற்றிய நாட்களில் கூட—இரவு எந்நேரமானாலும் அலுவலகத்துடன் ''பேசு''வதை வழக்கமாக வைத்திருந்தார்.

மனைவி நலமா, பிள்ளைகள் நலமா என்று அவர் ஒரு நாளும் கேட்டதில்லை. ஆனால், தினத்தந்தி நலமா என்று கேட்காத நாளில்லை. இதற்காகவே தொலைபேசி இல்லா இடத்தில் இரவு தங்குவதேயில்லை. அவர் தங்கும்—உறங்கும் அறையில் கட்டாயம் ''பேசி'' இருக்கவேண்டும். தினத்தந்தி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுவதுதான் அவரின் அன்றாட இறுதி நிகழ்ச்சியாக இருந்து வந்தது. அவர்க்குக் ''காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இந்நோய்''!

அய்யாவின் இறுதி மூச்சாக இருந்ததும், ''தினத்தந்தி''யே. மருத்துவமனையில் மரணப்படுக்கையில் இருந்த நேரத்தில், இளைய மகனார் சிவந்தி ஆதித்தனை அருகே அழைத்து, தினத்தந்தியை எப்படி எப்படியெல்லாம் கட்டிக்காக்க வேண்டும் என்பதை இறுதியாக ஒரு முறை எடுத்துச் சொல்லிவிட்டுத்தான், மீளாத் துயிலில் ஆழ்ந்தார்.

### எழுத்தாணியுடன் பிறந்தவர்

''கருவிலே திருவுடையார்'' என்பதை ஆங்கிலத்தில் ''வாயில் வெள்ளிக் கரண்டியுடன் பிறந்தவர்'' என்பார்கள். கர்ணன் காதிலே குண்டலத்துடன் பிறந்தான் என்பது கதை. அதுபோலக் கையிலே எழுத்தாணியுடன் பிறந்தவர், ஆதித்தனார். இதழ் என்பது அவர்களின் குருதியிலே ஊறிப்போன ஒன்று. அவர் பிறவியிலேயே ஓர் இதழாளர். இதழாளராகப் பிறந்தார்!

இதழாளராக வாழ்ந்தார்; இதழாளராக மறைந்தார். சுதந்திரத் தமிழ்நாடு காண்பது அவரின் வேட்கை. ஆனால், "தினத் தந்தி"யோ அவரின் வாழ்க்கை.

எழுத்தாற்றல் என்பது அவருக்கு மரபுவழிச் செல்வம் என்று சொல்லலாம். அவரின் தந்தையார் சிவந்தி ஆதித்தர் கவிஞர் அல்லர் என்றாலும், கவிதைபாடும் ஆற்றல் படைத்தவர். அவர் எழுதிய சில பாடல்களை இப்பொழுதும் (1990) தமையனார் எஸ். டி. ஆதித்தன் பாடிக்காட்டுவதுண்டு. இவரும் சிறந்த எழுத்தாளர்—இதழாளர். சேலத்தில் ப. வரதராசலு நடத்திய "தமிழ்நாடு" இதழில் துணை ஆசிரியராக தமது வாழ்க்கையைத் தொடங்கியவர், அவர். பிறகுதான் வழக்கறிஞராக, நாடாளு மன்ற—சட்டமன்ற உறுப்பினராகப் புகழ் பெற்றார். சேலத்தில் "மாலை முரசு" தொடங்கிய வேளையில், "இதழ் நடத்த வேண்டும் என்ற ஆர்வம் என் அண்ணனைப் பார்த்துத்தான் எனக்கு ஏற்பட்டது. பின்னாளில் அந்த முயற்சியை என் அண்ணன் கைவிட்டுவிட்டார். நான் தொடர்ந்துகொண்டிருக்கிறேன்" என்பர் ஆதித்தனார்.

இந்த அண்ணன்—தம்பி பற்றி இன்னும்கூட ஒரு செய்தியைச் சொல்ல முடியும். இருவரையும் "இராமர்—லெட்சுமணன்" என்று சொல்வதுண்டு. ஆனால், ஒரு வேறுபாடு—இளையவர் இராமர், மூத்தவர் லெட்சுமணன்!

### விளையும் பயிர் முளையிலே

ஆதித்தனார் இளமைப் பருவத்தில் எழுதிய கதை—கட்டுரைகள் பற்றிய விவரம் இப்பொழுது நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், படங்கள் வரைவதில் சிறந்து விளங்கியிருக்கிறார்.

படம் வரைவது அவருக்கு மரபுவழிச் செல்வம். குடும்பத்தில் அனைவரும் குறிப்பாகப் பெண்கள்—அழகாகப் படம் வரைவார்கள். தமையனார் எஸ். டி. ஆதித்தன் துணை ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினாலும், ஓவியராகப் புகழ் பெற்றார். அவர் வரைந்த கருத்துப் படங்கள் தமிழ்நாடு, சுதேசமித்திரன், ராஜாஜி நடத்திய, விமோசனம், இந்து, மெயில், ஸ்டேட்ஸ்மேன், சென்னை சட்டக் கல்லூரி இதழ் முதலியவற்றில் வெளிவந்துள்ளன. ஒரு படம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று இலக்கணம் வரைந்து காட்டும் மிகச் சிறந்த நிபுணர், அவர்.

ஆதித்தனாருக்கு அப்பொழுது 15 வயது. "ஆட்டோதில் பகார்" என்ற நறுமணம் (செண்ட்) தயாரிப்பு நிறுவனம், தனது விளம்பரத்துக்குப் பொருத்தமாகப் படம் வரைந்து அனுப்பினால் பரிசு வழங்கப்படும் என்று ஆங்கில இதழ்களில் விளம்பரப்படுத்தியிருந்தது. அதைப் பார்த்த அய்யா ஒரு படம் வரைந்து அனுப்பினார். அரண்மனைக்கு வரும் ஒரு நறுமண வியாபாரி, ஒரு குடுவையைத் திறக்க, அதிலிருந்து வெளிப்படும் நறுமணம் அலை அலையாக அந்தப்புரத்துக்குச் சென்று அங்கேயிருக்கும் அரசியையும் மயக்குவது போன்றது, அப்படம். இப்படம் பரிசு பெற்றதுடன், விளம்பரங்களிலும் இடம் பெற்றது.

அவரிடம் இயல்பாக அமைந்திருந்த இந்த ஓவியத் திறமை தான், பின் நாளில் கருத்துப்படம் வரைய ஓவியர்களுக்குப் படம் வரைந்து காட்டப் பயன்பட்டது. கதைகளுக்குக்கூட எப்படிப் படம் வரைய வேண்டும் என்று வரைந்து காட்டுவார்.

அவர் படிப்பில் படுகெட்டியாக விளங்கினார். நாலாவது பிறந்த நாள் அன்று பள்ளிக்கு அனுப்பப்பட்டு, குழந்தை (அரை) வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அடுத்த பத்தாம் நாளே முதல் வகுப்புக்கு அனுப்பப்பட்டார். அதன் காரணமாக, பள்ளி இறுதித் தேர்வு எழுத வயது இல்லை என்று நிறுத்தப்பட்டு, அடுத்த ஆண்டு எழுதினார். கணக்கில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றார்.

ஆதித்தனாரின் சொந்த ஊர், திருச்செந்தூரை அடுத்த காயாமொழி என்ற சிற்றூர். தந்தையார் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த திருவைகுண்டத்தில்தான் படிப்பு தொடங்கியது. அங்கு உயர்நிலைப் படிப்பு முடிந்ததும், திருச்சிக்குச் சென்று ஜோசப் கல்லூரியில் பட்டப் படிப்பைத் தொடர்ந்தார் அங்குக் கால் பந்தாட்ட வீரராக விளங்கினார். "ஜூலியஸ் சீசர்" நாடகத்தை நடத்தினார். பழைய ஏட்டுக் கடைக்குச் சென்று சுவடிகள் வாங்கி வந்து படிப்பதுதான் அவரின் பொழுது போக்காக இருந்தது. கல்லூரி இலக்கிய மன்றத்தில் செயலாளராகவும் பணியாற்றினார்.

"அய்யா அவர்கள் உயர் கல்வி பெற ஊர்விட்டு ஊர் போனது மட்டுமல்ல; பல மாவட்டங்களையும் கடந்து, திருச்சிக்குச் சென்று, எம்.ஏ. பட்டம் பெற்றார்கள். அதற்கு அரை நூற்றாண்டு கழிந்தும் கூட திருச்செந்தூரிலும், அதைச் சுற்றி உள்ள சிற்றூர்களிலும் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் கல்லூரிக்

கல்வியைப் பெற ஊர்விட்டு ஊர் போகும் நிலையே நீடித்தது. இந்த மக்களின் கல்விக் கண்களைத் திறந்து விட வேண்டும், இவர்களும் எல்லாரையும் போலப் படித்து, உயர் பட்டங்கள் பெற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்தக் கல்லூரியைத் தமிழ் நாட்டின் தென்கோடியிலுள்ள திருச்செந்தூரில் அய்யா அவர்கள் தொடங்கினார்கள்'' என்று யா. சிவந்தி ஆதித்தன் குறிப்பிடும் செய்தி(''ஆதித்தனார் கல்லூரி வெள்ளி விழா மலர்'') இங்கு நினைவு கூரத்தக்கது.

## நூல்கள் வெளியிட்டார்

''ஆதித்தனார்'' என்பது அவரின் குடும்பப் பெயர். ''சிவந்தி பாலசுப்பிரமணிய ஆதித்தன்'' என்ற முழுப் பெயரையே ''ஆதித்தனார்'' என்று சுருக்கமாகப் பெருமையுடன் கூறுகிறோம். (வீட்டில் அழைத்த பெயர்—அப்புலிங்கம்).

காயாமொழி ஆதித்தர்கள் சோழ அரச வழியைச் சேர்ந்தவர்கள் என்று ''பாண்டிய தேச ஆதித்த வம்ச சரித்திரம்'' என்ற வரலாற்று நூல் கூறுகிறது. ஆனால், ஆதித்தனாரின் குடும்பமோ ஒரு நடுத்தரக் குடும்பமாகத்தான் வாழ்ந்து வந்தது. தந்தையார் வழக்கறிஞர் என்றாலும், ஒரு குடும்பத்தை நடத்தும் அளவுக்குத்தான் வருமானம் இருந்தது. அவருக்கோ ஐந்து குழந்தைகள்-மகன்கள் மூவர், மகள்கள் இருவர். மூத்த மகனைத் தான் நன்றாகப் படிக்க வைக்க அவரால் முடிந்தது. இவரோ இரண்டாவது மகன். ஆனால், இவருக்குப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம். எனவே, தந்தையிடம் அதிகம் எதிர்பாராமல், படிப்புச் செலவுக்கும், உணவு விடுதிச் செலவுக்கும் தானே வருவாய் காண வழி தேடினார்கள். அப்பொழுது அவரிடம் இயற்கையாக இருந்த எழுத்தார்வம் கை கொடுத்து உதவியது.

திருச்சியில் படித்துக் கொண்டிருந்த பொழுது ''தொழில் நூல் வெளியீட்டகம்'' (ஆர்ட் புக் கம்பெனி) என்ற வெளியீட்டகத்தைத் தொடங்கி, ''மெழுகுவர்த்தி செய்வது எப்படி?'', 'தீப்பெட்டி செய்வது எப்படி?'' ''மை செய்வது எப்படி?'', ''சோப்பு செய்வது எப்படி?'' என்பன போன்ற நூல்களை எழுதி, அச்சிட்டு வெளியிட்டார். இதற்காக ஓர் அச்சகத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார்.

வருவாய்க்கு வழி தேடியவர் நூல்களா வெளியிட்டார் என்று இன்று நாம் ஆச்சரியப்படுவோம்.' சிறந்த வெளியீட்டாளரான

சின்ன அண்ணாமலை, முதன் முதல் ராஜாஜியைச் சந்தித்த பொழுது, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று ராஜாஜி கேட்க, "நூல்கள் வெளியிடுகிறேன்" என்று சின்ன அண்ணாமலை சொல்ல, "அது சரிங்க, சாப்பாட்டுக்கு என்ன செய்கிறீர்கள்?" என்று ராஜாஜி கேட்டாராம்! அது இன்றைய நிலை. ஆனால், அன்று, "சோப்பு செய்வது எப்படி?", "ஊதுவர்த்தி செய்வது எப்படி?" என்பன போன்ற நூல்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. எஸ். எஸ். வாசன் கூடத் தொடக்க காலத்தில் நூல்கள் வெளியிட்டவரே. ஆதித்தனாருக்கு நூல் வெளியீட்டில் கிடைத்த வருமானம், அந்நாளில் ஒரு நடுத்தரக் குடும்பத்துக்குப் போதுமானதாக இருந்தது.

திருச்சியில் முதுகலைப் பட்டம் பெற்றுக் கொண்டதும், தந்தையைப் போல-தனையனைப் போலத் தானும் வழக்கறிஞர் ஆக ஆசைப்பட்ட அய்யா அவர்கள் (தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் தன்னுடைய ஆசிரியரின் பெயரைச் சொல்லுவது இல்லை. "என் ஆசிரியர் பெருமான்" என்றே கூறுவார்; குறிப்பிடுவார். நானும் அப்படியே, "அய்யா அவர்கள்" என்று கூறுவது வழக்கம்)- சட்டக் கல்லூரியில் சேரச் சென்னைக்கு வந்தார். தனது வெளியீட்டகத்தையும் தன்னுடன் சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். சட்டக் கல்லூரிக்கு எதிரிலுள்ள பிராடுவே சாலையில் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து, அதில் தங்கிக் கொண்டு, வெளியீட்டுத் தொழிலையும் தொடர்ந்து நடத்தினார். 1970கள் வரை இக்கட்டிடம் அய்யா விடமே இருந்தது. மதுரையில் "தந்தி" தொடங்கிய காலத்தில் அதன் சென்னை அலுவலகம் இக்கட்டிடத்தில் இயங்கியது.

சென்னையில் அய்யா சிறிது காலமே இருந்தார். "பாரிஸ்டர்" படிப்புக்காக இலண்டன் சென்றார். சென்னை யில் இருந்த வேளையில் "இதழியல்" என்ற ஆங்கில நூலை எழுதி, வெளியிட்டார். பிற நூல்களைப் போன்றே இந்த நூலும் இன்று கிடைக்கவில்லை.

இந்நூலை "இரபீல்டு" என்ற புனை பெயரில் அய்யா எழுதினார். "அந்நாளில் ஆதித்தனார் பெயரை யாரும் அறிய மாட்டார்கள். ஆகவே, ஓர் ஆங்கிலேயன் எழுதியது போலத் தோன்றினால்தான், நூலுக்கு வரவேற்பு இருக்கும். எனவே, அப்படி ஒரு புனை பெயரைச் சூட்டிக்கொண்டார்" என்று எஸ். டி ஆதித்தன் என்னிடம் கூறினார். இந்நூலில் படங்கள்

எப்படிவரைவது என்ற பகுதியை எழுத, தம்பி (அய்யா அவர்கள்) தன்னிடம் ஆலோசனை கேட்டதாகவும் எஸ். டி. ஆதித்தன் தெரிவித்தார். இந்நூல் இருநூறுபக்கம் கொண்டது. விலை மூன்று ரூபாய்.

**செய்தியாளர்**

திருச்சியிலும், சென்னையிலும் தங்கிப் படிக்கவே மகனுக்கு உதவ முடியாத நிலையில் தந்தை இருந்த பொழுது, அய்யா எப்படி இலண்டனுக்குப் படிக்கப் புறப்பட்டார்? இதை அய்யா, ''இலண்டன் செல்வதற்கு முன்பு ''சுதேசமித்திரன்'' சீனிவாச அய்யரை அணுகி, 'சுதேசமித்திரன்' இதழுக்கு இலண்டனில் இருந்து செய்திக் கடிதம் எழுத ஒப்பந்தம் செய்து கொண்டு கிளம்பினேன். அதோடு "டைம்ஸ் ஆப் இந்தியா", ''ஆஜ்'' என்ற உருது இதழ், சில இந்தி இதழ்கள், சில ஆப்பிரிக்க இதழ் களுக்கும் செய்திக் கடிதங்கள் எழுதியனுப்பினேன். இலண்டனில் வெளிவந்த ''ஸ்பெக்டெட்டர்'' வார இதழிலும் எழுதினேன்'' என்று குறிப்பிடுகிறார் ("மயன்'' மாத இதழுக்கு அளித்த நேர் காணல். பிப்ரவரி, 1981).

"1927இல் இலண்டனில் நான் சட்டமும், பொருளாதாரமும் படித்துக் கொண்டிருந்த பொழுது, என் இதழியல் வாழ்க்கை தொடங்கியது'' என்றும், ''இலண்டனில் இதழ்களில் எழுதிக் கொண்டிருந்த பொழுது 'நாமும் இதழ் நடத்த வேண்டும்' என்ற எண்ணம் இருந்தது'' என்றும் இதே நேர் காணலில் கூறி யுள்ளார்.

நேர் கண்டவர்கள்; மனோபாரதி, பீரியன் என்ற இரு இளம் இதழாளர்கள். இவர்கள், "அடுத்த பிறவியிலும் நான் ஓர் இதழாளனாகவே பிறக்க விரும்புகிறேன்'' என்று அய்யா சொன்னதாக எழுதியிருக்கிறார்கள்.

அய்யாவிடம் சுதந்திரத் தமிழ்நாடு என்ற உணர்வைவிட ''தினத்தந்தி'' என்ற உணர்வு மேலோங்கி நின்றதா? அல்லது, அடுத்த பிறவியிலும் இதழாளனாகப் பிறந்து சுதந்திரத் தமிழ் நாடு பெற ஒரு தூண்டுகோலாக விளங்க வேண்டும் என்று விரும்பினாரா?

இந்திய இதழ்களுக்கு இலண்டனில் செய்தியாளராக இருந்த முதல் தமிழர், இவரே!

### திருமணம்

"பாரிஸ்டர்" பட்டம் பெற்றுக்கொண்டு சென்னைக்குத் திரும்பிய ஆதித்தனார் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து, தொழிலும் தொடங்கினார். தொழிலில் முழு மூச்சாக இருந்தார். இதழ் தொடங்கப் பணம் வேண்டுமே!

இந்த வேளையில்தான் சிங்கப்பூரில் பெருந்தொழில் அதிபராகத் திகழ்ந்த தமிழ்நாட்டுக்காரரான ஓ. இராமசாமி நாடார் அய்யாவைப் பற்றிக் கேள்விப்பட்டு, தம் மகளுக்கு ஏற்றவரா என்று பார்த்து வரும்படி, குடும்ப நண்பர் கோவிந்தசாமிப் பிள்ளையை அனுப்பி வைத்தார். அவருக்குப் "பையனை"ப் பிடித்துவிட, எஸ்.டி. ஆதித்தன், சோனைய நாடார் ஆகியோர் "பையன்" வீட்டின் சார்பில் பேசவர, திருமணம் முடிவு ஆயிற்று. அந்த நாளிலேயே தம் திருமணத்தில் வரதட்சணை என்ற பேச்சுக்கே இடம் தரவில்லை.

திருமணம் சிங்கப்பூரில் நடந்தது. "மாப்பிள்ளை"யுடன், தாய்மாமன் சுந்தர மார்த்தாண்ட நாடார், அண்ணி (எஸ்.டி. ஆதித்தனின் மனைவி) ஜானகி அம்மாள், சிவசுப்பிரமணிய நாடார், நடேச நாடார் ஆகியோர் சிங்கப்பூருக்குப் போனார்கள். திருமணம் முடிந்து காயாமொழிக்கு மறு வீடு வந்தார்கள்.

அப்பொழுது நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடலாம். புதுமாப்பிள்ளையின் கையில் செலவுக்குப் பணம் இல்லை. அண்ணனிடம் கேட்டார். அண்ணன் தனது தங்கப் பித்தான்களையும், மனைவியின் சங்கிலி ஒன்றையும் விற்று ரூ. 300 கொடுத்தார். அதன்பின் சிங்கப்பூர் சென்று முதல் வருமானம் வந்ததுமே, சென்னையில் உள்ள உம்மிடி நகைக் கடைக்குப் பணம் அனுப்பி அண்ணிக்கு ஒரு தங்கச் சங்கிலி அனுப்ப ஏற்பாடு செய்தார்.

### சிங்கப்பூர் பயணம்

அய்யாவின் அன்றைய பொருளாதார நிலையை இந்நிகழ்ச்சி நமக்குத் தெரிவிக்கிறது. இதழ் தொடங்க வேண்டும் என்ற ஆசை, அவருக்கு நெஞ்சம் நிறைய இருந்தாலும் பை காலியாகவே இருந்தது.

ஒரு நாள் மாமனாரிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தார் மாமனாரோ கோடீசுவரர். தந்தை பெரியார் 1929 ஆம்

ஆண்டு சிங்கப்பூர் சென்ற பொழுது, அவரின் பயணத்துக்காகவே புதிய "ரோல்ஸ்ராய்" கார் வாங்கிக்கொடுத்தவர், இராமசாமி நாடார்.

"ஓர் இருபதாயிரம் ரூபாய் இருந்தால், உடனே ஒரு வார இதழ் தொடங்கிவிடலாம். அதையே பின்பு நாளிதழாக மாற்றிக் கொள்ளலாம்" என்று மாமனாரிடம் சொன்னார். மாமனார் மனம் வைத்தால், ரூ. 20 லெட்சம் கூடக் கொடுக்க முடியும். ஆனால், மருமகன் இதழ் நடத்தப் போவது மாமனாருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. "அரிசி வாங்கி விற்றால், சாக்காவது மிச்சப்படும்; பருப்பு வாங்கி உடைத்தால், உமி, குருணையாவது மீதப்படும். இதழ் நடத்தினால், என்ன மிஞ்சும்? இருப்பதும் போய்விடும்" என்று மாமனார் அறிவுரை கூறினார்.

அவர் கூறியது தவறு அல்ல. எந்தப் பொருளையும் அடக்க விலைக்குக் குறைவாக விற்க மாட்டார்கள். ஆனால், இதழ்களை மட்டும் அடக்க விலைக்கும் குறைவாக விற்பது உலகம் முழுக்க வழக்கமாக இருக்கிறது. இன்றுங்கூட பத்துப்பக்கமுள்ள ஒரு "தினத்தந்தி"யின் அடக்க விலை ஏறத்தாழ ரூ. 2 ஆகிறது. ஆனால், ரூ. 1-40க்குத்தான் விற்பனை செய்கிறார்கள். அதுமட்டு மல்ல; அரிசியோ பருப்போ இன்று விற்காவிட்டால், நாளை விற்க லாம். ஒரு மாதம் கழித்து விற்றுக்கூட காசு ஆக்கலாம். ஆனால், இதழ் இன்று விற்பனையாகாவிட்டால், நாளை பழைய தாள் ஆகி விடும்; அப்பொழுது அது 25 காசுக்குக்கூட விலைபோகாது! நாள் தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை இழக்கும் ஒரு தொழிலைத் தொடங்க யார்தான் உதவி செய்வார்கள்?

தன்னுடைய மருமகன் சிங்கப்பூர் சென்று, "பாரிஸ்டர்" (வழக்கறிஞர்) தொழில் செய்ய வேண்டும் என்பது மாமனாரின் ஆசை. அப்பொழுது சிங்கப்பூர் "பாரிஸ்டர்"களின் தங்கச்சுரங்க மாக விளங்கியது. "சிங்கப்பூரிலே பாரிஸ்டர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. நீங்களும் அங்கே போய் சம்பாதிக்க லாம். அந்தப் பணத்தைக் கொண்டுவந்து இங்கே இதழ் தொடங்க லாம்" என்று மாமனார் நயமாகச் சொன்னார். இது நல்ல யோசனை என்றே ஆதித்தனாருக்குத் தோன்றியது, உடனே சிங்கப்பூருக்குக் கிளம்பிவிட்டார்.

சிங்கப்பூரில் எட்டு ஆண்டு காலம் பாரிஸ்டர் ஆகத் தொழில் நடத்தினார். நூற்றுக்கணக்கான வழக்குகளில் வாதாடினார். ஆனால், ஒரு வழக்கில்கூடத் தோல்வி அடையவில்லை. நல்ல

புகழ். சிங்கப்பூர் வழக்கறிஞர் சங்க நிர்வாகக்குழு உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவ்விதம் வெற்றி பெற்ற முதல் ஆசிரியர், அய்யாவே. நல்ல பொருளும் கிடைத்தது. போர் காரணமாகத் தமிழ் நாட்டுக்குத் திரும்பு முன்பு "சோமப்பா வழக்கு" என்ற வழக்கை நடத்தி வந்தார். போர் முடிந்த பின்பு எஸ்.டி. ஆதித்தன் சிங்கப்பூர் சென்று, "கொடுப்பதைக் கொடுங்கள்" என்று தீர்த்து வாங்கிய பணம் மட்டும், அறுபது ஆயிரம் ரூபாய்!

சிங்கப்பூரிலேயே ஒரு நாளிதழ் தொடங்க அய்யா விரும்பினார். ஆனால், அதற்கு நேரம் இருக்கவில்லை. வழக்கறிஞர் தொழில் என்பது இரவு முழுவதும் கண் விழித்துக் கட்டுகளைப் படிக்க வேண்டிய தொழில். நாளிதழ் நடத்துவோரும் நள்ளிரவிலும் கண்விழித்திருக்க வேண்டும். அய்யா எப்பொழுதுமே ஒரே நேரத்தில் இரு குதிரைகளில் சவாரி செய்ய விரும்புவதில்லை. அர்ச்சுனன் குறிபார்ப்பதுபோல, ஒன்றையேதான் நோக்குவார். எனவே, இதழ் தொடங்கும் முயற்சியில் இறங்கவில்லை.

கோ. சாரங்கபாணி "தமிழ் முரசு" நாளிதழ் தொடங்க அய்யா உதவி செய்தார். இருவருமே சிங்கப்பூரில் பெரியாரின் பெருந் தொண்டர்களாக விளங்கினார்கள். அங்கே "தமிழர் சீர்திருத்தச் சங்கம்" அமைத்து நடத்தினார்கள். அந்த வகையில் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள்.

### தமிழ் நாட்டுக்குப்போ

இரண்டாவது உலகப் பெரும் போர் தொடங்கி, சிங்கப்பூரில் சப்பானியரின் குண்டுகள் விழத் தொடங்கிய அன்று அய்யா சிங்கப்பூரில் இருந்து தமிழ் நாட்டுக்குக் கிளம்பினார். அப்பொழுதுங்கூட, நல்ல வருமானம் வரும் தொழிலை விட்டு வர அவருக்கு மனமில்லை. இதழ் நடத்துவது என்பது யானையைக் கட்டித் தீனி போடுவது போன்றது என்பதை அறிந்தே இருந்தார். அந்த வெள்ளை யானைக்கு நிறையத் "தீனி" சேர்த்துக்கொள்ள அவர் விரும்பியிருக்கலாம்; ஆனால், தலைக்கு மேலே குண்டுகள் விழுந்துகொண்டிருக்கின்றன. தானே ஒரு முடிவுக்கு வர முடியாத அய்யா "சிங்கப்பூரிலேயே இரு" என்றும், "தமிழ் நாட்டுக்குப் போ" என்றும் இரு சீட்டுகள் எழுதி, குலுக்குப் போட்டு, ஒரு சீட்டை எடுத்துப் பிரித்துப் படித்தார்.

''தமிழ் நாட்டுக்குப் போ'' என்றிருந்தது. அய்யா தாயகம் திரும்பி, தமிழ் நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் இனித் தொண்டாற்ற வேண்டும் என்பது தமிழ்த் தாயின் சித்தம் போலும்!

1942 பிப்ரவரி 4 ஆம் நாளைக்கும் 5 ஆம் நாளைக்கும் இடைப் பட்ட நள்ளிரவில் ஒரு விமானத்தில் ஏறி சிங்கப்பூரைவிட்டுக் கிளம்பிய ஆதித்தனார், அந்த விமானம் வழிமறிக்கப்பட்டு, ஜாவா போய் இறங்கி, அங்கு இருந்து கப்பல் ஏறி, கப்பலிலும் குண்டு விழ ஆத்திரேலியா சென்று, இலங்கை வந்து, ஏப்ரல் 4ஆம் நாள் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அதன் பின்தான் இதழ்த்தொழிலில் அடியெடுத்துவைத்து, இதழியலில் இந்தியாவின் முடிசூடா மன்னராக வளர்ச்சி அடைந்தார்.

அது எப்படி?

# முதல் இதழ்

ஆதித்தனார் சரியான நேரத்தில் காயாமொழிக்கு வந்து சேர்ந்தார் என்று சொல்ல வேண்டும். அவர் வந்த பொழுது, தந்தையார் சிவந்தி ஆதித்தர் மரணப்படுக்கையில் இருந்தார். போர் நடந்துகொண்டு இருந்ததாலும், அய்யா வந்த கப்பல் எங்கெங்கோ சுற்றிக்கொண்டு வந்ததாலும், மகனைப் பார்க்காமலே கண் மூடிவிடுவோமோ என்று தந்தையார் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். ஆனால், மகனைப் பார்த்த மன அமைதியுடன் மறுநாள் இயற்கை எய்தினார். அய்யாவிற்கும் அன்புத் தந்தையைக் கடைசியாகக் காணும் பேறு கிடைத்தது.

தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளையெல்லாம் முடித்து, அய்யா மதுரைக்கு வந்தார். கொஞ்சமும் தாமதமின்றி உடனடியாகத் தனது கனவுகளை நிறைவேற்றத் தொடங்கினார். அவரின் கனவுகள் இரண்டு. ஒன்று-சுதந்திரத் தமிழ்நாடு. இது அரசியல் கனவு. இரண்டு-இதழ் நடத்துவது. இது இன்பக்கனவு.

இந்த இரு கனவுகளுமே அய்யா இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும்பொழுது ஏற்பட்டவைதான். அவை பகல் கனவு அல்ல; ''பார்த்திபன் கனவு'' போன்றது ஆதித்தனார் கனவு.

சுதந்திரத் தமிழ்நாடு என்ற கனவு அய்யா அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பதை வேறோர் இடத்தில் பார்ப்போம். இதழ்க்கனவு எப்படித் தோன்றியது?

இதோ, அவருடன் இலண்டனில் படித்த கே.டி.கே. தங்கமணி சொல்லுகிறார்: ''ஆதித்தனாரும் நானும

இலண்டனில் பார்-அட்லா படித்துக்கொண்டிருந்தோம். இருவரும் ஒன்றாகச் சேர்ந்தே கல்லூரிக்குப் போவோம். ஒரு நாள் கடைத்தெருவில் நடைபாதையில் நின்ற தள்ளுவண்டியில் நிறைய இதழ்கள் விற்கப்படுவதைப் பார்த்தோம். வண்டியைச் சுற்றிக்கும்பல். இதழ்கள் பரபரப்பாகப் பறந்தன. இங்கிலாந்து அரச குடும்பத்தைப் பற்றிய பரபரப்பான செய்திகள் இதழ்களில் காணப்பட்டன. சாதாரண மக்கள் விரும்பிப் படிக்கும் வேறு பல பரபரப்பான செய்திகளும் இடம் பெற்றதால்தான் இதழ்களின் விற்பனையும் பரபரப்பாக இருந்தது. அன்றே ஆதித்தனார் திட்டம் போட்டார் - தமிழ்நாட்டுக்குத் திரும்பியதும் இப்படி ஒரு செய்தித்தாளை நடத்த வேண்டும் என்று." ("ஆதித்தனாருக்கு அஞ்சலி")

தமிழ்நாட்டுக்குத் திரும்பியதுமே அய்யா இதழ் தொடங்க விரும்பியதையும், அந்த முயற்சிக்குத் தேவையான முதலீட்டைத் திரட்டவே சிங்கப்பூர் சென்றதையும் முன்பே பார்த்தோம். அவர் விரும்பியிருந்தால், போர் முடிந்ததும், மீண்டும் சிங்கப்பூர் சென்று தொழிலைத் தொடர்ந்திருக்க முடியும். அல்லது, சென்னைக்குச் சென்று உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தொழில் தொடங்கியிருக்க இயலும். ஆனால். வழக்கறிஞர் தொழிலைத் தொடரும் எண்ணமே அவருக்கு எள்ளளவும் இல்லை. அதை அடியோடு மறந்துவிட்டார். இதழாளனாகப் புதுவாழ்வு தொடங்கினார். இதழாளனாகவே வாழ்க்கையை முடித்தார். அடுத்த பிறவியிலும் தமிழ் இதழாளனாகவே பிறக்க விரும்பினார்.

**மதுரை ஏன்?**

இதழ் தொடங்க, மதுரையை ஏன் அய்யா தேர்ந்தெடுத்தார்? அது சங்கம் வைத்துத் தங்கத் தமிழ் வளர்த்த தலைநகர் என்பதாலா? இல்லை. அன்று செய்தித்தாள் முழுவதும் சென்னை நகரில் அச்சிட்டுத்தான், தமிழ் நாடு முழுவதும் அனுப்பப்பட்டன. சென்னையில் மாலையில் ரெயிலேற்றி அனுப்புவார்கள். எல்லா ஊர்களிலும் மறுநாள் காலையில் விற்பனைக்குக் கிடைக்கும். இதனால் முதல்நாள் மாலை நான்கு மணிக்குள் நடந்த செய்திகளைத்தான் மறுநாள் காலையில் படிக்கமுடிந்தது. சில ஊர்களுக்குப் பிற்பகல்தான் ரெயில் போய்ச்சேரும்.

இதே செய்தித் தாளை மதுரையில் அச்சிட்டால், அதிகாலை மூன்று மணி வரை செய்திகளைச் சேகரித்து அச்சிட்டு, காலை ஆறு மணி அளவில் வாசகர்களுக்குக் கொடுக்கமுடியும். மதுரையில்

இருந்து இரண்டு-மூன்று மணி நேரத்துக்குள் பேருந்துகள் போய்ச் சேரும் ஊர் மக்களுக்கும் இந்தச் செய்திதாள் காலையிலேயே கையில் கிடைத்துவிடும். இவ்விதம் செய்திகளைச் சுடச்சுடக் கொடுத்தால், சூடானதோசைபோல,செய்தித்தாள் விறுவிறுப்பாக விற்பனை யாகும் என்பதை அய்யா அறிந்திருந்தார்.

அத்துடன், மதுரையில் போட்டிக்கு வேறு இதழ்கள் இல்லை. தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்த பெரிய நகரம் மதுரை, இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அய்யா மதுரையைத் தனது களமாகத் தேர்ந்தெடுத்தார். ''தொடங்கற்கஎவ்வினையும் ...இடங் கண்டபின் அல்லது'' என்ற குறளை அய்யா நன்கு உணர்ந்தவர்.

**காலம் அறிதல்**

''அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்''

என்ற குறளின்படி, இதழ் தொடங்க ஏற்ற காலமும் அதுவே என்பதையும் ஆதித்தனார் உணர்ந்திருந்தார்.

அப்பொழுது உலகப் போர் நடந்துகொண்டிருந்தது. ஐரோப்பாவில் தொடங்கிய போர், ஆசியாவில் பரவி, அடுத்த வீடான சிங்கப்பூர் வரை வந்து, நமது வீட்டுக்கதவையும் தட்டத் தொடங்கிவிட்டது. பரபரப்பான போர்ச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. அந்தச் செய்திகளை மக்கள் ஆவலுடன் படித்தார்கள். அதே நேரம் காந்தியடிகளும் ''வெள்ளையனே! வெளியேறு!'' என்ற இறுதிப் போரைத் தொடங்கியிருந்தார். காந்தி, நேரு, ஆசாத் போன்ற தலைவர்கள் திடீர் திடீர் என்று கைது செய்யப்பட்டார்கள். இந்தியா முழுவதுமே போராட்ட எரிமலை வெடித்தது. இதுபற்றிய செய்திகளையும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

''இந்தியாவில் செய்தித்தாள் படிக்கும் பழக்கத்தை முதலில் அதிகரித்தது, சென்ற பெரும் போர்கள் ஆகும். போர்ச் செய்திகளைப் படிக்க வேண்டும் என்ற ஆவலினால் மக்கள் செய்தித்தாள்களை வாங்கத் தொடங்கினார்கள். அதற்கு அடுத்தாற்போல, செய்தித்தாள்கள் அதிகரிக்கக் காரணமாக இருந்தது, மகாத்மாவின் அறப்போர், ஒத்துழையாமை இயக்கமாகும்'' என்பார், தெ.ச. சொக்கலிங்கம் (''எனது இராசினாமா''). ம.பொ.சி., ''விடுதலைப்போரும் தமிழ் இதழ்களும் சேர்ந்தே வளர்ந்தன. அவை இரட்டைக் குழந்தைகள்'' என்பார், (''விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு'').

"எதிர்நீச்சல் போடுவதில் ஆர்வம் உள்ள அய்யா தலைநகரான சென்னையில் இதழ் தொடங்காமல், மதுரையில் தொடங்கினார்." என்கிறார், ஆர். எஸ். இரத்தினம் ("ஆதித்தனாருக்கு அஞ்சலி"). இவர் "மதுரை முரசு" ஆசிரியராக இருந்தவர். தலைநகரில்தான் செய்தித்தாள் நடத்த முடியும் என்ற மாயையை உடைத்தவர் அய்யா என்று கருதுகிறார், இரத்தினம். அதுவும் உண்மையே.

**மதுரை முரசு**

இடமும், காலமும் ஏற்றதாக இருக்கவே, அய்யா உடனடியாக "மதுரை முரசு" என்ற செய்தித்தாளைத் தொடங்கினார்.

முரசு என்பது பறையாம். இந்தப் பறைகள் வரலாற்றுக் காலத்தில் தமிழ்நாட்டின் அரசிதழ்கள் ஆக இருந்தன. ("தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி"). அரசனுக்கு உரிய பத்து உறுப்புகளில் பறையும் ஒன்று என "இலக்கண விளக்கம்" கூறுகிறது. அரசனின் அறிக்கை, ஆணைகளைப்பறையறைந்து மக்களுக்குத் தெரிவித்தார்கள். இன்றும் நமது பட்டி தொட்டிகளில் இந்தப் பழக்கம் இருப்பதைப் பார்க்கலாம். பழங்கால மக்கள்கூடப் பறையறைந்து மங்கலச் செய்திகளைத் தெரிவித்தார்கள் என்பதை :

> "யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
> மாநகர்க்கு ஈந்தார் மணம்"

என்ற "சிலப்பதிகார" வரிகளால் அறிகிறோம். பாரதியாரும் "வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே" என்று கூவினார். எனவேதான் இன்றும் மாலை முரசு, முரசொலி, மராட்டியமுரசு என்றெல்லாம் இதழ்களுக்குப் பெயர் சூட்டுகிறார்கள்.

சிங்கப்பூர் சாரங்கபாணி ஏற்கனவே தொடங்கிய "தமிழ் முரசு" அய்யாவின் நினைவில் இருந்திருக்கும். மதுரையில் தொடங்கிய இதழ் என்பதால் "மதுரை முரசு" என்று பெயர் சூட்டியிருக்கலாம். பின்னாளில் அய்யா மாலை இதழ்களுக்கு "மாலை முரசு" என்று பெயர் சூட்டியது, நினைவு கூரத்தக்கது.

**வாரம் இரு நாள்**

"மதுரை முரசு" வாரம் இரு நாள் (ஞாயிறு, புதன்) வெளிவந்தது.

வாரம் இருமுறை வெளிவருவதும் நாளிதழில் அடங்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகும் (''தமிழ் இதழ்கள் தோற்றம்-வளர்ச்சி'').

இன்றைய ''ராணி'' வார இதழின் பக்க அளவே ''மதுரை முர''சின் பக்கமும் இருந்தது. ஒவ்வோர் இதழும் நாலு பக்கமே. விலை காலணா - அதாவது இன்றைய இரண்டுகாசு. பிச்சைக் காரனுக்குக் கூடப் பத்துக்காசுக்குக் குறைவாகப் போட்டால், அவன் நம்மை ஒரு பிச்சைக்காரனாகப் பார்க்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், இரண்டு காசுக்கு இதழ் விற்றதா என்று ஆச்சரியப்படுவோம். ஆனால், அந்நாளில் தம்பிடி இதழ் களும் விற்கப்பட்டன. தம்பிடி என்பது இன்றைய அரைக்காசு!

''மதுரை முரசு'' ஆசிரியராக இருந்த இரத்தினம் மேலும் நினைவு கூருகிறார். ''நான் பிழைதிருத்தியதுடன் சிறு சிறு துணுக்குகளையும் எழுதி வந்தேன். என் மேல் நம்பிக்கை வைத்த அய்யா அவர்கள், ''ஆசிரியர்'' என்று என் பெயரைப் போட்டார் கள். ஒவ்வொரு நாளும் அதன் வளர்ச்சியில் முழுக் கவனம் செலுத்தினார்கள். படித்தவுடன் விளங்கும்படி ''சிப்பாய்'' என்ற புனைபெயரில் அய்யா அவர்களே போர் விமர்சனக் கட்டுரைகளை எழுதிவந்தார்கள். மக்கள் குறை, தமிழ் முதலிய எட்டுப்பகுதிகள் அந்த நாலுபக்க இதழில் இடம் பெற்றன,

அப்பொழுது அய்யா அவர்களின் வீடு, சின்ன சொக்கி குளத்தில் இருந்தது. கார் இருந்தும், அய்யா அவர்கள் அலுவலகம் இருந்த முனிச்சாலைக்கு நகரப்பேருந்தில் வருவார்கள். பேருந்தில் யாராவது ''மதுரை முரசு'' படித்துக்கொண்டிருந்தால், அவர் களின் அருகில்போய் அமர்ந்து, தன்னை யார் என்று அடையாளம் காட்டிக்கொள்ளாமல், அவர்கள் எந்தச் செய்தியை முதலில் படிக்கிறார்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதைக் கவனிப்பார்கள். அவர்கள் ஏதாவது குறைபட்டிருந்தால், அது உடனடியாக நீக்கப்படும்.''

### தடைசெய்யப்பட்டது

ஏழெட்டு வெளியீட்டுடன் ''மதுரை முரசு'' தடை செய்யப் பட்டுவிட்டது! தடை செய்யப்பட்டது ஏன்?

மதுரையில் நடந்த காந்தீயப்போராட்டத்தில் கலவரம் ஏற்பட்டு, காவலர் துப்பாக்கிச் சூடு நடத்தி, மூன்று பேர்

கொல்லப்பட்டார்கள். ''ஒருவர்தான் கொல்லப்பட்டார்'' என்று செய்தி வெளியிட வேண்டும் என்று காவலர் கட்டளையிட்டார் கள். ஆதித்தனார், ''மதுரையில் போலீசு துப்பாக்கி சூடு! 3 பேர் சாவு!'' என்று முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டார்! அதைப் பார்த்த ஆங்கிலேய அதிகாரிகள், போர்க்கால அதிகாரத்தைப் பயன்படுத்தி, 'மதுரை முர''சைத் தடை செய்துவிட்டார்கள்.

அதிகாரிகள் ஆணை பிறப்பித்தாலும், உண்மைச் செய்தியை வெளியிட அய்யா தயங்குவதில்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு. இன்னோர் எடுத்துக்காட்டையும் என்னால் சொல்ல முடியும்.

''அரியலூர் அளகேசா; ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா?'' என்று அறிஞர் அண்ணா நாடெங்கும் சுவரொட்டி அச்சிட்டு ஒட்டியது உங்களுக்கு நினைவிருக்கும். அந்த அரியலூர் ரெயில் விபத்தில் இத்தனை பேர் மரணம் என்று ரெயில்வே அதிகாரிகள் அறிக்கை வெளியிட்டார்கள். ஆனால், அதை விட அதிகம் பேர் மரணம் அடைந்தார்கள் என்று ''தினத் தந்தி''யில் செய்தி வெளிவந்தது. இதனால் ரெயில்வே நிர்வாகம் ''தினத்தந்தி'' யை நீதி மன்றத்துக்கு இழுத்தது. அங்கே அய்யா வெற்றி பெற்றார்.

விபத்துக்குப்பின் கிடைத்த உடல்களை மட்டுமே வைத்துக் கொண்டு இறந்தவர் தொகையை ரெயில்வே அதிகாரிகள் கணக் கிட்டார்கள். என்ன ஆனார்கள் என்று அறிய முடியாதவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்களையும் இறந்தவர் எண்ணிக்கையில் சேர்த்து ''தினத்தந்தி'' செய்தி வெளியிட்டது. அரியலூருக்கே சென்று இச்செய்தியைக் கொண்டு வந்தது, அப்பொழுது திருச்சி யில் செய்தியாளனாக இருந்த அடியேன்தான்!

## முதல் இதழ்

''மதுரை முரசு'' தான் ஆதித்தனார். நடத்திய முதல் இதழ் என்று எண்ணிவிட வேண்டாம். அதற்கு முன்பே ''மகாசனம்'' என்ற இதழை வெளியிட்டுள்ளார்.

மதுரையில் உள்ள நாடார் மகாசன சங்கத்தின் 14வது மாநாடு 1932இல் சென்னையில் நடந்தது. அப்பொழுது சென்னையில் இருந்த அய்யா அந்த மாநாட்டின் வரவேற்புக்

குழுச் செயலராகப் பணியாற்றினார். மாநாடு நடக்க இருப்பது பற்றியும், அதற்காக நடந்துவரும் ஏற்பாடுகள் பற்றியும், மாநாட்டின் நிகழ்ச்சிகள் பற்றியும் அனைவரும் அறிந்து கொள்ள ''மகாசனம்'' என்ற இதழை அய்யா வெளியிட்டார். பெரியவர்களுக்கு இதழை இலவசமாக அனுப்பிவைத்தார். (மகாசனம்'' 19-8-1982). இவ்விதழ் இப்பொழுதும் (1990) நாடார் மகாசன சங்கத்தின் செய்தி இதழாக மதுரையில் இருந்து வாரந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

மக்கள் தொடர்புக்கு இதழ்களை ஒரு சிறந்த கருவியாக அய்யா மதித்தார் என்பதற்கு இந்த ''மகாசனம்'' எடுத்துக் காட்டு.

''மதுரை முரசு'' நின்றதுமே, மற்றோர் இதழை அய்யா தொடங்கினார். அதுதான் அவரின் கனவுகளை நனவாக்கியது. அந்த இதழ்........''தந்தி''யல்ல!

# தனிச் சிறப்புப் பெற்ற "தமிழன்"

"மதுரை முரசு" தடை செய்யப்பட்டதும் ஆதித்தனார் "தமிழன்" என்ற வார இதழைத் தொடங்கினார்.

"மதுரை முரசு"க்கும் "தமிழ"னுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. "காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்" என்றபடி, காலமறிந்து அவசர அவசரமாக அவர் தொடங்கிய செய்தித் தாள், "மதுரை முரசு". 'முதலில் ஒரு வார இதழ் தொடங்கி னால், அதையே பின்பு நாளிதழாக ஆக்கிக் கொள்ளலாம்' என்ற பல ஆண்டுத் திட்டத்தின் செயல்பாடுதான், "தமிழன்" வார இதழ்.

அந்நாளில் தமிழில் வெளிவந்த முதல் நாளிதழ் என்று கருதப் பட்ட "சுதேச மித்திரன்" கூட, முதலில் வார இதழாகத்தான் வெளிவந்து, பிறகுதான் நாளிதழ் ஆயிற்று. நாளிதழ் நடத்த அதிகச் செலவு ஆகும். அதற்கு நாள்தோறும் தீனிபோட வேண்டும். நெல் பயிர் செய்வதுபோல என்று வைத்துக்கொள்ள லாம். "அகலக்கால் வைத்தல்" என்றும் சொல்லலாம். ஆனால், வார இதழ் நடத்துவது அப்படி அல்ல. வாரம் ஒருமுறை தீனி போட்டால்போதும். அதிக முதலீடு தேவையில்லை. தென்னை பயிர் செய்வது போல. "சிறுகக் கட்டிப் பெருக வாழ்தல்" என்று எடுத்துக் கொள்ளலாம். எனவேதான், அய்யா முதலில் ஒரு வார இதழ் தொடங்கினார். "மதுரை முரசைக்"கூட வாரம் இரு முறை இதழாகத்தான் வெளியிட்டார்.

ஆதித்தனாரின் இதழ்ப்பணி என்ற கோபுரத்துக்குப் போடப் பட்ட கடைக்கால்தான், "தமிழன்".

### தமிழ்ப்பற்று

அந்த நாளிலேயே ''தமிழன்'' என்ற நல்ல தமிழ்ப்பெயரை அய்யா தேர்ந்தெடுத்தார். ''தமிழன்'' என்ற பெயரில் ஏற்கனவே தமிழ் இதழ்கள் வெளிவந்துள்ளன. 1907 ஆம் ஆண்டு சென்னையில் பண்டித அயோத்தியாதாசு ''ஒரு பைசாத் தமிழன்'' என்ற இதழை வெளியிட்டார். அதுவே பின்பு ''தமிழன்'' என்ற பெயரில் வெளிவந்தது. கோலார் தங்கவயலில் இருந்தும் நாகர்கோவிலில் இருந்தும் ''தமிழன்'' இதழ்கள் வெளிவந்தன. இருந்தும் ''தமிழன்'' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தது, தமிழன் மீது அவர் கொண்ட காதலால்தான். அவரின் தமிழ்ப்பற்றையும் இப்பெயர் பறைசாற்றியது. தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அவ்விதழ் வெளிவந்ததையும் பெயரே எடுத்துக்காட்டியது.

### முதல் இதழ்

''வெள்ளையனே வெளியேறு'' என்ற பெரும் போராட்டம் நடந்த 1942ஆம் ஆண்டில் ஆகஸ்டு 23 அன்று ''தமிழன்'' முதல் இதழ் வெளிவந்தது.

''நமது தமிழன்'' இதழ் சென்ற சூன் மாதம் 15-ஆம் தேதி அன்று வார வெளியீடாக மதுரையில் பதிவு செய்யப்பட்டது'' என்ற குறிப்பு, அக்டோபர் 18ஆம் நாளைய ''தமிழன்'' இதழில் காணப்படுகிறது. (இது 9-வது இதழ்) சூன் 18ஆம் நாள் பதிவு செய்யப்பட்ட ''தமிழன்'', அதற்கு இரண்டு மாதம் கழித்து ஆகஸ்டு 23ஆம் நாள்தான் வெளிவந்திருக்கிறது. (23-ந் தேதிய இதழ் என்றாலும் ஓரிருநாள் பிந்தி வெளிவந்து இருக்கும் போலிருக்கிறது) இதற்கு என்ன காரணம்?

அடுத்த (ஆகஸ்டு 30 ஆம் தேதி) இதழில் அதற்குக் காரணம் கூறப்பட்டு இருக்கிறது. அது -''தமிழன்'' முதல் இதழ் 23 ஆம் தேதியன்றே கிடைக்க வேண்டுமென்று ''தமிழன்'' அலுவலகத்தார் அனைவரும் இரவு பகலாய்க் கண் விழித்து வேலை செய்தும், தாமதம் ஏற்பட்டுவிட்டது. தாமதத்திற்கு முக்கிய காரணம், பிளாக்குகளைத் தயார் பண்ணுவதில் ஏற்பட்ட கஷ்டமும், அவை வந்து சேருவதற்கு நேர்ந்த சிரமுந்தான்.''

அய்யா எப்பொழுதுமே படங்களுக்கு முதன்மை அளிப்பார். ''ஒரு படம் ஆயிரம் சொல்லுக்குச் சமம்'' என்ற சீன மொழியைப் பொன்னைப் போலப் போற்றியவர். ''தமிழன்'' முதல்

இதழிலும் பக்கத்துக்குப் பக்கம் படங்கள். "கல்கி" 10-9-1942 ஆம் நாளைய இதழ், "சங்கம் நடத்தித் தமிழை வளர்த்த மதுரையில் இப்போது "தமிழன்" தோன்றியிருக்கிறது. தமிழர் முன்னேற்றமும், தமிழ் இராச்சிய தாபனமும் இந்த இதழின் முக்கிய நோக்கங்களாக இருக்குமென்று அறிந்து பெரிதும் மகிழ்கின்றோம். இதழை மிக மேலான முறையில் கொண்டு வருவதற்குத் தகுந்த அடிக்கற்கள் முதல் இதழில் அமைந்துள்ளன. இதழ் முழுவதும் இரு வண்ணங்களில் அச்சிடப்படும் இதழ் தமிழ் நாட்டில் இதுவே முதலாவது ஆகும். 'தமிழ'னை அன்புடனும் ஆர்வத்துடனும் வரவேற்கிறோம்". என்று குறிப்பிட்டிருக்கிறது. "இதழ் முழுவதும் இரு வண்ணங்களில் அச்சிடப்படும் இதழ் தமிழ் நாட்டில் இதுவே முதலாவது ஆகும்" என்ற வரி, தமிழ் இதழியல் ஆசிரியர்களும், மாணவர்களும் குறித்துக் கொள்ள வேண்டிய ஒன்று.

**படங்கள்**

படங்களுக்கு உரிய கட்டைகள் செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், "தமிழன்" முதல் இதழ் வெளிவரத் தாமதமாகியிருக்கிறது. இது போன்ற தாமதம் நாளிதழான "தந்தி"க்கும் ஏற்படக் கூடாது என்றுதான் அய்யா பின்னாளில் "தினத்தந்தி" அலுவலகத்திலேயே சொந்தக் கட்டை தயாரிக்கும் வசதியை அமைத்துக் கொண்டார் போலிருக்கிறது. படங்கள் தெளிவாக அச்சாக வேண்டும் என்றும் அய்யா வற்புறுத்துவது வழக்கம். "கட்டை தவறா! அல்லது அச்சடிப்பு மோசமா என்று வாசகர் களுக்குத் தெரியாது. அவர்கள் அச்சுதான் மோசம் என்று சொல்லுவார்கள்" என்று அவர் கூறுவதுண்டு.

"தமிழன்" முதல் இதழில் நடிகை கண்ணாம்பாளின் படம் சரியாக அச்சாகவில்லை. அதுபற்றி அடுத்த இதழ்; "திருமதி கண்ணம்பாள் படம் மிக மோசமாகப் போய்விட்டது. ஆனால், அந்தக் கட்டை நாங்கள் தயாரித்தது அல்ல. கோயமுத்தூரில் தயாரித்து வந்தது. கடைசி நேரத்தில் அதை எடுத்துவிட்டு, வேறு போட முடியாமல் போய்விட்டது, என்று குறித்துள்ளது".

இதைச் சொல்லும் பொழுது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. தமிழ் நாட்டில் முதல் இந்தி எதிர்ப்புப் போர் நடந்த பொழுது, நாள்தோறும் போராட்டத்தில் கைது ஆகும் தொண்டர்களின் படங்களை "விடுதலை" இதழில் வெளியிட்டு வந்தார்கள். தொண்டர்கள் கையில் கொடியுடன் ஊர்வலமாகப்

புறப்பட்டுச் செல்வார்கள். உடனே அவர்களைக் காவலர் கைது செய்வார்கள். ''தொண்டர்கள் ஊர்வலமாகப் புறப்பட்ட பொழுது எடுத்த படம்'' என்று படத்தின் கீழே குறிப்புக் கொடுத்தார்கள். போராட்டம் பலநாள் தொடர்ந்து நடந்த தால், நாள்தோறும் படம் எடுத்து, கட்டை செய்து, வெளியிட வேண்டியிருந்தது. இதற்கு அதிகச் செலவாயிற்று. சிக்கனத் துக்குப் புகழ் பெற்ற தந்தை பெரியார், கட்டையைத் தரையில் ஒரு தேய்ப்புத் தோய்த்துவிட்டு, ஒரே கட்டையை நாள்தோறும் பயன்படுத்தும்படி சொன்னார் என்பார்கள்! படத்தில் யார் முகமும் தெரியாது. ''நேற்று ஊர்வலமாகச் சென்ற நடராசன், முனுசாமி, தமிழன்பன்...'' என்று வரிசையாகப் பெயர்களை மட்டும் அடுக்கிப் போட்டுவிடுவார்களாம்! ஆனால், ஆதித்தனார் அப்படி அல்ல. செலவு செய்தால்தான் இதழ், சிறப்பாக இருக்கும் என்று கருதக்கூடியவர்.

## ஞாயிறுதோறும்

''தமிழன்'' முதல் இதழ் ஞாயிற்றுக்கிழமை வெளிவந்தது! தொடர்ந்து ஒவ்வோர் இதழும் ஞாயிற்றுக்கிழமையே வெளியிடப் பட்டது. எங்கள் ''ராணி'' இதழ்கூட வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை தேதியிட்டுத்தான் வெளிவருகிறது.

''ராணி'' வெள்ளி விழா மலரில் (1987) எங்கள் வணக்கத்துக் குரிய அய்யா பா. சிவந்தி ஆதித்தன் ''அய்யாவின் ஆணை'' என்று இது குறித்து எழுதியிருப்பதை இங்கே எடுத்துக்காட்டுவது ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். அது—

''மதுரையில் 1942 இல் ''தமிழன்'' வார இதழைத் தொடங்கிய அதே நேரத்தில் அய்யா அவர்கள் 'தந்தி'யையும் தொடங்கினார்கள் ''தமிழன்'', 'தந்தி' இரண்டுமே மளமள என்று வளர்ச்சி அடைந்தன. ஆயிரக்கணக்கில் விற்பனை ஆயின; அப்பொழுது உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. இதழ் அச்சிடுவதற்கான தாள் வெளிநாடுகளில் இருந்து கப்பலில் இந்தியாவுக்கு வரவேண்டும். போர் காரணமாகப் போதிய தாள் வரவில்லை. அதிலும், புதிதாகத் தொடங்கப்பட்ட ''தந்தி'', ''தமிழன்'' இரண்டுக்குமே அரசாங்கம் தாள் ஒதுக்க வில்லை.

அய்யா அவர்களே தாள் செய்தார்கள். அவர்களே முன் நின்று வைக்கோலை அரைத்து, தண்ணீரில் கரைத்து, சல்லடை

யில் சலித்து எடுத்து, வண்டியூர் தெப்பக்குள மண்டபத்தில் காய வைத்து, ''தமிழன் தாள்'' என்று பெயரிட்டு அதில் ''தந்தி'', ''தமிழன்'' இதழ்களை அச்சிட்டது, தமிழ் இதழ் வரலாற்றில் இடம் பெற்ற சாதனையாக ஆகிவிட்டது.

''தந்தி'' நாளிதழ். அதை, அச்சிட நாள்தோறும் தாள் தேவை. அதன் விற்பனையும் பெருகிக் கொண்டே போயிற்று. ''தமிழ''னுக்கும் தாள் தேவை. இதனால் அன்றாடம் பெரு மளவில் நாட்டுத்தாள் தயாரிக்க வேண்டியிருந்தது. ஆனால், அது இயலவில்லை. இதன் காரணமாகத் ''தந்தி'' அல்லது ''தமிழன்'' இரண்டில் ஒன்றைத்தான் அச்சிட்டு வெளியிட முடியும் என்ற நெருக்கடி 1944-இல் ஏற்பட்டது.

அப்பொழுது ''தமிழ''னை நிறுத்த அய்யா முடிவு செய் தார். அது வார இதழ். 'ஒரு வார இதழை எப்பொழுது வேண்டுமானாலும் தொடங்க முடியும். ஆனால், நாளிதழ் அப்படி அல்ல. ஒரு நாளிதழ் தொடங்குவது என்பது ஒரு மலை யைப் புரட்டுவது போல ஆகும்' என்று அய்யா அவர்கள் அப்பொழுது நினைத்தார்களாம்.

அது எவ்வளவு பெரிய உண்மை என்பதை இப்பொழுது நான் உணர்கிறேன்! தமிழ்நாட்டில் இன்றுநாள்தோறும் ஒரு புதிய வார இதழ் தோன்றுகிறது. ஆனால், நாளிதழ் அப்படி மலர முடிகிறதா? பெரிய பெரிய தொழில் அதிபர்கள் கூட நாளிதழ் வெளியிட முயற்சிசெய்து, முன்னேற்பாடுகள் பண்ணி, கடைசி நேரத்தில் கைவிட்டு இருக்கிறார்கள்!

''தமிழ''னை அப்பொழுது நிறுத்தி விட்டாலுங்கூட அது அய்யா அவர்களின் அடி உள்ளத்தில் ஒரு சிறு ஏக்கமாக இருந்து கொண்டுதான் வந்திருக்கிறது.

இன்றைக்கு 25 ஆண்டுக்குப் பின்பு—1962ஆம் ஆண்டில் ஒரு நாள் என்னிடம் பேசிக்கொண்டு இருந்தபொழுது, ''தமிழன்'' நிறுத்தப்பட்ட விவரங்களை அய்யா அவர்கள் தெரிவித்தார்கள். ''மீண்டும் ஒரு வார இதழ் தொடங்கவேண்டும். நமது நிறுவனத் தில் இருந்து ஒரு வார இதழ், ஒரு மாத இதழ், ஓர் ஆண்டு வெளியீடு வரவேண்டும்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

அப்பொழுது ''தினத்தந்தி'' தொடங்கப்பட்டு 20 ஆண்டு ஆகிவிட்டது. இந்த 20 ஆண்டு காலத்துள் ''தந்தி'' ஆல்போல்

தழைத்து, அருகுபோல் வேரூன்றிவிட்டது, அதன் ஆணிவேர் அசைக்க முடியாத அளவு வலிமையாகிவிட்டது. "எப்படியாவது சென்னை நகரில் 10 ஆயிரம் "தந்தி" விற்றுவிடவேண்டும்" என்று, "தந்தி" தொடங்கிய காலத்தில் அய்யா அவர்கள் நினைப் பார்களாம். ஆனால், சென்னை நகரில் மட்டும் அன்றே 50 ஆயிரம், 60 ஆயிரம் படிகள் விற்று "தந்தி" சாதனை புரியத் தொடங்கி விட்டது. எனவே, இனித் தைரியமாக ஒரு வார இதழ் தொடங்கலாம் என்று அய்யா அவர்கள் எண்ணியிருப்பார்கள் போலும். அந்த எண்ணத்தை என்னிடம் தெரிவித்தார்கள்.

"என் விருப்பம்" என்றுதான் அய்யா அவர்கள் அதைச் சொன்னார்கள். ஆனால், அதை அவர்களின் ஆசையாக மட்டும் நான் நினைத்துக்கொள்ளவில்லை. அவர்களின் ஆணை யாகவும் எடுத்துக்கொண்டு, உடனடியாக அதை நான் செயல் படுத்தவும் தொடங்கினேன்."

இவ்வாறு பிறந்ததுதான், இன்று வெள்ளிவிழாக் கொண் டாடும் "ராணி" வார இதழ்.

**28 பக்கம்**

"தமிழன்" முதல் இதழ் 28 பக்கங்களுடன் வெளிவந்திருக் கிறது. அட்டை தனியே 4 பக்கம் அச்சிட்டு இணைக்கப்பட்டு உள்ளது. அட்டையும் சாதாரண இதழ்தாள்தான். அட்டைப் பக்கங்களையும் சேர்த்துதான் மொத்தம் 28 பக்கம்.

பாரதியார் நினைவு மலராக வெளிவந்த செப்டம்பர் 13ஆம் நாளைய இதழ் (4-வது இதழ்) 32 பக்கங்களுடன் வெளிவந்திருக் கிறது. "இப்போது தாள் விற்கும் விலையில் பக்கங்களை அதிகரிப்பது என்பது அசாத்தியமான காரியம். இருந்தபோதிலும் விலையைக் கூடுதல் செய்யாமல், 4 பக்கங்கள் அதிகப்படியாகச் சேர்த்து இருக்கிறோம்" என்று ஆசிரியர் ("ஆசிரியர் பேச்சு") சொல்லுகிறார்.

முதல் இதழ், வெளிநாட்டு இதழ் தாளில் அச்சிடப்பட்டிருக் கிறது. அய்யா, வைக்கோலை அரைத்துத் தயாரித்த "தமிழன் தாள்" பின்புதான் பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இப்பொழுது "ராணி" வெளிவரும் அதே அளவில்தான் "தமிழன்" இதழும் வெளிவந்திருக்கிறது. எல்லாப் பருவ இதழ் களும் நூல் அளவில் வெளிவர, "தமிழன்" மட்டும் பெரிய

அளவில் வந்தது ஏன்? 9-வது இதழில் (அக்டோபர் 18) இதற்கு விளக்கம் இருக்கிறது. அதில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதத்தின் அஞ்சல் ஒன்று வெளிவந்துள்ளது. அஞ்சலில் ''தமிழன்'' இதழின் அமைப்பும் தோற்றமும் புதிய முறையில் இருத்தலின், நாட்டு மக்கள் அனைவராலும் வரவேற்கப்படுமென நம்புகிறேன்'' என்று விசுவநாதம் குறிப்பிட, ''இதழானது தோற்றத்தில் இதழாக இருக்க வேண்டுமேயல்லாது, நூலைப் போல் இருக்கக்கூடாது என்று எண்ணிப் பெரிய அளவில் ''தமிழ''னை வெளியிட்டு வருகிறோம்'' என்று ஆசிரியர் சொல்லு கிறார்.

மேல்நாடுகளில் பருவ இதழ்கள் இதேபோல பெரிய வடிவில், இதைவிடப் பெரியவடிவில்கூட வெளிவருவதை அய்யா நேரில் பார்த்திருப்பார். இதழ் நடத்த முழுக்க முழுக்க மேல்நாட்டு முறைகளையே பின்பற்றினார். ''வெற்றி பெற்றவர்களை நாம் பின்பற்றவேண்டும்'' என்று அவர் சொல்லுவது வழக்கம்.

''தமிழன்'' ஒவ்வொரு பக்கமும் மூன்று பாத்தியாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ''ராணி''யிலுங்கூட முன்பு பக்கத்துக்கு மூன்று பாத்திதான். (''பாரா'' என்பதைப் ''பத்தி'' என்கிறோம். ''காலம்'' என்பதையும் ''பத்தி'' என்கிறோம். அதைவிடக் 'காலம்'' என்பதைப் ''பாத்தி'' என்று சொல்வது சிறப்பாக இருக்கும். பயிர் செய்யத் தோட்டத்தைப் பாத்தியாகப் பிரித்துக் கொள்கிறோம் அல்லவா? அதுபோல செய்திவெளியிடப் பக்கத் தையும் பாத்தியாகப் பிரித்துக் கொள்ளுகிறோம்.)

### அட்டைப்படம்

''ராணி'' போன்றே ''தமிழ''னிலும் பெரிய முகம் அட்டைப் படமாக இடம்பெற்றிருக்கிறது. பெரும்பாலும் பெண்களின் படம்; குழந்தைகள் படமும் வெளிவந்தன. 3-வது இதழில் நாடகத் தந்தை பம்மல் சம்பந்தமும், 5-வது இதழில் கவிமணி தேசிக விநாயகமும் அட்டையில் இடம்பெற்றார்கள்.

முதல் இதழ் அட்டைப்படம்—பாவேந்தன் பாரதிதாசன். ''அட்டைப்பட விளக்கம்'' என்று 10ஆம் பக்கம் குறிப்பு இருக் கிறது. அது : நமது முதல் வாரத் ''தமிழ''னின் முகப்புப் படத்தை அலங்கரிக்கும் கவி. பாரதிதாசனின் உருவப்படத்தைப் பார்த்தீர்களா? வீர உணர்ச்சியின் வேகம் அந்த முகத்தில் ஒளி விட்டு வீசுகிறது அல்லவா?

இது நமது ''தமிழ''னுக்கு என்று தனியாக மையினால் வரைந்து அனுப்பிய படம். பாரதிதாசன் ஓர் ஆவேசக் கவி ''நமதடா இந்த நாடு...'' என்ற வரிகளைப் படித்தால், எந்தத் தமிழனுக்குத்தான் ஊக்கம் பிறக்காது? உணர்ச்சி ஓங்காது?

பாரதிதாசனின் சொந்தப் பெயர், கனக. சுப்புரெத்தினம். சொந்த ஊர் புதுச்சேரி. இப்போது அங்குள்ள கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக இருக்கிறார். இவரது பாடல்களில்பல புத்தகமாக வெளிவந்திருக்கின்றன. தமிழ் நாட்டுக்குப் புத்துயிரும், தமிழ் மொழிக்குப் புது வாழ்வும் அளித்த கவி பாரதியின் நெருங்கிய நண்பர், இவர்.

பாரதியார் உயிருடன் இருக்கும்போது அப்பெரும் புலவரை ஆதரிக்கவில்லையென்ற பெரும்பழி தமிழர்களைச் சேர்ந்திருந்தது. இப்பழியை, அப்பெரியாரின் கவிதை நடையைப் பின்பற்றி உணர்ச்சி ததும்பும் பாடல்கள் பல புனைந்து தமிழுலகிற்கு அளித்துவரும் கவி. பாரதிதாசனை ஆதரித்துத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

பாரதிதாசனின் அரசியல் கொள்கைகளைப் பற்றி அபிப்பிராய பேதம் உள்ளவர்கள்கூட அவரது கவிதை உணர்ச்சியைக் கண்டு ஆனந்திக்காமல் இருக்கமுடியாது.

ஆதித்தனாருக்குப் பாரதிதாசனிடம் என்றுமே ஒரு காதல் உண்டு. அது தமிழ்க்காதல்! அந்தக் காதல் காரணமாகவே ''தமிழன்'' முதல் இதழின் முகப்புப் படத்தைப் பாவேந்தருக்கு அளித்துச் சிறப்பித்திருக்கிறார்.

இதே பக்கத்தில், பாரதிதாசன் எழுதிய ''பகை நடுக்கம்'' என்ற பாடலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

> ''தமிழர் என்றுசொல்வோம்—பகைவர்
> தமை நடுங்க வைப்போம்!
> இமய வெற்பின் முடியில் கொடியை
> ஏறவைத்த வீரர் தமிழர்''

என்று அப்பாடல் தொடங்குகிறது. இப்பாடலில்தான் 'நமதடா இந்த நாடு—என்றும், நாம் இந்த நாட்டின் வேந்தர்'' என்ற வரி வருகிறது.

7-வது இதழில் (அக்டோபர் 4) பாவேந்தர் பற்றிய செய்தி ஒன்று காணப்படுகிறது. அது திரைப்படச் செய்தி. ''பாரதி

தாசனும் சும்மா, இல்லை'' என்ற தலைப்புடன்கூடிய அந்தச் செய்தி : ''கவி. பாரதிதாசன் பாண்டிச்சேரியில் சும்மா பண்டிதர் வேலையோடு இருக்கிறார் என்று எண்ணிவிடாதீர்கள். காலஞ் சென்ற நம் ஒப்பற்ற கவி. பாரதியாரைத் திரையில் கொண்டு வரும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறாராம்! கதை, வசனம், பாடல்கள் எல்லாவற்றையும் பாரதிதாசன் கவனிக்க, டைரக்சனை முன்னாள் மந்திரி இராமநாதன் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்றால், நமக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கைதானே''.

பாரதிதாசனின் இந்த முயற்சி வெற்றிபெறவில்லை. வெற்றி பெற்றிருந்தால், பாரதியாரைப் பற்றிய அருமையான திரைப் படம் ஒன்று நமக்குக் கிடைத்திருக்கும். பாரதியார் தேசியக் கவிஞர் என்றாலும் அவர் மீதும் அய்யா எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார் என்பது அட்டைப்பட விளக்கத்தில் வெளியா கிறது. அதன் காரணமாகத்தான் பாரதியார் நினைவு மலர் (4-வது இதழ்) வெளியிட்டிருக்கிறார். அப்பொழுது (1942) பாரதியார் மறைந்து 21 ஆண்டுகள் ஆகியிருந்தன.

கையில் கோலுடன் பாரதியார் இருக்கும் படம் இம்மலரில் வெளிவந்திருக்கிறது. அந்தப் படத்துக்கான குறிப்பு : தரையில் கோலை ஊன்றாது, கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அமர்ந்து இருக்கும் பாரதியாரின் இப்படம், இதற்கு முன் வெளி வந்ததாக நமக்கு ஞாபகமில்லை. இதற்கு முன் இப்படம் வெளி வந்திருக்குமானால், நேயர்கள் நமக்கு அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம், ''கோல் கைக்கொண்டு வாழ்'' என்று ''புதிய ஆத்திசூடி''யில் பாரதியார் சொன்னதைச் செயலில் காட்டுவதை இப்படம் விளக்குகிறது அல்லவா?''

இப்படம் இதற்கு முன் வேறு எந்த இதழிலும் வெளிவந்த தாக, இதற்குப் பின்வந்த ' தமிழன்'' இதழ்களில் வாசகர் அஞ்சல் இல்லை. எனவே, இப்படம் முதல் முதலாகத் ''தமிழ''னில்தான் வெளிவந்திருக்க வேண்டும். ''பாரதி மலரில் நீங்கள் இதற்குமுன் பார்க்காத படங்கள் அநேகம் வெளிவரும்'' என்று முந்தைய (3வது) இதழிலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முகப்புப் படங்களைத் தேர்ந்தெடுத்து வெளியிட எவ்வளவு முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றியும் இதே 3வது இதழில் ஒரு குறிப்பு இருக்கிறது. அது : ''தமிழனில் வெளிவரும் படங்கள் எல்லாம் நமது இதழுக்கு என்றே தனிப்படத் தயாரிக்கப்

பட்டவை என்பதை நேயர்கள் கவனிக்கவேண்டும். இந்த இதழின் முகப்பில் அச்சிட்டிருக்கும் (நாடகத் தந்தை பம்மல் சம்பந்தம்) படத்தைத் தயார் செய்வதற்கு அதிகச் சிரமமும், பணச் செலவும் ஏற்பட்டன. ஆனால், பழைய படங்களை அச்சிடுவது இல்லை என்பது எங்கள் உறுதி. முந்தைய இதழ்களில் வெளியிட்ட முகப்புப் படங்களும் ''தமிழ''னுக்கு என்று தனிப்படத் தயார் செய்யப் பட்டவைதான். வாசகர்களுக்குப் புதிய படங்களையே தரவேண்டும் என்ற எங்கள் நோக்கத்தை நேயர்கள் மனப்பூர்வமாக ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்.''

முகப்புப் படம் தயாரிக்கும் பொறுப்பு விரைவில் வாசகர்களிடம் விடப்பட்டது. இதுபற்றிய அறிவிப்பு 5வது இதழில் (செப்டம்பர் 20) வெளிவந்தது. ''நமது பத்திரிகையில் வாசகர்கள் அதிகம் பங்கெடுத்துக்கொள்ளச் செய்யவேண்டும் என்பது எங்கள் விருப்பம். ஆகையால், முகப்புப் படங்கள் வெளியிடுவதையும் வாசகர்களிடம் ஒப்படைத்துவிடலாம் என்று நிச்சயித்து இருக்கிறோம். இதைப்பற்றிய விவரங்களை 8ம் பக்கத்தில் பாருங்கள்''.

8ம் பக்கத்தில் ''புகைப்படம் அனுப்புங்கள்'' என்ற தலைப்புடன் விவரம் இருக்கிறது. ''அடுத்த வாரம் முதல் முகப்புப் படத்திற்கு என்று வாசகர்கள் அனுப்பித் தருகிற படங்களையே தேர்ந்து எடுக்கத் தீர்மானித்து இருக்கிறோம்'' என்று விளக்கம் தொடங்குகிறது. ''தமிழ்ப் பெண்களின் படங்களை அனுப்ப வேண்டும்'' என்று அது தொடர்கிறது. ''வெளியிடப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ. 10 அன்பளிப்பு கொடுக்கப்படும்.''

''முகப்புப் படத்திற்குக் குழந்தைகளின் புகைப்படம் அனுப்பலாமா என்று கேட்டுப் பல நேயர்கள் நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அழகான குழந்தைகளின் படங்களை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். ஆனால், தமிழ்ச் சகோதரிகளின் படங்களை அனுப்புவோருக்குத்தான் நாம் பரிசு அனுப்பி வருகிறோம். குழந்தைகளின் படங்கள் பரிசுத் திட்டத்தில் சேரமாட்டா'' என்ற விளக்கம் 7 ஆம் இதழில் (அக்டோபர் 4) காணப்படுகிறது. 9 ஆம் இதழில் (அக்டோபர் 18) ஒரு குழந்தையின் படம் முகப்புப் படமாக இடம்பெற்றிருக்கிறது.

இதழில் வாசகர்களுக்குப் பங்களிக்க வேண்டிய தேவையை அன்றே அவர் உணர்த்தியிருக்கிறார்.

**வார வெளியீடு**

முகப்புப் படத்திற்கு உச்சியில் இதழ் அளவுக்குத் ''தமிழன்'' என்ற பெயர் கொட்டை எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதற்கு உச்சியில் ''வார வெளியீடு'' என்று சிறிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இப்பொழுது ''ராணி'' என்ற தலைப்புக்கு மேலே ''வாராந்தரி'' இருப்பது போல. ''தமிழன்'' என்ற தலைப்பின் கோடியில் ''2 அணா'' என்று விலை குறிக்கப்பட்டிருக்கிறது. (2 அணா என்பது ஒரு ரூபாயில் 8 இல் ஒரு பாகம். இப்போதைய 12 காசு ) அதற்கு நேராக அடியில் ஒரு வட்டம் போட்டு, வட்டத்துள் ''ஆகஸ்டு 23, 1942'' என்று குறிக்கப் பட்டுள்ளது. பாரதி மலரில் ''தமிழன்'' என்பதற்குக் கீழே இடப் புறம் ''பாரதி மலர்'' என்று அச்சிடப்பட்டிருக்கிறது.

7 ஆம் இதழில் முகப்புப் படத்தில் மாறுதல். ''தமிழன்'' மட்டும் உச்சியில் இருக்கிறது. ''வார வெளியீடு'' ''2 அணா'' ஆகியவை, இடப்புறம்; ''அக்டோபர் 4, 1942'' (வலப்புறம்) இரண்டும் அடிமட்டத்துக்கு வந்துவிடுகின்றன. 8 ஆம் இதழில் விலையைக் குறிக்க 2 அணா சதுர நாணயத்தின் படம் அச்சிடப் பட்டிருக்கிறது. (இடப்புறம் அடியில்) ''ராணி''யில் முகப்புப் படத்தில் ''குடும்பப் பத்திரிகை'' என்று அச்சிடும் இடத்தில், ''தமிழன்'' 9 ஆம் இதழில் நாள் (அக்டோபர் 18, 1942), வார வெளியீடு'' ஆகியவை இருக்கின்றன.

**விளம்பரம்**

ஓர் இதழின் குருதி ஓட்டம் விளம்பரந்தான் என்பதை நன்கு உணர்ந்த ஆதித்தனார் ''தமிழன்'' வெளிவருமுன் விளம்பரங்கள் சேகரிக்கத் தொடங்கிவிட்டார் போலிருக்கிறது. முதல் இதழின் உள்பக்கங்களில் விளம்பரங்கள் இருப்பதுடன், கடைசி மூன்று பக்கங்களுங்கூட விளம்பரமே.

திரைப்பட விளம்பரங்கள் - எல்லாம் முழுப்பக்க விளம்பரங் கள் - தொடர்ந்து ஒவ்வோர் இதழிலும் காணப்படுகின்றன. முதல் இதழில் ''கண்ணகி'' திரைப்பட விளம்பரம் இரு பக்கங்களில் வெளிவந்திருக்கிறது. இறுதிப் பக்கத்தில் ஜெமினியின் ''நந்தனார்'' விளம்பரம். ''கல்கி'' தீபாவளி மலரில் விளம்பரம் செய்யுங்கள் என்று ஒரு கால் பக்க விளம்பரம் முதல் இதழில் இருக்கிறது.

''தமிழன்'' தீபாவளி மலர் வெளியிட்டதா? 11 வது இதழில் (நவம்பர் 1) ''தீபாவளி மலர்'' என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது :

''பல வாசகர்கள் தீபாவளி மலர் உண்டா?'' என்று கேட்டு இருக்கிறார்கள். பல இதழ்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, ''அவையெல்லாம் தீபாவளி மலர் போடுகின்றனவே, நீங்களும் போடவேண்டாமா?'' என்று ஒரு காரணத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பிற இதழ்கள் தீபாவளி மலர் போடுகின்றன என்ற காரணத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாமையைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். வேறு இதழ்களைப் பின்பற்றி நடப்பது எங்கள் கொள்கைக்கு முரணானது. வாசகர்களின் அவாவை நாங்கள் பூர்த்தி செய்யாமல் இருக்கப் போவதில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறோம். சமயம் கிடைக்கும்போது ஆண்டு மலர் வெளியிட உத்தேசித்து இருக்கிறோம்.''

(குறிப்பு : ''தந்தி'' ஆண்டு மலர்கள் தீபாவளி மலராக வெளிவந்தன. அவை ''தமிழன்'' அளவில் தனியே அச்சிட்டு வெளியிடப்பட்டன. விலை 4 அணா)

**பொருளடக்கம்**

முதல் இரண்டு இதழ்களில்தான் 3 ஆம் பக்கம் முழுவதும் விளம்பரம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன்பின் நேர் செங்குத்தாக அரைப் பக்கம் விளம்பரம் வெளியிட்டு, மீதி அரைப் பக்கத்தில் பொருளடக்கம் இடம்பெற்றுள்ளது. பொருளடக்கத்தில் வரிசையாகப் பொருள் தலைப்பு கொடுத்து, அதன் கீழ் பொருட்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பொருளடக்கம் பக்கவாரியாக இல்லை; பொருள்வாரியாக இருக்கிறது.

3வது இதழின் (செப்டம்பர் 6) பொருளடக்கத்தைப் பார்ப்போமே-


அரசியல் :

கலைக்கும் வேலை ... 5

கேட்டீர்களா? ... 8

யுத்தச் சுருக்கம் :

யானையின் வஞ்சம் ... 6

சங்கப் பலகை :

தமிழ் வளர்த்த பாண்டித்துரை (டி. கே. சீனிவாசயங்கார்) ... 10

கவிதை :

''தமிழன்'' (கம்பதாசன்) ... 9

வாழ்க்கைச் சம்பவம் :
குருவுக்கு மிஞ்சிய மாணவன் ... 11

புராதனக் கோயில்கள் :
புல் தின்ற கல் காளை
(எஸ். கே. சுவாமி) ... 12

இலக்கியம் :
சக்கிலியனும் சாத்தந்தையாரும்
(தி. கிருஷ்ணசாமி) ... 16

உண்மை வரலாறு :
ஆதிலெட்சுமியின் அவதி ... 16
விதியின் விளையாட்டு ... 19
ரூ. 1000 பரிசு விவரங்கள் ... 18

கலை உலகம் :
கலைமகள் அன்றும் இன்றும்
(ஆர். எஸ். சர்மா) ... 20

சினிமாப் பகுதி :
''தமிழ''னைப் படிக்கும் நடிகை ... 21
மதுரபவனத்தில் அமளி ... 21

மறக்க முடியாத சம்பவம் :
குரங்கின் கூத்து ... 22
எழுதி அனுப்புங்கள் ... 22

பாலர் பகுதி :
பொக்கிஷதாரைப் பொறுக்கியது ... 24

வாழும் வகை :
எதைப் பற்றிப் பேசுவது? ... 10

உண்மைத் துணுக்கு :
சரியான விடை ... 17
உடனே உத்திரவு ... 17
எழுதியனுப்புங்கள் ... 13

அன்பர் கடிதங்கள் :
''தமிழ''னைப் பற்றி
ஆனந்த விகடன் ஆசிரியர் ... 11
சுவாமி விபுலானந்தர் ... 5

சொற்பொழிவு :
இவந்தமிழர்களுக்கு ... 22
எழுதிய நேயர்களுக்கு ... 25
எழுதியனுப்புங்கள் ... 25

படங்கள் :
முகப்புப் பட விளக்கம் ... 6
நாலாவது குழந்தை ... 7
என். எஸ். கிருஷ்ணன் கவலைகள்! ... 12
முதல் கவலை ... 18

அடேயப்பா, ஓர் 28 பக்க இதழில் இத்தனை பொருட்களா!

படங்களையும் பொருளடக்கத்தில் சேர்த்து இருப்பது, படங்களுக்கு அய்யா அளித்த முதன்மையைக் காட்டுகிறது.

அடுத்த அடுத்த இதழ்களில் "நினைத்தாலும் சிரிப்பு வரும் நிகழ்ச்சி", "என்ன ஆச்சரியம்!" "அரசியல் பலகை", "துள்ளி வருது வேல்" என்று புதிய புதிய பகுதிகளும் சேர்க்கப்பட்டன. 11-வது இதழில் (நவம்பர் 1) "அரசியல் பலகை" பகுதியில் அன்றைய அரசியல் நிலை பற்றி எழுதி, கட்டுரையின் இறுதியில் "தி. த. கிருஷ்ணமாச்சாரி" என்று தமிழில் கையெழுத்திட்டிருக்கிறார், ஒருவர். அவர்தான் பின்னாளில் "டி. டி. கிருஷ்ணமாச்சாரி" என்று ஆகிவிட்டார்! தமிழைப் போற்றிக் காக்காத தமிழரின் குறைக்கு இது எடுத்துக்காட்டு!

**தலையங்கம்**

முதல் இதழின் 5 ஆம் பக்கத்தில் தலையங்கம் இருக்கிறது. முதல் இரண்டு பாத்தியில் தலையங்கம். இரண்டு தலையங்கங்கள் எழுதப்பட்டுள்ளன. "நமது நோக்கம்" என்பது முதல் தலையங்கம். "பிடுங்கின கண்கள்" என்பது இரண்டாவது தலையங்கம்.

தலையங்கத்துக்குமேல் "தமிழன்" என்ற தலைப்பு. அதில் ஒரு சன்னல் அருகில் மேசை, நாற்காலி போட்டு அமர்ந்து ஒரு பையன் எழுதுவது போன்றும், அவனுக்கு எதிர்ப்புறம் இரு பையன்கள் படித்துக் கொண்டு இருப்பது போன்றும் படம். பின்னணியில் மீனாட்சியம்மன் கோவிலின் 4 கோபுரங்கள். தென்னை மரங்கள்.

7 ஆம் இதழில் (அக்டோபர் 4) இருந்து இந்தப் படத்தில் சிறு மாறுதல் காணப்படுகிறது. எழுதிக் கொண்டிருக்கும் பைய னுக்குப் பின்னே சன்னல் இல்லை: ஒரு கட்டிடம் இருக்கிறது. அவனுக்கு எதிரில் ஒரே ஒரு பையன் மட்டும் நாற்காலியில் அமர்ந்து படித்துக் கொண்டிருக்கிறான்.

### இதழ் உரிமை

"பிடுங்கின கண்கள்" என்ற 2-வது தலையங்கம், இதழ் உரிமை பற்றியது. அப்பொழுது (1942 இல்) 2-வது உலகப் பெரும் போர் நடந்து கொண்டிருந்தது. இதழ்களுக்கு அரசு பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. செய்தித் தணிக்கையும் செயல்படுத்தப்பட்டது. இதைக் கண்டித்து, அந்தத் தலையங்கம் எழுதப்பட்டது. இதழ் உரிமைக்காக முதல் இதழிலேயே உரக்கப் போர்க்குரல் எழுப்பி விட்டார் ஆதித்தனார். அந்தக் குரலைக் கேட்போமா?

### பிடுங்கின கண்கள்

"என்றும் காணாத நிர்ப்பந்தம் பத்திரிகை உலகில் ஏற்பட்டு இருக்கிறது. காகிதத்திற்குப் பஞ்சம்; அச்சிடும் மைக்குப் பஞ்சம்; அச்சு இயந்திரங்களுக்குப் பஞ்சம். ஆனால், சர்க்கார் புதிது புதிதாகப் போடும் உத்திரவுகளுக்குத்தான் பஞ்சமில்லை! என்ன என்ன விஷயங்களைப் பிரசுரிக்கலாம் என்பதற்கு உத்திரவு; என்ன என்ன உண்மைகளைப் பிரசுரிக்கக்கூடாது என்பதற்கு உத்திரவு; எப்படி எப்படிப் பிரசுரிக்க வேண்டும் என்பதற்கு உத்திரவு; நிருபர்கள் யார், யார் இருக்க வேண்டும் என்பதற்கு உத்திரவு.

இவ்வளவு உத்திரவுகளையும் சமாளித்துக் கொண்டு பத்திரிகை நடத்துவதைவிட அதை நடத்தாமல் இருப்பதே மேல் என்று எண்ணி, பல தமிழ்த் தினசரிகள் நின்று போய்விட்டன என்பது நேயர்களுக்குத் தெரியும். நம் நாட்டிலும் வெளியிலும் என்னென்ன சம்பவங்கள் நடக்கின்றன என்று பொதுமக்கள் பத்திரிகைகள் மூலமே தெரிந்து கொள்ளுகிறார்கள். பத்திரிகைகள் நின்று போனால், சர்க்கார் நம்ப வேண்டாம் என்று வற்புறுத்து கிற "வதந்தி"யைத்தானே நம்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது?

பொதுமக்களுக்குப் பத்திரிகைகள் கண்கள் போன்றவை. அந்தக் கண்களைத் திறக்க வேண்டுமானால் "சர்க்கார் தாங்கள்

அறிந்து கொள்ள முடியாத பத்திரிகைத் தொழிலில் தலையிடாமல் இருக்க வேண்டும். அவர்கள் போட்டிருக்கும் கட்டுப்பாடுகளை உடனே தளர்த்திவிட்டு, பொது மக்களிடம் இருந்து பறித்துக் கொண்ட கண்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்''.

சொல்ல வேண்டிய கருத்துக்கள் சுருக்கமாக, அதே நேரம் அழுத்தமாக இந்தத் தலையங்கத்தில் சொல்லப்பட்டிருப்பதைக் காணுகிறோம். (இதே கருத்தை வலியுறுத்தும் கருத்துப்படம் ஒன்று, ''தமிழன்'' 2-வது இதழில் வெளிவந்திருக்கிறது.)

''தமிழ''னின் தலையங்கங்களை எஸ். எஸ். வாசன் (ஆனந்த விகடன் ஆசிரியர்) பாராட்டிய செய்தி, ''தமிழன்'' 3-வது இதழில் (செப்டம்பர் 6) இடம் பெற்றிருக்கிறது. ''தமிழன்'' தலையங்கங்கள் அறிவுக்கூர்மையுடன் உள்ளன என்று வாசன் புகழ்கிறார். இதைச் சொல்லிவிட்டு, ''தமிழன்'' தலையங்கத்தின் தன்மையையும் கூறுகிறார். அது,

''நீங்கள் சில பத்திரிகைகளில் படிக்கும் தலையங்கங்களுக்கும், நமது தலையங்கத்திற்கும் முக்கியமாக இரண்டு வித்தியாசங்கள் உள்ளன.

(1) வெறும் வசை புராணங்களை அடுக்கிப் பக்கங்களை நிரப்புவதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. சாதாரணமான நடையிலேயே தலையங்கத்தையும் சுருக்கமாகவே எழுதி வருகிறோம்.

(2) தலையங்கத்தில் கருத்துக்கள் நிறைய அடங்கியிருக்க வேண்டும் என்பது எங்கள் கொள்கை.

8-வது இதழில் (அக்டோபர் 11), ''தமிழனில் மற்றப் பகுதிகளைப் போலவே தலையங்கம் எழுதுவதிலும் பெரிதும் கவனம் செலுத்தி வருகிறோம். தலையங்கங்களைப் பொதுவாக வளர்த்துக் கொண்டு போவது எங்கள் நோக்கமல்ல. கருத்துக்களை நிறைய அடக்கி, சுருங்கச் சொல்லி, விளங்க வைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்'' என்று ஒரு குறிப்பு இருக்கிறது. தலையங்கம் எழுதப் பயிற்சி பெறுகிறவர்களுக்கு இந்தக் கருத்துக்கள் சிறந்த வழிகாட்டிகள் ஆகும். வெறும் ஏச்சு தலையங்கம் ஆகாது என்ற கருத்தை அன்றே அவர் கொண்டிருக்கிறார்.

தொடக்க காலத்தில் தலையங்கத்தில் இவ்வளவு அக்கறை காட்டிய அய்யா, பிற்காலத்தில் தலையங்கம் எழுதுவதையே நிறுத்திவிட்டார். இப்பொழுது ''தினத்தந்தி''யில் தலையங்கம் வெளியிடுவதில்லை. வேறு சில இதழ்களும் இதனைப் பின்பற்று கின்றன. தலையங்கம் என்பது ஆசிரியரின் கருத்தே; சாதாரண வாசகர்கள் தலையங்கம் படிப்பதில்லை என்று அவர் கருதியதே இதற்குக் காரணம். திரு.வி.க. கூட தலையங்கத்தை ''ஆசிரியக் கட்டுரை'' என்றே குறிப்பிடுவார்.

தேவைப்படும்பொழுது தலையங்கம் எழுத அய்யா அனுமதிக்கவே செய்தார். அவர்கூட சில நாட்களில் ''சி.பா. ஆதித்தன்'' என்று கையெழுத்திட்டுத் தலையங்கம் எழுதியிருக் கிறார். அந்நாளில் தலையங்கம் எழுதுவோர் அதன் இறுதியில் தங்கள் பெயரிடுவது வழக்கமாக இருந்தது. தந்தை பெரியார் ''விடுதலை''யில் தலையங்கம் எழுதும்பொழுது, ''ஈ. வெ. இராமசாமி'' என்று கையெழுத்திடுவார்.

**நாள்**

''தமிழன்'' தலையங்கத்துக்குமேல் பகுதியில் ''மலர் 1— இதழ் 1'' என்று இதழின் வரிசை குறிக்கப்படுகிறது. மலர், இதழ் இரண்டுக்கும் இடையில் ''ஆகஸ்டு 23, 1942 ஞாயிறு'' என்று நாள் இருக்கிறது.

மலர் - இதழ்களைக் குறிக்கத் தமிழ் இதழ்கள் ''மாலை - மணி'', ''சோலை - குயில்'', ''கொத்து - மலர்'', ''சொத்து - சுகம்'', ''குத்து - காயம்'' என்றெல்லாம் அலங்காரச் சொற் களைப் பயன்படுத்த, அய்யா அதில் அக்கறை செலுத்தவில்லை. இதழ் தங்க நகை போல அலங்காரம் செய்யப்படவேண்டும் என்பதிலேயே கவனமாக இருந்தார்.

தலையங்கப் பக்கத்தில் ஆங்கிலத் தேதியையும், பொருளடக்கப் பக்கத்தில் தமிழ்த் தேதியையும் (சித்ரபானு, ஆவணி 21) வழக்க மாகக் குறிப்பிட்டு இருக்கிறார். பொருளடக்கப் பக்கத்திலும் ''தமிழன்'' என்ற தலைப்பும் (சிறிய அளவில்), மலர், இதழ் எண் களும் இருக்கின்றன. உட்பக்கங்களின் உச்சியில் இடப்புறம் ''தமிழன்'' என்றும், வலப்புறம் இதழ் தேதியும் உள்ளன.

**சந்தா விவரம்**

5 ஆம் பக்கத்தில் இரு பாத்திகளைத் தலையங்கம் எடுத்துக் கொள்ள, 3 வது பாத்தியின் உச்சியில் ''தமிழன்'' சந்தா விவரம் இடம்பெறுகிறது.

ஆண்டு 1-க்கு ரூ. 6—0—0

6 மாதத்திற்கு ரூ. 3—8—0

தனிப்பிரதி இரண்டு அணா.

(முன்பு ரூபாய், அணா, பைசா என்ற கணக்கு இருந்தது. 12 பைசா ஓர் அணா. 16 அணா ஒரு ரூபாய்.)

''தமிழனைத் தவறாமல் வாசித்து வருவதற்கு ஒரு நல்ல வழி இருக்கிறது. அது என்னவென்றால், சந்தாதாரராய்ச் சேர்ந்து விடுவதுதான்'' என்று 8-வது இதழ் (அக்டோபர் 11) வாசகர்களைச் சந்தா கட்டத் தூண்டுகிறது.

11-வது இதழில் (நவம்பர் 1) ''திருடர்கள் ஜாக்கிரதை'' என்ற ஓர் எச்சரிக்கை! ''தமிழன் இதழ்கள் திருடுபோவதாகப் பல இடங்களில் இருந்து நமக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. யார் திருடுவது? நமது அலுவலகத்தில் இருந்து பத்திரிகைகள் அனுப்பியது உறுதியாயிருக்கிறபடியால், வழியில்தான் திருட்டு நடந்திருக்கவேண்டும்.''

இந்த அனுபவத்தின் காரணமாகத்தான் பின்னாளில் சந்தா சேர்ப்பதை ஆதித்தனார் ஊக்கப்படுத்தவில்லை. தமிழ் நாட்டுக்கு வெளியில், விற்பனையாளர் இல்லா ஊர்களில் இருந்து வரும் சந்தாக்களை மட்டுமே ஏற்றுக்கொண்டார். வேற்றுமொழி மாநில அஞ்சல்காரர் தமிழ் இதழ்களை எடுத்துக்கொள்ள மாட்டார் அல்லவா!

### சுத்தானந்த பாரதியார்

சந்தா விவரத்துக்குக் கீழே, கவியோகி சுத்தானந்த பாரதியாரின் அஞ்சல் இடம்பெற்றிருக்கிறது. அந்நாளில் சிறந்த இதழாளராகவும் திகழ்ந்தவர், இவர். அடுத்து வந்த இதழ்களிலும் இதே பக்கத்தில் இம்மாதிரி ஓர் அஞ்சல் வெளியிடப்பட்டிருக்கிறது. அஞ்சலுடன் அதை எழுதியவரின் படமும் வெளியிடப்பட்டுள்ளது. இடம் இல்லாதபொழுது, அஞ்சல் உட்பக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

''தமிழன்'' இதழ் தொடங்க இருப்பது குறித்தும், அதன் நோக்கங்கள் பற்றியும் அய்யா எழுதிய அஞ்சல்களுக்குப் பதில் அஞ்சல்களே, இவை. சில அஞ்சல்கள் ''தமிழன்'' வெளிவந்தபின் படித்துப் பார்த்து எழுதப்பட்டவை. சுத்தானந்த பாரதியாரின் அஞ்சல்-

அன்புள்ள ஆதித்தனாருக்கு நலமோங்குக!

"ஐயா, தமிழ்நாட்டின் நிலையை நினைத்தால் அழுகை அழுகையாய் வருகிறது. மனம் தாளவில்லை. தெற்கே மலையாளம், வடக்கே இந்தி, வடுகு, மேற்கே கன்னடம் தமிழகத்தைக் கிட்டி போட்டு நெருக்குகின்றன. தமிழரோ இவ்வுணர்ச்சியேயில்லாது, கலை, வாணிபம், தொழில், கல்வி அனைத்திலும் நினைப்பிலுங்கூட அந்நியருக்குக் கொத்தடிமையாய் இருக்கிறார்களே. அந்தோ! தமிழ்நாடு எங்கேயிருக்கிறது? தமிழர் யார்? தமிழர் கூட்டம் உருக்குலைந்து போனதே! தமிழர் நெஞ்சில் தீ இல்லையே. "தமிழன்" தீவிரமாகத் தமிழ் உணர்ச்சியுடன் நடக்க வேண்டும்,

அன்பு! அன்பு! அன்பு!
சுத்தானந்த பாரதி."

2 ஆம் இதழில் உட்பக்கம் நாவலர் சோமசுந்தரபாரதியார் அஞ்சலும், 3 ஆம் இதழில் யாழ் நூல்யாத்த விபுலானந்த அடிகளின் அஞ்சலும், 4 ஆம் இதழில் குமாரராசா சர். அமுத்தையா அஞ்சலும், 5 ஆம் இதழில் சர். ஆர்.கே. சண்முகம் அஞ்சலும், 6 ஆம் இதழில் கவிமணி தேசிகவிநாயகம் அஞ்சலும், 7-வது இதழில் நாதசுரப்பேரரசர் திருவாடுதுறை இராசரத்தினம் அஞ்சலும், 8-வது இதழில் (உட்பக்கம்) நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் அஞ்சலும், 9 ஆம் இதழில் (உட்பக்கம்) முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அஞ்சலும் இடம் பெற்றுள்ளன.

"தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, வாழ்க்கையில் எல்லாத் துறையிலும் முன்னேறும்படித் தூண்டுவதற்குப் பத்திரிகை ஒன்று இல்லாக் குறையைப் பல காலம் நான் உணர்ந்து வருந்தியது உண்டு. அதன்படியே, தமிழ் நலன் நாடித் தொண்டாற்றத் "தமிழன்" தோன்றியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது" என்கிறார் நாவலர் சோமசுந்தரபாரதியார்.

"படிப்பு, பணம், பதவி இம்மூன்றும் ஒருங்கேபெற்றிருக்கும் தாங்கள் (அய்யா அவர்கள்) தமிழர்களின் நன்மைக்காக உழைக்க முன்வந்திருப்பது தமிழரின் பாக்கியமே" என்கிறார், கவிமணி.

"தங்களின் இந்த அருந்தொண்டிற்கு இக்காலத் தமிழர்களும் எதிர்காலத் தமிழர்களும் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்" என்கிறார், முத்தமிழ்க்காவலர்.

**சிரிப்பு**

சுத்தானந்த பாரதியாரின் அஞ்சலுக்குக் கீழ் ஒரு சிரிப்புப் படம் இடம் பெற்றிருக்கிறது.

வேலைக்காரன் : டெலிபோனில் ஏதோ ரிப்பேர் இருக்குன்னு சொல்றாங்கோ. டெலிபோன் சரியா வேலை செய்யலியாம்...

எசமான் : அதுக்கு என்னை என்னடா செய்யச் சொல்றே. ரிப்பேர் ஆபீசுக்குப் போன் பண்ணேன்டா, மடையா!

நகைச்சுவை உணர்வு மிக்க ஆதித்தனார், அதற்கு அதிக இடம் அளித்திருக்கிறார். உட்பக்கங்களிலும் சிரிப்புகள் உள்ளன. 18 ஆம் பக்கம் உள்ள ஒரு சிரிப்பு-

மோட்டார் ஓட்டுவதற்கு லைசென்சு வாங்க டிரைவர் ஒருவர் போலீசு அதிகாரியிடம் போனார்.

போலீசு அதிகாரி : உமக்குப் பார்வை சரியில்லை என்று நினைக்கிறேன் அதோ நிற்கும் காரின் நம்பரைப் பார்த்துச் சொல்லும் பார்ப்போம்.

டிரைவர் : கார் எங்கே நிற்கிறது, சார்?

''தமிழ''னுக்குப் புதிய ஓவியர் ஒருவர் நியமிக்கப்பட்ட செய்தி, 2ஆம் இதழில் இருக்கிறது. ''எங்கள் பிரபல சென்னை சித்திரக்காரர் திரு. சர்மாவுக்கு உதவியாக ஒருவரை ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர் நூதன முறையில் பார்ப்போர் குலுங்கக் குலுங்க நகைக்கும் விதமாக வேடிக்கைப் படங்கள் எழுதுவதில் வல்லவர்'' என்கிறது, செய்தி. வாசகர்களுக்கு நகைச்சுவையை வழங்குவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தை இது காட்டுகிறது.

**மிருக யுத்தம்**

அப்பொழுது (1942) நடந்துகொண்டிருந்த உலகப்போர் பற்றிய செய்திகளின் தொகுப்பு, 6ஆம் பக்கத்தில் இருக்கிறது. இத்தொகுப்புக்கு ''மிருக யுத்தம்'' என்று தலைப்புக் கொடுத்திருக்கிறார்! ''நமது விசேஷ யுத்த நிருபர்'' எழுதியது. உருசியாவைக் கரடியாகவும், சப்பானியரைக் குள்ளநரியாகவும், இங்கிலாந்தைப் ''புல்டாக்'' என்ற தடி நாயாகவும், செர்மனியைப் பன்றியாகவும், அமெரிக்காவை யானையாகவும் உவமித்து, செய்திகள் எழுதப்பட்டுள்ளன,

அப்பொழுது போர்ச் செய்திகளை வாசகர்கள் விரும்புவார்கள் என்பதால், தொடர்ந்து ஒவ்வோர் இதழிலும் இத்தொகுப்பு இடம் பெற்றிருக்கிறது. 7ஆம் பக்கத்தில் "முன்ஷியும் வேதாளமும்" என்ற அரபுக் கதை. அந்தக் கதையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கருத்துப்படம் ஒன்று.

**ஆசிரியர் பேச்சு**

8ஆம் பக்கம் ''ஆசிரியர் பேச்சு''. அடுத்து வந்த இதழ்களிலும் பெரும்பாலும், இதே பக்கத்தில் ''ஆசிரியர் பேச்சு'' இருக்கிறது.

அது உச்சத் தலைப்பு. அதற்குக் கீழே "கேட்டீர்களா?" என்று ஒரு தலைப்பு.

இப்பகுதியில் வாசகர்களுடன் ஆசிரியர் பேசுகிறார். முழுக்கத் "தமிழன்" இதழ் பற்றித்தான். அதன் புதிய பகுதிகள், எதிர் காலத் திட்டம் முதலியவற்றை வாசகர்களுக்கு ஆசிரியர் தெரிவிக்கிறார். ஒவ்வொரு செய்திக்கும் ஒரு துணைத்தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் இதழில் உள்ள இப்பகுதியில் ஏராளமான செய்திகள் இருக்கின்றன. அவை :

**உண்மை**

இந்த இதழில் உண்மைத் துணுக்கு, உண்மைச் சம்பவம், உண்மைக் கதை போன்று பலமுறையும் உண்மைக்கு முக்கியத்துவம் அளித்து இருப்பதைக் கவனிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம். நமது இதழில் உண்மைக்குத்தான் முதல் இடம்; கற்பனைக்கு இரண்டாவது இடந்தான். கற்பனைக்கு இடமே இல்லை என்று சொல்லக்கூடத் தோன்றுகிறது.

வேறு இதழ்களைப் புரட்டிப் பார்த்தீர்களேயானால் ''சம்பவங்கள் எல்லாம் கற்பனைச் சம்பவங்கள்'' என்று அறிவிப்பு எழுதியிருப்பதைப் பார்க்கலாம். அம்மாதிரி அறிவிப்பை நமது இதழில் நீங்கள் காணவே மாட்டீர்கள். கற்பனைக் கதைகளையே படித்துச் சுவைத்த நேயர்கள் உண்மைக் கதையைப் படித்து அனுபவிக்க வேண்டும். இலுப்பைப்பூ தின்றவர்கள், சர்க்கரையைச் சாப்பிடுவது போலிருக்கும். உண்மைக் கதை அசல் வயிரம் என்றால், கற்பனைக் கதை போலிக்கு ஒப்பாகும்''.

''உண்மையான நிகழ்ச்சி என்று தெரிந்துகொண்டால், அதில் ஒரு தனிச்சுவையும், அதைப் படிப்பதில் ஊக்கமும் ஏற்படுகின்றன. இது அனுபவப்பூர்வமான உண்மை. இதனால்தான் நாம்

கற்பனைக் கதைகளை விரும்பவில்லை'' என்று 5வது இதழில் (செப்டம்பர் 20) ''ஆசிரியர் பேச்''சில் இருக்கிறது.

உண்மைக் கதைகளுக்கு வாசகர்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதை எங்கள் ''ராணி''யில் காணுகிறோம். இந்த உண்மையை அன்றே ஆதித்தனார் அறிந்திருக்கிறார். உண்மைக் கதை, உண்மை நிகழ்ச்சி, உண்மைத் துணுக்கு என்று எத்தனையோ தலைப்புகளில் அவற்றைத் ''தமிழ''னில் வெளி யிட்டார். இதன் காரணமாக எழுத்தாளர்களிடம் இருந்து ''கற்பனைத் துணுக்குகள் அநேகம் வந்து சேருகின்றன'' என்று 4-வது இதழில் கண்டு தெரிவிக்கிறார்.

**மகாத்மா காந்தி**

உண்மைக்கு எந்த அளவுக்கு அவர் மதிப்பு அளித்தார் என்றால்... மகாத்மா காந்தியின் 73-வது பிறந்தநாள் அன்று ''தமிழன்'' (7-வது இதழ் அக்டோபர் 4) கீழ்க்கண்டவாறு எழுதி னார்கள்.

**வாழ்க மகாத்மா**

''உண்மைதான் கடவுள்'' என்று நம்புகிறார், மகாத்மா. அரிச்சந்திரா நாடகம் பார்த்ததில் இருந்து, ''உண்மையைத்தான் என் வாழ்க்கையில் கடைப்பிடிப்பேன்'' என்று மகாத்மா விரதம் பூண்டார். உண்மைப் பாதையைவிட்டு விலக நேரும் என்றுதான் தனது பாரிஸ்டர் தொழிலை விட்டார்.

அரிசனக் குழந்தை சாப்பிட்ட இலையை எடுத்து வெளியே எறிய மறுத்த தன் மனைவியின் செயல் உண்மைக்கு விரோத மானது என்று நினைத்து, உண்மையை ஒப்புக் கொள்ளும்வரை வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கக்கூடாது என்றார். அவரது 73 ஆண்டு வாழ்வும் உண்மையின் சோதனையாகவே கழிந்திருக் கிறது. இவ்விதம் ''உண்மைக்குத் தன் வாழ்க்கையில் முதலிடம் கொடுத்துவரும் மகாத்மாவின் 74-வது பிறந்த நாள் அக்டோபர் மாதம் 2-ம் நாள் நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

உண்மைக்கு முதலிடம் கொடுத்துவரும் ''தமிழன்'' மகாத்மா நீடூழி காலம் வாழவேண்டும் என்று பிரார்த்திக் கிறான்''. ''தமிழன்'' இதழும் ஒரு சத்திய சோதனையே என்று 8-வது இதழ் (அக்டோபர் 11) கூறுகிறது. ''உண்மைத் துணுக்கு'' என்ற புதிய சொல்லையே தமிழ் மொழிக்குத் தந்தது. ''தமிழன்'' தான் என்கிறது, 9-வது இதழ். (அக்டோபர் 18)

**ரூ. 1000 பரிசு**

உண்மை வரலாற்றை எழுதி அனுப்பும் போட்டி ஒன்றும் முதல் இதழில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பரிசு ரூ. 1000. தமிழ் இதழ் ஒன்று ரூ 1000 பரிசு அளித்தது இதுவே முதல் முறை. போட்டி பற்றிய முழு விபரங்கள் 2ஆம் இதழில் அறிவிக்கப் பட்டுள்ளன.

இங்கே இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அந்நாளில் எழுத்தாளர்கள் இதழ்களுக்கு ''விஷயதானம்''தான் செய்வார் கள். இதழ்கள் அதற்கு ''சன்மானம்'' வழங்குவது இல்லை. எழுத்தாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கிய முதல் தமிழ் இதழ் ''தமிழன்''தான். ஒரு சிறு துணுக்கு எழுதியவர்களுக்குக்கூட ரூ. 1 அன்பளிப்பு தவறாமல் அனுப்பிவைக்கப்பட்டது.

அது மட்டுமா? 2-வது இதழில் 'ஆசிரியர் பகுதி'யில் உள்ள ஒரு குறிப்பைப் பாருங்கள் :

''சென்ற இதழில், சொற்பொழிவுப் பகுதியில் திருச்சி திரு. எம். ரெங்கராசன எழுதிய ''இளந்தமிழருககோர் வார்த்தை'' என்பதை வெளியிட்டு இருந்தோம. அவருக்கு ரூபாய் ஒன்று அனுப்பினோம. ஆனால், விலாசம் தெரியவில்லை. அவருக்கு எழுதிய கடிதம் ஒனறும திரும்பி வந்துவிட்டது. ஆதலால இதை வாசிக்கும் திரு. எம. ரெஙகராசன தமது முழு விலாசத்தை யும ''தமிழன'' அலுவலகததுக்குத் தெரிவிககக் கேட்டுக கொள்ளுகிறோம''.

அது மட்டுமா? தொடர்ந்து இதழில் அடிக்கடி வெளிவந்த அறிவிப்பு :

**''அன்பளிப்பு'' கிடைக்கவில்லையா?**

''ஒவ்வொரு வாரமும் வெளியிடப்படும் விஷயங்களுக்கு அன்பளிபபு, அவ்வாரம் வியாழக்கிழமைக்குள் கிடைக்கும்படி நாம அனுப்பிவிடுகிறோம். ஆனால், சிலரது விலாசம் சரியாக இல்லாவிட்டால், அனுப்ப இயலாது வைத்திருப்போம். எனவே, பிரசுரிக்கப்பட்ட விஷயங்களுக்கு அந்த வாரத்தின் வியாழக் கிழமைக்குள் நேயர்களுக்கு அன்பளிப்பு கிடைக்காவிட்டால், தங்கள் முழு விலாசத்துடன் நமக்கு ஒரு கார்டு எழுதிப்போட வேண்டுகிறோம்''.

எழுத்தாளர்களுக்கு அன்பளிப்பு கொடுப்பதில் அன்றே இவ்வளவு ஆர்வத்துடன் அய்யா அவர்கள் இருந்தார்கள். இன்று

எத்தனை இதழ்களிடம் இந்த ஆர்வம் இருக்கிறது! அன்று கொடுத்த அன்பளிப்பு ஒரு ரூபாய்தான். அன்று தங்கம் விலை ஒரு பவுன் ரூ. 45. இன்று (1990இல்) ரூ. 2500 இதிலிருந்து அன்று ஒரு ரூபாய் என்பது எவ்வளவு மதிப்பு வாய்ந்தது என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்!

**உத்திரவு**

''ஆசிரியர் பேச்சு''ப் பகுதியில் அடுத்து ''உத்திரவு'' என்ற பகுதி இருக்கிறது. அது,

இந்தப் பத்திரிகையின் சொந்தக்காரர் திருவாளர் சி. பா. ஆதித்தன் எம்.ஏ. பார் - அட்லா என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ''உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு'' என்பது அவரது வாழ்க்கையின் குறிக்கோள் என்பது அவர் கையெழுத்திட்டு எழுதியிருக்கும் தலையங்கத்திலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

அவர் இந்த இதழை நடத்தும் நிர்வாகிகளுக்கு என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? ''பணச் செலவைப் பொருட்படுத்தவேண்டாம். பத்திரிகையை முதல் தரமாகச் செய்யுங்கள்.' என்று உத்திரவு போட்டிருக்கிறார். அதன்படி இந்த அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒவ்வொருவரும் இதழின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைக்கச் சித்தமாக இருக்கிறார்கள். அதே போல வாசகர்கள் இதழின் வளர்ச்சிக்கான யோசனைகளைச் சொல்லி, ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறோம்.''

இத்துடன் ''வருங்காலம்'' என்ற அடுத்த பகுதியையும் சேர்த்துப் படிப்பது நல்லது—

**வருங்காலம்**

''இந்த முதல் இதழ் பல இடையூறுகள் இடையே அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகையால், நாங்கள் போட்டிருந்த முழு அம்சங்களையும் இந்த முதல் இதழில் கொண்டுவர இயலவில்லை. அதற்காக வருந்துகிறோம். இனிவரும் இதழ்கள் இதைவிட மேலானவையாயிருக்கும் என்பதை நேயர்கள் நிச்சயமாக நம்பலாம்''.

அன்று (1942-ல்) தமிழில் அதிகம் விற்பனையான வார இதழ், ''கல்கி''. அது 10 ஆயிரம் படி விற்பனை ஆயிற்று. ''தமிழன்'' விற்பனை 7 ஆயிரம். அன்று இது மிகப் பெரிய சாதனையாகப்

போற்றப்பட்டது. இந்த சாதனையின் இரகசியம் என்ன என்பதை ''உத்திரவு'', ''வருங்காலம்'' என்ற இரண்டு பகுதிகளும் வெளியிடுகின்றன.

அய்யா செலவைப் பற்றிக் கவலைப்படவில்லை. பொற் கொல்லர் நகையை அழகுபடுத்துவது போல ஒவ்வொரு பக்கத்தை யும் அழகுபடுத்த வேண்டும் என்று அடிக்கடிச் சொல்லுவார். (''தினத்தந்தி'' ஒவ்வோர் அங்குலமும் தங்க நகை போல அலங் கரிக்கப் படுகிறது'' என்ற முழக்கத்தைத் 'தினத்தந்தி'யில் இப் பொழுதும் காணலாம்.) அந்தக் கொள்கையைத் ''தமிழ''னிலும் பின்பற்றியிருக்கிறார்,

படம் இல்லாத பக்கமே கிடையாது. கதைப்படம், செய்திப் படம், சிரிப்புப்படம், வரைபடம் என்று பக்கத்துக்குப் பக்கம் படங்கள். ஒவ்வொரு பக்கமும் இரு வண்ணத்தில் அச்சிடப்பட் டிருக்கிறது. அந்நாளில் மற்ற இதழ்கள் நினைத்துப் பார்க்க முடியாத செலவுகள், இவை.

அப்படிச் செலவு செய்ததால்தான், தோழமை இதழ்களின் பாராட்டுகளைக் கூடத் ''தமிழன்'' பெற முடிந்தது. ''பக்கந் தோறும் இரு வண்ணத்தில் அச்சிடப்பட்ட முதல் தமிழ் இதழ் ''தமிழன்''தான் என்று ''கல்கி'' பாராட்டியதை முன்பே பார்த் தோம். ''ஒரு தமிழ் சித்திர வாரப்பதிப்பு இவ்வளவு ஆரம்பத் திலேயே ஒரு நல்ல பெயர் பெற்றிருப்பது இதுவே முதல் முறை'' என்கிறார், ''ஆனந்தவிகடன்'' ஆசிரியர் எஸ். எஸ். வாசன் (''தமிழன்'' 3-வது இதழ்), ''நேர்த்தியான முறையில் அழகிய பத்திரிகையை ஒரு தமிழர் நடத்துவது காண அக மகிழ்கிறோம்'' என்று ''திராவிடநாடு'' (ஆசிரியர் அறிஞர் அண்ணா) எழுதியது. (''தமிழன்'' 4-வது இதழ்) ''இந்தப் பத்திரிகையைப் பொது மக்கள் அபரிதமாக ஆதரிப்பார்கள் என்று நம்ப இடம் இருக் கிறது'' என்று கூறியது, ''இந்து'' (''தமிழன்'' 5-வது இதழ்.)

### நிர்வாக ஆசிரியர்

''தமிழன்'' இதழின் ஆசிரியர் யார் என்ற விவரம் எங்கும் குறிப்பிடப்படவில்லை. கடைசி அட்டையில், ''மதுரை ஆதித்தன் பவர் பிரஸ்சில் அச்சிடப்பட்டு, சி. பா. ஆதித்தன் எம்.ஏ, பார்-அட்-லா அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது'' என்று மட்டும் இருக்கிறது. ஆனால், ஆதித்தனார்தான் ஆசிரியர் என்பது ஊர் அறிந்த இரகசியம்,

நிர்வாக ஆசிரியராக மு. கணபதி இருந்தார். மதுரைக் காரரான இவர் ஓர் எழுத்தாளர்.

**எஸ். கே. சுவாமி**

''தமிழன்'' முதல் இதழில் ''ஆசிரியர் பேச்சு'' பகுதியில் ''நிர்வாக ஆசிரிய''ருக்கு அடுத்து ''எஸ். கே. சுவாமி'' என்ற துணைத் தலைப்பில், ''தமிழன்'' துணை ஆசிரியர் எஸ். கே. சுவாமியைப் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது—

தமிழ்ப்பத்திரிகை உலகில் திறமை வாய்ந்தவர்களுக்கு நமது ''தமிழன்'' அலுவலகத்தில் இடம் கொடுக்கவேண்டும் என்பது நமது அபிப்பிராயம். அதற்கு இணங்க, நமது பத்திரிகைக்கு உதவி ஆசிரியராக எஸ். கே. சுவாமி அவர்களை நியமித்து இருக் கிறோம். இவர் இதற்கு முன் நாகர்கோவிலில் நடைபெற்ற ''தமிழ''னுக்கு உதவி ஆசிரியராக 4 ஆண்டுகளும், ''ஊழியன்'' பத்திரிகையில் உதவி ஆசிரியராக ஓர் ஆண்டும் இருந்திருக்கிறார். சமீபத்தில் நடைபெற்ற ''ஆனந்த விகடன்'' சிறுகதைப் போட்டி யில் முதல் பரிசு பெற்றவர் இவரே என்பது நேயர்களுக்குத் தெரிந்து இருக்கலாம்.''

நாகர்கோவிலில் ''தமிழன்'' என்ற பெயரில் ஓர் இதழ் வெளி வந்தது ஆதித்தனாருக்குத் தெரிந்தே இருந்திருக்கிறது. இருந்தும், தனது இதழுக்குத் ''தமிழன்'' என்றே அவர் பெயர் சூட்டியிருக் கிறார்.

நாகர்கோவிலில் 1934-இல் ''தமிழன்'' வெளிவந்தது. ஆசிரியர்கள் ப. சிதம்பரம், ப. சுப்பிரமணியம், தமிழ் இதழான இதில், ஆங்கிலத்தில் தலையங்கம் எழுதப்பட்டது! அதற்கு முன், 1912-இல் திருவனந்தபுரத்தில் ஒரு ''தமிழன்'' வெளிவந்தது. ஆசிரியர்—எஸ். முத்துசாமி, புகழ்பெற்ற ''ஊழியன்'' (1920) இராய. சொக்கலிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு, காரைக்குடி யில் வெளிவந்தது.

நாகர்கோவில் ''தமிழ''னில் எஸ். கே. சுவாமி பணியாற்றி இருந்ததால், கவிமணி தேசிகவிநாயகம், அவ்வை தி. க. சண்முகம் ஆகியவர்களுக்கு அவர் நன்கு தெரிந்தவராக இருக்கிறார். ''தமிழன் தொண்டர்குழாத்தில் சிறந்த எழுத்தாளரும், விரைந்த செயலாளருமாகிய திரு. எஸ். கே. சுவாமி அவர்கள் இடம் பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்வுற்றேன்'' என்று தி. க. சண்முகத் தின் அஞ்சல் 4-வது இதழில் வெளிவந்திருக்கிறது.

இதே, இதழில் ''ஆசிரியர் பேச்சு'' பகுதியிலும் எஸ். கே. சுவாமி இடம் பெற்றுள்ளார். ''திரு. எஸ். கே. சுவாமியை எங்கள் பத்திரிகையின் துணை ஆசிரியராக நியமித்திருப்பதைப் பாராட்டிப் பல அன்பர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர் ஆனந்தவிகடன் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருப்பதையும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ''உண்மை வரலாறு'' போட்டியில் அவருக்கே முதல் பரிசைக்கொடுத்து விடுவோம் என்று நேயர்கள் பயப்படுகிறார்கள் போலும்! ஆனால், 'தமிழன்' அலுவலகத்தில் உள்ள எவரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று நேயர்களுக்கு உறுதி கூறுகிறோம்''.

''என் அன்பன் திரு. எஸ். கே. சுவாமியை உதவி ஆசிரியராக நியமித்து இருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன், அவர் இவ்வேலைக்கு மிகுந்த அனுபவமும் அறிவும் உடையவர் என்பதைப்பற்றி நான் சொல்லவேண்டியது இல்லை. தாங்களே ''தமிழன்'' பத்திரிகையில் குறிப்பிட்டு இருக்கிறீர்கள்'' என்ற கவிமணியின் அஞ்சல் 6-வது இதழில் வெளிவந்திருக்கிறது.

மு. கணபதிக்குப்பிறகு ''தமிழன்'', ''தந்தி'', இரண்டின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கோ. த. சண்முக சுந்தரம் (மேதாவி) எழுதிய, ''பாரதியாரின் மனக்கோட்டை'' என்ற கட்டுரை ''தமிழன்'' 4-வது இதழில் வெளிவந்திருக்கிறது. ''தமிழ''னில் திரைப்படச் செய்திகளை மிகச் சுவையாக இவர் எழுதி வந்தார். ''தந்தி''யில் ''ஆசிரியர்'' என்று இவரது பெயர் அச்சிடப்பட்டது.

இங்கே ஒன்றைக் குறிப்பிடவேண்டும். தன்னுடைய ஆசிரியர், துணை ஆசிரியர்களுக்கு நல்ல மதிப்பும், மரியாதையும், விளம்பரமும் அய்யா அளித்தார்.

அது மட்டுமா? கொஞ்சம் எழுதத் தெரிந்தவர்களைக்கூட அய்யா ''ஆசிரியர்'' என்று ஆக்கினார். தன் மீது அய்யா அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை. வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும் அல்லவா?

அவரால் பட்டை தீட்டப்பட்டவர்கள் பின்னாளில் வயிரங்களாக மின்னினார்கள். கோ. தா. சண்முகசுந்தரம் ''மேதாவி'' என்ற புனைபெயரில் மர்மக் கதை மன்னன் ஆனார். திரைப் படங்களுக்கு உரையாடல் எழுதினார்; படங்களை இயக்கவும் செய்தார். கவிஞர் கு. மா. பாலசுப்பிரமணியம் ''தமிழ''னில்

துணை ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர். பெருங்கதை ஆசிரியராகவும், திரையுலகிலும் புகழ்பெற்ற எம். எஸ். சோலைமலை முதலில் ''தந்தி''யில் பணியாற்றியவரே. மூதுபெரும் எழுத்தாளரும், இதழாளருமான ''சாவி'' ''தமிழ''னில் பணி செய்தவர். ''மாஜினி'' தந்தியில் பணியாற்றியவர்.

**சிப்பாய்**

''தமிழ''னில் வாரந்தோறும் ''புள்ளி விவரக்கட்டுரை'' என்ற நெற்றித் தலைப்புடன் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதை எழுதியவர் ''சிப்பாய்''. அய்யா தான் இந்த ''சிப்பாய்', என்பதை முன்பே பார்த்தோம். ''தமிழனில் வெளிவரும் புள்ளி விவரக் கட்டுரைகளைச் சேர்த்துவைத்துக் கொண்டு வந்தால், உங்கள் நண்பர்களிடம் பேசும்போது ஆதாரத்துடன் பேச உதவியாக இருக்கும்'' என்ற குறிப்பு 2-வது இதழில் இருக்கிறது.

1941இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. முதல் இதழில் முதல் கட்டுரை ''தமிழ் நாட்டில் எங்கே பெண்கள் அதிகம்?'' என்ற தலைப்பில் வெளிவந்தது.

**நூற்பகுதி**

''தமிழன்'' முதல் இதழில் ''நூற்பகுதி'' என்றும் ஒன்று இருக்கிறது. அதில் இரு நூற்களுக்கு மதிப்புரை எழுதியிருக்கிறார். 3-வது இதழில் இப்பகுதி ''பார்வையிட்டோம்'' என்று மாறுகிறது. 6-வது இதழில் ''புத்தக வரவு'' என்று ஆகி, நூலின் பெயர், ஆசிரியர், விலை, வெளியீட்டாளர், முகவரி ஆகிய விவரம் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதழ் 11இல் ''வரப்பெற்றோம்'' என்று மாறுகிறது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதைதான் என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், ''தந்தி''யில் கட்டெறும்பும் காணாமல் போய்விட்டது. ''மக்கள் இதழில் நூல் மதிப்புரை தேவையில்லை'' என்றே அவர் சொல்லிவிட்டார்.

அவரைச் சொல்லிக் குற்றமில்லை. திரைப்பட மதிப்பீடுகளை மக்கள் படித்தார்கள். நூல் மதிப்பீடுகளைச் சாதாரண மக்கள் விரும்பிப்படிக்கவில்லை. எனவே, நூல் மதிப்பீட்டினால் நூலை வெளியிட்டவர்களுக்கு மட்டுமே பயன் என்று கருதினார். ஆனால், இப்பொழுது ''தினத்தந்தி''யில் நூல் மதிப்புரை வெளியிடுகிறார்கள். வாசகர்களும் வளர்ந்துவிட்டார்கள். அதற்கு

ஏற்பத் ''தினத்தந்தி''யும் வளர்ந்துவிட்டது. தடாகத்தில் தண்ணீர் உயர்ந்தால், அதிலுள்ள தாமரையும் உயரும் அல்லவா?

**இலக்கியம்**

''தமிழ''னில் ஒவ்வோர் இதழிலும் தொடர்ந்து இருபக்க அளவில் இலக்கியக் கட்டுரை ஒன்றும் வெளியிட்டு வந்தார், இலக்கியக் கட்டுரை வெளியிடுவதை அந்நாளில் எல்லா இதழ்களுமே வழக்கமாகக் கொண்டிருந்தன. ஏனென்றால், வாசகர்களில் புலவர்களும் இருந்தார்கள். பின்புதான் ''வர வர மாமியார்...... '' என்ற கதையாக ஆகிவிட்டது. ஏனென்றால் சாதாரண மக்களும் இதழ்களைப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்கும் இலக்கியத்துக்கும் இடையே ஏணி வைத்தாலும் எட்டாத தொலைவு!

அய்யா ''பாரிஸ்டர்'' என்றாலும், சங்க இலக்கியத்தில் நல்ல தேர்ச்சி உள்ளவர், நண்பர்களுடன் பேசும்பொழுது சங்கப் பாடல்களை மேற்கோள் காட்டுவார். குறிப்பாகத் திருக்குறளில் நல்ல ஈடுபாடு உண்டு. ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'', ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப'', ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து.........'', ''தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்'', ''அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க'' என்ற குறள்களை அய்யா வாழ்க்கையின் வழிகாட்டிகளாகக் கொண்டிருந்தார். மதுரையில் ''தமிழன்'', ''தந்தி'' நடத்திக் கொண்டிருக்கும் பொழுது அங்குள்ள திருவள்ளுவர் கழகத்தில் திருக்குறள் தொடர் சொற்பொழிவு ஆற்றினார்.

பொதுக் கூட்டங்களில் எளிய பாடல்களை எடுத்துக்காட்டுவார். அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் தவறாது பாடும் ஒரு பாடல்-

''திங்கள் உறங்கும் புள் உறங்கும்
தென்றல் உறங்கும் சிலகாலம்
சங்கு முழங்கும் தமிழ்நாடு
தன்னை நினைந்தபோதெல்லாம்
பொங்கு கடலும் உறங்காது
பொழுதொருநாளும் விடியாது
எங்கும் உறங்கும் இராக்காலம்
என்கண் இரண்டும் உறங்காதே''

''விவேக சிந்தாமணி''யில் உள்ள பாடல், இது. ''தமிழ் நாடன்'' என்பதை அய்யா ''தமிழ்நாடு'' என்று மாற்றிப் பாடுவார்.

இவ்வளவு இலக்கியப் பயிற்சியுள்ள ஆதித்தனார்,இதழ் என்று வரும்பொழுது அசல் பாமரன் ஆகிவிடுவார். அவர் பாமர மக்களுக்காக இதழ்கள் நடத்தியதே இதற்குக் காரணம்.

## தமிழிசைப்போர்

''தமிழன்'' இதழில் கலை உலகம், திரையுலகம் பகுதிகளும் இடம் பெற்றிருந்தன. 'கலை உலகம்' பகுதியில் இசைக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. இப்பகுதியிலும் அவரின் தமிழ் உணர்வே வெளிப்படுகிறது. பிடில் வித்துவான் இலால்குடி நீலமேகம் கச்சேரி பற்றி ஒரு மதிப்பீடு. அதில்- ''கூடியவரையில் தமிழ்ப் பாடல்களையே இவர் கையாண்டு வருவது பாராட்டத் தக்கது''. நீலாம்பாள் கடம்பியின் வீணைக்கச்சேரி பற்றி- ''இம்மாதிரியான இசை விருந்துகளில் தமிழ்ப்பாடல்கள் இன்னும் சிலவற்றைச் சேர்த்திருந்தால் மிகவும் நலமாயிருக்கும்.''

''தமிழன்'' 2-வது இதழ் முகப்புப்படம்: இசைக்குயில் எம். எஸ். சுப்புலட்சுமி. ''தமிழன் பிறந்த மதுரையிலேயே இவரும் பிறந்தவர்'' என்று உரிமை கொண்டாடுகிறார்கள்! ''இவர் தமிழிசை இயக்கத்தில் பற்று உள்ளவர். 'தமிழன்' வளர்ச்சியிலும் இவருக்கு அக்கறை உண்டு. அதுபோலவே இவர் புகழ் ஓங்க வேண்டுமென்றே நாங்களும் விரும்புகிறோம்.''

தமிழிசைப் போராட்டத்துக்கு அய்யா முழு ஆதரவு அளித்தார்.

## திரைப்படப்பகுதி

அன்றே திரைப்படச் செய்திகளுக்கு அதிக முதன்மை அளித்தார். ''தமிழ''னில் 2,3 பக்க அளவுக்குத் திரைப்படச் செய்திகள் இடம் பிடித்தன. திரைப்படக் கலைஞர்கள் மக்கள் அறிந்தவர்களாக இருப்பதே இதற்குக் காரணம். மக்களுடன் தொடர்புடையதுதான் செய்தி என்ற கொள்கை கொண்டவர் ஆதித்தனார்.

''பக்த நந்தனார்'' படம்பற்றி எழுதியிருக்கிறார். அதில் அப்படத்தைத் தயாரித்த எஸ். எஸ். வாசன் பற்றி குறிப்பிடப்

பட்டு உள்ளது. ''ஆகக் கீழிருந்து ஆக மேல்நிலைக்கு ஒரு மனிதன் தன் சொந்த உழைப்பாலும், ஊக்கத்தாலும் வரமுடியும் என்று தமிழர்களுக்கு எடுத்துக்காட்டிய உண்மை உழைப்பாளி'' என்று வாசனை வாயாரப் புகழ்கிறார்.

அடுத்த அடுத்த இதழ்களில் திரைப்படச் செய்திகள் அதிகம் இடம்பெற்றன. ''திரையிலும் திரைமறைவிலும்'' என்ற கேலிப் படங்கள் வாசகர்களிடம் பரபரப்பான வரவேற்பைப் பெற்றன.

அந்நாளில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் டி. ஏ. மதுரம் அதிகப் புகழுடன் விளங்கினார்கள். அவர்களைப் பற்றிய செய்திகள், படங்கள் நிறைய வெளியிடப்பட்டன. ''தமிழ''னைப் பாராட்டிக் கலைவாணர் எழுதிய பாடல் ஒன்று 7-வது இதழில் வெளிவந்தது. அந்தப் பாடல்-

**கையெல்லாம் மணக்கச் செய்வான்**

தாய்மொழியின் நற்பெயரைத் தான்படைத்து உலாவிவரும்
''தமிழ''னை இங்காதரியும் கடவுளே-பெரும்
இமயமலை அதுபோல கடவுளே-நாளும் (தாய்மொழியின்)
மாணவ மாணவிகட்கும் வயதுவந்த பேர்களுக்கும்
வழிகாட்டுவான் ''தமிழன்'' கடவுளே-பிறர்
பிழை நாடிடான் ''தமிழன்'' கடவுளே-அவன்
வல்லமையைச் சொல்ல வல்லேன் கடவுளே (தாய்மொழியின்)
கட்டுரைகள், காதல் கதை, கவிகள், சங்க காவியங்கள்
கணக்கிலே கைதேர்ந்தவனாம் கடவுளே-ஒரு
கணத்தில் இந்த உலகினர்தம் கடவுளே-வாயும்
கையெலாம் மணக்கச் செய்வான் கடவுளே (தாய்மொழியின்)
ஏ சந்தா ஏ ஆறு ரூபா
ஏ ஒண்ணு ஏ ரெண்டணா
ஏ அந்தா ஏ வருது
ஏ வாங்கு ஏ படிப்போம் (தாய்மொழியின்)

''சகுந்தலை'' என்ற படத்தில் கலைவாணர் பாடிய ''காலையிலே எழுந்திரிச்சு......கடவுளே......'' என்ற மெட்டில் இப்பாடலைப் பாடவேண்டும் என்று குறிப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

8-ஆம் இதழில் இருந்து திரைப்படக் கேள்வி-பதில் இடம் பெறுகிறது. அதற்குத் தலைப்பு- ''வெட்ட வெளிச்சம்''. ''மேதாவி'' பதில் சொல்லியிருக்கிறார். 7-ம் இதழில் இதற்கான

அறிவிப்பு உள்ளது. அதிலேயே "நமது சினிமா ஆசிரியர் மேதாவி யைக் கேளுங்கள்" என்று இருக்கிறது. 9-வது இதழில் உள்ள ஒரு கேள்வி-பதில்.

வி. வி. திலக் சாஸ்திரி,
திருவண்ணாமலை.

பெண்கள் சினிமாவில் நடிப்பதால், அவர்களின் கற்புக்குப் பங்கம் ஏற்படாமல் இருக்க முடியுமா?

இந்தக் கேள்விக்கு, தமிழ்நாட்டின் பிரபல நட்சத்திரங்களில் ஒருவரான எம். எஸ். விஜயாள் என்னிடம் நேரில் கூறியதை அப்படியே பதிலாகக் கொடுக்கிறேன்.

"சினிமாவில் சேரும் பெண்கள்தான் டைரக்டர்களின் கற்பைக் கெடுத்துவிடுகிறார்கள்! டைரக்டர்கள் அவர்களின் கற்பைக் கெடுப்பதில்லை! தங்களுக்குப் படத்தில் முதலிடம் வேண்டும் என்பதற்காகவே பல பெண்கள் டைரக்டர்களைக் கற்பழிக்கும் தொழிலில் இறங்கிவிடுகிறார்கள்!"

**இளந்தமிழர்களுக்கு**

"இளந்தமிழர்களுக்கு ஒரு வார்த்தை" என்ற பகுதியில் சொற்பொழிவு வடிவில் அமைந்த அஞ்சல்கள் வெளியிடப்பட்டன

இதுபற்றிய அறிவிப்பு "எழுதி அனுப்புங்கள்" என்ற தலைப்புடன் இருக்கிறது. "இளந்தமிழர்களே! உங்கள் நண்பர்களுக்கு ஊக்கம், உற்சாகம், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, நற்பழக்கம் முதலியவற்றை ஊட்டக்கூடிய சொற்பொழிவுகளை எழுதி அனுப்புங்கள். ஒரு போஸ்டுகார்டில் அடங்கக்கூடிய அளவு எழுதுங்கள் போதுமானது. நாங்கள் வெளியிடும் ஒவ்வொரு சொற்பொழிவுக்கும் ரூ 1 அன்பளிப்பாகக் கொடுக்கப்படும்".

இப்பகுதி பற்றிய இரண்டு சுவையான குறிப்புகள் 3-வது இதழில் காணப்படுகின்றன. இரு வாசகர்களிடம் இருந்து வந்த கடிதங்களுக்கு ஆசிரியர் அளித்த பதில்கள், அவை.

"கனா", புதுக்கோட்டை: நீங்கள் எழுதியிருப்பது நன்றாக இருக்கிறது. ஆனால் புனை பெயருடன் எழுதும் "சொற்பொழிவு" களை வெளியிட மாட்டோம். நீங்கள் மேடையில் ஏறிச்சொற் பொழிவுகள் நிகழ்த்தினால், புனை பெயருடன் பேச முடியுமா? புனை பெயருடன் எழுதிய அன்பர்கள் இதைக் கவனிக்கவேண்டும்.

விஜயசிறீ, கோயமுத்தூர்: தங்களது சொற்பொழிவு பொதுவாக ''இந்தியர்களுக்கு'' என்று எழுதப்பட்டு இருக்கிறது. ''சொற்பொழிவுகள்'' தமிழர்களுக்கு மட்டும் என்று எழுதப்பட வேண்டும்.

புனை பெயருடன் வரும் அஞ்சல்களை வெளியிடக்கூடாது என்று அய்யா எப்பொழுதுமே சொல்லுவார்.

**பொதுவாக**

பொதுவாகத் தரத்திலும் தயாரிப்பிலும் ''தமிழன்'' இதழ்கள் சிறந்து விளங்கின. யாரோ ஒருபுதிய ஆசிரியர் வெளியிட்ட இதழ் என்று சொல்லவே முடியாது. இதழ் துறையில் பழுத்து, கொட்டை போட்ட ஒருவர் வெளியிட்ட இதழ் போன்று ''தமிழன்'' முதல் இதழே எல்லா வகையிலும் சிறந்து விளங்கியது. அதனால்தான், எஸ்.எஸ். வாசன், ''கல்கி'' போன்ற சம கால ஆசிரியர்களின் பாராட்டுகளை இவ்விதழ் பெற முடிந்தது.

''பேச்சு வழக்கில் உள்ள தமிழை (கொச்சை நீக்கி) எழுத வேண்டும்'' என்பது அய்யா விதித்த பொன் விதி. இதைத் ''தமிழன்'' முதல் இதழிலேயே பார்க்க முடிகிறது. எளிய, இனிய பேச்சுத் தமிழில்தான் எந்தச் செய்தியும் எழுதப்பட்டிருக்கிறது. 11-வது இதழில் (நவம்பர் 1) ''தமிழ''னுக்கு எழுதுவோர் கவனிக்க'' என்ற அறிவிப்பில், ''எளிய தமிழில் எழுதவேண்டும். எளிய தமிழ் என்றால், பேச்சுத் தமிழைக் கொச்சையில்லாமல் பிழை யில்லாமல் எழுதவேண்டும்'' என்று இருக்கிறது.

நான் ''ராணி'' ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பொழுது, ''தமிழன்'' பழைய இதழ்களைப் பார்த்தது இல்லை. பல ஆண்டு கழித்துப் பார்க்க வாய்ப்புக் கிடைத்தபொழுது, ''ராணி''க்குத் ''தமிழன்'' முன்னோடியாக இருப்பதைக் கண்டு வியந்தேன்.

அந்நாளில் பேராசிரியர்கள் எழுதுவதுதான் வழக்கம். அய்யா அதையும் விடாமல், வாசகர்கள்—சாதாரண எழுத்தாளர்கள் எழுத அதிக வாய்ப்பு அளித்திருக்கிறார். அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கி, ஊக்கப்படுத்தியுள்ளார். முக்கியமான கருத்துக்களை வற்புறுத்த, அந்த வரிக்குக் கீழே கோடிட்டுக் காட்டப்படுகிறது. ஒவ்வொருபகுதியும் அடுத்த அடுத்த இதழ்களிலும் ஒரே பக்கத்தில் (6-ஆம் பக்கத்தில் என்றால், அதே 6-ஆம் பக்கத்தில்) வெளியிட

முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. 28 பக்கங்களில் எத்தனை பகுதிகளை, எவ்வளவு சுவையாக வழங்கியிருக்கிறார். இதழ் நடத்துவோருக்கு எடுத்துக்காட்டு இதழாக விளங்குகிறது, ''தமிழன்''.

**நின்றது ஏன்?**

சென்னையில் ''தந்தி'' தொடங்கப்பட்டதும், ''தமிழன்'' இதழும் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் நன்கு விற்பனை ஆயிற்று. அப்படிப்பட்ட ''தமிழன்'' நிறுத்தப்பட்டது ஏன்? தாள் பற்றாக்குறை மட்டுந்தான் அதற்குக் காரணமா?

எஸ்.டி. ஆதித்தன் வேறு ஒரு காரணத்தையும் என்னிடம் சொன்னார். ''தமிழ''னில் ''திரையிலும் அறையிலும்'' என்று ஒரு பகுதி வெளியிட்டார்கள். திரையில் உத்தமனாக நடிக்கும் கலைஞர்கள் அறையில் எவ்வளவு ஆபாசமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்று இப்பகுதியில் எழுதினார்கள். அது இன்றைய கிசுகிசுகளுக்கு முன்னோடியாக இருந்தது.

அப்பகுதி பற்றி எஸ்.டி. ஆதித்தன் தம்பிக்கு ஒரு கடிதம் எழுதினார். ''தமிழனைக் கையில் எடுத்துப் படிக்கவே கூச்சமாக இருக்கிறது என்று உன் அண்ணி சொல்லுகிறாள். அப்பகுதி அவ்வளவு ஆபாசமாக இருக்கிறதாம்'' என்று எழுதியிருந்தார். இதற்கு, ''அண்ணி அவர்கள் இனி, கூசவேண்டியிருக்காது என்று சொல்லுங்கள். ஏனென்றால், ''தமிழன்'' இதழை நிறுத்த முடிவு செய்து விட்டேன். பெண்கள் கையால் தொடவே கூசும் ஓர் இதழைத் தொடர்ந்து நடத்த வேண்டியதில்லை'' என்று பதிலில் குறிப்பிட்டார்.

காக்கா உட்காரப் பனம்பழம் விழுந்ததாகவும் இது இருக்கக் கூடும். பனம்பழம்—''தமிழன்'' காக்கா எது? தாள் பற்றாக் குறையா? தடம் புரண்டதா?

''தமிழன்'' நிறுத்தப்பட்டதும் அதற்காக வாசகர்கள் கட்டியிருந்த சந்தாப்பணம் திருப்பி அனுப்பப்பட்டது. ''இந்த முறையில் இதழ்த் தொழிலில் நாணயத்தை நிலைநாட்டிய பெருமை ஆதித்தனாருக்கு உரியது'' என்கிறார். ஆ. கா. அ. அப்துல் சமது (''மணிவிளக்கு'', சூலை. 1981).

''தமிழ''னில் எழுதியவர்களுக்கு அய்யா அன்பளிப்பு வழங்கியது குறித்து அ. சாந்தா ஒரு புதிய கருத்தைத் தெரிவிக்

கிறார்" "அன்றைய இதழ்கள் இதழியலை ஒரு தொண்டாகக் கருதி வந்த நிலையில் அதனை ஒரு தொழிலாக சி.பா. ஆதித்தனார் வளர்த்தார் என்பதற்கு இது சான்று ஆகும்' என்கிறார். இதழ்களைத் தொழிலாக நடத்தத் தமிழ்நாட்டில் வித்திட்டவர் அய்யா தான் என்று இதனை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் இதழ் நடத்துவதை ஒரு தொழிலாக மாற்றியவர் ஆதித்தனார். அதற்கு முன் அதுதொண்டாகச் செய்யப்பட்டதால்தான் செய்திகள் பற்றியோ, வாசகர் விருப்பம் பற்றியோ யாரும் கவலைப் படவில்லை. அய்யா தொழிலாக நடத்தியதால், வாசகர் விருப்பத்துக்கு முதலிடம் அளித்தார். இதழ்களுக்கு வாசகர்கள்தானே வாடிக்கையாளர்கள்?

**மதிப்பீடு**

"நாள், கிழமை, திங்கள் இதழ் வரிசை" நூலில் (க.அ.இராமசாமிப் புலவர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக "வெளியீடு, 1961) "தமிழன்" பற்றிக் கூறப்பட்டு இருப்பது;

"தமிழர்களின் முன்னேற்றங்கருதியே இவ்விதழ் தொடங்கப் பெற்றது. தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு ஏற்ற கட்டுரைகளும், கதைகளும், உலகச் செய்திகளும், நகைச்சுவைச் செய்திகளும் இதில் வெளியாயின. மக்களின் மனங்கவர் இதழாக இயங்கிய இது மறைந்து போனது வருந்தத் தக்கது."

இது சரியான மதிப்பீடு என்று சொல்லலாம்.

"தமிழன்" ஆதித்தனாரின் இரண்டாவது கனவு மட்டுமல்ல: முதல் கனவை நனவாக்கும் கருவியாகவும் விளங்கியது. எப்படி?

# நமது நோக்கம்

''தமிழன்'' முதல் இதழில் ''நமது நோக்கம்'' என்ற தலைப்பில் ''சி.பா. ஆதித்தன்'' என்று கையெழுத்திட்டு, அய்யா எழுதியிருக்கியிருக்கிறார். அதைப் படித்தால், எந்த நோக்கத்துடன் இந்தத் ''தமிழன்'' இதழைத் தொடங்கினார் என்பது மட்டுமல்ல; அவர் வாழ்க்கை நோக்கம் என்ன என்பதும் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளத் தெளிவாகப் புலப்படும்.

### நமது நோக்கம்

''என்ன நோக்கத்துடன் இவ்விதழ் தொடங்கப்பட்டு இருக்கிறது? இது எந்தக் கட்சியை ஆதரிக்கும்?'' என்று நம்மைப் பலர் நேரிலும், அஞ்சல் மூலமாகவும் கேட்டிருக்கிறார்கள்.

''தமிழன்'' இதழ் தமிழரால் தமிழருக்காக நடத்தப்படுகிறது. ''தமிழ''னை நடத்தும் பணியை ஏற்றுக்கொண்டு இருப்பவர்கள், ''உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு'' என்ற உறுதியைக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் பெரிது, தமிழ் இனம் பெரிது, தமிழ்நாடு பெரிது என்பது நமது கொள்கை. தமிழ் இசை இவற்றை வளர்க்க வேண்டும் என்பது நமது கொள்கை. நாலு கோடித் தமிழ் மக்களுக்கும் தகுந்த சம்பளத்தில் வேலை கொடுக்கக்கூடிய தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்பது நமது கொள்கை. இந்நாட்டில், ''ஏழையில்லை, பிச்சைக்காரன் இல்லை'' என்ற நிலையைக் கொண்டு வரவேண்டும் என்பது நமது கொள்கை.

தமிழ் இனம் ஒன்று என்று நாம் நம்புகிறோம். இளந் தமிழர்களுக்குள் ஒற்றுமை, ஊக்கம், வீரம் உண்டாக வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழர்கள் படும் துன்பம் தொலைய வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம்.

அந்நியர்களுக்குத் தமிழ்நாட்டில் இருக்கும் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்பது நமது நோக்கம். துண்டுபட்டுக் கிடக்கும் தமிழ் நாடு ஒன்றுபடவேண்டும் என்பது நமது நோக்கம். தமிழர்கள் கூடி ஏற்படுத்தும் அரசு, வளர்ந்து, பிற நாட்டாரும் மதிக்கும் ஒரு வல்லரசாக வேண்டும் என்பது நமது நோக்கம்.

மேலே சொல்லிய கொள்கைகளையும், நோக்கங்களையும் ஆதரிக்கும் கட்சி எதுவாயிருந்தாலும் சரி, அதை நாம் ஆதரிக்கிறோம். தமிழனுக்குத் தொண்டு செய்ய முன் வருவோருக்கு நாம் தொண்டு செய்யத்தயாராய் இருக்கிறோம். அந்நியருக்குப் பணி செய்வோருக்கு நாம் பணி செய்ய மாட்டோம் என்பது உறுதி.

**''கல்கி'' எழுதிய அஞ்சல்**

''கல்கி'' இரா. கிருட்டிணமூர்த்தி எழுதிய அஞ்சலும், அதற்கு அய்யா எழுதிய பதிலும் இதே முதல் இதழில் ''தமிழர் ஆட்சி கனவுதானா?'' என்ற தலைப்புடன் வெளியாகியுள்ளன. அந்த அஞ்சல்கள் :

சென்னை,
20-8-42

திரு. ஆதித்தன் அவர்களுக்கு,

''தமிழன்'' இதழ் உதயமாகப் போவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு காலத்தில் தமிழர்கள் தமிழகத்தில் மட்டுமின்றி, கடல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளிலும் ஆட்சி புரிந்தார்கள். தமிழ்க் கலைகளும், தமிழரின் பண்பாடும் உலகெங்கும் பரவி மேன்மை பெற்று விளங்கின. அத்தகைய மேன்மையைத் தமிழர்கள் மீண்டும் பெறவேண்டும் என்று நம்மில் பலர் பகல் கனவு கண்டு வருகிறோம். அக்கனவை நனவாக்கும் முக்கிய நோக்கத்துடன் ''தமிழன்'' இதழ் வெளியாகிறது என்று அறிந்து அளவில்லாத உவகை கொள்ளுகிறேன்.

வாழிய ''தமிழன்''! வாழிய நற்றமிழர்!!

இரா. கிருஷ்ணமூர்த்தி,
''கல்கி''

இதற்கு அய்யா எழுதிய பதில் :-

மதுரை,
ஆகஸ்டு 23, 1942.

நண்பர் அவர்களுக்கு,

கடலுக்கு அப்பாலுள்ள தீவுகளிலும் தமிழர் ஆட்சி ஒரு காலத்தில் பரவியிருந்தது-என்று தாங்கள் குறிப்பிட்டு இருப்பதைப் பார்த்து மகிழ்கிறேன்.

''சுமத்திரா'' என்ற பெரிய தீவை, ''பாலா பாங்கு'' என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு, சூரன் என்ற தமிழரசன் ஆண்டு வந்திருக்கிறான். அவ்வரசனின் குமாரனாகிய சிங்கன் மாவீரனாக விளங்கி, கிழக்கு இந்தியத் தீவுகள் அனைத்தையுமே ஆட்சி புரிந்து வந்தான் என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

தமிழர்கள் தங்கள் நாட்டையாவது ஆளும் உரிமை பெற வேண்டும் என்பது என் கருத்து. தங்களின் பார்த்திபன் கனவும், எனது தமிழரசுக் கனவும், நனவாகும் நாள் நெருங்கிவிட்டது என்றே நம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,
சி. பா. ஆதித்தன்.

ஆதித்தனாருக்குக் ''கல்கி''யை மிகவும் பிடிக்கும். அவர் கல்கியின் வாசகர். மிகவும் எளிய தமிழில் கல்கி எழுதி வந்ததே இதற்கு முதன்மையான காரணம். ''பண்டிதர் தமிழை மக்கள் தமிழ் ஆக்கியவர் கல்கி'' என்று சொல்லுவார். அவரின் கனவில் ''கல்கி''க்கும் உடன்பாடு இருந்ததை ''அத்தகைய மேன்மை யைத் தமிழர்கள் மீண்டும் பெறவேண்டும் என்று நம்மில் பலர் பகல் கனவு கண்டு வருகிறோம்'' என்ற வரி காட்டுகிறது.

சுதந்திரத் தமிழ் நாடு என்பது பகல் கனவா? ''தங்களின் பார்த்திபன் கனவும் எனது தமிழரசுக் கனவும் நனவாகும் நாள் நெருங்கிவிட்டது என்றே நம்புகிறேன்'' என்று சொன்னதன் வழியாக ''அது பகல் கனவு அல்ல'' என்பதை அய்யா சொல்லாமல் சொல்லிவிட்டார்.

சுதந்திரத் தமிழ்நாடு மலரும் என்பதில் ஆதித்தனார் உறுதி யான நம்பிக்கையுடன் இருந்தார். ''அதைத் தெரிவிக்கும் சேவல் நான்'' என்றுகூடச் சொன்னார்.

சென்னையில் உள்ள ''தினத்தந்தி'' கட்டிடம் அய்யா கட்டியது. அந்தக் கட்டிடத்தில் கொடி மரம் இருக்கிறது. அதில் சுதந்திர த் தமிழ் நாட்டின் கொடியை ஏற்றவேண்டும்என்று சொல்லிப் போயிருக்கிறார். ''சுதந்திரத் தமிழ்நாடு'' என்பதில் அந்த அளவுக்கு அவர் உறுதியுடன்-நம்பிக்கையுடன் இருந்தார்.

சுதந்திரத் தமிழ் நாட்டைப் ''பிரிவினை'' என்று அவர் நினைக்கவில்லை. ''விடுதலை'' என்றே கருதினார்.

**இந்தக் கனவு எப்படி ஏற்பட்டது?**

தமிழ் மக்கள் விடுதலை பெற்று, சுதந்திரத் தமிழ்நாடு காண வேண்டும் என்ற கனவும் இலண்டனில் படித்துக்கொண்டிருந்த பொழுதுதான் அவருக்கு ஏற்பட்டது. எப்படி? இலண்டனில் அவருடன் மோரிசுத் தீவைச் சேர்ந்த ஒருவர் படித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் இருவரும் சந்தித்துக்கொண்ட பொழுது, அய்யாவைத் தமிழர்என அறிந்து கொண்ட அவர், அவர்களுடன் தமிழில் பேசினார். ''நீங்கள் தமிழரா?'' என்று அய்யா வியப்புடன் கேட்டார். "ஆமாம். நான் தமிழன்தான். மோரிசுத் தீவில் தமிழர்கள்தான் பெரும்பான்மையாக வாழு கிறார்கள். ஆனால், கரும்புத்தோட்டங்களில் கூலிகளாகவும், அடிமைகளாகவும்'' என்று மோரீசுக்காரர் கூறினார்.

ஆண்ட இனம் அடிமையாக வாழ்வதா? சிதைந்து போனதால் அல்லவா சீர் இழந்தோம்? ஒன்று பட்டால்தானே மீண்டும் உயர்வு அடைய முடியும்? "நாம்-தமிழர்'' என்ற இன உணர்ச்சி ஒவ்வொரு தமிழருக்கும் ஏற்பட்டால் அல்லவா ஒன்றுபட முடியும் என்று அய்யா அன்றே எண்ணிவிட்டார். அந்த விதை தான் ''சுதந்திரத் தமிழ்நாடு'' என்று கிளைத்து எழுந்தது. ("அமைச்சர் ஆதித்தனார்'')

அவர் இலண்டனில் படித்து முடித்து, சிங்கப்பூரில் 'பாரிஸ்டர்' தொழில் செய்த நேரத்திலும் இதே எண்ணத்துடன்தான் இருந்திருக்கிறார். தந்தை பெரியார் ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த நேரம், அது. அந்த முழக்கத்தால் அய்யாவும் இழுக்கப்பட்டார். தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப்போர் வெற்றி பெற்றதும், 10-3-1940 அன்று சிங்கப்பூரில் வெற்றிவிழாக் கொண்டாடப்பட்டது; அந்த விழாவுக்கு அய்யா தலைமை தாங்கினார். அந்த விழாவிலே தமிழ்க்கொடி ஏற்றப் பட்டது என்ற செய்தி 5-4-1940ஆம் நாளைய 'விடுதலை'' இதழில் வெளிவந்திருக்கிறது.

தஞ்சை மாவட்டம் திராவிடக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் வே. வாசுதேவன், 8-7-1958 அன்று ''நாம்-தமிழர்'' இயக்கத் தலைமை நிலையத்துக்கு ஓர் அஞ்சல் எழுதினார். அதில், ''நான் சிங்கப்பூரில் 1936 முதல் 1942 வரையில் இருந்தேன். 1937ல் சிங்கப்பூர் சிராங்கூன் சாலையில் கோ. சாரங்கபாணி அவர்கள் தலைமையில் நூறு பேர் கலந்துகொண்ட பொதுக்கூட்டம் ஒன்றில் சி. பா. ஆதித்தனார் அவர்கள் தனித் தமிழ்நாடு அமைய வேண்டும் எனக்கூறியது எனக்குத் தெரியும். தனித் தமிழ்நாடு என்ற பித்து 1937லேயே அவர்களுக்கு உண்டு'' என்று தெரிவித்துள்ளார்.

1939இல் ஒரு முறை அய்யா தமிழ்நாட்டுக்கு வந்தார். சென்னையில் கப்பலில் இருந்து இறங்கியதும் நேராகத் திருக்கழுக்குன்றம் சென்றார். அங்கு நடந்துகொண்டிருந்த நீதிக்கட்சி மாநாட்டில் தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் இருந்தார்கள். அவர்களுடன் சுதந்திரத் தமிழ்நாடு பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்.

**தமிழரசுக்கட்சி**

''தமிழன்'' தொடங்கிய அதே நேரத்தில் ''தமிழரசுக் கட்சி'' என்ற கட்சியையும் தொடங்கினார். அந்தக் கட்சிக்கு ஒரு கருவியாகத் ''தமிழன்'' இதழைப் பயன்படுத்திக் கொண்டார் என்பது இதழ் முழுவதும் புரட்டிப் பார்த்தால் தெரிகிறது.

''நமதடா இந்த நாடு-என்றும் நாம் இந்நாட்டின் வேந்தர்'' என்ற பாவேந்தரின் பாடல், ''தமிழன்'' முதல் இதழில் வெளி வந்தது. 6வது இதழில் ''தமிழன் என்றொரு இன முண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்ற நாமக்கல் கவிஞரின் பாடல் இடம் பெற்றது.

4வது இதழில் (செப்டம்பர் 13) ''சிப்பாய்'' எழுதிய கட்டுரையில், உலகத் தமிழர் ஒன்று படவேண்டும் என்ற கருத்து வற்புறுத்தப்படுகிறது. தமிழ்நாடு துண்டு பட்டுக்கிடப்பதை இக்கட்டுரையில் படம் போட்டுக் காட்டியிருக்கிறார். (1) தாய்த் தமிழ்நாடு (2) பாண்டிச்சேரி (3) யாழ்ப்பாணம் (ஈழம்) (4) கன்னியாகுமரி என்று தமிழ்நாடு சிதைந்து கிடக்கிறது. இந்த நாலு பகுதியும் ஒன்று சேர்ந்து, தமிழ்ப் பேரரசு அமைய வேண்டும் என்று ''சிப்பாய்'' வற்புறுத்துகிறார். (கேரளாவுடன் இருந்த கன்னியாகுமரி இப்பொழுது தமிழ்நாட்டுடன் சேர்ந்து விட்டது).

6வது இதழில், தமிழ்நாட்டைவிட, பரப்பளவில்-மக்கள் தொகையில் சிறிதான நாடுகளைச் ''சிப்பாய்'' எடுத்துக்காட்டு கிறார். ''தமிழ்நாடு சிறிது என்று எவராவது சொல்லத் துணிவார்களானால், ''தமிழ்நாடு சிறியது அல்ல; தமிழ் நாடும் ஒரு வல்லரசு ஆக முடியும்? என்று அவர்களுக்குத் தகுந்த பதில் அளியுங்கள்'' என்று கூறுகிறார்.

10வது இதழில் (அக்டோபர் 25) உள்ள ஆசிரியர் பேச்சும் இங்குக் குறிப்பிடத்தக்கது. அதுவும் இந்த நேரத்துக்கு! அது-

''யாழ்ப்பாண'த்தில் இருந்து குறுக்கு வழியாக இந்தியாவுக்கு வருவதற்கு 18 மைல் தூரம் தான் இருக்கிறது. இந்த 18 மைல் நீளமுள்ள கடல், தமிழர்களுக்கு ஒரு பெரிய தீங்கைச் செய்திருக் கிறது. இந்தக் கடல், தமிழ் பேசும் மக்களை இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறது. இலங்கைத் தமிழர் வேறு, இந்தியத் தமிழர் வேறு என்ற தப்பிதமான எண்ணத்தையும் உண்டாக்கி யிருக்கிறது''.

''நமக்குள்ள வித்தியாசங்களை இந்தக் கடலிலேயே புதைத்து விட்டால் நல்லது. ஒரே மொழி, ஒரே கலை, ஒரே நாகரிகம் உடைய நாம் எல்லாரும் தமிழர்கள்தானே? யாழ்ப்பாணத்தில் பிறந்தால் என்ன? அல்லது, அதற்கு 18 மைல் தூரத்தில் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தால் என்ன?''

''ஈழம் விடுதலை பெறவேண்டும்; சுதந்திரத் தமிழ்நாடு என்று 1942லேயே ஆதித்தனார் கூறியது, ஈழத்தையும் சேர்த்து தான். ஈழ விடுதலைக்கு முதல் குரல் கொடுத்தவர் ஆதித்தனார் தான்'' என்று இன்று விடுதலைப்புலிகள் கூறுவதற்கு இந்தக் கட்டுரைகளே காரணம். ஈழத் தமிழர் தலைவராக விளங்கிய அமிர்தலிங்கம் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :-

''உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் தமிழ் இனத்துக்கு வழி காட்டியாகத் திகழ்ந்தவர், ஆதித்தனார். ''நாம்-தமிழர்'' என்றதன் வாயிலாக 'உலகத் தமிழர்களே! ஒன்று படுங்கள்! என்ற உணர்ச்சியை ஊட்டினார் அவர். ஈழத்தமிழர்களுக்கு அவர் ஆதரவு அளித்தார். ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்தை உலகறியச் செய்தார். தனது 'தினத்தந்தி' வாயிலாக ஈழத் தமிழருக்கும், தாயகத்தமிழருக்கும் இடையே பாலம் அமைத் தார்'',

**கட்சி இதழ் அல்ல**

ஆதித்தனாரின் புகழுக்குப் பெரிதும் காரணமாக இருப்பது இதழ்ப் பணியே என்றாலும், அவரின் அரசியல் பணிக்கு இந்த இதழ்ப்பணி ஒரு கருவியாகப் பயன்பட்டது என்பதை இதிலிருந்து நாம் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது.

இதழ்களைத் தமது கனவை நனவாக்க ஒரு கருவியாக அய்யா பயன்படுத்திக்கொண்டாலும், கட்சி இதழாக நடத்தவே இல்லை. கட்சியின் பிரசார பீரங்கியாக இதழ்களைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. "பிரச்சாரம்" என்று தெரியாத அளவுக்குத்தான் இதழ்களைப் பயன்படுத்திக் கொண்டார். "நாம்-தமிழர்" இயக்கம் நடத்திய பொழுது கூட இயக்கத்துக்கு என்று "தமிழ்க்கொடி" என்ற தனி (வார) இதழ்தான் நடத்தினார்.

இங்கே இன்னொன்றையும் சொல்லலாம். ஒருமுறை சில "நாம்-தமிழர்" இயக்கத் தொண்டர்கள் "அய்யா" 'தினத்தந்தி' யில் தி.மு.கழகச் செய்திகள் நிறைய வெளியிடுகிறார்கள். "நாம்-தமிழர்" இயக்கச் செய்திகள் ஒன்று இரண்டுதான் வெளிவரு கின்றன" என்று புகார் செய்தார்கள். அதற்கு அய்யா "தி.மு.கழகத்தைப்போல 'நாம்-தமிழர்' இயக்கத்தையும் வளருங் கள். நிறையச் செய்தி வெளியிடுவார்கள்" என்று பதில் அளித்தார்.

**முதலில் கட்சி**

1942 முதலே அய்யாவிடம் பணியாற்றிய இரா. பால்வண்ணன் இது குறித்துக் கீழ்க்கண்டவாறு தெரிவித் துள்ளார். "பெரிய அய்யா ஆதித்தனார் அவர்கள் சிங்கப்பூரில் இருந்து தமிழ்நாட்டுக்குத் திரும்பியதும் முதலில் அரசியலில்தான் ஈடுபட்டார்கள். சுதந்திரத் தமிழ்நாடு என்ற நோக்கத்துடன் தமிழரசுக் கட்சியைத் தொடங்கினார்கள். அந்தக் கட்சியின் நோக்கங்களை விளக்கித் "தமிழ்ப் பேரரசு" என்ற நூலை வெளி யிட்டார்கள். இந்தக் கட்சியின் பிரச்சாரத்துக்காக முதலில் "தமிழன்" வார இதழைத் தொடங்கினார்கள். பிறகுதான் 'தந்தி'யைத் தொடங்கினார்கள்."

("ஆதித்தனாருக்கு அஞ்சலி")

தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்ட அதே 1942 ஆம் ஆண்டில் "வெள்ளையனே வெளியேறு" என்ற பெரும் போராட்டத்தைக்

காந்தியடிகள் தொடங்கினார். இந்தியாவின் விடுதலைப் போருக்குச் சுதந்திரத் தமிழ்நாடு முயற்சி முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாதே என்ற எண்ணத்தில் தமிழரசுக் கட்சி செயல் படுவதை அய்யா நிறுத்திவைத்தார். இந்தியாவின் விடுதலைப் போரில் பங்கு கொண்டார். 26-7-1958 அன்று நெல்லையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய பொழுது, ஆதித்தனாரே. இதனைத் தெரிவித்துள்ளார்

''சுதந்திரத் தமிழ்நாடு என்ற கோரிக்கையை இன்றைக்குப் (1958) பதினாறு ஆண்டுக்கு முன்பே கூறினேன். ஆனால், வெள்ளைக்காரனிடம் இருந்து இந்தியா விடுதலை பெறுவதற்குத் தடையாகத் தமிழ்நாட்டு விடுதலை முயற்சி இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அப்பொழுது இந்த முயற்சி நிறுத்தப் பட்டது.''

வெல்லத்தில் மருந்தைக் கலந்து கொடுப்பது போல 'தமிழ' னிலும், 'தந்தி'யிலும் தமிழுணர்வு கலந்துகொடுக்கப்பட்டது.

இந்தத் 'தந்தி' எப்படித் தோன்றியது?

## ''தந்தி'' பிறந்தது!

''தமிழன்'' தொடங்கிய உடனேயே ''தந்தி''யையும் தொடங்கிவிட்டார். முதலில் ஒரு வார இதழ் தொடங்கலாம்; பின்பு அதையே நாளிதழாக மாற்றிக்கொள்ளலாம் என்ற எண்ணம் அவரிடம் இருந்தாலும், ''தமிழ''னுக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்ததும், தனியாகவே ஒரு நாளிதழைத் தொடங்கிவிட்டார், அதுவும் உடனடியாக. ஒரு நாளிதழ் தொடங்கக்கூடிய சூழ்நிலையும் உலகப்போர், உத்தமர் காந்தி யடிகளின் போர் - அப்பொழுது இருந்தன.

**மீண்டும் ''முரசு''**

''தந்தி'' தொடங்கப்பட்ட வரலாற்றைத் ''தமிழன்'' இதழ்களில் இருந்து நாம் அறியமுடிகிறது. ''தமிழன்'' முதல் இதழில் (23-8-1942) ''ஆசிரியர் பேச்சு'' என்ற பகுதியில், ''நிர்வாக ஆசிரியர்'' என்ற தலைப்புடன் கீழ்க்கண்ட செய்தி காணப்படுகிறது.

''முரசு'' என்ற பெயருடன் தினசரி ஒன்றைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் சென்ற ஒரு மாதகாலமாக நடைபெற்று வருகின்றன. இந்தத் தினசரியின் நிர்வாகப் பொறுப்பும் திரு. மு. கணபதியிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை அவர் 'தமிழ'னுக்கு ஆசிரியராக இருந்து வருகிறார். இனிமேல் 'முரசு'க்கும் நிர்வாக ஆசிரியர் பொறுப்பை அவர் ஏற்று நடத்துவார்.''

''மதுரை முரசு'' தடை செய்யப்பட்டதும், ''முரசு'' என்ற பெயரில் மீண்டும் நாளிதழ் கொண்டு வர அய்யா முயற்சித்திருக்கிறார் என்பது இதிலிருந்து தெரிகிறது. ''தமிழ''னைக்

கொண்டு வந்த பொழுதே அந்த முரசையும் வெளிக்கொண்டு வர வேலைகள் நடந்திருக்கின்றன. அதன் நிர்வாக ஆசிரியர் கூட நியமிக்கப்பட்டுவிட்டார்.

நாளிதழ், வார இதழ் இரண்டுக்கும் ஒரே ஆசிரியர். பின்பு வந்த கோ.த. சண்முக சுந்தரம்கூட 'தமிழன்', 'தந்தி' இரண்டுக்கும் ஆசிரியராக இருந்தார். ஆனால், ''ராணி'' வார இதழ் தொடங்கிய பொழுது அய்யா 'தினத்தந்தி' ஆசிரியர் பொறுப்பிலிருந்து என்னை விடுவித்து, ''ராணி''யின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் செய்ததை இந்நேரம் எண்ணிப் பார்க்கிறேன். இதற்கு என்ன காரணம்?

அப்பொழுது 'தந்தி' கிளைகள் விட்டு வளர்ந்துவிட்டது. அதற்கு முழு நேர ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டார். முன்பு 'ஆசிரியர்' என்று ஒருவர் இருந்தாலும், அய்யா முழுக்கக் கவனித்துக்கொண்டார். இப்பொழுது அப்படிக் கவனிக்க இயலாத அளவுக்கு அவருக்கு நிர்வாகப் பொறுப்பும், அரசியல் ஈடுபாடும் அதிகமாகிவிட்டன. வார இதழுக்கு முழுநேர ஆசிரியர் ஒருவர் இருந்தால், அதன் வேகமான வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் எண்ணியிருக்கலாம்.

**கதை வேண்டுமா?**

''தமிழன்'' வெளிவந்ததும், கவனம் முழுக்க அதிலே சென்று விட்டதால், நாளிதழ் பற்றி நினைக்கவில்லை. நாளிதழ் பற்றி, ''தமிழன்'' 7வது இதழில்தான் (4-10-1942) அடுத்த விவரம் காணப்படுகிறது. இதுவும் ''ஆசிரியர் பேசுகிறார்'' பகுதியில், ''கதை வேண்டுமா?'' என்ற தலைப்புடன் வெளிவந்திருக்கிறது. ஆசிரியர் பேசுகிறார் :

''தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் பொதுவாகச் சென்னையில் மட்டுமே அச்சிடப்படுகின்றன. இப்பத்திரிகைகள் தமிழ்நாட்டின் முக்கிய இடங்களுக்கு வந்து சேர ஒரு நாள் ஆகிவிடுகிறது. இதனால், காலச்சக்கரம் வெகு வேகமாகச் சுழன்றுவரும் இக் காலத்தில் ஒரு நாள் கழித்துதான் செய்திகளைப் படிக்க வேண்டி யிருக்கிறது. அன்றைய நிகழ்ச்சியை அன்றே வாசித்தால்தான், அதைச் செய்தி என்று சொல்ல முடியும். மறுநாள் அது ''பழங் கதை'' தானே! பிற நாடுகளில் நேற்றைய பத்திரிகையை இன்று

கையால் தொடக்கூடமாட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டின் தலைவிதி நேற்றைய பத்திரிகையை இன்று ஆவலுடன் படிக்க வேண்டியிருக்கிறது.

மதுரையில் இருந்து தினசரிப் பத்திரிகை வெளிவந்தால், தமிழ்நாடு முழுவதும் நேயர்கள் அன்றையச் செய்தியை அன்றே வாசிக்க முடியும். இந்த நோக்கம் கைகூடுவதற்காக நமது ''தமிழன்'' பத்திரிகையின் உரிமையாளர் சி.பா. ஆதித்தன் எம்.ஏ., பார்-அட்-லா அவர்கள் ஆரம்பிக்கப்போகும் புதிய தினசரியை நேயர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். நமது ''தமிழன்'' இதழைத் தினசரியாக ஆக்கிவிடுவோமோ என்று நேயர்கள் பயப்பட வேண்டியது இல்லை. புதிதாகத் தொடங்கப் போகும் தினசரிக்கும், நமது வாரப்பத்திரிகைக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்காது.

ஆதி காலத்தில் தமிழை வளர்த்த பெருமை மதுரையைச் சார்ந்தது. அந்தக் காலத்தில் தமிழ் வளர்ந்தது, சங்கத்தின் மூலம். தற்காலத்திற்கு ஏற்றபடி பத்திரிகைகளின் மூலம் தமிழை வளர்க்கும் புகழையும் மதுரைதான் அடையப்போகிறது.

நாளிதழை மதுரையில் தொடங்குவது ஏன் என்பதை அய்யா இதில் தெளிவாகத் தெரிவித்துள்ளார். ''தமிழன்'' வார இதழ் நாளிதழாக மாற்றப்படமாட்டாது என்பதையும் அறிவித்து விட்டார்.

''எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்'' என்ற பழியுடன், ஏடும் எழுத்தாணியுமாக மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டிருந்த தமிழ், அச்சுக்கண்ட பின்புதான் மக்கள் தமிழாக மளமள என்று வளரத் தொடங்கியது. இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழை, தமிழ் இலக்கியத்தை வளர்த்தவை தமிழ் இதழ்களே என்பதை யாராலும் மறுக்க முடியாது. அன்று வளர்ந்தது, சங்கத்தமிழ்; இன்று வளர்வது மக்கள் தமிழ். புலவர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருந்த தமிழை மக்கள் சொத்தாக ஆக்கியது, இதழ்களே. இதை இன்றைக்கு ஐம்பது ஆண்டுகட்குமுன்பே ஆதித்தனார் உணர்ந்து உரைத்திருப்பது நமக்கெல்லாம் உவகை தருகிறது.

### ''தந்தி'' பிறந்தது

நாளிதழ் அச்சிட புதிய அச்சு எந்திரங்கள் தேவைப்பட்டன. ''தமிழன்'' 8வது இதழில் (11-10-1942) ''மிஷின்கள் தேவை'' என்று ''ஆதித்தன் பவர் பிரஸ்''காரர் விளம்பரம் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டுக்கு அச்சு வந்த நேரத்தில், மனித ஆற்றலைக் கொண்டுதான் அச்சிடப்பட்டது. மரத்தில் அச்சு செதுக்கி, மை தடவி, தாளில் அழுத்தி எடுத்தார்கள். அச்சு வார்க்கப்பட்டு, அச்சுக் கருவிகள் வந்தபின்புங்கூட, அக்கருவிகள் கையால்தான் இயக்கப்பட்டன. பிறகுதான் மின்ஆற்றலால் ஓட்டப்பட்டன. மின் ஆற்றலால் இயங்கும் அச்சகங்களைப் ''பவர் பிரஸ்'' என்று கூறும் வழக்கம் ஏற்பட்டது. அந்த வழக்கின்படி, ''ஆதித்தன் பவர் பிரஸ்'' என்று பெயர் வைத்திருக்கிறார்.

அதற்கு அடுத்த இதழில் (9வது இதழ் 18-10-1942) அதே விளம்பரம் மீண்டும் வெளிவந்திருப்பதுடன், ''தந்தி'' வெளிவருவது பற்றிய விளம்பரமும் இருக்கிறது.

> அன்றையச் செய்தியை
> அன்றே வாசியுங்கள்

''தந்தி'' என்ற தினசரி மதுரையிலிருந்து விரைவில் வெளிவரும்.

### இதன் முக்கிய அம்சங்கள்

செய்திகளையெல்லாம் தந்தியில் வரவழைத்து உடனே பிரசுரித்தல்.

தமிழ்நாட்டுச் செய்திகளுக்கு முக்கிய இடம் கொடுத்தல்.

தமிழ்நாடு முழுவதும் 'தந்தி'யை ஒரே நாளில் பட்டுவாடா செய்தல்.

மற்ற விவரங்கள் பின்னால் அறிவிக்கப்படும்.

இந்த விளம்பரத்தில் ''தந்தி'' என்பது சிவப்பு நிறத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ''தந்தி''யைத் தொடங்கியபொழுது அய்யா என்னென்ன நோக்கங்கள் கொண்டிருந்தார் என்பது இந்த விளம்பரத்திலிருந்து நமக்குத் தெரியவருகிறது.

1. செய்தியை முந்தித்தர வேண்டும். அதன்படி 'தந்தி' செய்திகளை முந்தித்தருகிறது என்று புகழ் பெற்றது.

2. தமிழ்நாட்டுச் செய்திக்கு முதலிடம் கொடுத்தல்; தந்தியில் முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டுச் செய்திகளே இடம்பெற்றன.

3. தமிழ்நாடு முழுவதும் 'தந்தி' ஒரே நாளில் கிடைக்க வேண்டும். இந்த நோக்கத்துடன்தான் உள்ளூர்ப்பதிப்புகள் தொடங்கப்பட்டன.

வெளியூர்களுக்கு ரெயில் அல்லது பேருந்து வாயிலாகத்தான் படிகளை அனுப்பவேண்டும். இதற்கு வசதியாக ரெயில்நிலையம் அல்லது பேருந்து நிலையம் அருகில்தான் தந்தி அலுவலகங்கள் அமைத்திருப்பதை இன்றும் காணலாம். இதே 9வது இதழில் ''ஆசிரியர் பேச்சு'' என்ற தலைப்பு நெற்றித்தலைப்பு ஆக்கப் பட்டு, ''தினசரி'' ''தந்தி'' என்று சிவப்பு எழுத்தில் இரு பத்தித் தலைப்புக் கொடுத்து ''தந்தி'' என்ற துணைத்தலைப்பில் கீழ்க்கண்ட செய்தி வெளிவந்திருக்கிறது:

''நமது 'தமிழன்' இதழ் சென்ற ஜுன் மாதம் 15ஆம்நாள் வாரவெளியீடாக மதுரையில் பதிவு செய்யப்பட்டது. அதிலிருந்து சரியாக நான்காவது மாதத்தில் (15-10-1942இல்) 'தந்தி' என்ற நாளிதழும் மதுரையில் பதிவு செய்யப்பட்டு இருப்பதை மகிழ்ச்சியுடன் அளிக்கிறோம்.

இந்த நாளிதழுக்குப் பல அழகிய பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றை வைக்கலாம் என்று வாசகர்கள் ஆலோசனை கூறினார்கள். நண்பர்கள் கூறிய எல்லாப் பெயர்களையும் நாம் நன்றாக ஆலோசனை செய்தோம். அவற்றில் 'தந்தி' என்ற பெயரைத் தேர்ந்து எடுத்தோம். அந்தப் பெயரே மிகவும் பொருத்தமானது. ஏனென்றால், உள்நாட்டுச்செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள் எல்லாம் தந்தி மூலமே நமது 'தந்தி'க்கு வந்து சேர ஏற்பாடு செய்திருக்கிறோம்.

எல்லாச் செய்திகளையும் தந்தியில் வரவழைப்பதற்கு ஏராளமாகப் பொருள் செலவு ஆகும் என்பது வாசகர்களுக்குத் தெரியும். இதழ்களுக்கு அனுப்பும் தந்திகளுக்குக் குறைந்த கட்டணம் உண்டு, ஆனால், அந்த விகிதப்படி பார்த்தாலும் 80 வார்த்தைகளுக்கு ரூபாய் ஒன்று தந்திக்கூலி ஆகிறது.

சராசரி 20,000 வார்த்தைகள் ஒருநாள் இதழில் இருக்கும். ஆகவே தந்திக்கூலி மட்டும் ரூ. 250 செலவாகிறது.

மதுரையில் இந்தச் செலவைப் பகிர்ந்து கொள்ள வேறு நாளிதழ்கள் இல்லை. ஆதனால் செலவு முழுவதும் 'தந்தி'யின்

மீது சுமத்தப்படும். தாள்விலை, அச்சுக்கூலி ஆகியவையும் ஒன்றுக்குப் பத்தாக ஏறியிருக்கின்றன. இவ்வளவு செலவையும் ஏற்றுக்கொண்டு நாளிதழ் நடத்த முன்வந்த திரு. சி.பா. ஆதித்தன் அவர்களின் தமிழ்த் தொண்டைத் தமிழர்கள் எல்லாரும் முழுமையாக ஆதரிப்பார்கள் என்பது நமது திட நம்பிக்கை. மதுரையில் இருந்து இந்த நாளிதழ் வெளிவருவதால் வாசகர்களுக்கு முக்கியமான வசதி ஒன்று உண்டு.

மதுரையில் இருந்து 150 மைலுக்குள் இருப்பவர்களுக்கு எல்லாம், அன்றையச் செய்திகள் அன்றே வழங்கப்படும். ஒரு நாள் காத்திருந்து செய்தித்தாள்களை வாசிக்க வேண்டிய இன்றைய நிலையைத் 'தந்தி' மாற்றும் என்று எதிர்பார்க்கிறோம்.

**புலனாகும் செய்திகள்**

இந்தச் செய்தியில் இருந்து பல செய்திகள் நமக்குப் புலனாகின்றன. ''தமிழன்'' வெளிவரத் தொடங்கிய பின்பு இரு மாதம் கழித்துத் ''தந்தி'' என்ற பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த 15 நாளில் (1942 நவம்பர் 1) ''தந்தி'' வெளிவந்துவிட்டது. ''தமிழன்'' ஊழியர்கள், அச்சகம் என்று எல்லா வசதியும் தயாராக இருந்ததால், இது முடிந்தது.

''தந்தி'' என்பது ஒரு மக்கள் இதழுக்கு மக்களே சூட்டிய பெயர் ஆகும். நாளிதழுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று வாசகர்களிடமே ஆலோசனை கேட்டார்கள் என்பது ''இந்த நாளிதழுக்குப் பல அழகிய பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றை வைக்கலாம் என்று வாசகர்கள் ஆலோசனை கூறினார்கள்'' என்பதிலிருந்து தெரியவருகிறது.

''தந்தி'' என்று பெயர் சூட்டிய வாசகருக்கு ரூ. 100 பரிசு அளிக்கப்பட்டது. ''அந்தப் பெயரே மிகவும் பொருத்தமானது'' என்று அதற்குக் காரணமும் காட்டப்படுகிறது. ''ஏனென்றால் உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள் எல்லாம் தந்தி மூலமே நமது 'தந்தி'க்கு வந்து சேர ஏற்பாடு செய்திருக்கிறோம்.'' ''தந்தி'' என்பது ஒரு நல்ல தமிழ்ச்சொல். வீணையில் இசை எழுப்பும் கம்பிக்குத் தந்தி என்று பெயர், பின்பு செய்தி அனுப்பும் கம்பிக்கும் அதுவே பெயர் ஆயிற்று.

இதழ்களுக்குப் பெயர் சூட்டுவதில் அய்யா ஒரு கொள்கை வைத்திருந்தார். பெயர் வைப்பதிலும், வெற்றி பெற்றவர்களை

அவர் பின்பற்றினார். அந்தப் பெயர் இரண்டு-மூன்று எழுத்துக்குள் இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்த்தார். மக்கள் எளிதில் சொல்லக்கூடிய பெயராகவும் இருக்கவேண்டும் என்று கூறுவார்.

உலகில் அதிகமாக விற்பனையாகும் நாளிதழ், இலண்டனில் வெளிவரும் ''டெய்லிமிரர்''. இவ்விதழைத்தான் ''தந்தி'' பின்பற்றியது. இப்பொழுது இலண்டனில் வெளிவரும் ''டெய்லிடெலகிராப்'' இதழைப் பின்பற்றுகிறார்கள். இப்பெயர் ''தினத்தந்தி'' என்று பொருள்பட்டாலும், இதனைப் பின்பற்றி 'தந்தி'' என்று அய்யா பெயர் வைக்கவில்லை. ''டெய்லி மிரர்'' இதழைப்பின் பற்றியது கூட, ''தந்தி'' தொடங்கி இரண்டு, மூன்று ஆண்டு கழித்துத்தான்.

எங்கள் ''ராணி'' வார இதழுக்குப் பெயர் சூட்டியதும், அய்யாதான். வார இதழ்களில் அதிகம் விற்பனையாவது, ''உமன்'' என்ற இதழ். அதைப் பின்பற்றி ''பெண்மணி'' என்று பெயர் சூட்ட விரும்பினார். ஏற்கெனவே அப்பெயரில் ஓர் இதழ் வெளிவந்து கொண்டிருந்ததால் எங்களுக்குப் ''பெண்மணி'' கிடைக்கவில்லை. ''உமன்'' இதழுக்கு அடுத்தபடியாக விற்பனையாவது, ''பிரின்சஸ்'' என்ற வாரஇதழ் (இரண்டுமே அமெரிக்காவில் வெளிவரும் இதழ்கள்) ''பிரின்சஸ்'' என்றால், இளவரசி. அதையே ''ராணி'' என்று ஆக்கினார்.

தமிழ் உணர்வு மிக்க ஆதித்தனார் ''அரசி'' என்று பெயர் வைத்திருக்கலாமே என்று நீங்கள் கேட்பீர்கள். ''அரசி'' என்ற சொல், பேச்சு வழக்கில் இல்லை. இதழ்க்கடையில் போய் ஒரு பெண் ''அரசி கொடுங்கள்'' என்று கேட்டால், கடைக்காரர் ''இங்கே அரிசி விற்பதில்லை'' என்று சொல்லக்கூடும். ஆகவே தான் ''ராணி'' என்று அய்யா பெயர் சூட்டினார்.

இதழ்களுக்கு எப்படிப்பட்ட பெயர்களை வைக்கக்கூடாது என்பதற்கும் அய்யா ஓர் எடுத்துக்காட்டு கூறினார். ஓர் இதழுக்கு ''முத்தம்'' என்று பெயர் வைத்தால், ஒரு பெண் கடைக்குப் போய், ''எனக்கு ஒரு முத்தம் கொடுங்கள்'' என்று கேட்க முடியுமா? இப்படி நான் கேட்க வில்லை, அய்யா கேட்டார்.

### செலவு செய்யவேண்டும்

தந்தி வழியே செய்திகளை வரவழைப்பதில் எவ்வளவு செலவாகிறது என்பதும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்படுகிறது.

அய்யா மிகவும் சிக்கனக்காரர். ஒவ்வொரு காசையும் மிச்சம் பிடிக்க முயற்சிப்பார். ஆனால், செய்தி சேகரிக்க எவ்வளவு செலவு செய்யவும் அஞ்ச மாட்டார். செலவு செய்தால்தான் செய்தி சேகரிக்க முடியும் என்பார்.

நமது ஊருக்கு அருகில் ஒரு பெரிய ரெயில் விபத்தோ, விமான விபத்தோ, கார் விபத்தோ நடந்ததாகச் செய்தி கிடைத்தால், உடனே விபத்து நடந்த இடத்திற்கு நிருபரையும், படம் பிடிப்ப வரையும் வாடகை வண்டியில் அனுப்பவேண்டும் என்று விதியே வகுத்தார். அரியலூர் ரெயில் விபத்து நடந்த பொழுது நான் அப்படித்தான் திருச்சியில் இருந்து ஒரு வாடகைவண்டியில் அரியலூருக்கு அனுப்பப்பட்டேன். அப்பொழுது 'தந்தி'க்கு என்று தனிப் புகைப்படக்காரர் இல்லாததால், தொழில் முறை புகைப் படக்காரர் ஒருவரையும் என்னுடன் அழைத்துச் சென்றேன்.

அதே போல, சென்னை வந்த தலைமை அமைச்சர் பண்டித நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டக் காட்சியில் இருந்து அறிஞர் அண்ணா புறப்பட்டு வரும் வழியில் கைது செய்யப்படுவார் என்று தகவல் கிடைத்தது. உடனே சென்னையில் இருந்து ஒரு செய்தி யாளரும், ஒரு புகைப்படக்காரரும் வாடகை வண்டியில் காஞ்சிக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் காஞ்சியில் இருந்து அண்ணாவின் காருக்குப் பின்னேயே வந்தார்கள். வழியில் அண்ணா கைது செய்யப்பட்டார். அந்தச் செய்தி அடுத்த நாள் காலையில் ''தினத்தந்தி''யில் படத்துடன் வெளிவந்தது. அன்று சென்னை நகரில் மட்டும் ஒரு லெட்சம் படி விற்பனை செய்து ''தினத்தந்தி'' சாதனை புரிந்தது. இன்றைக்கும் மிஞ்சப்படாத சாதனையாக இது இருந்து வருகிறது.

சின்ன மீனைப் போட்டுத்தான் பெரிய மீனைப் பிடிக்க வேண்டும் என்பார். இது, செய்தி சேகரிப்பதற்கும் பொருந்தும். ஒரு முழ சணல் கயிறு வாங்கக் கூடக் கணக்குப் பார்க்கும் அய்யா செய்தி சேகரிக்க செலவு பார்த்ததேயில்லை.

### ''திருதிரு'' செய்தி

''திரு.சி.பா. ஆதித்தன் அவர்களின் தமிழ்த்தொண்டை.....'' என்ற வரியைப் படிக்கும் தினத்தந்தி வாசகர்களுக்கு வியப்பாக இருக்கும். ஏனென்றால், ''தினத்தந்தி''யில் ''திரு'', ''அவர்கள்'' எல்லாம் பயன்படுத்துவது இல்லை. இதற்கு ஒரு காலத்தில் பலத்த கண்டனம் இருந்தது. அதற்கு அய்யா சொன்ன ஒரே பதில்—''பேச்சு வழக்கில் அப்படி வழக்கமில்லை'',

இதைச் சொல்லும்பொழுது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. நான் திருச்சி 'தினத்தந்தி'யில் வேலைக்குச் சேர்ந்த புதிது. ஐந்து செ.மீ. இடத்தை அடைக்க அவசரமாக ஒரு செய்தி தேவைப்பட்டது என்னை எழுதிக்கொடுக்கும்படி, செய்தி ஆசிரியர் சொன்னார். "நிர்வாகிகள் தேர்வு" என்று நானும் ஒரு செய்தியை எழுதிக்கொடுத்தேன். அவசரத்தில் ஆசிரியரும் பார்க்காமல் அப்படியே அச்சுக்கு அனுப்பிவிட்டார். செய்தி அச்சாகியும் வந்துவிட்டது. அதன்பின்தான் செய்தியைப் படித்த ஆசிரியர் "என்னங்க, உங்கள் செய்தி 'திரு திரு' என்று விழிக்கிறது!" என்று சிரித்தார். நான் புரியாது, 'திரு திரு' என்று விழித்தேன். "திரு...தலைவராகவும், திரு...துணைத் தலைவராக வும், திரு......செயலராகவும், திரு........துணைச் செயலராகவும் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்" என்று நான் எழுதியிருந்த செய்தியை ஆசிரியர் படித்துக்காட்டி, "நமது இதழில் யாருக்கும் 'திரு' போடுவதில்லை" என்பதை விளக்கினார்.

ஆதித்தனாருக்கு மட்டும் "திரு" போட்டிருக்கிறார்களே என்று கேட்பீர்கள். அய்யா இதழியல் கற்றவர் அல்லர். முழுக்க முழுக்க அனுபவத்தில் இருந்தே கற்றுக்கொண்டார். தவறுகளை அனுபவத்தில் கண்டு, திருத்தி, தலைசிறந்த இதழாளர் ஆனார். "திரு" வையும் அப்பொழுதே திருத்தியிருப் பார். அவர் கருவிலே திருவுடையார் என்றாலும், அச்சிலே அவருடன் 'திரு' சேர்க்க அனுமதித்ததேயில்லை. அவர் 'திரு' சேர்த்து எழுத அனுமதித்தது, ஒரே ஒரு பெயரைத்தான். அவர் தான், தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஏனென்றால், இவர் பெயரே "திரு.வி.க." என்பதால்தான்!

**எடுத்துக் கொடுத்தல்**

"இன்றைய செய்தியை இன்றே படியுங்கள்" என்ற முழக்கத் துடன் அச்செய்தி முடிகிறது. இது ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துதான். நாம் சொல்லவேண்டிய கருத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்த வேண்டும் என்பது அய்யாவின் கொள்கை. அதோடு "வாசகர்களுக்கு எடுத்துக்கொடுக்க வேண்டும்" என்றும் சொல்லு வார். "நீங்கள் இன்றைய செய்தியை இன்றே படிக்க முடியும்", நாளை வரை காத்திருக்க வேண்டியதில்லை" என்று எடுத்துச் சொல்லுவதுதான் "எடுத்துக் கொடுத்தல்" என்பது.

இதழியலில் மட்டுமல்ல; எந்தத் தொழிலிலும் இது ஒரு சிறந்த உத்தி. இட்லி விற்கும் கிழவி கூட "இட்லி சூடா

இருக்கிறது, மல்லிகைப்பூ போல இருக்கிறது, வந்து சாப்பிடுங்கள்'' என்று கூவுகிறாள் அல்லவா? அப்பொழுது தானே வியாபாரம் நன்றாக நடக்கும். இந்த உத்தியில் அய்யா சிறந்து விளங்கினார், இதற்கு ஓர் எடுத்துக்காட்டு சொல்லுகிறேன்.

பொதுவாக நாளிதழ்கள் நாலுபக்கம் கொண்ட ஒரே தாளாகத் தான் வெளிவரும். ஒரு நேரம் முழுத்தாள் கிடைக்காமல், அரைத்தாளில் 'தந்தி' வெளிவந்தது. இரண்டு பக்கம் கொண்ட இரண்டு தாளாக இருக்கும். அப்பொழுது அய்யா ''இது தான் கையில் பிடித்துக்கொண்டு படிக்க வசதியானது. ஆளுக்கு ஒரு தாளாக இரண்டு பேர் ஒரே நேரத்தில் செய்தியைப் படிக்க முடியும்!'' என்று எடுத்துக்கொடுத்து, வாசகர்களின் வரவேற்பைப் பெற்றார்!

**ராசியான கை**

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ''தந்தி''யின் முதல் இதழை வெளியிட்டார். அரை நூற்றாண்டு காலம் ஆகி விட்டது. ஆனால், இன்றைக்கும் அந்த இனிய நிகழ்ச்சியை முத்தமிழ்க்காவலர் நினைவுபடுத்திச் சொல்லுகிறார்.

''ஆங்கிலக் கடல் கடந்து, தமிழ்க்கரை ஏறிய பெருமகன் ''தந்தி'' என்ற நாளிதழை முதன் முதல் மதுரையில் தொடங்கிய பொழுது நான் நோய்வாய்ப்பட்டு இருந்த நிலையிலும் என்னை வற்புறுத்தி மதுரைக்கு அழைத்துச் சென்று, இயந்திரத்தை இயக்க வைத்தார். நான் அன்றைய தினம் முதல் இதழை அச்சிட்டு, முதல் இதழை வெளியிட்டு, அதே இதழை ஓரணாவினைக் கொடுத்து வாங்கியவன், அதை எண்ணி இன்றும் மகிழ்ச்சி அடைகிறேன்.'' (''தினத்தந்தி'' வெள்ளிவிழா சொற்பொழிவு)

''தந்தி'' தொடங்கிய காலத்தில் தமிழ்நாட்டில் மிகப்பெரிய ஆசிரியராக—'பேராசிரியர்' என்றே சொல்லுவார்கள்—விளங்கிய தெ.ச. சொக்கலிங்கம் கீழ்க் கண்டவாறு எழுதினார்.

சென்னையில் வெளியாகும் செய்தித்தாள்தான் 600 மைல் வரையில் போய் மக்களுக்குச் செய்தியைத் தெரிவிக்கவேண்டும் என்பது வானொலிகள் பெருத்த இக்காலத்தில் இயற்கைக்கு எதிரானது ஆகும்! இதற்குச்சென்னை செய்தித்தாள்கள் வழிசெய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. அதாவதுசென்னைக்கு வெளியே முக்கிய நகரங்களில் செய்தித்தாள்களை வெளியிட்டு, செய்திகள் விரைவாக மக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

மதுரையில் 'தந்தி' என்ற தினசரியை நடத்த முன்வந்த ஆதித்தனைப் பாராட்டுகிறேன். மதுரையில் மட்டுமல்ல, கோயம் புத்தூர், பெங்களூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் சீக்கிரமாகத் தினசரிகளைத் தொடங்கவேண்டிய நிலை ஏற்படும் என்று நினைக்கிறேன். எனவே தமிழ் இதழ்களின் எதிர்காலம் சிறப்பாகப் போகிறது என்று நம்பலாம்''

சொக்கலிங்கம் குறிப்பிட்டுள்ள கோவை, பெங்களூர், திருச்சி, நெல்லை உட்பட ஒன்பது நகரங்களில் இன்று ''தினத்தந்தி'' அச்சாகி வெளியாகிறது.

**அன்றைய அலுவலகம்**

இன்று ஊர்தோறும் சொந்தக் கட்டிடத்தில் பேர் சொல்லிக் கொண்டிருக்கும் ''தினந்தந்தி''யின் அலுவலகம் அன்றைக்கு எப்படி இருந்தது? அரை நூற்றாண்டு ஆகிவிட்டது. அதனை இப் பொழுது நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறவர், வி. சின்னசாமி அவர்கள்! இவர் 1944இல் மதுரையில் ''தந்தி''யில் சேர்ந்தவர்.

''மதுரை முனிச்சாலை—நாலு சாலைகள் சந்திக்கும் இடம். தெரு—கல்லறைச்சந்து. ஆறுவீடுகள் தள்ளி ''கார்ஷெட்'' போலப் பெரிய தகரக் கதவு. அதில் ஓர் ஆள் மட்டும் நுழையப் போடப்பட்ட குட்டிக்கதவு. நுழைந்தால், எதிரே சிறிய திறந்த வெளி, அப்பால் எதிரே ஓடுவேய்ந்த ஒரு தணிவான வராந்தா. தலையைக் குனிந்து உள்ளே போனால், பக்கவாட்டில் இரு சிறிய அறைகள். அறைக்குள் மேலாளர், காசாளர், ஓர் அலமாரி, உதவி ஆசிரியர்கள், செய்தி வரும் ''இராய்ட்டர்'' இயந்திரம், ஒரு தொலைபேசி.

அறைகளைத் தாண்டி உள்ளே போனால், தகரக்கொட்டகை. அதில் ஓர் உருளை அச்சு இயந்திரம். தாளை உள்ளே கையால் சொருகி அச்சடிக்கும் சின்ன இயந்திரம். அன்றைய ''தந்தி'' அலுவலகம் இதுதான். திடீர் என்று ''ஐயா வர்றாங்க ஐயா வர்றாங்க'' என்ற சலசலப்பு. பெரிய கதவு கொஞ்சம் திறககப் படுகிறது. வெளியில் ஒரு சைக்கிள் ரிக்ஷா நிற்கிறது. ரிக்ஷாவின் மேல் துணியை முட்டி மோதித் தள்ளி உயர்த்திக்கொண்டு வீற்றிருக்கும் கம்பீரமனிதர் இறங்குகிறார்!

உள்ளே நுழையும் பொழுதே ஒரு புன்சிரிப்பு.

ஓர் அடி குனிந்து அறைக்குள் நுழைவார். அவ்வளவு சின்ன அறை. இரண்டு பக்கம் சுவர். இரண்டு பக்கம் ஓட்டுப்பலகை மறைப்பு. ஒரு பலகையில் சன்னல் போல வெட்டிய சதுரத் திறவை. மேலே ஒரு விசிறி. அதில் இடையிடையே கிறிச் கிறிச் பாட்டு. நாற்காலி அருகே ஒரு பெரிய கூஜாவில் தண்ணீர்.

காலை ஒன்பது மணிக்கு உட்கார்ந்தால், இரவு பத்து மணிக்குத்தான் எழுந்திருப்பார்கள், வீட்டுக்குப்புறப்பட! இடையிடையே கூஜா நீரை அவர்களே தம்ளரில் ஊற்றிக்குடிப்பார்கள். எப்படி இத்தனை மணிநேரம் ஒரே இடத்தைவிட்டு எழுந்திராமல், சாப்பிடாமல் தொடர்ந்து கடுமையாக வேலைசெய்தார்கள் என்பது இன்னமும் எனக்குப்புரியவில்லை. (''ஆதித்தனாருக்கு அஞ்சலி'')

மாட்டுக் கொட்டகை போன்ற ஓர் இடத்தில் பிறந்த "தந்தி" தான், நாட்டு மக்கள் அனைவரையும் கவர்ந்து, குடிசை வீட்டுக் குள்ளும் புகுந்து கோபுர அளவு புகழ்பெற்றது. அது எப்படி?

# உழைப்பால் உயர்ந்தார்!

மதுரையில் தொடங்கப்பட்ட 'தந்தி', ஆசிய மொழி இதழ்களில் அதிக விற்பனையுள்ள இதழ் என்ற அரும் புகழை அடைந்தது என்றால், அதற்கு ஆதித்தனாரின் உழைப்பே காரணம் என்று உறுதியாக உரைக்க முடியும். "தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்" என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர் விளங்கினார். 'தந்தி'யின் முதல் தொழிலாளி அய்யாதான். அவரது நேரடியான சொந்த உழைப்பால்தான் 'தந்தி' வளர்ந்தது. 'தந்தி'யின் வளர்ச்சிக்கு முதல் காரணம் இதுதான்.

உழைப்பு மட்டும் போதாது. மன உறுதியும் வேண்டும். அதனால்தான் 'உழைப்பு உயர்வு தரும்' என்று எல்லாரும் சொல்ல, வள்ளுவர், "வெள்ளத் தனைய மலர் நீட்டம், மாந்தர் தம் உள்ளத் தனைய உயர்வு" என்று கூறினார். நாளிதழ் நடத்துவோருக்கு, அறிஞர் அண்ணா சொன்னபடி, எதையும் தாங்கும் இதயம் வேண்டும். நாளிதழ் நடத்துவதில் அவ்வளவு நெருக்கடிகள் ஏற்படும். "நாளிதழ் நடத்துவது என்பது நெருப்பு ஆற்றை நீந்திக் கடப்பது போன்றது" என்று அய்யா கூறுவார்.

"தினத்தந்தி" வெள்ளிவிழா மலரில் "குன்றாத இளமை" என்ற தலைப்பில் அய்யா ஒரு கட்டுரை எழுதியுள்ளார் அதில் சொல்லுகிறார். "தந்தி தொடங்கிய பொழுது நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நேற்று நடந்தவை போல் நினைவுக்கு வருகின்றன. 'நினைவு' என்று சொல்வதைவிடப் 'பயங்கரக் கனவு' என்றே சொல்லலாம். ஒரு நாளிதழைத் தொடங்கி நடத்துவதும் சரி, நெருப்பு ஆற்றை நீந்திக் கடப்பதும் சரி

என்பதை அப்பொழுது உணர்ந்தேன். எழுத்தாளனாக இருந்து பின்னர் இதழ் நடத்துவோனாக மாறுகிறவன் எவ்வளவு துன்பங்களைத் தாங்கியாக வேண்டும் என்பது எனக்கு மதுரையில் தெரிந்தது.''

தனது வெள்ளிவிழா உரையிலும் அய்யா இதனைக் குறிப்பிட்டார். ''அப்படிப்பட்ட இன்னல்களும், இடையூறு களும், இடர்ப்பாடுகளும் இப்பொழுது மீண்டும் ஒரு முறை வருமானால், அவற்றைத் தாங்கவோ அல்லது அவற்றைச் சந்திக்கவோ என்னால் இப்பொழுது முடியாது. இப்பொழுது என் உடலில் வலு இல்லை. என்ன வந்தாலும் சரி, எப்படியாவது இதழ் நடத்திவிடுவது என்ற உறுதிப்பாடு அந்தக் காலத்தில் இல்லாமல் இருந்திருந்தால், இன்று இந்த வெள்ளி விழா நடக்காது'' என்று சொன்னார்.

தந்தையைப் போன்றே தன்னந்தனியாக நெல்லைக்குச் சென்று, தனி ஆளாக நின்று, 'மாலை முரசு'' என்ற மாலை இதழை-மாவட்ட இதழைச் சோதனை முறையில் தொடங்கிச் சாதனை புரிந்தவர், எங்கள் அய்யா சிவந்தி ஆதித்தன். மாலை முரசின் முதல் தொழிலாளியாக இவர் இருந்தார். இதழ்த் தயாரிப்பில் நேரடியாகப் பங்கு கொண்டார். எத்தனையோ இன்னல்களை எதிர்கொண்டார். மின்சாரத்தடை ஏற்பட்ட நேரங்களில் தானே அச்சு எந்திரத்தைக் கையினால் சுழற்றி, இதழை அச்சிட்டு வெளிக்கொண்டு வந்தார். தந்தையைப் போன்றே வெள்ளிவிழாவும் கண்டார். அவர் தனது அனுபவத்தைச் சொல்லுகிறார்.

''ஒரு குழந்தையைப் பெற்று வளர்ப்பது எவ்வளவு கடின மானதோ, அதைவிடக் கடினமானது ஒரு நாளிதழை நடத்துவது, பெண்ணுக்காவது பிரசவ வேதனை என்பது ஒரு நாள்தான். ஆனால், நாளிதழ் நடத்துகிறவர்களுக்கோ ஒவ்வொரு நாள் இதழையும் வெளியேற்றுவது ஒரு பிரசவ வேதனைதான் என்பதை நெல்லையில் மாலைமுரசைத் தொடங்கி நடத்திய நாளில் நான் அறிந்து கொண்டேன். ஒவ்வொரு நாளும் நெருப்பு ஆற்றிலே குளிதது எழுந்தேன்'' (நெல்லை மாலை முரசு வெள்ளிவிழா மலர்-1984).

அய்யா மதுரையில் 'தந்தி' தொடங்கியது, 1942இல். சிவந்தி ஆதித்தன் நெல்லையில் மாலைமுரசு தொடங் கியது, 1959இல். அய்யா இதழ் நடத்துவதில் எவ்விதப்

பயிற்சியும் இல்லாமல் 'தந்தி' தொடங்கினார். சிவந்தி ஆதித்தன் தந்தையிடம் பயிற்சி பெற்றவர். 17 ஆண்டு இடைவெளியில் இதழ் நடத்த வாய்ப்புகளும் வசதிகளும் பெருகிவிட்டன. அய்யா "தந்தி" தொடங்கிய நேரத்தில் உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. "தாளே இல்லாமல், அச்சடிப்பதற்கு மை இல்லாமல், சரியான எந்திரம் இல்லாமல், இருந்த எந்திரத்தையும் இயக்க மின்சாரம் இல்லாமல், இதழ் நடந்தது-நடத்த வேண்டிய நிலை இருந்தது." ஆனால், சிவந்தி ஆதித்தன் நெல்லையில் மாலை முரசு தொடங்கிய நாளில் இந்த இடர்ப்பாடுகள் இல்லை. அவரே "ஒவ்வொரு நாள் இதழையும் வெளியேற்றுவது ஒரு பிரசவ வேதனைதான்" என்று சொல்லுவாரேயானால், அய்யா எவ்வளவு பெரிய வேதனைகளை-சோதனைகளையெல்லாம் தாங்கிக் கொண்டிருந்திருப்பார் என்று எண்ணிப் பார்க்கவே நம் நெஞ்சம் கனக்கிறது.

### முதலுக்கே மோசம்!

ஓர் இதழ் நடத்துவதற்கு முதல் தேவை, தாள். 'சுவர் வைத்துதான் படம் வரைய வேண்டும்' என்பது போல, தாள் இருந்தால்தான் இதழை அச்சிட்டு வெளியிட முடியும். வெறுங்கை முழம் போடாது. ஆனால், அய்யா 'தந்தி' தொடங்கிய நேரத்தில் போர் நடந்து கொண்டிருந்ததால் அவருக்கு அரசாங்கம் தாள் கொடுக்க மறுத்துவிட்டது.

இப்பொழுது போல அப்பொழுது இதழ்த் தாள் உள்நாட்டில் தயாராகவில்லை. முழுக்க முழுக்க வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்யப்பட்டது. கப்பல் எப்பொழுது வந்து சேரும் என்று சொல்ல முடியாது. எனவே, ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்த இதழ்களே தாள் பற்றாக்குறையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தன. புதிய இதழ்களுக்குத் தாள் கொடுப்பது இல்லை என்று அரசு கொள்கை வைத்திருந்தது.

இந்தச் சூழலில்தான் அய்யா களத்தில் இறங்கினார். ஆனால், அவர் கையில் வாள் இல்லை. வாள் இல்லாமல் எப்படிப் போரிடுவது? அதற்காக முன் வைத்த காலைப்பின் வைக்கவில்லை; வாள் இல்லாவிட்டால் என்ன? கை இல்லையா! தன்னம்பிக்கை உள்ளோருக்குத் தன் கையைவிடச் சிறந்த கருவி ஏது?

அதைத்தான் அய்யா செய்தார். அரசாங்கம் தாள் கொடுக்காவிட்டால் என்ன? அய்யா தம்கையே தமக்கு உதவி

என்று துணிந்தார். தாமே தாள் தயாரித்தார்! இந்தியாவில் தனக்குத் தேவையான தாளைத் தானே தயாரித்துக் கொண்ட முதல் இதழாளர் ஆனார்!

வைக்கோலில் இருந்து இந்தத் தாள் செய்யப்பட்டது. வைக்கோல் வாங்குவது முதல், அதை அரைத்துக் கூழாக்கித் தாள் தயாரிப்பது வரை அனைத்து வேலைகளையும் அவரே நின்று செய்தார். அப்பொழுது வைக்கோல் வாங்க நியமிக்கப் பட்டவர், இரா. பால்வண்ணன். அவர் அய்யாவின் நம்பிக்கைக்கு உரியவராகி, தலைமைக் காசாளராக உயர்ந்தார். அவர் அந்த நாள் பாட்டை நினைவு கூறுகிறார்.

''மதுரையில் 'தந்தி' தொடங்கப்பட்ட இரண்டொரு மாதத்தில் நான் அய்யா அவர்களிடம் வேலைக்கு வந்து சேர்ந்தேன். அப்பொழுது உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. யாருக்கும் புதிதாக மின் இணைப்புக் கிடைக்காது. இராமநாதபுரம் சாலையில் கல்லறை சந்தில் சாயம் காய்ச்சும் தொழிற்சாலை ஒன்று வேலையில்லாமல் மூடிக் கிடந்தது. அந்தக் கட்டிடத்துக்கு ஏற்கனவே மின் இணைப்பு இருந்தது. எனவே, அந்தக் கட்டிடத்தை அய்யா அவர்கள் வாடகைக்கு எடுத்தார்கள். அதுதான் 'தந்தி' அலுவலகம்.

சிறந்த அச்சகரான இரவாய் மாணிக்கம் (சென்னை) அய்யா அவர்களுக்கு நண்பர். அவர் பழைய உருளை (சிலிண்டர்) அச்சு எந்திரம், அச்சுப்பெட்டிகள் வாங்கிக் கொடுத்தார். பிறகு ஒரு புது உருளை அச்சு எந்திரமும் வாங்கப்பட்டது.

போர் நேரம் என்பதால் அச்சிடத் தாள் (நியூஸ்பிரிண்டு) கிடைக்கவில்லை. அய்யா அவர்கள் கையாலேயே தாள் செய்தார்கள். நாள்தோறும் இரண்டு வண்டி வைக்கோல் வாங்குவோம். இது என் வேலை. அதை அரைத்துக் கூழாக்கித் தாள் செய்வோம். மல் துணியை தாள் அளவுக்குக் கிழித்து, அதில் கூழை வடித்துக் காய வைப்போம். காய்ந்ததும் தாள் தனியாக வந்துவிடும். அப்பொழுது மல் துணி இலண்டனில் இருந்துவரும். அய்யா அவர்கள் கட்டுக்கட்டாக வாங்குவார்கள். வாங்கிக் கிழிப்போம்.

வண்டியூர் மாரியம்மன் தெப்பக் குளம் அருகில் ஒரு மண்டபம் இருக்கிறது. அது மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சொந்தமானது. அப்பொழுது ஆர். என். நாயுடு என்ற 'பாரிஸ்டர்'

அறங்காவலராக இருந்தார். அவர் அய்யா அவர்களுக்கு நண்பர். அவர் வழியாக அந்த மண்டபத்தை வாடகைக்கு எடுத்து, அதில் தாளைக் காய வைத்தோம்.

கைத்தாள்-பார்க்க அப்பளம் போல இருக்கும். அப்பளம் போல நொறுங்கவும் செய்யும். ஒரு மழைத்துளி விழுந்தால் போதும், தாள் மீண்டும் கூழாகிவிடும்! அப்படிப்பட்ட தாளில் தான் முதலில் 'தந்தி' அச்சடித்தோம். அய்யா அவர்களின் நேரடிப் பார்வையில்தான் எல்லா வேலையும் நடைபெறும். அவர்கள் ஒரு கூலித் தொழிலாளியைப் போல, வேட்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு, வைக்கோல் அரைப்பார்கள். அதைக் கூழாக்கி, தாள் வடித்து காய அனுப்புவது வரை எல்லா வேலை களையும் தொழிலாளர்களுடன் சேர்ந்து, அய்யா அவர்களும் செய்வார்கள்''. (''ஆதித்தனாருக்கு அஞ்சலி'')

இதனைப் படிக்கும்பொழுது ''மடுத்த வாயெல்லாம் பகடு அன்னான்'' என்ற குறளடி நமக்கு நினைவுக்கு வருகிறது அல்லவா?

இதழ் நடத்துவது என்பதே தமிழ்நாட்டில் அப்பொழுது ஒரு புதிய தொழில்தான். இதழுக்கு வேண்டிய தாளைத் தானே தயாரித்து கொள்வது என்பது அதைவிடப் புதிது. இந்த வேலைகளில் கொஞ்சமும் பட்டறிவு இல்லாதவர்களையே அய்யா பயன்படுத்திக் கொண்டார். மாரியம்மன் தெப்பக் குளத்தை அடுத்த வண்டியூர், அனுப்பானடி ஆகிய சிற்றூர்களைச் சேர்ந்த பண்ணையாட்களையே தாள் தயாரிக்க அமர்த்திக் கொண்டார். இந்த நிலையில் தானும் அவர்களுடன் ஒரு தொழிலாளியாக நின்று, அவர்களுக்கு முன்னோடியாக விளங்கியது அவரின் தன்னம்பிக்கையையே காட்டுகிறது. அந்தத் தன்னம்பிக்கை காரணமாகத்தான் வேறு யாரும் வெற்றி பெறாத இதழ்த் துறையில்-தொழிலில் அய்யா வெற்றி பெற முடிந்தது.

அவர் தயாரித்த தாளுக்கு ''நாட்டுத்தாள்'' (தமிழன் தாள்) என்று பெயர் சூட்டப்பட்டது. ''நாட்டுக் காகிதத்தில் அச்சிட்டது'' என்று முதல் பக்கத்தில் 'தந்தி' என்ற பெயருக்குக் கீழ் அச்சிட்டார்.

'தந்தி'யின் அடிநாள் வாசகரான நாவலர் நெடுஞ்செழியன் இந்தத் தாளைப் பற்றிக் கூறுவது-''சாதாரண நாளிதழைப் புரட்டுவதற்குப் பதில், ஒரு முரட்டு வேட்டியைப் புரட்டினால்

எவ்வளவு கனமாக இருக்குமோ, அவ்வளவு கனமாகத் 'தந்தி' இருக்கும்! ('தினத்தந்தி' வெள்ளிவிழாச் சொற்பொழிவு).

பின்னொரு நேரத்தில் இது போன்ற நெருக்கடி ஏற்படக் கூடாது என்ற முன் எச்சரிக்கையுடன்தான் ''ஆதவன் தாள் ஆலை''யை அய்யா தொடங்கினார்.

**அச்சுக் கருவிகள்**

தாளின் கதைதான் அப்படி, அச்சிடும் கருவிகளின் கதை என்ன? அதையும் பால்வண்ணன் அவர்களிடமே கேட்போமே.

''வீட்டிலும் அய்யா அவர்கள் நிம்மதியாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. எந்திரம் பழையது. எனவே, ஏதாவது பழுது ஏற்பட்டு எந்த நேரத்திலும் நின்றுவிடும். எந்திரம் நின்றால் அய்யா அவர்களுக்கு உடனே தெரிவிக்க வேண்டும் என்பது அவர்களின் கண்டிப்பான கட்டளை. காலையில் எப்படியும் இதழ் வெளியாக வேண்டும்! அப்பொழுது அவர்களின் வீட்டில் தொலைபேசி கிடையாது. ஒரு பையன் சைக்கிளில் போய் அவர் களிடம் சொல்லிவிட்டு வருவான். இரவு எந்நேரமாக இருந் தாலும் சரி, காரை எடுத்துக்கொண்டு அவர்கள் வந்துவிடுவார்கள். காரை அனுப்பி, பழுது பார்க்கும் ஆட்களை அழைத்துவரச் சொல்லுவார்கள். அல்லது பழுதான பாகத்தைக் காரில் எடுத்துக் கொண்டு தானே பட்டறைக்குப் போவார்கள். சரிபண்ணி, எந்திரத்தை ஓட்டிவிட்டுத்தான் வீட்டுக்குச் செல்லுவார்கள்.''

''ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'' என்பார்கள். அச்சு எந்திரத்துக்குப் பழுது பார்த்துப் பார்த்து அதில் அய்யா ஒரு நிபுணராகவே ஆகிவிட்டார்! எந்த அளவுக்கு என்றால்......''அய்யா அவர்களுக்கு அச்சு எந்திரம் பற்றிக் கூர்மை யான ஞானம் உண்டு. வைத்தியர்கள் நாடித்துடிப்பைக் கொண்டு நோயைக் கண்டறிவதுபோல, எந்திரம் ஓடும் ஓசையைக் கேட்டே அதில் என்ன கோளாறு என்பதை அவர் கண்டுபிடித்து விடுவார்கள். 'சத்தம் வித்தியாசமாக இருக்கிறதே, கேட்டாயா? அதில் இன்ன கோளாறு' என்று சொல்லுவார். எந்திரத்தை நிறுத்திப் பார்த்தால், சரியாக இருக்கும். பின்னர் அவர்களைப் போலவே எந்திரத்தின் ஓசையைக் கேட்டே கோளாறுகளைக் கண்டுபிடிக்க நானும் பழகிக் கொண்டேன்'' என்கிறார் சிவந்தி ஆதித்தன். (''நெல்லை மாலை முரசு வெள்ளி விழா மலர்'')

அய்யா அச்சு எந்திரத்துடன் எவ்வளவு போராடியிருப்பார் என்பதை இதிலிருந்து நாம் ஊகித்துக்கொள்ளலாம். ''சிறுகக் கட்டிப் பெருக வாழவேண்டும்'' என்பது அய்யா கொள்கை. ஆகவே, வளர்கிற நாளில் புதிய எந்திரங்களுக்குப் பதில் பழைய எந்திரங்களையே வாங்கிப் பயன் படுத்தினார். அதன் காரணமாக எந்திரங்களுடன் அடிக்கடி இப்படிப் போராட வேண்டியிருந்தது.

### மின்சாரக் கோளாறு

எந்திரக் கோளாறுடன் அடிக்கடி மின்சாரக் கோளாறும் ஏற்படும். மின்சாரம் இல்லாமல் எப்படி எந்திரம் ஓடும்? அப்பொழுது அய்யா என்ன செய்வார்? பால்வண்ணன் சொல்லுகிறார்-

சில நாளில் ''பியூஸ்'' போய்விடும். எந்திரம் நின்றுவிடும். அப்பொழுதும் அய்யா அவர்களுக்குச் சொல்லி அனுப்புவோம். மின்னொளிக்கும் (எலக்டிரிசன்) ஆள் அனுப்புவோம். அய்யா அவர்கள் வருவார்கள். மின்னொளி 'பியூஸ்' போடுவார். மீண்டும் எந்திரம் ஓடும். அந்தக் காலத்தில் 'பியூஸ்' போட்டால், மின்னொளிக்கு நாலணா (25 காசு), எட்டணா கொடுப்பார்கள். அய்யா அவர்கள் ஐந்து ரூபாய் தருவார்கள். எந்திரம் ஓடிய மகிழ்ச்சி! இன்னொரு நாள் இரவில் எந்நேரம் கூப்பிட்டாலும் மின்னொளி வரவேண்டும் அல்லவா?''

1943 இல் சென்னையில் 'தந்தி' தொடங்கப்பட்டது. ஒரு நாள் பலத்த அடைமழை பெய்து, மின்சாரம் தடைப்பட்டது. சென்னை நகரம் முழுவதுமே இருளில் மூழ்கியது. எங்கும் மின்சாரம் கிடையாது. 'தந்தி' அலுவலகத்துள் முழங்கால் அளவு தண்ணீர். அந்த நிலையிலும் மெழுகுவர்த்தி, எண்ணெய் விளக்குடன் 'தந்தி' அலுவலகம் இயங்கியது. விளக்கு ஒளியில் செய்தி எழுதலாம்; அச்சுக் கோக்கலாம். அச்சிட முடியாதே! அச்சு இயந்திரம் ஓட மின்சாரம் வேண்டுமே. ஆனால், அய்யா தளர்ந்துவிடவில்லை. கையினால் எந்திரத்தைச் சுழற்றி, 'தந்தி'யை அச்சிட்டு, வெளியிட்டார். சென்னை நகரில் அன்று காலையில் வெளிவந்த ஒரே நாளிதழ் 'தந்தி'தான்!

ஆனால், இது வேறு ஒருவகையில் 'தந்தி'யைப் பாதித்து விட்டது. அப்பொழுது போர்க்காலம். செய்தித் தணிக்கை இருந்தது. ''சென்னை நகரம் இருளில் மூழ்கியது'' என்று 'தந்தி'யில் செய்தி வெளியிட்டிருந்தார்கள். இந்தச் செய்தியை எப்படி

வெளியிடலாம்? எதிரி அறிந்தால், விமானங்கள் மூலம் குண்டுமாரி பொழியுமே என்று தணிக்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்கள். அதைத் தொடர்ந்து சென்னையில் 'தந்தி'யை நிறுத்த வேண்டியதாகிவிட்டது. (பால்வண்ணன் சொன்ன தகவல்)

**செய்தி அறையில்**

அய்யா அவர்களின் உழைப்பு தாள் தயாரிப்பதிலோ, அச்சு எந்திரத்தை ஓட்டுவதிலோ நின்று விடவில்லை. செய்தி அறையிலும் பம்பரமாகச் சுழன்றார். ஒரு நாளிதழுக்குச் செய்திகள் தானே உயிர்நாடி? எனவே, பெரும் பொழுதை அவர் செய்தி அறையில் கழித்தார். அந்நாளில் அவருடன் பணியாற்றிய பால்வண்ணன் இதுபற்றிக் கூறுவது :

''காய்ந்த தாளை மாலையில் அலுவலகத்துக்கு எடுத்து வருவோம். அந்நேரந்தான் செய்தித் துறை இயங்கத்தொடங்கும். அப்பொழுது சென்னையில் இருந்துதான் மதுரைக்கு நாளிதழ்கள் வந்து கொண்டிருந்தன. சென்னையில் இரவு ஏழு மணிக்குள் அச்சிட்டு ரெயிலில் ஏற்றிவிடுவார்கள். ஆகவே, ஏழு மணிக்குத் தான் 'தந்தி' செய்தித்துறை செயல்படத்தொடங்கும்.

எந்தெந்த செய்திகளை வெளியிட வேண்டும், எப்படி வெளியிட வேண்டும் என்று அய்யா அவர்கள் சொல்லுவார்கள். இரவு ஏழு மணிக்குப் பிறகு வரும் செய்திகளுக்கே முதலிடம் கொடுக்கப் படும். நள்ளிரவு இரண்டு மணிவரை செய்திகள் சேர்த்துக் கொள்ளப்படும். சில நாளில் அய்யா அவர்கள் தலையங்கம் எழுதுவார்கள்.

பக்கம் தயார் ஆகி, எந்திரம் ஓடத் தொடங்கிய பின்புதான் அய்யா அவர்கள் வீட்டுக்குப் போவார்கள். முதல் படியைக் கையில் எடுத்துப் பார்க்கும்பொழுது அவர்களின் முகம் மலரும். அதில் வெற்றிப் பெருமிதம் தெரியும்.

அய்யா அவர்கள் கடுமையாக உழைப்பார்கள். காலையில் வந்தால், இரவில்தான் வீட்டுக்குத் திரும்பிப்போவார்கள். மதியம் சிற்றுண்டி வாங்கிவரச் சொல்லி சாப்பிடுவார்கள்.

அப்பொழுது அய்யா அவர்களின் வீடு ஆற்றுக்கு அக்கரையில் இருந்தது. அடிக்கடி ஊரடங்குச் சட்டம் வரும். மாலை ஆறு மணிக்கு மேல் வெளியில் நடமாடக் கூடாது. அப்பொழுது அய்யா அவர்கள் துணைக்கு ஓர் ஆளை அழைத்துக்கொண்டு, ஆற்று வழியே நடந்து வீடு போய்ச் சேருவார்கள். ஆற்றில் வெள்ளம் வரும் நாட்களில் நீந்திப் போய்விடுவார்கள்.

வீட்டில் போய் அய்யா அவர்கள் தூங்குவார்களோ, இல்லையோ, ஏனென்றால், இதழாளன் தூங்கமாட்டான் என்று சொல்லுவார்கள். அவர்களுக்கு இருபத்திநான்கு மணி நேரமும் 'தந்தி'யைப் பற்றிய சிந்தனைதான். பசி நோக்கார், கண் துஞ்சார், இரவு வீட்டுக்குப் போனவர்கள், அதிகாலையில் மீண்டும் அலுவலகத்துக்கு வந்து விடுவார்கள். 'தந்தி' விற்பனைக்குப் போவதைப் பார்ப்பார்கள். கடைசிப்படி வெளியேறும்வரை இருந்துவிட்டு, மீண்டும் வீட்டுக்குப் போவார்கள்.''

''தந்தி''யின் ஆசிரியராக இருந்த கோ. த. சண்முகசுந்தரம் ''எந்த நேரமும் ஓய்வு ஒழிவின்றி உழைக்கும் மனோ வேகம் கொண்ட ஆதித்தனார் தான் ஈடுபடும் எந்தத் தொழிலிலும் தன்னையும் ஒரு தொழிலாளியாக ஈடுபடுத்திக்கொண்டு பணி புரிவார். 'முதலாளி' என்ற செறுக்கோடு ஒதுங்கி நின்று கட்டளைகள் பிறப்பிப்பது அவரது வழக்கமல்ல'' என்று சொல்லுகிறார்.

**வேலை நிறுத்தம்**

இந்தக் கடுமையான உழைப்பின் இடையே வேலை நிறுத்தங்களையும் அய்யா சமாளிக்க வேண்டியிருந்தது. அதுபற்றிப் பால்வண்ணன் தெரிவிக்கும் விவரம் :

''இந்த நேரம் ஆசிரியர், அச்சுக் கோப்பவர், அச்சிடுவோர் ஆகியோர் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்யப் போவதாக, அறிவித்தார்கள். அன்றே அய்யா அவர்கள் சென்னையிலிருந்து மதுரைக்கு வருவதாக இருந்தது. இந்த ஊழியர்கள் வேலைக்கு வரவில்லை. அய்யா அவர்கள் வந்தார்கள். எந்திர ஆட்களில் தர்மலிங்கமும், அச்சுக்கோப்பவர்களில் ஆறுமுகமும் இருந்தார்கள். இவர்கள் இருவரும் அய்யா அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள். இவர்களைக் கொண்டே இதழை அச்சிட அய்யா அவர்கள் முடிவு செய்தார்கள்.

என்னை அழைத்தார்கள். ''நான் செய்திகளை எழுதுகிறேன். ஆறுமுகம் அச்சுக்கோக்கட்டும். நீங்கள் பிழைதிருத்துங்கள். தர்மலிங்கம் அச்சிட்டுக்கொடுப்பான்'' என்று சொன்னார்கள். வேலையும் தொடங்கிவிட்டது. வெளியில் இருந்த ஊழியர்களுக்கு இது தெரிந்தது. அவர்கள் ஒவ்வொருவராக வந்து அய்யா அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்''. எந்தக் காரணத்தைக் கொண்டும் 'தந்தி' வெளிவருவது நிற்கக்

கூடாது என்பதை அய்யா கொள்கையாகவே கொண்டிருந்தார். இதழியலின் ஒவ்வொரு நுட்பத்தையும் அவர் அறிந்திருந்ததால் அல்லவா இது முடிந்தது?

இதே போன்று 1950இல் சென்னையில் நடந்த வேலை நிறுத்தம்பற்றி பி. சேத்திரபாண்டியன் குறிப்பிடுகிறார்.

''அலுவலர்களும், ஊழியர்களுமாக 30 பேர் மாலை ஐந்து மணி அளவில் அலுவலகத்தைவிட்டு வெளியேறினார்கள். எழுதி வைத்திருந்த செய்திகளைக் கிழித்தெறிந்துவிட்டு, அச்சுக் கோத்துத் தயாராக வைக்கப்பட்டிருந்த பக்கங்களைச் சிதைத்து விட்டுப் போய்விட்டார்கள். மறுநாள் 'தினத்தந்தி' வெளிவரக் கூடாது என்பது அவர்களின் திட்டம். ஒரு நாள் கூட 'தினத்தந்தி' நிற்கக் கூடாது என்பது அய்யா அவர்களின் குறிக்கோள்.

அவர்களும், அப்பொழுது சென்னை அலுவலக மேலாளராக இருந்த நானும் மளமள என்று முனைந்தோம். அவர்கள் ஒரு துணை ஆசிரியரின் உதவியுடன் நாலு பக்கத்துக்கு வேண்டிய செய்திளைத் தானே எழுதிக் குவித்தார்கள். இருந்த ஆட்களைக் கொண்டு அச்சுக் கோத்து, புதிய பக்கங்களை வடிவமைத்து, அச்சிட்டு, கொஞ்சமும் தாமதம் இல்லாமல் 'தினத்தந்தி'யை மறுநாள் காலையில் வழக்கம் போல வெளியிட்டுவிட்டோம். வெளியே நின்ற ஊழியர்களுக்கு அதிர்ச்சி. அவர்களில் 14 பேர் அன்றே மன்னிப்புக் கோரி வேலைக்கு வந்துவிட்டார்கள்.

தொடர்ந்து மூன்று நாள் இரவு பகலாக நாங்களே பணியாற்றி 'தினத்தந்தி'யை வெளிக்கொண்டு வந்தோம். இனி வழக்கம் போல் 'தந்தி' தடையின்றி வெளிவரும் என்ற நிலை ஏற்பட்ட பின்பு, அய்யா அவர்களும் நானும், அவர்களின் வீட்டுக்குச் சென்று ஒன்றாக உணவு அருந்தினோம். (''ஆதித்தனாருக்கு அஞ்சலி'')

**அழுதுவிட்டேன்**

இத்தனை பாடுபட்டு அய்யா 'தந்தி'யை வெளிக்கொண்டு வந்தார்களே, அதன் விற்பனை எப்படி இருந்தது? ''தந்தி முதலில் 500 படிகள் அச்சிட்டோம். சில நாளில் விற்பனை ஆகாமல் 300 படி கூடத் திரும்பி வந்துவிடும்'' என்கிறார், பால்வண்ணன். சென்னையிலும் முதல் நாள் 500 படிதான் அச்சிட்டார்கள். 320 படிகள் விற்காமல் திரும்பிவிட்டன.

ஒரு நாளிதழ் நாள்தோறும் 500 படிதான் அச்சாயிற்று என்றால் நாம் ஆச்சரியப்படுவோம். ஆனால், அந்நாளில் 2000

படி விற்றாலே ஒரு நாளிதழைத் தொடர்ந்து நடத்த முடியும் என்ற நிலை இருந்தது. எனவே, 500 படியில் தொடங்குவதே ஒரு சாதனைதான். இரவு பகலாக உழைத்து-ஊன் இன்றி, உறக்கமின்றிப் பாடுபட்டு, 500 படி அச்சிட்டு விற்பனைக்கு அனுப்பி, அதில் 300 படி விற்பனையாகாமல் திரும்பி வருமானால் அவரின் மனநிலை எப்படி இருந்திருக்கும்?

நினைத்துப்பார்க்கிறேன். எனது அனுபவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. சென்னை "தினத்தந்தி"யில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தபொழுது அலுவலக மாடியில் தங்கியிருந்தேன். காலையில் எழுந்ததும் குளிக்கக் கீழே வருவேன். முதல்நாள் விற்பனையாகாமல் திரும்பி வந்த இதழ்கள் கீழே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அதைப் பார்த்து, அன்றைய எனது வெற்றி-தோல்வியை நான் எடை போட்டுக் கொள்வேன்.

ஒரு நாள் காலையில் அப்படி நான் கீழே வந்தபொழுது விற்பனைக்குச் சென்ற படிகளில் மூன்றில் ஒரு பங்கு விற்பனை யாகாமல் திரும்பி வந்து குவித்துவைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்ததும் நான் அழுதேவிட்டேன்! அந்தப் படிகளைப் பார்த்த படி அந்த இடத்திலேயே வெகு நேரமாக நின்றுவிட்டேன்.

இதைப் பார்த்த யாரோ அய்யாவிடம் சொல்லிவிட்டார். அவர் என்னை அழைத்து, ஆறுதல் கூறினார். "மழைக்காலம் அல்லவா! நேற்றுக் காலையில் மழை பெய்தது அல்லவா? மழை நாட்களில் விற்பனை மந்தமாகத்தான் இருக்கும்" என்று தேறுதல் சொன்னார். "நீங்கள் ஆசிரியர். இதையெல்லாம் பார்க்கக் கூடாது. பார்த்தால், தளர்ச்சி அடைந்துவிடுவீர்கள்" என்று அறிவுரையும் வழங்கினார்.

ஒரு நாள் அனுபவமே எனக்கு இப்படி என்றால், அய்யா மனநிலை எப்படியிருந்திருக்கும்? ஆனால், அவர் நிச்சயம் தளர்ச்சி அடையவில்லை. புதையம்பில் பட்டுப்பாடு ஊன்றும் களிறு அவர்!

## இழப்பு

1943இல் சென்னையில் 'தந்தி' தொடங்கினார். 1947இல், சேலத்தில் 'தினத்தாள்', 1948இல் திருச்சியில் 'தினத்தூது', அதே ஆண்டு சென்னையில் மீண்டும் "தினத்தந்தி" என்று பதிப்புகளை விரிவுபடுத்திக் கொண்டே போனார். இழப்பும் விரிந்துகொண்டே போயிற்று.

நாளிதழுக்கு நாள்தோறும் தீனி போடவேண்டும் என்பதை முன்பே சொன்னேன். அதிலும் அடக்கவிலைக்கும் குறைந்த விலைக்கு நாளிதழை விற்கவேண்டும். அந்த நாளிதழை ஆண்டுக் கணக்கில் தொடர்ந்து நடத்தினால், எத்தனை இலட்சங்களை இழக்க நேரிடும்-அதனைத் தாங்கிக்கொள்ள எவ்வளவு மன உறுதி வேண்டும் என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள்.

மதுரையில் ''தமிழ்நாடு'' நாளிதழ் நடத்திய கருமுத்து தியாகராசன் அந்த இதழை நிறுத்தியபொழுது, அவருக்கு ரூ 37 இலட்சம் இழப்பு. அவர் பெரிய ஆலை அதிபர். அந்த இழப்பைத் தாங்கிக்கொண்டார். ஆனால், அய்யா அப்படி அல்லவே. 'தந்தி' தவிர அவரிடம் வேறு தொழில் இல்லையே.

1942 இறுதியில் அய்யா 'தந்தி'யைத் தொடங்கினார். 1950 வரை எட்டு ஆண்டுகள் எதிர் நீச்சல் போட்டார். சிங்கப்பூரில் பாரிஸ்டர் தொழில் செய்து சம்பாதித்தது, எட்டு ஆண்டுகளே. அப்பொழுது அவரின் வருமானம், இந்தியாவின் தலைமை ஆளுநரின் (கவர்னர் செனரல்) வருமானத்தைவிட அதிகம். அங்கு எட்டு ஆண்டு சம்பாதித்து வந்த பணம் முழுவதையும் இங்கே எட்டு ஆண்டு 'தந்தி' நடத்தியதில் இழந்தார்.

''சென்னையில் இந்திய அரசு வங்கியில் (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா) அய்யா பணம் போட்டு வைத்திருந்தார். அந்த வங்கியின் கணக்காளர் ஒரு நாள், ''உங்கள் அய்யா சிங்கப்பூரில் சம்பாதித்த பணம் முழுவதையும் இங்கே கொண்டுவந்து அழித்து விட்டாரே'' என்று சொல்லி வருத்தப்பட்டார்'' என்கிறார், பால்வண்ணன்.

அய்யா அழிக்கவும் இல்லை; அதற்காக வருத்தப்படவும் இல்லை. வருத்தப்பட அவருக்கு நேரமும் இல்லை. அவர் விதைத்தார்; தானே உழுது விதைத்தார்; தானே நீர்பாய்ச்சி, உரமிட்டார். தானே கண்விழித்துக் காவல் காத்தார்; எட்டு ஆண்டு பொறுமையாகக் காத்திருந்தார்; அதன் பின்தான் அவரின் உழைப்பு பலன் அளித்தது.

''1951இல் இருந்துதான் 'தந்தி' சொந்தக்காலில் வலிமையாக ஊன்றிக் கொள்ளத் தொடங்கியது. அய்யா அவர்களின் கடுமையான உழைப்புக்குக் கிடைத்த வெற்றி, இது'' என்கிறார், பால்வண்ணன். ''ஊழை உட்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழாது உஞற்றுபவர்'', ''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையானுழை'' என்பவை பொய்யா மொழி கள் அல்லவா?

**முடிசூடா மன்னன்**

நாள்தோறும் 300 படி திரும்பிவந்த நிலைமாறி, 3000 படி விற்கும் நிலையாக உயர்ந்து, 3 இலட்சத்தையும் தாண்டியது, 'தந்தி'. ஆசியாவில் இதழ்த்தொழிலில் ''முடிசூடா மன்னன்'' என்று ஆதித்தனார் கொடி கட்டிப் பறந்தார்.

விற்பனையும் அய்யா நேரடியாகக் கவனித்தது இந்த வெற்றிக்கு ஒரு காரணம். வெளியில் செல்லும் நேரங்களில் கடைகளில் சுவரொட்டி தொங்கவிடப் பட்டிருக்கிறதா என்று கவனித்தார். தொங்கவிடாவிட்டால், தொங்கவிடும்படிக் கூறினார். ''நேற்று எத்தனை படி விற்றது? இன்று எத்தனை விற்றது?'' என்று கடைக்காரரிடம் கேட்பார். கூடுதலாக விற்றிருந்தால், அதற்கு எந்தச் செய்தி காரணம் என்று கேட்டறிந் தார்.

விற்பனையைப் பெருக்க இன்னொரு தந்திரத்தையும் அவர் கையாண்டார். செய்திகளின் உச்சியில் * என்று நட்சத்திரக் குறியிட்டு, ''குறிப்பு : இந்தக் குறிபோட்டிருக்கும் செய்திகள் நேற்று சாயங்காலம் அச்சிட்ட இதழ்களில் வெளியாகாதவை'' என்று முதல் பக்கத்தின் உச்சியில் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதோடு, முதல் பக்கம் முழுக்க நட்சத்திரக் குறியிட்ட செய்தி களையே வெளியிட்டார். இதனால், ''தந்தி செய்திகளை முந்தித் தருகிறது'' என்ற புகழ் ஏற்பட்டது.

''இப்படியெல்லாம் செய்திகளை முந்தித்தந்து, 'தந்தி' வளர்ந்தது. மதுரை சொக்கிகுளம் பகுதியில் எல்லாருமே மாளிகை வாசிகள். சென்னையில் இருந்துவரும் ஆங்கில இதழ் களை மட்டுமே வாங்குகிறவர்கள். அவர்கள் கூட 'தந்தி'யை வாங்கத் தொடங்கினார்கள். 'தந்தி'யின் விற்பனை 3000 ஆக உயர்ந்தது'' என்கிறார், பால்வண்ணன்.

**தினத்தந்தி**

1948இல் சென்னையில் ''தினத்தந்தி'' தொடங்கியதைத் தொடர்ந்து, 1950இல் மதுரை 'தந்தி'யும் ''தினத்தந்தி'' என்று மாற்றப்பட்டது. அதன்பின் எல்லாப் பதிப்புகளும் ''தினத்தந்தி'' என்றே பெயர் பெற்றன.

''தந்தி'' தினத்தந்தியாக மாறியதற்கு ஒரு கதையும் உண்டு. ஒரு நாள் எஸ். டி. ஆதித்தன் நெல்லையில் இருந்து மதுரைக்குப் பேருந்தில் வந்து, மதுரைப் பேருந்து நிலையத்தில் ஒரு குதிரை வண்டி அமர்த்திக் கொண்டு, ''தந்தி அலுவலகத்துக்குப் போப்பா'' என்று வண்டிக்காரனிடம் சொன்னார். வண்டியும் போயிற்று. சிறிது நேரத்தில், ''அய்யா, தந்தி அலுவலகம் வந்து விட்டது. இறங்குங்கள்'' என்று வண்டிக்காரர் சொன்னார். எஸ். டி. ஆதித்தன் வெளியில் எட்டிப் பார்த்தார். அது தபால் தந்தி அலுவலகம்! ''இது அல்லப்பா. 'தந்தி' என்று ஒரு பத்திரிகை வருகிறதே, அந்த அலுவலகத்துக்குப் போ'' என்று வண்டிக்காரரிடம் சொன்னார். அங்கு போனதும், அய்யாவிடம் இதைச் சொல்ல, மதுரை ''தந்தி''யும், ''தினத்தந்தி'' ஆயிற்று.

''தந்தி''யின் பெயருடன் தமிழ்க்கொடியையும், ''தினத் தந்தி''யின் பெயருடன் அசோகச் சக்கரத்தையும் அய்யா இணைத்துக்கொண்டாலும், கட்சி இதழாக நடத்தவில்லை. ''நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை'' என்ற நூல் இது பற்றிக் கூறுவது :—

'தந்தி' என்று தாங்கிய தனது பெயருக்கு ஏற்பச் செய்திகளை யெல்லாம் முன்னதாகவும் விரைவாகவும் இது வெளியிட்டுக் கொண்டிருந்தது. செய்திகளை முன்னதாக வெளியிடுவதுதான் இதன் கொள்கையாக இருந்ததே அன்றி, வேறு எவ்விதக் கட்சிக் கொள்கையும் இதனிடம் அமைந்திருந்ததாகக் கண்டுபிடிக்க முடியவில்லை''.

இவற்றால்தான் ''தினத்தந்தி ஆதித்தனர்'' என்று புகழ் பெற்றார். ''தினத்தந்தி''யில் முதல் பக்கத்தில் ''நிறுவியவர் : சி. பா. ஆதித்தனார்'' என்று சிலகாலம் அச்சிடப்பட்டது.

**வெள்ளிவிழா**

1951 முதல் ''தினத்தந்தி'' மளமள என்று வளர்ந்தது. 1959 முதல் ''தினத்தந்தி'' சுழல் (ரோட்டரி) அச்சு எந்திரத்தில் அச்சாயிற்று. 1961இல் எழும்பூரில் உள்ள சொந்தக் கட்டிடத்தில் குடியேறியது. சொந்தமாக நாலுமாடிக் கட்டிடம் கட்டிக் கொண்ட முதல் தமிழ் நாளிதழ் ''தினத்தந்தி''தான். 1968இல் அன்றைய முதல்வர் அறிஞர் அண்ணா தலைமையில் வெற்றி விழா போன்று வெள்ளிவிழா கொண்டாடினார். தமிழ்நாடு அமைச்சரவையே விழாவுக்கு வந்து, அவரையும், 'தினத்தந்தி' யையும் வாயார வாழ்த்திச் சிறப்பித்தது.

வெள்ளிவிழாவையொட்டித் "தூங்கும் அழகன்" என்ற வண்ணக் கேலிப்படம் (கலர் கார்ட்டூன் டாக்குமெண்டரி) ஒன்று தயாரித்து, தமிழ்நாடு முழுவதும் திரையரங்குகளில் காட்டினார்கள். தென்னிந்தியாவில் வண்ணத்தில் கேலிப்படமாகத் தயாரிக்கப்பட்ட முதல் விளம்பரப் படம் இதுவே. "தினத் தந்தி"யே இந்தப் படத்தைத் தயாரித்தது. தினத்தந்தி ஓவியரே படம் வரைந்தார். கதை, உரையாடல் எழுதித்தயாரித்தது, அடியேன்தான். அறிஞர் அண்ணா காலமானதும், "அண்ணாவுக்கு அஞ்சலி" என்ற தலைப்பில் வெள்ளிவிழா நிகழ்ச்சியும் திரைப்படமாகக் காட்டப்பட்டது. இதுவும் 'தந்தி' தயாரிப்பே.

"அய்யா அவர்களின் உழைப்பு, இளைஞர்களுக்கு வழிகாட்டி" என்கிறார், அவர்களைப்போலவே உழைப்பால் உயர்ந்த முதல்வர் கலைஞர். முதல்வர் சொல்லுகிறார்:

"தமிழ் இதழ் உலகில் தமிழன், தந்தி, தினத்தந்தி, மாலை முரசு போன்றஏடுகளின் வாயிலாக ஒரு புதிய பேரரசைத் தோற்றுவித்து, முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர், ஆதித்தனார் அவர்கள் தமிழின்பால் அவற்ளற்ற பற்றும் தமிழினத்தின் முன்னேற்றத்தில் எல்லையில்லா ஆர்வமும் கொண்டவர், ஆதித்தனார் அவர்கள். தமிழ் காக்கவும் உரிமை காக்கவும் சிறை சென்ற வரலாற்றுக்கு அவரும் ஒரு சொந்தக்காரர் என்று எண்ணும்போது உள்ளம் உணர்ச்சிக் கோளமாகிறது.

பிறகு சட்டப் பேரவைத் தலைவராகவும், அதன்பிறகு ஏழாண்டுக் காலம் தமிழக அமைச்சரவையில் ஒருவராகவும் அவர் இருந்து ஆற்றிய பணிகளை என்றென்றும் மறக்க இயலாது. உழைப்பால் முன்னேறி-தமிழ்நாட்டு இதழ் உலகில் யாரும் புரிந்திடாத ஒரு பெரும் சாதனையாக, இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனை ஆகக்கூடிய அளவுக்குப் பத்திரிகைகளைத் தொடங்கிய அவரது ஆரம்பகாலத் துணிவும், அயராத பணியும் உழைத்து முன்னேற விரும்பும் இளைஞர்களுக்கெல்லாம் ஒரு பாடமாகவும், வழிகாட்டுதலாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை."

இந்த வரலாறும் வளர்ச்சியும் அய்யா அவர்களின் சொந்த வளர்ச்சி மட்டுமல்ல, தமிழின் வளர்ச்சி; தமிழ்நாட்டின் வளர்ச்சி; தமிழ் மக்களின் வளர்ச்சி" அது எப்படி? சொல்லுகிறேன்.

# அருங்கொடைகள்

ஆதித்தனார் வரலாறு, வருங்காலச் சந்ததியினருக்கு வழி காட்டி. குறிப்பாக இதழாளர்களுக்குப் பயனுள்ள கையேடு. தமிழ் மக்கள் எல்லாரும் வாழையடி வாழையாகப் படித்துப் பயன்பெறவேண்டும் என்பதற்காக, அவரின் வாழ்க்கை நிகழ்ச்சி களை, அவர் எழுதியவற்றை, அவர் பற்றிப் பிறர் எழுதியவற் றைத் தொகுத்து, ''ஆதித்தனாருக்கு அஞ்சலி'' என்ற நூலாக 1982இல் ராணி பதிப்பகம் வழியே வெளியிட்டோம். அந்நூலின் முன்னுரையில் —

''சிலரது பெயர்கள் வரலாற்றில் இடம்பெறுவது உண்டு. வேறு சிலர் தாங்களே வரலாறு படைப்பது உண்டு. இன்னும் சிலர் தாங்களே வரலாறாக ஆகிவிடுவது உண்டு. அமரர் ஆதித் தனார் அவர்கள் தானே ஒரு வரலாறாக ஆகிவிட்ட தனிப்பெரும் தமிழ் மகன் ''நாம்-தமிழர்'' என்ற தத்துவம் தந்த தலைவர் அவர். தமிழ்நாட்டின் வரலாற்றுடன் அவரது வாழ்க்கை 40 ஆண்டு காலத்துக்குப் பின்னிப் பிணைந்து கிடக்கிறது.''

தமிழ்நாட்டின் இதழியல் வரலாறோ அவர் இல்லாமல் இல்லை. தமிழர் அனைவரையும் செய்தித்தாள்படிக்க வைத்தவர் அவர். ''ஆதித்தனார்'' என்பது தமிழ் இதழியல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய பெயர் ஆகி விட்டது''.

இது மிகைப்படுத்திக் கூறப்பட்டது அல்ல. தமிழ் மொழி-தமிழ் இனம்-தமிழ்நாடு ஆகியவற்றின் வளர்ச்சியில் அந்த அளவுக்கு அவருக்குப் பங்கு இருக்கிறது. தமிழுக்கு அவர் தந்த கொடை அளப்பரியது. அதனால்தான் அவர்களைத் ''தமிழர் தந்தை'' என்று அழைக்கிறோம்.

**தமிழ் உணர்வு**

அய்யா தமது இதழ்கள் வழியாகத் தமிழுணர்வு ஊட்டினார். எந்த இதழாளரும் செய்யாத பணி, இது. சில அரசியல் இதழ்கள் தமிழுணர்வு ஊட்டினவே அல்லாமல், எந்த மக்கள் இதழும் தமிழ் மக்களிடம் தமிழுணர்ச்சியைத் தூண்டிவிடவில்லை. அய்யா இதழ்கள் நடத்தும் நோக்கமே இதுவாகத்தான் இருந்தது. ''தினத்தந்தி'' வெள்ளி விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய அன்றைய முதல்வர் அறிஞர் அண்ணா இதே கருத்தைத் தெரிவித்தார்.

''ஆதித்தனார் இதழ்கள் தொடங்கியது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக என்பதை இன்றைய தினம் எடுத்துச் சொன்னார்கள். இந்த இருபத்தைந்து ஆண்டு வரலாற்றைப் பார்த்தால், அதை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஆதித்தனார் ''பார்-அட்-லா'' படித்தவர். சிங்கப்பூரிலே பாரிஸ்டராகப் பணியாற்றியவர். நல்ல வளமான வருவாய்கூட அங்கு அவருக்குக் கிடைத்து வந்ததாக நான் சிங்கப்பூரிலே பல பேரைக் கேட்டு அறிந்து கொண்டேன். அப்படிப்பட்டவர் இதழ் நடத்தவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டது, உண்மையிலேயே அவருக்கு இதழ்த் தொழிலில் உள்ள ஆர்வத்தையும், இதழ்வழியாகத் தமிழ்நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் தன்னால் இயன்ற தொண்டாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

''தமிழன்'' ஆசிரியராக இருந்த சோ. த. சண்முகசுந்தரமும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகிறார். ''தமிழ் இனத்தை ஒன்று சேர்த்து, 'நாமும் ஒரு வல்லரசு ஆகிடுவோம், வாரீர்' என்ற முழக்கத்துடன் தமிழ் அரசை நிலை நாட்டப்போவதாகக் கூறிய ஆதித்தனார், அதற்காகத் தொடங்கிய இதழ்தான், ''தமிழன்'' என்கிறார் அவர்.

''தமிழன்'' முதல் இதழில் ''நமது நோக்கம்'' என்று அய்யா எழுதிய தலையங்கத்திலேயே இக்கருத்து வெளிப்படுவதை முன்பே கண்டோம். ''தினத்தந்தி'' அப்பணியைத் தொடர்ந்தது. தமிழுக்கு, தமிழருக்கு, தமிழ்நாட்டுக்கு ஒரு கேடு என்றால், அதை எதிர்த்து இன்றும் குரல் கொடுப்பது அய்யா இதழ்களே என்பது நீங்கள் அறிந்ததே. அதனால்தான் 'தினத்தந்தி'யைத் தமிழுக்கு ஒரு வாள் என்றும், ஒரு கேடயம் என்றும் அறிஞர் அண்ணா சொன்னார்.

"தமிழனின் உரிமை பறிக்கப்படும் என்ற நிலை ஏற்படுகிற ஒவ்வொரு நேரத்திலும், தமிழர்கள் தங்களைத் தாங்களே பாது காத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் வந்த ஒவ்வொரு வேளையிலும், "தினத்தந்தி" வெறும் செய்தி இதழாக மட்டும் இல்லாமல், பரபரப்பான செய்திகளோ அல்லது சூடான செய்தி களோ தருகிற இதழாக மட்டும் இல்லாமல், தமிழர்களுக்கு அது வாளாகவும், கேடயமாகவும், தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு போர் வீரனாகவும் விளங்கிக்கொண்டு வருகிறது."

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. "ஆதித்தனாரோடு எனக்கு 30 ஆண்டு காலத்தொடர்பு. அவர் தமிழரசுக் கட்சி என்னும் பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கி, தமிழ்நாட்டின் அரசியல் உரிமைக்காகக் கிளர்ச்சி நடத்தியபொழுதே நான் அவரை அறிவேன். அந்த நாள்தொட்டு தமது வாழ்வின் இறுதி நாள்வரை தமிழ்மொழியின் வளர்ச்சியில், தமிழ் இனத்தின் உரிமை வாழ்வில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்று கூறி அவ்விதமே வாழ்ந்து காட்டினார்." என்கிறார்.

### சிறை சென்றார்

அய்யா தமிழ் காக்க மக்களைத் தட்டி எழுப்பியது மட்டு மல்ல; தாமே போராட்டத்தில் இறங்கவும் செய்தார். இந்தியை எதிர்த்தும், இந்திய தேசப்படத்தை எரித்தும நான்குமுறை சிறை சென்றார். தமிழர் உரிமைக்காகப் பிறர் நடத்திய போராட்டங் களுக்கும் அவர் முழு ஆதரவு அளித்தார்.

"தமிழன் வளர்ச்சிக்காக - தமிழனின் நல்வாழ்வுக்காக -தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்காக எந்த முயற்சியை அல்லது எந்த கிளர்ச்சியை யார் எப்போது நடத்தினாலும் அதற்கெல்லாம் 'தினத்தந்தி' துணையாக இருந்திருக்கிறதே தவிர, தொந்தரவாக இருந்தது கிடையாது என்பதை நான் அனுபவித்திருக்கிறேன். எல்லைக் கிளர்ச்சிகளை நான் நடத்தியபொழுது, அதிலே நாம் வெற்றிபெற முடிந்தது என்றால், அதற்குத் 'தினத்தந்தி'யின் உதவி பேருதவியாக அமைந்திருந்தது" என்கிறார். ம. பொ. சி.

அவர்கள் எல்லாம் அரசியல்வாதிகள், "தினத்தந்தி"யின் ஆதரவு பெற்றவர்கள். அரசியல் கலப்பே இல்லாத அறிஞர் மு.வ. என்ன சொல்லுகிறார்? "தமிழ்நாட்டுக்கு ஏதேனும் இன்னல் வரும்பொழுது - தமிழ்மொழிக்கு இடையூறு வரும்பொழுது

தயங்காமல் குரல் கொடுக்கிற ஓர் இதழ், ''தினத்தந்தி''. ஒரு நாட்டுத் தொண்டன், மொழித் தொண்டன், கடமையுணர்ச்சி யோடு குரல் கொடுப்பதைப் போல, ''தினத்தந்தி'' என்றென்றும் குரல் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. அதற்காக நாமெல்லாம் நன்றி உணர்ச்சியோடு கடமைப்பட்டிருக்கிறோம்.''

(''தினத்தந்தி'' வெள்ளிவிழாச் சொற்பொழிவு)

தமிழ் - தமிழருக்குத் தொண்டு செய்யும் எண்ணம் ஆழமாக இருந்ததால்தான், அய்யா வேறுமொழி இதழ்கள் நடத்த முயற்சி செய்யவில்லை என்று எஸ்.டி. ஆதித்தன் சொன்னார்.

**நாம் - தமிழர்**

1942 இல் தமிழரசுக் கட்சியைத் தொடங்கிய அய்யா இந்திய விடுதலைப் போருக்கு அது தடையாக இருக்கக்கூடாதே என்று, அவ்வியக்கத்தை நிறுத்தி வைத்தார். விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டார். 'தந்தி'யை விடுதலை இயக்கத்துக்குப் பயன் படுத்தினார். தமிழ்க்கொடி தாங்கிய 'தந்தி'கூட, அசோக சக்கரத்தை ஏற்றது. இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தும், விடுதலை கிடைத்துப் பத்தாண்டு ஆகியும் பலன் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து, 1958இல் மீண்டும் அந்த இயக்கத்தை ''நாம் - தமிழர்'' இயக்கமாகத் தொடங்கினார். சுதந்திரத் தமிழ்நாடு ஏன் வேண்டும் என்பதை விளக்கித் 'தினத் தந்தி'யில் தொடர்ந்து எழுதினார். அப்பொழுது அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்ட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரப் பூர்வமான நாளிதழான ''நம்நாடு', (2.1.1958) கீழ்க்கண்டவாறு எழுதியது.

''உலகில், தமிழ்நாடு அளவுக்கும் அதனினும் குறைந்த அளவுக்கும் உள்ள எத்தனையோ நாடுகள், தனி அரசாகத் திகழ் கின்றன. மொழி தொடர்பாகக்கூடக் கட்டுப்பட்டு - அடிமைப் பட்டு - ஒரு பேரரசிடம் சிக்கிச் சீரழிவதைவிட, தமிழ்நாடு தனி நாடு ஆகிவிடுவது சாலச்சிறந்தது என்ற கருத்தினை, தெளிவும் ஆர்வமும் ததும்பும் வண்ணம் ''தினத்தந்தி'' தலையங்கமாகத் தீட்டியிருப்பது, தமிழர் அனைவரும் மகிழ்ந்து வரவேற்கத்தக்க விஷயம் ஆகும். தோழர் ஆதித்தனார் அவர்கள் மிக நல்ல தருணத்தில் இந்தக் கருத்தை தமது இதழ் வழி, தமிழ்நாட்டுக்குத் தந்துள்ளளார்.''

தமிழுணர்வு கொண்ட அய்யா அதே உணர்வுடன் இதழ்கள் நடத்தியதற்காக ஒவ்வொரு தமிழனுமே பெருமிதம் அடைய வேண்டும் என்கிறார், அறிஞர் அண்ணா. "இந்த இலட்சியப் பணியிலே ஆதித்தனார் சிறையிலே தள்ளப்பட்டதும் அல்லாமல் மேலும்பல கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டார். ஆனால், கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட நேரத்திலும் - மனம் உடைந்து விடுவார் என்று சிலர் எதிர்பார்த்த நேரத்திலும் -உடல் உடைந்து விட்டது, மனம் ஒன்றுதான் உடையவேண்டுமென்று மாற்று வட்டாரத்தில் உள்ளவர்கள் எண்ணிக்கொண்டிருந்த நேரத்திலும் அவர் மனம் உடையாமல், ஒரு பெரிய பொதுத் தேர்தலில் தன்னைத் தானே ஈடுபடுத்திக் கொண்டு, தமிழக மக்களுக்கு ஒரு புதிய அரசு அமைய வேண்டுமென்று அவர் எடுத்துக் கொண்ட அக்கறையும் ஆர்வமும், தமிழகம் இன்றையதினம் மிக நன்றாக அறிந்திருக்கிறது. அப்படிப்பட்ட சீரிய தொண்டுள்ளம் படைத்த ஒருவர், தமிழ் இதழ் நடத்துவதில் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதில் தமிழன் என்ற முறையில் நாம் ஒவ்வொருவரும் பெருமிதம் கொள்ள உரிமை உண்டு." (தினத்தந்தி வெள்ளிவிழாச் சொற்பொழிவு)

**ஆய்வு காட்டும் உண்மை**

தமிழ் இதழ்களில் 'தினத்தந்தி' எப்படி முதலிடம் பெற்றது என்பது பற்றி ஓர் ஆய்வு நடந்தது. அ. சாந்தா தனது முனைவர் பட்டத்துக்காக இந்த ஆய்வை நடத்தினார். அவரது ஆய்வு ஏட்டை 1980இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தாக்கல் செய்து, "முனைவர்" பட்டம் பெற்றார். அந்த ஆய்வேட்டில் அவர் கண்ட உண்மைகளில் ஒன்று—

"தினத்தந்தி தமிழர் அனைவரையும் ஒன்றுபடுத்தக்கூடிய தமிழ், தமிழன் ஆகிய உணர்ச்சிகளுக்குச் சிறப்பிடம் தருகிறது. தமிழ், தமிழன் என்ற உணர்வுகளைத் தூண்டும் செய்திகளுக்குத் 'தினத்தந்தி' சிறப்பிடம் அளிக்கிறது.

எந்த நாடு விடுதலை பெற்றாலும் அந்தச் செய்திக்கு முதலிடம் கொடுத்து "தினத்தந்தி"யில் வெளியிடுவதை அவர் வழக்கமாக வைத்திருந்தார். அந்தச் செய்தியைப் படித்துவிட்டு, "நாமும் விடுதலை பெறவேண்டும்" என்ற உணர்வைத் தமிழ் மக்கள் பெறவேண்டும் என்பதற்காகவே இப்படிச் செய்தார். விடுதலை பெற்ற நாட்டின் பரப்பளவு, மக்கள் தொகை ஆகியவற்றைத் தவறாது குறிப்பிட்டு, தமிழ் நாட்டைவிடச் சின்ன

நாடுகள்கூட உரிமையுடன் வாழ்வதைத் தமிழ்மக்களுக்கு உணர்த்தினார். அவர்போன்று வேறு எவரும் இந்த அளவுக்கு இதழ்கள் வழியே தமிழுணர்வு ஊட்டியதில்லை.

''தமிழ், தமிழர், தமிழ்நாடு'' நலன்கருதி தமிழ்நாட்டில் தொண்டாற்றிவந்த, தொண்டாற்றி வருகின்ற தமிழ்த்தலைவர்கள் மிகச்சிலர். அவர்களில் ஆதித்தனார் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர் பேச்சாலும், மூச்சாலும், பொருளாலும் உழைப்பாலும் தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ்நாட்டுக்கும் செய்துவரும் தொண்டுகள் மிகப்பல. அதற்காகத் தமிழ்நாடு அவருக்கு என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது'' என்கிறார். முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்.

**தமிழ் வளர்த்தார்**

அய்யா தமிழுணர்வைத் தட்டி எழுப்பியது மட்டுமல்ல, தமிழையும் வளர்த்தார். தமிழுக்குப் புதிய புதிய சொற்களைக் கொடுத்தார். தமிழ் கற்றுத்தந்தார். அரசியல் செய்திகளைத் தமிழில் எழுதமுடியும் என்று எழுதிக்காட்டியவர், திரு. வி. க. எந்தச் செய்தியையும் தமிழில் எழுதமுடியும் என்று எழுதிக் காட்டியவர், அய்யா.

அய்யா ''தமிழன்'', ''தந்தி'' தொடங்கும் வரை தமிழ் இதழ்களில் புலவர் தமிழே பயன்படுத்தப்பட்டது. தமிழ் இதழ்களில் மக்கள் தமிழைப் பயன்படுத்த வழிகாட்டியது அய்யாதான். பேச்சுத் தமிழைத் தமிழ் இதழ்களின் மொழியாக ஆக்கினார். ''பேச்சுத் தமிழைக் கொச்சை நீக்கி எழுதவேண்டும்'' என்று பொன்விதி கண்டார். பேராசிரியர் முனைவர் சாலை. இளந்திரையன் இதனை கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிறார் :

''ஆதித்தனாரின் 'தந்தி' தோன்றுவதற்கு முன்பும் தமிழில் செய்தித்தாள்கள் வெளிவந்தன. ஆயினும் அவற்றைப் படிப்பதற்குத் தமிழ் மட்டும் தெரிந்திருந்தால் போதாது; ஆங்கிலம், சமக்கிருதம் போன்ற பிறமொழிகளும் ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டும். அந்த அளவுக்கு அந்த மொழிகளின் சொற்களையும் தொடர்களையும் சேர்த்தே எழுதி வந்தன, அந்த இதழ்கள்.

இப்படியாக மூன்று மொழிகளில் மூச்சுவிடத் தெரிந்தவர்களுக்காகவே, 'தமிழ்ப்பத்திரிகைகள்' வெளிவந்துகொண்டிருந்த கொடு வரலாற்றை மாற்றி, தமிழைக்கூடச் சரியாகப் படித்திராத தமிழர்களும் படிக்கும் விதமாகத் தமிழ் இதழ் நடத்தியவர்,

ஆதித்தனார். அவரது தந்தி, தினத்தந்தி முதலிய இதழ்களைப் படிப்பதற்காகவே பல்லாயிரம் எளிய தமிழர்கள் தமிழை வாசிக்கக் கற்றுக்கொண்டதுகூட உண்டு.

மக்களை மருட்டும் பண்டிதத் தனத்தையும், படாடோபமான சொற்சிலம்பத்தையும் மாற்றி எளிய தமிழில் ஆதித்தனார் இதழ்கள் வெளியிட்டதாலேயே அவரது நாளிதழ்களுக்குப் பல லெட்சம் வாசகர்கள் ஏற்பட்டார்கள்.'' (''ஆதித்தனாருக்கு அஞ்சலி'').

**புதிய சொற்கள்**

எளிய தமிழில் செய்திகளைக் கொடுப்பதற்காகப் புதிய தமிழ்ச்சொற்களை அய்யா ஆக்கினார். குறிப்பாகப் பல ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச்சொற்கள் கண்டார். அப்படிச் சொற்களைப் படைத்தபொழுது, அச்சொற்கள் நேரடிமொழி பெயர்ப்பாக இல்லை. பொருளை மட்டுமே உணர்த்துவதாக இருந்தன. சொல்லுக்குச் சொல் என்பது சிலநேரம் ஈயடிச்சான் நகலாகக் கூட இருந்துவிடும். எடுத்துக்காட்டாக அ. சாந்தா ''அன்கெல்த்தி சேர்னலிசம்'' என்பதை ''ஆரோக்கியமற்ற இதழியல்'' என்று மொழிபெயர்க்கிறார். அய்யா இதை ஆரோக்கியமற்ற மொழி பெயர்ப்பு என்பார்! ''கேடான (அல்லது கேடுதரும்) இதழியல்'' என்று அவர் மொழி பெயர்ப்பார். அதேபோல, ''யெல்லோ சேர்னல்'', மஞ்சள் இதழ் இல்லை; பச்சை இதழ். எதையும் 'பச்சை'யாக எழுதும் இதழ்தானே, அது?

மொழிபெயர்ப்பில் பொருள்தான் முதன்மை. ''ஒரு பிற மொழிச் சொல்லைத் தமிழில் மொழிபெயர்க்கும்பொழுது, அதை அப்படியே நேரடியாக மொழிபெயர்க்காமல், அதன் பொருளை மனதில் கொண்டு மொழிபெயர்க்கவேண்டும். மொழி பெயர்ப்பில் சொல்தான் முக்கியம்'' என்று அய்யா விதி வகுத்தார்.

''வீடியோ''வை ''வீட்டு சினிமா'' என்றார். போலீஸ் ஐ. ஜி. யைத் ''தமிழ்நாடு தலைமை போலீசு அதிகாரி'' ஆக்கினார். சட்டமன்றத்தில் ''அட்ஜர்ன்மெண்ட் மோசன்'' கொண்டுவருவதை, ''அவசரத் தீர்மானம்'' என்று எழுதினார்.

**தமிழ் கற்றார்**

இவ்விதம் படிப்பறிவு இல்லா மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய சொற்களை அய்யா பயன்படுத்தியதால், முதலில்

எழுத்துக் கூட்டிப் படித்தவர்கள் கூடப் பிறகு எளிதாகப் படிக்கப் பயிற்சி பெற்றார்கள். வேற்று மொழியினரும் 'தினத்தந்தி' படித்து, தமிழ் கற்றார்கள்.

காவல்துறை அதிகாரியான கவிஞர் குளச்சல் குமரேசன், "மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட எனக்குத் தினத் தந்திதான் தமிழாசிரியர். மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித் துறையில் சேர்ந்து, பி.ஏ., பட்டப் படிப்பில் தமிழ்ப் பாடத்தில் இரண்டாம் வகுப்பில் நான் தேர்ச்சி பெற உதவியாக இருந்ததும் தமிழர் தந்தை ஆதித்தனார் அவர்களின் 'தினத்தந்தி'யே ஆகும்" என்கிறார். ("ஒரு காக்கிச் சட்டையின் கவிதைகள்" முன்னுரை).

புகழ்பெற்ற திரைப்பட நடிகரான வி. நாகையா, "என் தாய்மொழி தெலுங்கு என்றாலும், நான் தமிழ் படித்தது 'தினத்தந்தி' வழிதான். 'தினத்தந்தி'யை நான் தொடர்ந்து படித்ததன் வாயிலாக எனக்குத் தமிழ் வளர்ச்சி ஏற்பட்டது" என்கிறார். ("தினத்தந்தி" வெள்ளிவிழா மலர்.) இன்னும் பல திரைப்படக் கலைஞர்களும், சென்னைக்கு வரும் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும் "தினத்தந்தி" படித்துத்தான் தமிழைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

"என் போன்றவர்கள் எழுத்தாளர்களாக வளர்ச்சி அடைந்தோம் என்றால், அதற்குக் காரணம் அய்யா ஆதித்தனார் அவர்கள் அளித்த ஆதரவும், எளிய தமிழில் எழுத அவர்கள் சொல்லித் தந்த பயிற்சியுமே ஆகும்" என்கிறார், "பேய்க்கதை மன்னன்" பி. டி. சாமி. "மக்களுக்கு எழுதப் படிக்கத் தெரிய வேண்டும் என்ற நோக்கத்திற்காக இதழ் நடத்திய ஒரே இதழாளர் ஆதித்தனார்தான்" என்கிறார், திருக்குறளார். இந்தப் பெருமைக்கு உரியவர் அய்யா தவிர வேறு யாரும் இலர். "கல்விக்கண் திறந்த காமராசரின் சாதனைக்கு அடுத்த சாதனை ஆதித்தனாரது" என்கிறது, "கல்கண்டு" (18-6-1981).

**மக்கள் இதழ்**

அய்யா மக்கள் தமிழைப் பயன்படுத்தியதால், அவரது 'தினத்தந்தி' மக்கள் இதழ் ஆயிற்று. இந்தியாவின் முதல் மக்கள் இதழ், 'தினத்தந்தி'தான். படித்தவர் சொத்தாக இருந்த இதழ் களை மக்கள் சொத்தாக ஆக்கியவர் அய்யா தான். அவர்தான் இந்திய மக்கள் இதழ்களின் தந்தை; மக்கள் இதழ்களுக்கு முன்னோடி.

சென்னையில் 'தினத்தந்தி' தொடங்கிய காலத்தில் அய்யா நாள்தோறும் அதிகாலையில் நகர்வலம் வருவார். சாலைகள், தெருக்கள் வழியே நடப்பார். யார் யார் ''தினத்தந்தி'' படிக்கிறார்கள், எந்தச் செய்தியை விரும்பிப் படிக்கிறார்கள், படித்துக்கொண்டு என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதைக் கவனிப்பார். தேநீர்க்கடைகளில், வாடகை வண்டி நிறுத்தங்களில், பால் கொண்டு போகிறவர்கள் ''தினத்தந்தி'' படிப்பதைப் பார்ப்பார். யாரோ சிலர் வீட்டுக்குள் மட்டும் ஓய்வாகப் படித்துக்கொண்டிருந்த நாளிதழ்களை நடு வீதிகளில் நாலு பேர் கூடிப் படிக்கும்படி மாற்றியவர் ஆதித்தனார்.

**மக்கள் புரட்சி**

வீட்டுக்குள் இருந்த நாளிதழ்களை வீதிக்குக் கொண்டு வந்தது, தமிழ் நாட்டில் மிகப்பெரிய மக்கள் புரட்சி ஏற்பட வழி கோலியது. ''பட்டி தொட்டிகளில் எல்லாம் நாளிதழ் படிக்கும் பழக்கத்தை ஆதித்தனார் ஏற்படுத்திய ஒரே காரணத்தால்தான் தமிழ்நாட்டு அரசியல் இந்தியாவின் மற்ற மாநில அரசியலைவிட மாறுபட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை'' என்கிறது, 'மக்கள் குரல்'' நாளிதழ், (24-5-1981)

''சில இதழ்கள் புரியாத தமிழிலும், இன்னும் சில இதழ்கள் அரை குறையாகப் புரிந்த தமிழிலும், செய்திகளை வெளியிட்டு வந்த காலத்தில், ஆதித்தனார் சுமாராகப் படித்த ஏழைகளுக்கும் புரியும்படியான எளிய தமிழில் செய்திகளை வெளியிட்டு, தமிழ் நாட்டில் அடித்தள மக்கள் அரசியல் அறிவுபெற உதவி செய்தார்'' என்கிறார், இதழாளரும் எழுத்தாளருமான சாண்டில்யன்.

''எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' என்ற காலத்தில் அந்த மன்னர்களுக்கு அரசியல் அறிவு ஊட்டி, தமிழ் நாட்டில் மக்களாட்சி தழைக்கச் செய்தார் அய்யா. இதிலும் அவரே முன்னோடியாகத் திகழ்கிறார். ''பாமர மக்களுக்குச் செய்திகளைக் கொடுப்பதில் முன்னோடியான 'தினத்தந்தி' இன்று 30 லெட்சம் மக்கள் படிக்கும் வகையில் வளர்ந்திருக்கிறது என்றால், அது ஒரு நாளிதழின் வளர்ச்சி மட்டுமல்ல; அது மக்களாட்சியின் மிகச்சிறந்த வளர்ச்சி என்று நான் மிகுந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்'' என்கிறார், அறிஞர் அண்ணா.

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. இதனை இன்னும் விளக்க மாகச் சொல்லுகிறார்- ''ஒரு மாபெரும் கட்சி சாதிக்கக்கூடிய சாதனையை ஆதித்தனார் ஒரு தனி மனிதராக நின்று 'தினத் தந்தி' வாயிலாகச் சாதித்திருக்கிறார். நாடு சுதந்திரம் பெறுகிற நிலையில் அவர் ''தந்தி''யைத் தொடங்கினார். நாடு சுதந்திரம் பெற்றபொழுது வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை கிடைத்தது. அந்த நேரத்தில் சாமானியமான எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு விஷய ஞானம்-நாட்டு நடப்புத் தெரியாத நிலையில் அவர்களுக்கு வாக்குரிமை என்றால் அதனால் பல கேடுகள் விளையக்கூடுமென்று பல அறிஞர்கள் எச்சரித்தார்கள். வாக்குரிமை கொடுக்கக்கூடாது என்றும் பலர் எதிர்த்தார்கள். ஆனால், ஆதித்தனார் செய்த இதழ்த்தொண்டு, விஷயஞானம் இல்லாத வாக்காளர்களுக்கும் விஷய ஞானத்தை வளர்த்துக் கொடுத்து, மக்களாட்சி வளர்ச்சிக்கு மகத்தான பணி செய்திருக் கிறது.

அரசியல் கட்சிகளிலே சாமானிய எளிய குடிசையில் வாழ்கிற மக்களுக்கும் அரசியல் அறிவு ஊட்டிய ஒரு கட்சி உண்டு என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்தப் பெருமை உண்டு. இதழ்களில் ஆதித்தனார் தொடங்கிய 'தினத்தந்தி'க்கும், அதன் துணை இதழ்களுக்கும் அந்தப் பெருமை உண்டு. இன்று சாமானிய ஊழியர்கள்-ஏழை எளியவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளே போக முடிந்தது என்றால், அது கட்சிகளிலே திராவிட முன்னேற்றக் கழகமும், இதழ்களிலே 'தினத்தந்தி'யும் செய்திருக்கின்ற ஒரு மகத்தான மக்களாட்சிப் புரட்சியாகும்.

இந்தப் புரட்சியின் காரணமாகத் தமிழ்நாட்டிலே ஓர் அரசியல் மாறுதல் ஏற்பட்டது. திராவிட இயக்க ஆட்சி தோன்றியது. 1967 இல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு எதிரான தி.மு.கழகக் கூட்டணி வெற்றி பெற்று, அறிஞர் அண்ணா முதல்வர் ஆனார். அய்யா, இந்தக் கூட்டணியிலே இணைந்து, அதன் வெற்றிக்குப் பெரிதும் பாடு பட்டார். இதற்குத் 'தினத்தந்தி'யும் துணை நின்றது. ''1966 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டு அரசியலில் மகத்தான மாறுதல் ஏற்பட்டது. ஆட்சியைப் பிடிக்கும் புரட்சிக்கு- மாற்றத்திற்கு ஆதித்தனார்தான் பிரதான காரணம்'' என்பார், ம.பொ.சி. தேர்தல் முடிவிலே, முதறிஞர் ராஜாஜி சொன்னது-

"தமிழ்நாட்டில் எதிர்ப்பு (தி.மு.க.) அணி இவ்வளவு பெரும் வெற்றி பெற்றதில் கால்பங்கு 'தினத்தந்தி'க்கு உரியது"

இது எந்தத் தமிழ் இதழுக்கும் - இதழாளருக்கும் கிடைக்காதப் பாராட்டு அல்லவா?

## முதியோர் கல்வி

அய்யா பணியால் மற்றொரு பயனும் விளைந்தது. அது தான் முதியோர் கல்வி. பல முதியோர்கள் 'தினத்தந்தி' படித்தே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்கள். இது வேறு எந்த இதழும் செய்யாத பணியாகும்.

"ஒழுங்காகச் சிலர் படிக்கக் கற்றுக்கொண்டதே 'தினத்தந்தி' யால்தான். முதியோர் கல்வி நிலையமாக ஆக்கிக் கொள்ள வாய்ப்பாக இருந்தது, அந்த ஏடு" என்கிறார் முதல்வர் கருணாநிதி. இந்த முதியவர்கள் அரைகுறைப் படிப்பாளியாக இருப்பார்கள். அவர்கள் எழுத்துக் கூட்டிக் கூட்டித் 'தினத்தந்தி படித்து, நன்கு படிக்கக் கற்றுக் கொண்டார்கள். காந்தம் இரும்பை இழுப்பது போல, 'தினத்தந்தி'யின் பரபரப்பான செய்திகள் அவர்களைக் கவர்ந்து, படிக்கத் தூண்டின. எளிய மக்கள்தமிழ் அவர்களிடம் படிக்கும் ஆர்வத்தை வளர்த்தது.

## நேற்று இன்று நாளை

செய்தித்தாள்கள் செய்திகள் வெளியிடும்பொழுது, முந்தைய நாள் நாளைக் குறிப்பிடுவதுதான் வழக்கமாக இருந்துவருகிறது. ஏழாம் நாள் தாள் என்றால், "சென்னை, மே 6" என்று நாளைக் குறிப்பிடுகிறார்கள். அய்யா அவர்கள் இதனை மாற்றி, செய்தி வெளியாகும் நாளையே குறிப்பிட்டார்கள். ஏழாம் நாள் தாள் என்றால், "சென்னை, மே 7" என்று குறிப்பிட்டார்கள்.

செய்தி படிப்பவர்களிடம் ஏற்படும் குழப்பத்தை நீக்கவே இந்த மாறுதலைச் செய்தார்கள். தமிழ்நாட்டின் புதிய ஆளுநர் ஒருவர் மே 7ஆம் நாள் பதவி ஏற்கிறார் என்றால், மே 7ஆம் நாளையத் தாளில், "புதிய ஆளுநர் நாளை பதவி ஏற்கிறார்" என்று வழக்கமாகச் செய்தி வெளியிடுவார்கள். 6ஆம் நாள் செய்தி எழுதும் பொழுது இது சரியாக இருக்கலாம். ஆனால், மறுநாள் 7ஆம் நாள் செய்தியைப் படிக்கும் வாசகர்கள், "புதிய

ஆளுநர் நாளை பதவி ஏற்கிறார்'' என்று படித்தால் குழப்பம் ஏற்படத்தானே செய்யும்?**

இன்று (புதன்கிழமை), நேற்று (செவ்வாய் கிழமை), நாளை (வியாழக் கிழமை) என்று அடைப்புக்குள் கிழமையைக் குறிப்பிடும் முறையையும் அய்யா அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். நாமேகூட ''நேற்று......'' என்று பேசிக்கொண்டிருக்கும் போது, ''நேற்று......என்ன கிழமை''? என்று கேட்கிறோம் அல்லவா?

''......என்பது நினைவு இருக்கலாம்'', ''......என்பது தெரிந்ததே'' என்று பழைய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் முறையையும் அய்யா அவர்கள் தோற்றுவித்தார்கள். தேவைப்படும் இடங்களில் ''முன்பு நடந்தது'' என்று துணைத் தலைப்பிட்டு, பழைய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்துவார்கள். சாதாரண வாசகர்களுக்கு இது தேவைப்பட்டது.

### செயற்கரிய செய்த பெரியார்

தமிழ்நாட்டில் ''பெரியார்'' என்று சொன்னால், அது தந்தை பெரியாரைத்தான் குறிக்கும். அந்தப் பெரியார், ஆதித்தனாரைச் ''செயற்கரிய செய்த பெரியார்'' என்கிறார். எதற்காக?

அய்யா ஆற்றிய தமிழ்ப் பணிக்கா?

சாதாரண மக்களையும் நாளிதழ் படிக்க வைத்ததற்காகவா?

அப்படி அவர்களைப் படிக்க வைத்துத் தமிழ்நாட்டிலே ஓர் அரசியல் புரட்சியை உண்டாக்கியதற்கா? இல்லை!

அய்யா ''தினத்தந்தி'' தொடங்கியதே ஓர் அரும்பெரும் சாதனையாம். அதற்காகவே அவர்களைச் ''செயற்கரிய செய்த பெரியார்'' என்கிறார் ஈடற்ற இந்த ஈரோட்டுப் பெரியார்! சென்னையில் 14-2-1960 அன்று நடந்த தமிழ்நாடு அரசு மருத்துவமனைத் தொழிலாளர் மாநாட்டில் அய்யா படத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றிய தந்தை பெரியார் சொன்னார்!

---

** 31-5-1990 ''இந்து'' ஆங்கில இதழில் ''திவாரி இன்று கண்டனத்தை ஏற்கிறார்'' என்ற தலைப்பில் வந்த செய்தி: புதுடெல்லி, மே-30 மாநில அவைத் தலைவர் எஸ். டி. சர்மாவைப்பற்றித் தரக்குறைவாகக் கூறியதற்கான கண்டனத்தை நாளை காலை 11 மணிக்கு நேரில் வந்து ஏற்றுக்கொள்ளும்படி முன்னாள் மத்திய அமைச்சர் கே. கே. திவாரிக்கு மாநில அவை கட்டளையிட்டிருக்கிறது.

"செயற்கரிய செய்த பெரியார், ஆதித்தனார். யாருமே செய்யாத அரிய செயல்களை அவர் செய்திருக்கிறார். இதை நான்தான் நன்கு உணர்கிறேன். முப்பது ஆண்டுக்கு முன்பு தமிழனுக்கு என்று ஓர் இதழ் கிடையாது. ஒரு சிலர் தொடங்கிய இதழ்களும் தலைதூக்க முடியாமல் ஒழிந்தன. ஆதித்தனார் ஓர் இதழ் தொடங்கினார். மளமள என்று வளர்ந்தது. எல்லா வற்றையும் சமாளித்துக் கொண்டு வளர்ந்தது. நன்றாகவே வேரூன்றிவிட்டது. இது எவ்வளவு பெரிய செயல் என்பது எனக்குத்தான் தெரியும். 'நாமும் இதழ் நடத்தலாம்' என்ற துணிவை மற்றவர்களுக்குக் கொடுத்தவர், ஆதித்தனார்தான். ஆகவேதான் ஆதித்தனாரை, 'செயற்கரிய செய்த பெரியார்' என்று சொல்லுகிறேன்."

"நாமும் இதழ் நடத்தலாம்" என்ற துணிவை மற்றவர் களுக்குக் கொடுத்தவரே அய்யாதானாம். இது எவ்வளவு பெரிய கொடை! "ஆதித்தனாரிடம் தந்தை பெரியாருக்கு மிகவும் அன்பு ஏற்பட்டதற்கு முக்கியக் காரணம், இதழ் உலகம் என்பது தமிழ் நாட்டில் தமிழர்களால் நடத்தப்பட முடியாது என்பதை மாற்றி, பாமர ரஞ்சகமான நாளேட்டினை நடத்தி, ஒரு பெரிய அமைதிப் புரட்சியை உண்டாக்கியவர், ஆதித்தனார் என்பதாலேயே ஆகும்" என்கிறார், பெரியாரின் வாரிசான கி. வீரமணி. "தமிழர்களிலும் தலைசிறந்த இதழாளர் தோன்ற முடியும் என்று சாதனை நிகழ்த்தியவர், ஆதித்தனார்" என்றும் அவர் கூறுகிறார்.

### பயிற்சி அளித்தார்

"தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று தான் கற்றதை மற்றவர்களுக்கும் மனதாரக் கற்றுக் கொடுத்தார், அய்யா. அவரிடம் பயிற்சி பெற்றவர்கள் பின்பு எத்தனையோ இதழ்களில் பணியாற்றினார்கள்; பணியாற்றுகிறார்கள். இதழ் களும் நடத்துகிறார்கள்.

"பல இதழ்களின் பிதா-பல இதழாளர்களைத் தோற்றுவித்த தொழிற்சாலை ஆதித்தனாரின் விசால மனம். தமிழ் இதழ் உலகில் பணியாற்றுவோரில் பெரும்பாலோர் அவரது படைப்புகள்" என்கிறது, நூற்றாண்டு கண்ட "சுதேசமித்திரன்" (24-5-1981). "தமிழர்கள் பலர் இதழ்துறைக்கு வருவதற்கும், அவர்கள் வளர்வதற்கும், வளர்ந்த அவர்கள் ஆசிரியர்களாகவும், செய்தியாளர்களாகவும் தமிழ்நாடு முழுவதும் பரவி உள்ள

தற்கும் ஆதித்தனாரின் முயற்சி ஓர் அடிப்படை என்றால் மிகையாகாது'' என்கிறது, ''மதுரை மணி'' (24-5-1981).

''எப்படி எளிமையாக எழுத வேண்டும், நாம் எழுதுகிற விஷயம் யாருக்குப் போகிறது, எப்படிப் போட்டால் அவர்கள் படிப்பார்கள் என்பது பற்றித் —தினமும் அதிகாலை, மாலை வேளைகளில் உலா செல்லுகிறபொழுது பள்ளிப்பாடம் மாதிரி நடத்துவார்'' என்கிறார், முன்னாள் ''தமிழன்'', 'தந்தி' ஆசிரியர் கோ. த. சண்முக சுந்தரம். ''இதழ் நடத்துவதை நான் தொழிலாகக் கருதவில்லை, ஒரு தொண்டாகக் கருதுகிறேன். நான் பல கோணங்களில் பயின்ற உண்மைகளை உங்களைப் போன்ற புதிய எழுத்தாளர்களுக்குப் பயிற்றுவித்து, ஒரு புதிய தலைமுறையைத் தோற்றுவிக்க முயன்று வருகிறேன்'' என்று அய்யா சொன்னதாகக் கோ. த. ச. தெரிவிக்கிறார்.

அய்யாவிடம் பயிற்சி பெற்றவர்கள் சோடை போனதே யில்லை. நானும் அவரிடம் நேரடியாகப் பயிற்சி பெற்றவனே. எனக்கு எப்படிப் பயிற்சி அளித்தார்கள் என்பதை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லுவது என்றால், தங்கத்தைத் தணலிலிட்டு தட்டித் தட்டி நகை செய்வது போல எனக்குப் பயிற்சி அளித்தார்கள் எனலாம்.

''தினத்தந்தி''யின் நிர்வாகத்தில் இருந்து விலகிக் கொண்ட பொழுது, தன் இளைய மகன் சிவந்தி ஆதித்தனைத் தனது வாரிசாக நியமித்தார். அதற்கு முன் அவருக்கு அய்யா அளித்த பயிற்சி, தங்கள் வருங்கால வாரிசை நியமிப்பவர்களுக்கு ஒரு பாட மாக மட்டுமல்ல, ஒரு வரலாறாகவும் ஆகிவிட்டது.

நிர்வாகப் பொறுப்பைச் சிவந்தி ஆதித்தனிடம் ஒப்படைக்கு முன் அவரைத் 'தினத்தந்தி'யில் அச்சுக் கோக்கும் தொழிலாளி யாகப் பணிபுரியச் செய்தார்; அச்சு எந்திரத்தில் பயிற்சி பெறச் செய்தார்; அச்சிட்ட படிகளைக் கட்டுக் கட்டித் தோளில் தூக்கிச் சென்று வண்டிகளில் ஏற்றி ரெயிலுக்கு அனுப்பும் வேலை; அதன் பின் விளம்பர-விற்பனைப் பிரிவுகளில் எழுத்தர், பின்பு செய்தியர், துணை ஆசிரியர், இறுதியில் நெல்லையில் 'மாலை முரசு' இதழைத் தானே தொடங்கி நடத்த வைத்தார். அதிலே வெற்றி கண்ட பின்புதான் ''தினத்தந்தி''யின் நிர்வாகத்தை அவர் கையிலே அய்யா ஒப்படைத்தார். அதனால்தான் ''ஆதித்தனார் ஒரு நல்ல' அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தது

மட்டுமல்லாமல், அந்த அமைப்பைத் தொடர்ந்து நடத்தத் தக்கப் பிள்ளையையும் பெற்றெடுத்தார் என்பது அவரது தனிப் சிறப்புக்கு எடுத்துக்காட்டு ஆகும்'' என்ற அறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற முடிந்தது.

**பாட்டாளியின் கூட்டாளி**

அக்காலத்தில் அச்சு எந்திரங்களை இயக்க எல்லா இதழ் அலுவலகங்களிலும் வெள்ளைக்காரப் பொறியாளர்களே இருப் பார்கள். அதனால், அய்யா தம் ஊர்ப்பக்கமுள்ள சிற்றூர்வாசி களை அழைத்து வந்து, எந்திரங்களை இயக்கப் பயிற்சி அளித்து, அவர்களைக் கொண்டே எந்திரங்களை ஓட்டினார்.

அதே போல அக்காலத்தில் ''உயர்ந்த சாதி'' என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள்தான் அச்சுக் கோப்பாளர்களாக இருந்தார் கள். ''தாழ்த்தப் பட்டவர்கள்'', ''தீண்டத்தகாதவர்கள்'' என்றெல்லாம் மற்றவர்கள் ஒதுக்கிய மக்களை அய்யா அழைத்து வந்து, அச்சுக் கோர்க்கப் பழக்கி, தமது அலுவலகத்திலேயே வைத்துக் கொண்டார். இதை எதிர்த்து உயர்சாதியைச் சேர்ந்த சில தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததும் உண்டு.

தொழிலாளர்களுடன் குடும்பப் பாசத்துடன் அய்யா பழகி னார். அவர்களும் இவரைப் ''பெரிய அய்யா'' என்று பேரன்புடன் அழைத்தார்கள். தமது பிறந்தநாளை இந்தத் தொழிலாளர்களுடன் கொண்டாடினார். அன்று இவர்களுக்குப் பிரியாணி விருந்து அளித்து, தாமும் அவர்களுடன் அமர்ந்து உண்டு அகமகிழ்ந்தார். வெளியூர்களுக்குச் செல்லும்பொழுது, இந்தத் தொழிலாளர்களின் பெற்றோரை அழைத்துவரச் செய்து, நலம் விசாரித்துப் பணமும் கொடுத்தார். தமது வாரிசும் இது போன்றே தொழிலாளர்களுடன் வேறுபாடின்றிக் கலந்து பழக வேண்டும் என்பதற்காகவுந்தான் அவருக்கும் இத்தொழிலாளர் இடையே பயிற்சி அளித்தார். இதன் காரணமாக ''எல்லாரும் ஒரு குடும்பம்'' என்ற குடும்பப் பாசம் இன்றும் 'தினத்தந்தி'யில் தொடர்கிறது.

''ஈயம், பித்தாளை, ஓட்டை உடைசல்களாக இருந்த எத்தனையோ பேர் ஆதித்தனாரின் கை வண்ணத்தால் பட்டை தீட்டிய வயிரங்களாகவும், முத்துக்களாகவும், மின்னும் பொன்னா கவும் மாறியது உண்டு. சாதாரண ஊழியர்களும் அலுவலர்களும் ஆதித்தனாரின் பயிற்சி காரணமாக எந்திர நிபுணர்களாகவும்,

திறமைமிக்க நிர்வாகிகளாகவும், இதழாளர்களாகவும் மாறி நாட்டுக்குப் பயன்பட்டு வருவதைக் காணலாம்'' என்கிறார், ''தினத்தந்தி'' மேலாளராக இருந்த பி. சேத்தரபாண்டியன்.

வீட்டு வேலைக்கு என்று வரும் பையன்களுக்குக்கூட அய்யா படிக்க வசதி செய்து கொடுத்து, படித்ததும், அந்தப் பையன் களைத் ''தினத்தந்தி''க்கு வேலைக்கு அனுப்பி வைத்தார்.

தொழிலாளர் நலத்தில் அக்கறை கொண்ட அய்யா தொழிற் சங்கத் தலைவராகவும் விளங்கினார். தமிழ்நாடு அரசாங்க மருத்துவமனைத் தொழிலாளர் சங்கத் தலைவராக 15 ஆண்டு காலம் பணியாற்றினார். 1952-53 இல் தமிழ்நாடு மேலவை உறுப்பினராக இருந்தபொழுது, பனைமரத் தொழிலாளருக்கு விதிக்கப்பட்ட வரியை எதிர்த்து, உறுப்பினர் பதவியைவிட்டு விலகினார். மாத்தூர் (செங்கற்பட்டு மாவட்டம்) உழவர் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். அப்பொழுது அவரைக் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றார்கள்.

வேறொரு நிகழ்ச்சியை நிச்சயம் சொல்லியாக வேண்டும். 1948இல் மிக உச்சமானப் பொருளாதார நெருக்கடியில் ''தினத் தந்தி'' இருந்தது. ஓர் ஊதிய நாளில் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கப் பணம் இல்லை. வழக்கமாகக் கடன் வாங்கும் நாராயணதாசன் என்ற சேட்டிடம் காசாளர் பால்வண்ணனை அனுப்பிவைத்தார். ''ஏற்கனவே ஏராளமாகக் கடன் இருக் கிறது'' என்று கூறி, சேட்டு பணம் தர மறுத்துவிட்டார். மாலை மணி நான்கு. ''எல்லாரையும் இருக்கச் சொல்லுங்கள். அவர் களுக்கு ஊதியம் கொடுத்துதான் வீட்டுக்கு அனுப்பவேண்டும்'' என்று கூறிவிட்டுத் தாமே சேட்டிடம் சென்றார். ஒரு வெள்ளை முத்திரைத் தாளில் கையெழுத்திட்டு, ''சேட்! உன்னிடம் அடகு வைக்க என்னிடம் எதுவும் இல்லை. இருந்ததையெல்லாம் ஏற்கனவே உன்னிடம் வைத்துவிட்டேன். எனக்கு இப்பொழுது பத்தாயிரம் ரூபாய் பணம் வேண்டும். ஊழியர்களுக்கு ஊதியம் கொடுத்து அவர்களை நான் வீட்டுக்கு அனுப்பிவைக்கவேண்டும். இந்த முத்திரைத்தாளில் என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொள், அதற்கு நான் கட்டுப்படுகிறேன்'' என்று, சேட்டிடம் கொடுத்தார். அவரின் நிலைக்குப் பரிதாபப்பட்டு, சேட்டு பணம் கொடுத்தார். அதைக் கொண்டுவந்து, ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கினார்.

அன்று ஊதியம் இல்லாமல் ஊழியர்கள் வீட்டுக்குப் போனால் என்ன நடக்கும்? ஊழியர்களின் நிலையை அந்த அளவுக்கு அய்யா உணர்ந்திருந்தார்!

திண்டுக்கல் தினத்தந்தி விற்பனையாளர் டி. சாரங்கபாணி ஒரு தகவல் தெரிவித்தார். அச்சு எந்திரத்தில் ஒருநாள் ஒரு சிறிய பல்சக்கரம் உடைந்துவிட்டது. தொழிலாளி ஒருவர் வாங்கிவந்து மாட்டினார். ஆனால், உடனே அது உடைந்துவிட்டது. அதைப் பார்த்துக்கொண்டே நின்ற அய்யா கோபப்படவில்லை, அதற்குப் பதில் அதே தொழிலாளியிடம் பணம் கொடுத்து, மீண்டும் பல் சக்கரம் வாங்கிவரச் சொன்னார். "அப்பொழுதுதானே அவனுக்குப் பயிற்சி ஏற்படும்" என்று கூறினார்.

இதைச் சொல்லும்பொழுது, இன்னொன்று நினைவுக்கு வருகிறது. ஒருநாள் விற்பனையாளர் ஒருவர் 'தந்தி' அலுவலகத்திற்கு வந்தார். அவரை நிற்கவைத்து, விற்பனைப்பிரிவு ஊழியர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். அதைப் பார்த்த அய்யா அந்த ஊழியரை அழைத்து, "அவர் யார் தெரியுமா? அவர்தான் உனக்கு முதலாளி. அவர் விற்று அனுப்பும் பணத்தில்தான் உனக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவரை மரியாதையாக நடத்து" என்று அறிவுரை கூறி அனுப்பினார்.

"தந்தி வாங்குவது ஒரு தமிழ்த் தொழிலாளிக்கு உதவி செய்வதாகும்" என்று "தந்தி"யில் அய்யா விளம்பரம் வெளியிட்டார். ("தந்தி" 10-1-1943)

### தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியிலும் ஆதித்தனாருக்குப் பங்கு உண்டு. வளரும் தொழில்களுக்குக் குறைந்த கட்டணத்தில் விளம்பரங்கள் வெளியிட்டு உதவினார். தொழில்களை - தொழில் அதிபர்களைப்பற்றிச் சிறப்புக் கட்டுரைகள் வெளியிட்டு ஊக்கப் படுத்தினார். இது தொழில் வளர்ச்சிக்கு மிகவும் பயன்பட்டது என்று அதிசய மனிதர் ஜி.டி. நாயுடு கூறியுள்ளார்.

கும்பகோணம் நகரசபைத் தலைவராகவும், தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு வணிகர்கழகத் தலைவராகவும் இருந்த ஏ.ஆர். இராமசாமி, "தொழில் வளர்ச்சிக்குத் துணைவனாகத் 'தினத்தந்தி' விளங்குகிறது. 'தினத்தந்தி'யில் விளம்பரம் செய்தால், நல்ல வியாபாரம் நடக்கிறது. 'தொழில்

வளம்' பகுதி வாயிலாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதுடன், தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமும் தரு கிறது'' என்கிறார் ('தினத்தந்தி' வெள்ளிவிழா மலர்).

''இது எங்களின் இரண்டாவது ஆண்டுதான். ஆனாலும் ரூ. 3,85,632க்கு எங்களுக்குத் தொழில் நடந்திருக்கிறது. இதற்குக் காரணம் 'தினத்தந்தி'தான்'' என்று, செம்பி விளம்பர நிறுவனத் தார் ''தினத்தந்தி'' வெள்ளிவிழா மலரில் விளம்பரம் செய்திருக் கிறார்கள்.

**திரைப்பட வளர்ச்சி**

தமிழ்நாட்டில் திரைப்படத் தொழிலின் வளர்ச்சியில் ''தினத் தந்தி''க்குப் பெரும் பங்கு உண்டு. ''தமிழன்'' காலத்தில் இருந்தே திரைப்படச் செய்திகளுக்கு முதன்மை அளிக்கப் பட்டது. நடிகர் - நடிகைகள் பற்றிய செய்திகள் ஏராளமாக வெளியிடப்பட்டன. நடிகைக்குக் குழந்தை பிறந்தால் மட்டு மல்ல, அந்த நடிகை வளர்க்கும் நாய்க்குக் ''குழந்தை'' பிறந்தால் கூடச் செய்தியாக வெளியிடப்பட்டது. இவையெல்லாம், படம் பார்க்கும் ஆர்வத்தை மக்களிடம் தூண்டின.

மற்ற செய்திகளைப் போலவே திரைப்படச் செய்திகளையும் 'தினத்தந்தி' முந்திக்கொடுக்கிறது. நடிகத் தம்பதிகளான ஜெமினி கணேசன் - சாவித்திரி ஆகியோர் தனுஷ்கோடி புயலில் சிக்கிக் கொண்டார்கள். ''தனுஷ்கோடிக்கும் தமிழ்நாட்டின் மற்ற பகுதிக்கும் இடையில் தந்தி, தொலைபேசித் தொடர்புகள் துண்டுபட்டுவிட்டன, அதனால் சென்னையில் உள்ள எங்கள் வீட்டாருக்கோ, மதுரையில் இருந்த நண்பர்களுக்கோகூட நாங்கள் என்ன ஆனோம் என்பது தெரியாது. நாங்கள் இராமேசுவரத்தில் பத்திரமாக இருக்கிறோம் என்ற செய்தியை முதன்முதல் 'தினத்தந்தி'தான் வெளியிட்டது. எங்கள் உற்றார் உறவினர்கூட 'தினத்தந்தி' வாயிலாகத்தான் எங்களைப்பற்றித் தெரிந்துகொண்டார்கள்'' என்கிறார், சாவித்திரி (''தினத்தந்தி'' வெள்ளிவிழா மலர்).

''என் அம்மா ஒரு நடிகை. அவரது படப்பிடிப்பு நிகழ்ச்சிகள் பற்றியோ, புதுப்பட ஒப்பந்தங்கள் பற்றியோ என்னிடம் கூறுவது இல்லை. எனக்கு அது பற்றிய செய்திகளை என் அம்மா வாய் திறக்கு முன்பே ''தினத்தந்தி'' சொல்லிவிடும் என்று கூறுகிற செல்வி (நடிகை) ஜெயலலிதா, இன்னொன்றையும் தெரிவிக்

கிறார். "நான் பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும் பொழுதே தமிழ்நாட்டில் தயாரான ஓர் ஆங்கிலப் படத்தில் நடித்தேன். நான் படித்துக்கொண்டு இருந்ததால் அந்தச் செய்தி வெளியில் தெரியவேண்டாம் என்று வைத்திருந்தோம். ஆனால், முடியுமா? 'தினத்தந்தி'யில் செய்தி கண்டு அசந்துபோனோம்" என்று தெரிவிக்கிறார். ("தினத்தந்தி" வெள்ளிவிழா மலர்)

"திரைக்கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் ஏற்படக் காரணம், "தினத்தந்தி'யாகும்" என்கிறார், நடிகர் சிவாஜி கணேசன். அந்த மதிப்பும் மரியாதையுந்தானே எம்.ஜி.ஆரைத் தமிழ்நாட்டின் முதல்வர் ஆக்கின?

"நாங்கள் நாடகக்குழு தொடங்கிய காலத்தில் "தந்தி" மிகக் குறைந்த கட்டணத்தில-சிலநேரம் இலவசமாகக்கூட, விளம்பரம் கொடுத்து உதவியது. நாடு அறிந்தவர்களாக நாங்கள் வளர்ந்து புகழ்பெறத் துணையாக இருந்தது, 'தந்தி'தான்" என்கிறார், அவ்வை தி.க. சண்முகம்.

### மக்கள் தொண்டன்

மக்களின் தொண்டனாக அய்யா 'தினத்தந்தி'யை வளர்த்தார். தேவைப்படும் நேரத்தில் மக்களுக்குக் கைகொடுத்து உதவ 'தினத்தந்தி' தவறியதே இல்லை. பஞ்ச காலத்தில் பட்டினிச் சாவுச் செய்திகளைப் படத்தோடு பரபரப்புடன் "தினத்தந்தி" வெளியிட்டது. அரசாங்கம் கஞ்சித் தொட்டி திறக்க இச்செய்தி உதவியது.

வேலை வாய்ப்பு விளம்பரங்களை ஆங்கில இதழ்களுக்கு ஈடாக இன்றும் வெளியிடும் ஒரே தமிழ் நாளிதழ் 'தினத்தந்தி' தான். வேலை தேடுவோருக்கு அந்த விளமபரங்கள் வாழ்வு அளிக்கின்றன. "காணாமல் போன குழந்தை 'தினத்தந்தி'யின் உதவியால்தான் கிடைத்தது" என்று எத்தனையோ பெற்றோர் நன்றி கூறுகிறார்கள். "தினத்தந்தி"யின் உதவியால் திருடன் பிடிபட்டான், இறந்து கிடந்தவர் அடையாளம் தெரிந்தது, என்று காவல் துறையினர் கூறுவது வாடிக்கையான ஒன்றாக ஆகி விட்டது.

இவையெல்லாம் 'தினத்தந்தி' ஆற்றும் மக்கள் தொண்டுக்கு எடுத்துக்காட்டுகள்,

## பொழுதுபோக்கு

செய்தித்தாளைப் பொழுதுபோக்குக் கருவியாக மாற்றிய வரும் ஆதித்தனாரே. தொலைக்காட்சியுடன் போட்டியிட செய்தித்தாள்களில் பொழுதுபோக்குப் பகுதிகள் வேண்டும் என்று இன்று உணரப்படுகிறது. ஆனால், இதற்கு அய்யா அன்றே வழி காட்டினார். படத்துடன் செய்திகளை வெளியிடும் முறையை வளர்த்தார். சிரிப்புப்படம், படக்கதை, தொடர்கதை என்று ஏராளமான புதிய பகுதிகளைத் ''தினத்தந்தி''யில் அறிமுகப் படுத்தினார்.

''ஜோக்'' என்பதைச் சிரிப்பு என்றும், ''சித்திரக்கதை'' என்பதைப் படக்கதை என்றும் மாற்றினார். நாள்தோறும் முதல் பக்கத்தில் கருத்துப்படம் வெளியிடும் ஒரே தமிழ் நாளிதழும் 'தினத்தந்தி'தான். வாரந்தோறும் ''கவர்ச்சிப்பட''மும் வெளி யிடுகிறார்கள்.

நானும், நண்பர் டி.ஆர். பீம்சிங்கும் ''தினத்தந்தி'' செய்தித் துறையில் பணியாற்றிய பொழுதுதான் படக்கதை அறிமுகமா யிற்று. கதையை நான் எழுதுவேன்; அதற்குப் படம்போட்டு வாங்குபவர், நண்பர் பீம்சிங். ''தினத்தந்தி''யில் வெளிவந்த ''பொன்வண்டு'' என்ற முதல் தொடர்கதையை எழுதியதும் நான் தான். ''தினத்தந்தி''யில் வெளிவந்து கொண்டிருக்கும் ''கன்னித் தீவு'' என்ற தொடர்கதை, கடந்த முப்பது ஆண்டு காலமாகத் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. இந்திய இதழ்களில் இது ஓர் ஈடற்ற சாதனை. உலக சாதனையா என்றுகூட பார்க்கத் தக்கது.

## தலையங்கம்

அய்யா இன்னொரு புதுமையும் செய்தார். அதுதான் தலையங்கத்தை நிறுத்தியது!

இன்றைக்கும் இது சிலருக்குக் கேள்விக்குறியாக இருக்கிறது. ஆனால், வேறு சில இதழ்களும் இன்று துணிந்து தலையங்கத்தைக் கைவிட்டுவிட்டன! தொடக்க காலத்தில் தந்தி, தினத்தந்தியில் தலையங்கம் வெளிவரத்தான் செய்தது. அய்யாகூட எழுதினார் தந்தை பெரியார் மணியம்மையாரை மணந்து கொண்ட நேரத்தில் தமிழ்நாட்டில் ஒரு புயல்தோன்ற, அத்திருமணத்தை ஆதரித்து அய்யா தலையங்கம் எழுதினார். பிறகுஏன் தலையங் கத்தை நிறுத்தினார்?

"தலையங்கம் என்பது ஓர் இதழின் கருத்துதான். ஓர் ஆசிரியர் தனது கருத்துக்களை வாசகர் மீது திணிக்கும் முயற்சியே தலையங்கம்'' என்று கருதியதால்தான் தலையங்கத்தை நிறுத்தி விட்டார்.

''தலையங்கம் இல்லாவிட்டாலும், செய்தியின் தலைப்பைக் கொண்டே மக்களுக்குக் கருத்தை வழங்கியவர், ஆதித்தனார். "செய்திகளை நான் தருகிறேன். நீ படி. படித்து, சிந்தித்து ஒரு முடிவுக்கு வா'' என்று கூறுகிற துணிச்சல் ஆதித்தனார் ஒருவருக்கே இருந்தது'' என்கிறார், முதல்வராக இருந்த எம். ஜி. ஆர்.

காந்தியார் கைது ஆனதைக் கண்டித்துத் தலையங்கம் எழுதுவதைவிட, ''காந்தியார் கைது'' என்று முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிடுவதுதானே சாதாரண மக்களிடங்கூடப் பெரிய அளவில் விடுதலை உணர்ச்சியைத் தூண்டிவிடும்?

### இதழ் உரிமை

அய்யா இதழ் உரிமைக்குக் குரல் கொடுத்தார். தணிக்கை போன்ற கட்டுப்பாடுகளைக் கண்டித்தார். மீறவும் செய்தார். ''தமிழன்'' முதல் இதழிலேயே இதழ் தணிக்கையை எதிர்த்து எழுதினார்.

அதிகாரிகளின் ஆணையை மீறிச் செய்தி வெளியிட்டதால், ''மதுரை முரசு'' தடைசெய்யப்பட்டது. சென்னையில் தணிக்கை விதிகளுக்கு மாறாகச் செய்தி வெளியிட்டதால், 'தந்தி'யை நிறுத்தவேண்டியதாயிற்று. கட்டுப்பாட்டுடன் இதழ் நடத்துவதைவிட நிறுத்திவிடலாம் என்று காந்தியடிகள் சொல்லுவார். அதையேதான் அய்யா செய்திருக்கிறார்.

### கல்லூரி கண்டார்

அய்யா திருச்செந்தூரில் கல்லூரி ஒன்று அமைத்தார். அக்கல்லூரி இவ்வாண்டு (1990) வெள்ளிவிழா கொண்டாடியது. 1965-இல் 76 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இக்கல்லூரியில், வெள்ளிவிழா ஆண்டில், 1108 மாணவர்கள் கல்வி பெற்றார்கள்.

''இந்த 25 ஆண்டு காலத்தில் எத்தனையோ ஆயிரம் ஏழை மாணவர்களின் வாழ்க்கையை இக்கல்லூரி ஒளிபெறச் செய்திருக்கிறது. இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., ஐ. ஆர். எஸ். போன்ற பெரிய அதிகாரிகளாகவும்

புகழ் பெற்ற டாக்டர்களாகவும், பேராசிரியர்களாகவும் விளங்கு கிறார்கள். இந்தியாவில் மட்டுமல்ல, அமெரிக்கா போன்ற மேல்நாடுகளுக்கும் சென்று விஞ்ஞானிகளாகவும் ஆராய்ச்சியாளர் களாகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ''கல்லூரி என்பது ஒரு நகைப்பெட்டி போன்றது. அதைத் திறந்தால், வைரம், வைடூரியம், முத்து, பவளம் என்று நவமணிகளும் ஒளிவிட வேண்டும்' என்பது அய்யா வாக்கு. அந்த இலக்கணத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்தக் கல்லூரி விளங்குகிறது'' என்கிறார், கல்லூரி ஆட்சிமன்றத் தலைவர் பா. சிவந்தி ஆதித்தன் (கல்லூரி வெள்ளிவிழா வரவேற்புரை).

இப்படி ஒரு கல்லூரி கண்டது அய்யா தவிர, வேறு எந்தத் தமிழ் இதழாளரும் செய்யாத ஒரு புதுமையாகும். இக்கல்லூரி யில் இதழியலும் ஒரு பாடமாக இருக்கிறது. இவையெல்லாம் ஆதித்தனாரின் தனிச்சிறப்புகள். இவற்றுக்காகப் போற்றிப் புகழப் பட்டார். ''அவர் ஆதித்தனார் அல்ல; சாதித்தனார்'' என்றது, ''கல்கண்டு'' இதழ் (18-6-1981). அதே நேரம் கண்டனத்துக்கும் ஆளானார் ஏன்?

# தினத்தந்தித் தமிழ்

அய்யா அவர்கள் போற்றப்பட்ட அதே நேரத்தில் சில பேரின் கண்டனத்துக்கும் ஆளானார்கள். அந்தச் சில பேர் வெளிப்படையாகவே பேசினார்கள், ஏசினார்கள். தினத்தந்தியைக் குறிப்பிட்டே இத்தனை ஏச்சும் பேச்சும்.

''தினத்தந்தியைப்போல் எதிர்ப்புக்கும் கேலிக்கும் வலுத்த கண்டனத்துக்கும் உள்ளான செய்தித்தாள் சரித்திரத்தில் இருந்திருக்க முடியுமா? அத்தனைக்கும் ஈடுகொடுத்து மலை போல் உறுதியாக நின்றது ஆதித்தனாரின் புரட்சி நம்பர் இரண்டு, என்கிறது, ''குமுதம்'' (4-6-1981) இதழ்.

எத்தனையோ பேர் ஏற்றிப் போற்ற சிலபேர் மட்டும் அவர் மீது கண்டனக்கணை தொடுத்தது ஏன்? அதற்கு இரண்டு காரணம். முதல் காரணம் - ''தினத்தந்தி''யின் மொழி-நடை. அந்த மொழியைத் ''தினத்தந்தித் தமிழ்'' என்றே எதிர்ப்பாளர்கள் ஏளனமாகச் சொன்னார்கள்.

தினத்தந்தித் தமிழ் பற்றி அவர்கள் கூறிய குற்றச்சாட்டு இரண்டு. ஒன்று - கொச்சையாக இருக்கிறது. இரண்டு - இலக்கண வரம்புடன் இல்லை. இந்த இரு குற்றச்சாட்டுகளையும் அய்யா துணிச்சலாகச் சந்தித்தார். அவற்றுக்கு ஆணித்தரமாகப் பதிலும் அளித்தார்.

**நல்ல தமிழ்**

இது தொடர்பான நிகழ்ச்சி ஒன்றைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் என்னிடம் சொன்னார்.

பேராசிரியர் சுப்பிரமணியம் எம்.ஏ., படித்து முடித்ததும், ''தினத்தந்தி''யில் வேலையில் சேர விரும்பினார். மதுரையில் அய்யாவை நேரில் சந்தித்து, ''எனக்குத் 'தினத்தந்தி'யில் வேலை கொடுங்கள்'' என்று கேட்டார். ''தமிழ் எம்.ஏ, படித் திருக்கும் நீங்கள் ஏன் தினத்தந்திக்கு வருகிறீர்கள்?'' என்று அய்யா வினவினார்.

''உங்கள் 'தினத்தந்தி' நல்ல தமிழில் இல்லை. குறிப்பாக இலக்கணம் பின்பற்றப்படவில்லை. நான் நல்ல தமிழில் எழுத விரும்புகிறேன்'' என்று பேராசிரியர் சொன்னார். அதற்கு அய்யா அளித்த பதில்: ''நீங்கள் ஒளிவு மறைவு இல்லாமல் உண்மையாகப் பேசியதால், நானும் வெளிப்படையாகச் சொல்லு கிறேன். நான் பாமரர்களுக்காக இதழ் நடத்துகிறேன். அவர் களுக்கு எழுதக்கூடிய அரைகுறைப் படிப்பாளிகள் இருந்தால் போதும். உங்களைப் போன்ற எம்.ஏ., பட்டதாரிகள் எனக்கு வேண்டியது இல்லை''.

மெத்தப் படித்தவரா என்று பார்த்து அவர் யாரையும் வேலைக்கு எடுத்ததில்லை. எழுதுவதில் ஆர்வம் இருக்கிறதா, எழுத்துப் பிழையில்லாமல் தமிழ் எழுதக் கூடியவரா என்பதை மட்டுமே கவனிப்பார். அய்யா சொல்வதுபோல, நான் ஏழோ எட்டோ படித்தவன். ''சி. சுப்பிரமணியத்தின் காதைப் பிடித்துக் காமராசர் திருகவேண்டும்! ஈ. வெ. கி. சம்பத் பேச்சு!'' என்ற தலைப்புடன் நான் எழுதிக்கொடுத்த செய்தியைப் பார்த்து தான், என்னை வேலைக்கு எடுத்தார்.

இன்றைக்குத் 'தினத்தந்தி'யின் நிர்வாக ஆசிரியராக இருக்கும் (எனக்கு பிள்ளையார் சுழி போட்டவர் இவரே) ஐ. சண்முக நாதனை அய்யா வேலைக்குத் தேர்ந்து எடுத்தபொழுது ''பத்திரிகைத் துறையில் உங்களுக்கு நல்ல ஆர்வம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள்தான் எனக்கு வேண்டும். உங்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறேன்'' என்று சொன்னதாகச் சண்முகநாதன் கூறியுள்ளார். (''ஆதித்தனாருக்கு அஞ்சலி'')

''ஒருவருக்குத் திறமை குறைவாக இருந்தாலும் பரவா யில்லை; நாம் திறமையை உண்டாக்கிக் கொள்ளலாம். ஆனால், பத்திரிகைத் தொழில் ஆர்வமும், விசுவாசமும் அவரவர்க்கு இருக்க வேண்டும். அதை நாம் உண்டாக்கமுடியாது'' என்று அய்யா அடிக்கடிக் கூறுவதையும் சண்முகநாதன் குறிப்பிடுகிறார்.

ஒரு முறை எம்.ஏ., பட்டதாரி ஒருவர் வேலை கேட்டு வந்தார். அவரை ''மரம்'' என்று எழுதச் சொன்னார். அவர் ''மறம்'' என்று எழுதினார். ''போய் வாருங்கள்'' என்று அய்யா அனுப்பிவிட்டார்.

வேலைக்கு ஆள் எடுப்பதில் ஆதித்தனார் இன்னொரு கொள்கையும் வைத்திருந்தார். புதிதாக வருகிறவர்களையே சேர்த்துக்கொண்டார். ஏற்கனவே ஓர் இடத்தில் வேலை செய்தவர்களைத் 'தினத்தந்தி'யில் சேர்த்துக்கொள்வது இல்லை. வெறுங்களிமண் என்றால், அதில் நமக்கு வேண்டிய வடிவத்தை எளிதில் செய்துகொள்ளமுடியும். ஏற்கனவே பயிற்சி பெற்றவர் என்றால், அவரை நமக்குத் தகுந்தபடி திருத்துவது கடினம்-கை திருந்தாது-என்று அவர் கருதினார்.

**மறந்துவிட்டார்கள்**

துணைவேந்தர் சுப்பிரமணியம் கூறியது போன்ற இன்னொரு நிகழ்ச்சியைத் திருக்குறளார் தெரிவிக்கிறார். ''ஆதித்தனார் உங்கள் தலைவர்தானே! அவரது தினத்தந்தியில் கொச்சைத் தமிழில் எழுதுகிறார்கள். நல்ல தமிழில் எழுதச் சொல்லுங்கள்' என்று அவரிடம் ஒரு பேராசிரியர் சொல்லி அனுப்பினாராம்'' ('நாம்-தமிழர்' இயக்கத்துணைத்தலைவர் திருக்குறளார்)

அவர் வந்து அய்யாவிடம் சொல்ல, ''தினத்தந்தியை நான் பேராசிரியர்களுக்காக நடத்தவில்லை. அரைகுறைப் படிப்பாளிகளுக்காக நடத்துகிறேன். இதை அந்தப் பேராசிரியரிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்று பதில் அளித்தார்.

ஆதித்தனார் மீது குற்றஞ்சாட்டியவர்கள் இதைத்தான் மறந்துவிட்டார்கள். 'தினத்தந்தி' தொடங்கப்பட்டது, பாமர மக்களுக்காக. ஆகவே, அது பாமரத் தமிழில் நடத்தப்பட்டது. குழந்தைக்குப் பால் தானே கொடுக்க வேண்டும? பிரியாணி கொடுக்கலாமா? கொடுத்தால், வாந்தி பண்ணிவிடாதா?

இதைப் புரிந்து கொண்ட பேராசிரியர் முனைவர் சாலை இளந்திரையன் சொல்லுகிறார் : ''தொடக்க வகுப்பு மாணவருக்குக் கதையோ கட்டுரையோ எழுதுவது என்றால், அவர்களுக்குத் தெரிந்த 100 அல்லது 150 சொற்களை மட்டுமே வைத்துக் கொண்டுதான் எழுதியாக வேண்டும். அதே போல், அன்றாட வாழ்வின் அடிப்படைச் சொற்களான 100-150 சொற்களை மட்டுமே பயன்படுத்திச் செய்தித்தாள் நடத்தியவர் ஆதித்தனார்.''
— (''ஆதித்தனாருக்கு அஞ்சலி'')

கவிஞர் கோ. ஞா. மாணிக்கவாசன் பாடுகிறார்.

"எழுத்தறியாத் தமிழர்கள்கூட இங்கே
எழுத்தெண்ணிப் படிப்பதற்கு ஏடு கண்டார்"
("ராணி" வெள்ளிவிழா மலர்)

"இந்த நாட்டிலே கோடான கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்கள் தாய்மொழியில் எழுதப் படிக்கத் தெரியும். அவர்கள் படிக்கக்கூடிய நிலையில் ஒரு நாளிதழைக் கொடுத்தால் படிப்பார்கள் என்று ஆதித்தனார் நினைத்தார் என்று கூறும் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. வேறு ஒரு செய்தியை யும் தெரிவிக்கிறார். "நல்ல மொழி வளர்ச்சியை விரும்புகிற அறிஞர்கள் தினத்தந்தித் தமிழ் இன்னும் கொஞ்சம் வளமாக இருக்கலாமே என்று எண்ணுவது உண்டு. சாமானிய மக்களிட மும் தமிழ் உயர வேண்டுமானால், முதலில் அந்த மக்கள் இருக்கிற இடத்திற்குத் தமிழ் போக வேண்டும், அப்பொழுதுதான் அவர் களிடத்தில் தமிழை உயர்த்த முடியும் என்று பெரும்புலவர் பரிதிமாற்கலைஞர் சொல்லியிருக்கிறார். மக்கள் எங்கு இருக் கிறார்களோ அங்குநாம் போயாக வேண்டும். அவர்களை மேலே கொண்டு வருவதற்கு அதுதான் ஒரே வழி. வேறு வழி கிடை யாது. கிராமப்புரத்து உழவன்கூட நல்ல முறையில் புரிந்து கொள்ளும் மொழியிலே செய்திகளை அமைத்து, கவர்ச்சியான தலைப்புகளுடன் 'தினத்தந்தி' கொடுத்து வருகிறது.

('தினத்தந்தி' வெள்ளிவிழாச் சொற்பொழிவு)

**சதக் சதக்!, டமார் டமார்!**

"சதக் சதக் என்று குத்தினான்!"

"டமார் என்று மோதியது!

"கொல் என்று சிரித்தார்கள்"

இவை 'தினத்தந்தி'யின் தலைப்புகள். இவையும் சிலருக்குப் பிடிக்கவில்லை, ஆனால், பாமர மக்களைக் கவர்ந்து இழுத்துப் படிக்கத் தூண்டியவை இந்தத் தலைப்புகளே. "கவர்ச்சியான தலைப்புகளுடன்" என்று சிலம்புச்செல்வர் கூறியதைப் பார்த் தோமே.

செய்திகளில்-தலைப்புகளில் துடிப்பு வேண்டும் என்று அய்யா சொல்வார். "செய்தியில் துடிப்பு வேண்டும்" என்று விதியே ஏற்படுத்தினார், "அழுதான்" என்பதைக் "கோ" என்று அழுதாள்

என்று எழுத வேண்டும் என்று எடுத்துக்காட்டும் கொடுத்திருக் கிறார்களோ (''இதழாளர் கையேடு''). ''கத்தியால் குத்தினான்'' என்று எழுதுவதைவிட ''சதக் சதக் என்று குத்தினான்'' என்று எழுதும் பொழுது ஒரு துடிப்பு வெடிக்கிறது அல்லவா?

**முதல்விதி**

இதழாளர்கள் எப்படி எழுத வேண்டும் என்ற விதிகளைத் தொகுத்து ''இதழாளர் கையேடு'' என்று ஆதித்தனார் வெளி யிட்டுள்ளார். அந்நூலில் முதல் விதியாக அவர் வகுத்துத் தந்துள்ளவை—

பேச்சு வழக்கில் இருக்கும் தமிழே உயிருள்ள தமிழ். அதைக் கொச்சை நீக்கி எழுத வேண்டும். இலக்கியத் தமிழில் எழுதுவது பெருமையாகக் கருதப்படுகிறது. அவ்வாறு நாளிதழில் எழுதினால், அது பலருக்குப் புரியாது. பேச்சுத் தமிழையே எழுத வேண்டும். இதுவே தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு ஒரு நாளிதழ் செய்ய வேண்டிய தொண்டு. கடின நடையில் எழுதக்கூடாது. எடுத்துக்காட்டாக, ''நான்மாடக்கூடலை நண்ணினோம்'' என்றோ, ''கரத்தில் பெற்றார்'' என்றோ எழுதக்கூடாது. பேச்சு வழக்கில் இருப்பதுபோல, ''மதுரைக்குப் போனேன்'' ''கை யில் வாங்கினார்'' என்று எழுத வேண்டும்.

**இலக்கணம்**

இலக்கண விதிகள் மீறப்படுகின்றன என்பது ஒரு குற்றச் சாட்டு. ஆனால், இலக்கணப் பிழை இல்லாமல் எழுத வேண்டும் என்று அவர் விதி செய்திருக்கிறார். ஆனாலும், எழுத்துக் கூட்டி வாசிப்பவர்களுக்கு எளிதாக இருக்க சில இலக்கண விதிகள் பின்பற்றப்படுவதில்லை.

ர, ல ஆகிய எழுத்துக்கள் மொழிக்கு முதலில் தனித்து வரக் கூடாது என்பது இலக்கண விதி. இன்றுகூட சிலர் என்னிடம் ''ஏன் 'இராணி' என்று பெயர் சூட்டவில்லை'' என்று கேட்பார் கள். அவர்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நான் பதிலாகக் கூறுவது உண்டு.

'தினத்தந்தி'யில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த ஒரு துணை ஆசிரியர் ''இலட்டு விலை ஏற்றம்'' என்று இலக்கணத்துடன் எழுதி யிருந்தார். அதைப் படித்த அய்யா, காவலாளி ஆத்தியை அழைத்து வரச் சொன்னார். (அய்யா அவர்களுக்கு ஆத்திதான் தினத்தந்தி வாசகர்களுக்கு அளவு கோல்) ''இந்த செய்தியைப்

படி.'' என்று ஆத்தியிடம் 'தினத்தந்தி'யைக் கொடுத்தார்கள். ஆத்தி எழுத்துக்கூட்டிக் கூட்டி, ''ஈ...ல...ட்...டு...ஈலட்டு'' என்று படித்தார். ''அது என்னப்பா ஈலட்டு?'' என்று கேட்டார். ''ஈமொய்த்த லட்டு போலிருக்கிறது, அய்யா'' என்று ஆத்தி சொன்னார். இந்த ஆத்திகளுக்காகத்தான் சில நேரம் அவர் இலக்கணத்தைப் பின்பற்றுவதில்லை.

''புற்றரை'' என்று எழுதுவதுதான் இலக்கணம். ஆனால், இன்று எல்லாரும் ''புல்தரை'' என்றுதானே எழுதுகிறோம்? இது தானே படிக்க நாவுக்கு இலகுவாக இருக்கிறது? சங்கப் பாடல் களைக் கூட இப்படிப் பிரித்து அச்சிடும் முறைதானே இன்று பின் பற்றப்படுகிறது?

**ஒற்று எழுத்துக்கள்**

''ஒற்று எழுத்துக்களைவிட்டு விடுகிறார்கள்'' என்பது ஒரு குறை. ''நெஞ்சை பிளக்கும்'' என்று பிரித்து எழுதாமல் ''நெஞ்சைப் பிளக்கும்'' என்று (''ப்'' போட்டு) எழுத வேண்டும் என்பது அய்யாவின் விதி.

அந்த விதியிலேயே ''மனத்தில் பதிந்தது என்று எழுதக் கூடாது; 'மனதில் பதிந்தது' என்று எழுதவேண்டும்'' என்றும் சொல்லுகிறார். ஏன்? ''இது படிக்க எளிதாக இருக்கும்'' என்று அதிலேயே பதிலும் இருக்கிறது. ''படிக்க எளிதாக இருக்க வேண்டும். நாவுக்கு இலகுவாக இருக்க வேண்டும்'' என்பதுதான் அவர் முதல் அக்கறை. இலக்கணம் அப்புறந்தான்.

''கூடியவரை பிறமொழிச் சொற்களைத் தவிர்க்க வேண்டும்'' என்றும் அய்யா விதி செய்தார். இதற்கு அவரின் தமிழ்ப்பற்று மட்டுங் காரணமல்ல; தமிழே தெரியாத அரைகுறைப் படிப்பாளி களுக்குப் பிறமொழிச் சொல் புரியாது என்பதும் ஒரு காரணம். ''புஷ்பம்'' என்பதற்குப் பதில் ''பூ'' என்று எழுதினால் எல்லாருக்கும் புரியும் அல்லவா?

'தினத்தந்தியில் ஒரே ஆச்சரியக் குறிகள்' என்பது ஒரு குற்றச் சாட்டு. இவர்கள் திரு.வி.க.வின் ''தேசபக்த''னைப் பார்த் திருக்க மாட்டார்கள் போலிருக்கிறது. திரு.வி.க. பயன்படுத்திய அளவுக்கா 'தினத்தந்தி' ஆச்சரியக் குறிகளைப் பயன்படுத்து கிறது? ஒரு நாள் திரு.வி.க. எழுதிக் கொண்டே இருக்க, உடனுக் குடன் அச்சுக் கோக்கும் வேலை நடந்து கொண்டே இருக்க,

அச்சுப் பெட்டியில் ஆச்சரியக் குறிகள் தீர்ந்து போக, புதிய ஆச்சரியக் குறிகள் வாங்கி வர அப்பொழுதே ஆள் அனுப்பப் பட்டார் என்பதும் ஆச்சரியமான செய்தியாகும்!

குறைந்த படிப்பாளிகள் படிக்க வசதியாகத்தான் 4 ஆயிரம், 8 லெட்சம், 10 ஆயிரத்து 120 என்று எழுதும் முறையை அய்யா அறிமுகப்படுத்தினார். சிறிய எண்களையும் எழுத்தால் எழுதாமல், 9, 17 என்று எண்ணால் எழுதச் சொன்னார்.

**வரலாற்று ஆசிரியர் சொல்லுவது**

இப்படியெல்லாம் எளிய தமிழில்-மக்கள் பேசுகிற தமிழில் எழுதியதால்தான், தினத்தந்தி மக்கள் இதழாக வளர முடிந்தது. பாமர மக்களையும் எட்ட முடிந்தது, எழுத்துக் கூட்டிப் படிப்பவர்கள்கூட தினத்தந்தியை விரும்பிப் படித்தார்கள். முதியோர் கல்விக் கூடமாகத் தினத்தந்தி விளங்க முடிந்தது. அரைகுறைப் படிப்பாளிகள், அந்நிய மொழியினர்கூடத் தினத் தந்தி படித்துத் தமிழ் கற்றுக் கொள்ள இந்த எளிய தமிழும், எளிய நடையுந்தான் உதவியாக இருந்தன.

''இந்தியாவில் இதழியல்'' என்ற ஆங்கில நூலை எழுதியுள்ள ''இந்து'' ஆங்கில இதழின் முன்னாள் நிர்வாக ஆசிரியர் ரெ. பார்த்தசாரதி. அந்நூலில் ''தினத்தந்தி''யைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது இதே கருத்தைத் தெரிவிக்கிறார். அவர் எழுதியிருப்பது: ''பாரிஸ்டரும் தீவிர காங்கிரசுக்காரருமான சி. பா. ஆதித்தனார், அடிமட்ட-அரைகுறைப் படிப்பாளியான மக்களுக்காக 1942இல் மதுரையில் ''தினத்தந்தி'' என்ற நாளிதழைத் தொடங்கினார். இது ஒரு பரபரப்பு இதழ். அதன் நான்கு பக்கங்களும் கொலை, கொள்ளை, திரைப்படச் செய்திகள் நிறைந்து வழிந்தன. எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய கிராமிய மொழியில்-நடையில் அச்செய்திகள் இருந்தன. வாசகர்கள் விரும்பியதை ஆதித்தனார் கொடுத்தார். வாசகர் களும் ஆவலுடன் படித்தார்கள். தினத்தந்தியின் விற்பனை ஓகோ என்று பெருகியது. ஏழை எளிய மக்கள், ரிக்ஷாக்காரர்கள். தொழிலாளிகள் ஆகியவர்களிடம் நுழையும்படியாக அவர் 'தினத்தந்தி'யை நடத்தினார். நாளிதழ் படிக்கும் பழக்கத்தை அவர்களிடம் உண்டாக்கினார். இது தமிழ் இதழியலுக்கு ஆதித்தனார் செய்த மகத்தான தொண்டு ஆகும்''.

**காலையிலே மலரும் பூ**

"தினத்தந்தி" வெள்ளி விழாவில் கூடத் தினத்தந்தித் தமிழ் பற்றிப் பேசப்பட்டது. அய்யா அதற்கு அழகாகப் பதில் அளித்தார். "இங்கே பேசியவர்கள். "தினத்தந்தித் தமிழ்" என்று ஒன்று இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாளிதழ் என்பது இலக்கிய ஏடு அல்ல; திருக்குறள் அல்ல. அந்த அளவுக்கு நாங்கள் திருக்குறள் தொடங்கவில்லை. நாளிதழ் என்பது எப்படிப்பட்டது என்றால், காலையில் பூத்து மாலையிலே வாடிப் போகும் மலரைப் போன்றது. நாளிதழை அவசர அவசரமாகப் படிக்க வேண்டியிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர்கள் முத்துசாமியும், நெடுஞ்செழியனும் சொன்னார்கள். அவர்கள் வீட்டிலிருந்து கோட்டைக்குப் போகும் வழியில் காரில் படித்து முடித்துவிடும் அளவுக்குத் 'தினத்தந்தி' இருக்கிறது என்று கூறினார்கள். அதிலே இலக்கியம் புகுந்தால் என்ன ஆகும் ஒன்று நினைத்துப் பாருங்கள். "மதுரைக்குப் போனேன்" என்று எழுத முடியுமே தவிர, "நான் மாடக்கூடலை நண்ணினேன்" என்று எழுதினால் என்ன ஆகும்?

"தினத்தந்தித் தமிழ்" என்பது பேசுகிற தமிழ்-பேச்சுத்தமிழ்-உயிர்த்தமிழ். பேச்சுத் தமிழ் இப்பொழுது அவ்வளவு சிறப்பாகக் கருதப்படவில்லை என்றாலும், ஆங்கில இலக்கியத்தைப் படிக்கும்பொழுது, ஒரு காலத்தில் ஆங்கிலம் அப்படித்தான் இருந்தது. 16வது நூற்றாண்டில் எழுத்து வழக்கை மட்டுமே ஆங்கிலம் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது பேச்சு வழக்கே ஆங்கிலத்துக்கு வளத்தையும், வளர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. அதேபோல பேச்சுத்தமிழ் உயிர்த்தமிழ்தான் என்று பல நூற்றாண்டுக்குப் பிறகுதான் கூறுவார்கள். அப்பொழுது "தினத்தந்தி" எழுதுவது நல்ல தமிழ் என்று சொல்லுவார்கள். இதை எண்ணியே நான் ஒருவாறு மனநிறைவு கொள்ளவிரும்புகிறேன்."

**இரண்டு எழுதுகோல்**

இங்கே இன்னொரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டால் ஆதித்தனாரின் மொழிக் கொள்கை மேலும் தெளிவுபடும் என்று எண்ணுகிறேன். தினத்தந்தியின் செய்தித்துறைப் பொறுப்பாளனாக என்னை நியமித்ததும், அய்யா எனக்கு இரண்டு எழுதுகோல்கள் வாங்கிக்கொடுத்தார். ஒன்று கருப்பு நிறம், மற்றொன்று சிவப்பு நிறம். இந்த எழுதுகோல்கள் இன்றும் என்னிடம் இருக்கின்றன.

இரண்டு எழுது கோல்கள் எதற்கு என்றால், "செய்தியை எழுத கறுப்புப் பேனாவைப் பயன்படுத்துங்கள். அதைக் கையில் எடுத்ததுமே, 'செய்தி எழுதப் போகிறோம்' என்ற நினைவு உங்களுக்கு ஏற்படவேண்டும். தலையங்கம் எழுத சிவப்புப் பேனாவைப் பயன்படுத்துங்கள் அதைக் கையில் எடுத்ததும் 'இப்பொழுது தலையங்கம் எழுதப் போகிறோம்' என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படவேண்டும்" என்று சொன்னார்கள்.

அப்பொழுது நான்தான் நாள்தோறும் தலையங்கம் எழுதுவேன். செய்தி என்பது எல்லா வாசகர்களும் படிப்பது. தலையங்கம் என்பது அப்படி அல்ல; நன்கு படித்தவர்கள் மட்டுமே படிக்கக்கூடியது. அந்த வாசகர்களுக்குத் தகுந்தபடி தலையங்கம் உயர்ந்த நடையில் சிறந்த மொழியில் இருக்க வேண்டும் என்று அய்யா விரும்பினார். அதற்காகவே எனக்கு இரண்டு எழுதுகோல்களை வாங்கிக் கொடுத்தார். நாம் எழுதியதைப் படிக்கப் போகும் வாசகர் யாரோ அவருக்குத் தகுந்தபடி தான் நமது மொழியும் நடையும் இருக்க வேண்டும் என்பதுதான் அவரின் இதழ் மொழிக்கொள்கை என்பது, அண்ணாமலை தீபம் போல இதிலிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிகிறது அல்லவா?

**அண்ணா மகிழ்ந்தார்**

தினத்தந்தி வெள்ளிவிழாவில் பேசிய அண்ணா "இப்பொழுது பேச்சுத்தமிழ் எந்த அளவு வளர்ந்து கொண்டு வருகிறதோ அந்த அளவுக்குத் தினத்தந்தியின் தமிழும் வளர்ந்து கொண்டுவருகிறது" என்று அகமகிழ்ந்தார். அதனை "நாங்கள் ஒரு தினத்தந்தி நாளிதழ் நடத்துகிறோமே தவிர, திருவள்ளுவர்போல், திருக்குறள் நடத்தவில்லை" என்று மிக அடக்க உணர்ச்சியோடு ஆதித்தனார் சொன்னார். மற்ற தமிழ் இலக்கியத்தோடு ஒப்பிடும்பொழுது, திருக்குறள் எவ்வளவோ இனிமையாக, எவ்வளவோ எளிமையாக இருக்கும். அதைப்போலவே 'தினத்தந்தி'யை அமைத்திருக்கிறார்கள்.

தினத்தந்தி பேச்சுத்தமிழில் நடத்தப்படுகிறது என்பதையும் ஆதித்தனார் எடுத்துச் சொன்னார். அந்தப் பேச்சுத்தமிழ் காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டே இருக்கக்கூடியது. தினத்தந்தியிலேகூட இருபது ஆண்டுக்கு முன் இருந்த தலைப்புகளுக்கும் இன்று இருக்கின்ற தலைப்புகளுக்கும், பத்து ஆண்டுக்கு முன்னர் இருந்த சொற்களுக்கும் இன்று இருக்கின்ற சொற்களுக்கும் எவ்வளவோ மாறுபாடுகள்.

இப்பொழுது பேச்சுத்தமிழ் எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டு வருகிறதோ அந்த அளவுக்குத் தினத்தந்தியும் வளர்ந்து கொண்டு வருகிறது. தமிழோடு ஒட்டி, தமிழ் மக்களோடு ஒட்டி இந்த இதழ் வளர்ந்துகொண்டு வருவதாலே, தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தனிப்பெருந்துணையாக இருந்து வழிகாட்டியாக நின்று விளங்கிக்கொண்டு வருகிறது என்பதில் நாம் எல்லாரும் மிகுந்த மகிழ்ச்சி அடையலாம், பெருமித உணர்ச்சிகொள்ளலாம்'' என்பதால் பெறலாம்.

**ஆராய்ச்சியாளர் முடிவுகள்**

தினத்தந்தியின் மொழி-நடை பற்றியும் அ. சாந்தா தனது ஆய்வு ஏட்டிலே குறிப்பிட்டுள்ளார். அதனை இங்கே எடுத்துக் காட்டுவது ஏற்புடையதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

''முதியோர் கல்வித் திட்டங்களில் புதுப்படிப்பாளிகளின் படிக்கும் திறமையை வளர்க்கக்கூடிய மிகத் திறமையான கருவி செய்தித்தாளேயாகும்'' என்று இலாயிட் சோமர்லாடு 'வளரும் நாடுகளில்இதழ்கள்' என்ற தமது நூலில்குறிப்பிடுகின்றார். அதில் புதுப்படிப்பாளிகளுக்கான இதழ்களின் உள்ளடக்கம், மொழி நடை, வெளியிடும் முறை ஆகியவை அமைய வேண்டிய முறை களையும் விளக்குகிறார். அவற்றில் பெரும்பாலானவை தினத் தந்தியின் உத்திகளோடு ஒத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

புதுப்படிப்பாளிகளுக்கான உத்திகளை இதழின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொண்ட முதல் இதழ், உலகிலேயே தினத்தந்தி தான் என்று கூறலாம். சுருங்கக்கூறின், இதழ்கள் வாயிலாகப் புதுப்படிப்பாளிகள் முன்னேறுதல் உலகமெங்கும் காணப்படினும், புதுப்படிப்பாளிகளின் வாயிலாக ஓர் இதழ் முன்னேறியது என்றால், அது தினத்தந்தி மட்டுமே என்று கூறலாம்.

தினத்தந்தியின் மொழிநடை வாசகர்கள் படிப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் எளிமையாக அமைகிறது. சொற்களின் நீளம் குறைக்கப்படுகிறது. உச்சரிப்பதற்கு எளிமையான சொற் கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

தினத்தந்தியை முன் மாதிரியாகக் கொண்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், பிறவளரும் நாடுகளிலும் அதிகக் கல்விப் பயிற்சி இல்லாத வாசகர்களுக்குப் புரியக்கூடிய இதழ்களைத் தொடங்கலாம்.

முதியோர் கல்வித் திட்டங்களில் தொடக்க நிலையான எழுத்துக்களைக் கற்பித்தல், முடிவடைந்த பின்பு, தொடர்

நிலைப் படிபொருளாகத் தினத்தந்தியைப் பயன்படுத்திக்கொள்ள லாம். இந்த வகையில் இந்தியாவின் எந்த மாநிலத்திற்கும் கிடைக்காத ஒரு நல்ல வாய்ப்பு தமிழகத்திற்குக்கிடைத்திருப்ப தாகக் கூறலாம். முதியோர் கல்வித் திட்டத்துக்கான படிபொருள் களைத் தயாரிக்கும்பொழுது தினத்தந்தியின் மொழிநடையினை முன் மாதிரியாகக் கொள்ளலாம்.''

அய்யா 'தந்தி' தொடங்கியபொழுது தமிழ்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தோர் பத்து விழுக்காடுதான். அவர்களுக்கு ஏற்ப அன்றைய ''தந்தித்தமிழ்'' இருந்தது. ''தனது வாசகர்கள் அதிகக் கல்விப் பயிற்சி பெறாத, பக்குவம் அடையாத, செய்தித்தாள் படிக்கும் உந்துதல் இல்லாத சாதாரண மக்களே என்று தீர்மான மான முடிவு செய்துகொண்டு, அந்த அடிப்படையில் உள்ளடக் கத்தையும் மொழிநடையையும் தினத்தந்தி மேற்கொள்ளுகிறது'' என்று அ. சாந்தா கூறுவது பழங்கதை.

இன்று தமிழ்நாட்டில் படித்தோர் தொகை ஐம்பது விழுக் காடு. ''இந்து'' ஆங்கில இதழ் படிப்பவர்களும் கூடவே ''தினத் தந்தி''யும் வாங்குகிறார்கள். அந்த அளவுக்குத் ''தினத்தந்தி'' யின் வாசகர் தரம் உயர்ந்திருக்கிறது. அதற்கு ஏற்ப இன்றைய தினத்தந்தித் தமிழும்-மொழி, நடை, செய்திகள்-உயர்ந்துள்ளதை இப்பொழுது 'தினத்தந்தி'யில் பார்க்க முடிகிறது அல்லவா? பழைய ''சதக் சதக்'', ''இரவு ராணி''களை இப்பொழுது பார்க்க முடியவில்லையே!

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல என்பது அவருக்குத் தெரிந்ததுதான். அதனால்தான் ''புதிதாகப் பழக்கத்தில் வந்துள்ள சொற்களையும் பயன்படுத்தலாம்'' என்று விதி செய்தார். காலத்துக்கு ஏற்பத் தன்னை உயர்த்திக்கொள்வ தால்தான், விரைவில் பொன்விழாக் கொண்டாட இருக்கும் ''தினத்தந்தி'' அவர் ஆசைப்பட்டதுபோல, இன்றைக்கும் குன்றாத இளமையுடன் குறையாத வளமையுடன் 'கும்'மென்று இருக்கிறது.

வாசகர்கள் ஒரு தடாகம். அந்தத் தடாகத்திலே மலர்ந் துள்ள தாமரைப் பூ தான் தினத்தந்தி. தடாகத்தில் தரம் என்ற தண்ணீர் உயர உயரத் தாமரைப்பூவும் உயர்ந்துகொண்டே போகும் என்ற நம்பிக்கையை இன்றைய தினத்தந்தி நமக்குத் தருகிறது.

அய்யா மீது-தினத்தந்தி மீது-கூறப்பட்ட முதல் குற்றச் சாட்டுக்கு நாம் விளக்கமாக விரிவான பதில் அளித்துவிட்டோம். அடுத்த குற்றச்சாட்டு என்ன? அதற்கு நமது பதில் என்ன?

## செய்...தீ!

'எது செய்தி?' என்பதற்கு எத்தனையோ இலக்கணங்கள் இருக்கின்றன. ஆனால், அய்யா புதிய இலக்கணம் கண்டார். வாசகர்கள் எதை விரும்பிப் படிக்கிறார்களோ அதுதான் செய்தி என்பது அவரின் கொள்கை.

அந்தச் செய்தியை வாசகர்களுக்கு வழங்குவதிலும் மற்ற இதழ்களில் இருந்து அவர் மாறுபட்டு நின்றார். 'நான் கொடுப்பதுதான் செய்தி, விருப்பம் இருந்தால்படி; இல்லாவிட்டால் மூடிவை' என்று மாமியார் தனத்துடன் மற்றவர்கள் செய்தி வழங்கினார்கள். அய்யா குழந்தையின் பசியறிந்து, ருசி தெரிந்து ஊட்டி விடும் தாய்போல, வாசகர்கள் விரும்பும் செய்திகளையே அவர்களுக்கு அளித்தார்.

''தனக்கென ஒரு பாதை வகுத்துக் கொண்டு, அதில் முழு வெற்றியடைந்த பெருமை 'தினத்தந்தி'க்கு உண்டு'' (வெள்ளி விழா வாழ்த்துச் செய்தி) என்று அறிஞர் அண்ணா போன்றவர்கள் பாராட்ட, வேறு சிலர் இந்தப் புதிய பாதையைக் குறை கூறினார்கள். ஆம், தினத்தந்தித் தமிழ் பற்றிக் குற்றம் குறை கூறியது போலவே, தினத்தந்தி தந்த செய்திகளையும், அந்தச் செய்திகளைத் தந்த முறையையும் சிலர் இழித்துப் பழித்தார்கள். அவற்றைச் ''செய்...தீ'' என்று சொன்னார்கள். இதுவே அய்யா மீது கூறப்பட்ட இரண்டாவது குற்றச்சாட்டு.

### குற்றச் செய்திகள்

தந்தி, தினத்தந்தியின் தொடக்க காலத்தில் கொலை, கொள்ளை, காதல் கற்பழிப்புச் செய்திகளுக்கு அதிக இடம் அளிக்கப்பட்டது. இந்தச் செய்திகளே ஆதித்தனார் மீது தாக்குதலுக்குக் காரணமாக அமைந்தன.

"இதுதானா செய்தி? சர்ச்சில் பேசியிருக்கிறார்; ட்ருமன் ஸ்டாலினுடன் பேசப் போகிறார். காந்தி ஜின்னாவுடன் பேச்சு நடத்த இருக்கிறார். இவையெல்லாம் செய்தி இல்லையா?" என்று உரத்த குரலில் கேட்டார்கள். இவையெல்லாம் செய்தி யல்ல என்று அவர் சொல்லவில்லை. இந்தச் செய்திகளையும் வெளியிடவே செய்தார். ஆனால், அடக்கி வாசித்தார்கள். ஏன்?

"வெறும் பேச்சு செய்தி அல்ல" என்று அவர் சொல்லுவார். 'செய்தி' என்பதே 'செய்' என்ற வினைச் சொல்லின் அடியாகப் பிறந்ததுதானே? எனவே, செயல்களுக்குத்தான் முதலிடம் கொடுத்தார். "செய்தியில் உயிர் இருக்கவேண்டும். மனித உணர்வுகளைத் தொடும்படியாகச் செய்திகள் இருக்க வேண்டும்" என்றும் சொல்லுவார். கொலை, கொள்ளைச் செய்திகள் தான் இந்த இலக்கணப்படி அமைந்திருக்கும்.

"கொலைகள் எல்லாமே செய்திகள்தான்" என்பது உலகம் முழுக்க இதழாளர் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கையாகும். காந்தியல்ல, ஒரு கருப்பன் கொல்லப்பட்டாலும் அது செய்தி தான். இந்தச் செய்தியை எல்லா வாசகர்களுமே படிப்பார்கள்.

காந்தி-ஜின்னா சந்தித்துப் பாகிஸ்தான் பிரிவினைப் பற்றிப் பேசினார்கள் என்றால், அந்தப் பேச்சு விவரத்தை எத்தனை பேர் படித்துப் புரிந்து கொள்ளுவார்கள்? "துரோகம் செய்த மனைவியை வெட்டிக் கொன்றான்" என்ற செய்தியை யார் வேண்டுமானாலும் படித்துப் புரிந்து கொள்ள முடியுமே? கொலை கொள்ளைச் செய்திகள் கதை போன்றவை. சாமானிய வாசகர்களும் விரும்பிப் படிப்பார்கள். படித்துப் புரிந்து கொள்ள வும் செய்வார்கள்.

கணவன்-மனைவி சண்டை, கள்ளக்காதலில் கொலை போன்ற செய்திகள் உயிருள்ளவை. அவற்றின் பாத்திரங்கள் நம்மைப் போன்ற உயிருள்ள மனிதர்கள். உயிரோட்டமுள்ள இந்தச் செய்திகளைத்தான் சாதாரண மக்கள் விரும்புவார்கள். ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டை-விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பவை பழமொழிகள் அல்லவா?

கண்ணகி கதையையும், சீதையை இராவணன் தூக்கிச் சென்ற கதையையுந்தானே தெருக்கூத்தாக நடிக்கிறார்கள்? மக்கள் விடிய விடியப் பார்த்து மகிழுகிறார்கள்? நிலவுக்குச்

சென்ற ஆம்ஸ்டிராங் கதையை யார் தெருக்கூத்தாக நடத்துகிறார்கள்? நடத்தினால், எத்தனை பேர் பார்ப்பார்கள்?

ஒரு சரக்கு ரெயில் கவிழ்ந்து நூறு பெட்டிகள் நொறுங்கினாலும் அது அவருக்குச் செய்தி அல்ல. ஆனால், ஒரு பயணி ரெயில் கவிழ்ந்து, ஒரே ஓர் ஆள் காயம் அடைந்தாலும், செய்தியாகி விடும். ஏனென்றால், இந்தச் செய்தியிலே உயிர் இருக்கிறது. வாடிய பயிரைக் கண்டாலும் வாடினாரே வள்ளலார், அந்தப் பயிரிலே உயிர் இருப்பதால்தானே!

**லெட்சுமிகாந்தன் கொலை வழக்கு**

குற்றச் செய்திகளுக்கு முதலிடம் கொடுக்கத் தொடங்கியதற்குப் புகழ்பெற்ற 'லெட்சுமிகாந்தன் கொலை வழக்கு'ம் ஒரு காரணம் என்று கூறலாம். அந்தக் கொலை வழக்கு "தினத்தந்தி"யின் விற்பனையை ஒன்றுக்கு நாலாகத் தூக்கோ தூக்கு என்று தூக்கிவிட்டது.

தமிழில் முதல் "பச்சை இதழ்" தொடங்கியவர், லெட்சுமி காந்தன். அவர் 1943இல் "சினிமா தூதன்" என்ற இதழைத் தொடங்கினார். அது தடைசெய்யப்பட்டதும், 1944இல் "இந்து நேசன்" என்ற இதழை வாங்கி நடத்தினார். இந்த இரண்டு இதழ்களிலும் நடிகர்-நடிகைகள், தயாரிப்பாளர்களைப் பற்றிப் பச்சையாக, கொச்சையாக எழுதினார். அவர்களின் "வண்டவாளங்களைத் தண்டவாளத்தில் ஏற்றுவேன்' என்று மிரட்டி அவர்களிடம் பணம் பறித்தார். அவர் 1944 நவம்பர் 8ஆம் நாள் பட்டப்பகலில் நட்ட நடு வீதியில் வெட்டிக் கொல்லப்பட்டார். அதுவே பரபரப்பான செய்தி ஆயிற்று. அந்தக் கொலை தொடர்பாக, அன்று புகழ்பெற்ற நடிகர்களாகத் திகழ்ந்த எம். கே. தியாகராச பாகவதர், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இருவரும் கைது செய்யப்பட்டதும், எரிகிற தீயில் பெட்ரோல் ஊற்றியது போல ஆகிவிட்டது. இந்தப் பரபரப்பான கொலை வழக்கு "தினத்தந்தி"யின் வளர்ச்சிக்கு எப்படி உதவியது என்பதைப் பால்வண்ணன் தெரிவிக்கிறார்:

"அப்பொழுது லெட்சுமிகாந்தன் பெரிய பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அவரது 'இந்துநேசன்' சுடச்சுட விற்பனை ஆயிற்று. அதன் விலை இரண்டு அணா (13 காசு) தான். ஆனால், அதைப்படித்துவிட்டு, ஒரு ரூபாய்க்கு விற்பார்கள்-அவ்வளவு கிராக்கி! லெட்சுமிகாந்தன் அடிக்கடி

'தந்தி' அலுவலகத்துக்கு வருவார். தன்னைப் பற்றி ஏதாவது செய்தி போடச் சொல்லுவார். அந்த செய்தியை வாசகர்கள் விரும்பிப் படித்தார்கள். ஆனால், சில பட அதிபர்கள் விளம்பரம் கொடுக்க மறுத்தார்கள்.

1944இல் லெட்சுமிகாந்தன் கொலை செய்யப்பட்டார். அந்தச் செய்தியை முதலில் வெளியிட்டது மதுரை 'தந்தி'தான். அந்தக் கொலையைத் தொடர்ந்து எம்.கே. தியாகராச பாகவதர், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் கைது செய்யப் பட்டது, அவர்கள் மீது வழக்கு நடந்தது, பிறகு மேல் முறை யீட்டில் அவர்கள் விடுதலையானது முதலிய எல்லாச் செய்திகளும் 'தந்தி'யில் விரிவாக வெளியிடப்பட்டன. 3 ஆயிரத்தில் இருந்த விற்பனை மளமள என்று பெருகி, 12 ஆயிரத்துக்கு வந்துவிட்டது! 'தந்தி வாங்கிச் செல்ல வாசகர்களும், விற்பனையாளர்களும் அலுவலகத்துக்கே வந்து விடுவார்கள். கதவைப் பூட்டிக் கொண்டு, சன்னல் வழியாக இதழைக் கொடுப்போம்.''

### போக்கு மாறியது

ஆதித்தனாரும் தொடக்க காலத்தில், மற்ற இதழ்களைப் போன்றுதான் செய்திகளைக் கொடுத்தார். அவற்றுக்குத் தலைப்பும் தந்தார். 1-12-1942ஆம் நாளைய 'தந்தி' முதல் பக்கச் செய்தியைப் பாருங்கள்-

**பெங்காளியை நேசப் படைகள் கைப்பற்றின**
**அகிடாபியாவில் எதிரிகளுடன் போர்**

*தலைப்பில் ஆச்சரியக் குறியையே காணோம்!*

அன்று போர் நடந்து கொண்டிருந்ததால், இந்தச் செய்தி களை வாசகர்கள் விரும்பிப் படித்திருக்கலாம். பிறகு உலகப் போர் முடிந்துவிட்டது. காந்தியடிகளின் அறப்போரும் இந்திய விடுதலையுடன் முடிந்தது. அதன் பின்பும் வாசகர்களைக் கவர விறுவிறுப்பான பரபரப்பான செய்திகள் வேண்டுமே! அத்துடன், இத்தனை ஆண்டுக்குள் வாசகர் எப்படிப்பட்ட செய்திகளை விரும்பிப் படிக்கிறார்கள் என்பதையும் அவர் அனுபவத்தில் அறிந்திருப்பார். அதற்கு ஏற்பத் தினத்தந்தி செய்திகளின் போக்கிலும் நோக்கிலும் மாறுதல் செய்திருப்பார். மாறுதலுக்கு வாசகர்களிடம் வரவேற்புக்கிடைக்கவே, தொடர்ந்து பின்பற்றத் தொடங்கிவிட்டார்.

குற்றச் செய்தியிலும் ஒரு நீதி இருக்கவேண்டும் என்று சொல்லுவார். தவறு செய்தவன் தண்டிக்கப்படவேண்டும். "மாணவியைக் கற்பழித்தவர் விடுதலை" என்று செய்தி வந்தால், அதை வெளியிடக்கூடாது என்பார். மக்களே இதை விரும்புவதில்லை. அதுபோல, செய்திகளிலும் ஒரு பயன் வேண்டும் என்று கூறுவார். "பேருந்துப் படிக்கட்டில் நின்று பயணம் செய்யக் கூடாது. செய்தால், உயிருக்கு ஆபத்தாக முடியும் என்பதை விளக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது" என்று எழுதச் சொல்லுவார்.

### தமிழ்நாட்டுச் செய்திகள்

மற்ற இதழ்கள் எல்லாம் சர்ச்சில்-ஸ்டாலின்-ரூஸ்வெல்டு பேச்சுக்களைச் செய்தியாக வெளியிட்டுக் கொண்டிருந்தபொழுது, தந்தை பெரியார், தலைவர் காமராசர், அறிஞர் அண்ணா காயிதேமில்லத், பி. இராமமூர்த்தி போன்ற தமிழ்நாட்டுத் தலைவர்களின் பேச்சுக்களுக்கு அய்யா முதலிடம் கொடுத்தார்.

சர்ச்சிலும் ஸ்டாலினும் தலைவர்கள் இல்லையா என்று கேட்பீர்கள். அவர்கள் உலகத் தலைவர்கள். ஆனால், பெரியாரும், அய்யாவும் தமிழ்நாட்டுத் தலைவர்கள். தமிழ்நாட்டுக் குப்பனுக்கும் சுப்பனுக்கும் இவர்கள்தான் முக்கியம். அமெரிக்காவிலே ஒரு ரெயில் கவிழ்ந்தால், அது தமிழ்நாட்டுக்குச் செய்தி அல்ல. ஆனால், கூடுவாஞ்சேரியில் ஒரு ரெயில் கவிழ்ந்தால், அது தமிழ் இதழ்களுக்குச் செய்தியாகிவிடுகிறது. எல்லா நிகழ்ச்சிகளுமே அப்படித்தான். இது ஆதித்தனாரின் செய்தி இலக்கணம்.

'தினத்தந்தி'யில் இரண்டாம் பக்கத்தில் "வெளிநாட்டுச் செய்திகள்" என்று வெளியிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் 'தினமணி'யில் இரண்டாம் பக்கத்தில் "தமிழ் நாட்டுச் செய்திகள்" என்று வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். அதே தினமணியில் இன்றைக்கு முதல் பக்கம் முழுக்கத் தமிழ்நாட்டுச் செய்திகள் வெளிவருகின்றன. இது எதைக் காட்டுகிறது? அய்யா சென்ற வழிதான் சரியானது என்பதைத்தானே?

### வாசகர் விருப்பம்

செய்திகளைத் தேர்ந்தெடுக்க வாசகர் விருப்பத்தையே அய்யா அளவு கோலாகக் கொண்டார். 'வாசகர் விரும்புவதே செய்தி என்று சொன்னார். இது குறித்து நாவலர் நெடுஞ்

செழியன் ஒரு தகவலைத் தெரிவிக்கிறார். ''சாதாரணமாகத் தங்களுக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்வதற்காக இதழ் நடத்துவார்கள். சிலர் என்ன நடந்ததோ அதை எடுத்துச் சொல்வதற்கு இதழ் நடத்துவார்கள். சிலர் மக்கள் எதை எதிர் பார்க்கிறார்களோ, எதை விரும்புகிறார்களோ அதைக் கொடுப்பதற்காக இதழ் நடத்துவார்கள். நான் மூன்றாவது சொன்ன இதழ் நடத்தத்தான் முன்வந்திருக்கிறேன்'' என்று ஆதித்தனார் என்னிடம் சொன்னார்.

'எனக்குப் பாகற்காய் கூட்டு, வெண்டைக்காய் சாம்பார் தான் பிடிக்கும் என்றால், வாசகர்களுக்கும் அதுதான் பிடிக்கும். அதைத்தான் விரும்புவார்கள் என்று நினைப்பது தவறு. வாசகர் களுக்கு வெங்காய சாம்பார்தான் பிடிக்கும் என்றால், அதைச் செய்து கொடுப்பதுதான் நல்லது. அவர்களுக்குப் பிடிக்காத பாகற்காய் கூட்டை நான் செய்து கொடுத்தால், சமையலும் வீண், சாப்பிடுகிறவர்களுக்கும் நிறைவு இருக்காது. ஆகவே மக்களின் விருப்பத்தை அறிந்து இதழ் நடத்துகிறேன்' என்று ஆதித்தனார் விளக்கினார். அந்த வகையிலே அவர் வெற்றியும் கண்டுவந்தார்''

('தினத்தந்தி' வெள்ளிவிழாச் சொற்பொழிவு)

இதழ்கள் என்பவை வாசகர்களுக்கு விருந்தாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார். ஏனென்றால், வாசகர்கள் இதழ்களைக் காசு கொடுத்து வாங்குகிறார்கள். ஒரு சிற்றுண்டி விடுதியில் காப்பி வாய்க்குச் சுவையாக இருந்தால்தானே அந்தக் கடையைத் தேடிப்போவோம்?

அப்படியானால், வாசகர்களுக்கு யார் மருந்து கொடுப்பது என்று கேட்பீர்கள். மருந்தாகச் சில இதழ்கள் இருக்கத்தான் செய்கின்றன. மருந்து தேவையானவர்கள் வாங்கிக்கொள்ளவும் செய்கிறார்கள். அதற்காக ஊரிலே மருந்துக்கடைதான் இருக்க வேண்டும், விருந்துக்கடை இருக்கக்கூடாது என்று நாம் சொல்ல முடியுமா?

அமெரிக்க ஆசிரியரான டுவானேபிராட்லி ''மக்களரசில் இதழ்களின் பணி'' என்ற தனது நூலில் சொல்லும் ஒரு கருத்தை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ''இதழ்கள் வாசகர்களை மகிழ்விக்க வேண்டும். இல்லாவிட்டால், வாசகர்கள் இல்லாமல் போய்விடுவார்கள்'' என்கிறார், அவர். வாசகர்கள் இல்லாமல்

போனால் என்ன ஆகும்? "கடை விரித்தோம், கொள்வார் இல்லை" என்று கடையை மூடவேண்டியிருக்கும் அல்லவா?

**கைகொடுக்க வேண்டுமா?**

இதழ்களுக்குச் சமுதாயப் பொறுப்பு இல்லையா? மக்களைக் கைகொடுத்துத் தூக்கிவிட வேண்டாமா? மக்களுக்கு வழிகாட்ட வேண்டாமா? என்றெல்லாம் நீங்கள் கேட்பீர்கள்.

"மக்களுக்குத் தலைமை தாங்கி, அவர்களை நடத்திச்செல்ல வேண்டியது அரசியல் வாதிகளின் வேலை. மக்களுடன் கைகோத்து நடந்து செல்ல வேண்டியதுதான் இதழ்கள் செய்ய வேண்டியது" என்கிறார், எஸ். டி. ஆதித்தன்.

'போகிற மாட்டைப் போக்கிலே விட்டுத்திருப்ப வேண்டும்' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம் அல்லவா? இல்லாவிட்டால், வண்டியே குடைசாய்ந்துவிடும்.

கைகொடுத்து மக்களைத் தூக்கிவிடத்தான் வேண்டும். அதே நேரம்-ஒருவர் புதைகுழியில் விழுந்து கிடக்கிறார் என்றால், நாம் தரையில் நன்றாகக் காலை ஊன்றிக்கொண்டுதான் அவருக்குக் கை கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர் நம்மையும் சேர்த்துப் புதை குழிக்குள் இழுத்துப் போட்டுவிடுவார். "மக்களுக்குத் தொண்டு செய்கிறேன்!" என்று புறப்பட்ட எத்தனையோ இதழ்கள் அப்படிப் புதைகுழியில் விழுந்து, தாங்களும் புதைந்து போவதைப் பார்க்கிறோம் அல்லவா?

எதிர் நீச்சல் போட, தினத்தந்தி சம்பந்தர் ஏடு அல்ல; சாதாரண இதழ்.

**அறிவு வளர்ச்சி**

'மக்களுக்குக் கை கொடுக்கத்தான் பயம். அவர்களுக்கு அறிவு வளர்ச்சியையாவது தினத்தந்தி ஊட்டலாம் அல்லவா? என்று ஆதித்தனாரிடம் கேட்டபோது அவரும் தனக்கே உரிய முறையில் பதில் அளித்தார். "நாங்கள் பள்ளிக்கூடம் நடத்த வில்லை, பத்திரிகை நடத்துகிறோம்" என்று.

பல்கலைக் கழகங்களில் படித்துத்தான் யாரும் அறிவாளி ஆகிறார்களே தவிர, 'இதழ்கள் படித்து நான் அறிவாளியானேன்' என்று இதுவரை எவரும் சொன்னதில்லை. இதழ்கள் ஊர்

நடப்பை எடுத்துச் சொல்லும். அதைப் படிப்பவர்களிடம் தானாகவே பொது அறிவு வளரும். தினத்தந்தி படித்தவர்கள் அரசியல் அறிவு பெற்று ஒரு மக்களாட்சிப் புரட்சியையே நடத்திக் காட்டவில்லையா?

ஒரு நாளிதழ் அவ்வளவுதான் செய்ய முடியும். அதை விட்டு விட்டு, 'அரிஸ்டாடில் என்ன சொல்லியிருக்கிறார்...' என்று அரசியல் பாடமா நடத்த முடியும்? அல்லது, கணினிப் பொறி இப்படித்தான் இயங்குகிறது என்று விலாவாரியாக விளக்க முடியுமா? அதுவும் அரைகுறைப் படிப்பாளிகளிடம். நம் குழந்தை அறிவாளியாக வளர வேண்டும் என்று நமக்கு ஆசை இருக்கலாம். அதற்காகக் குழந்தையைக் கொண்டு போய்ப் பத்தாம் வகுப்பிலே உட்காரவைக்க முடியுமா? முதல் வகுப்பில் தானே சேர்க்க இயலும். முதல் வகுப்புக் குழந்தையிடம் பத்தாம் வகுப்புப் பாடநூலைக் கொடுத்தால், என்ன செய்யும்? படித்துக் கிழிக்குமா? இல்லை, சும்மாதான் கிழிக்கும்! வெள்ளத்தனையத் தானே மலர்நீட்டம்?

அப்படியே வாசகர்களுக்கு அறிவு கொளுத்துவது என்றாலும், எந்தப் பகுதியைக் கொண்டு கொடுப்பது? வாசகர்கள் எந்த எந்தப் பகுதிகளை விரும்பிப் படிக்கிறார்கள் என்று 1984இல் "எக்ஸ்பிரசு" இதழ் ஒரு கணக்கு எடுத்தது. அதில் கிடைத்த விவரம்.

| | |
|---|---|
| கருத்துப்படம் | — 100 விழுக்காடு |
| விளையாட்டு | — 92 |
| திரைப்படம் | — 88 |
| சோதிடம் | — 59 |
| கட்டுரைகள் | — 36 |
| தலையங்கம் | — 17 |
| மதிப்புரை | — 11 |

ஆங்கில இதழான "எக்ஸ்பிரசு" படிக்கும் வாசகர்களே இப்படி என்றால், 'தினத்தந்தி' வாசகர்களைப் பற்றி என்ன சொல்லுவது? அய்யா ஏன் தலையங்கம், மதிப்புரை போன்ற அறிவூட்டும் பகுதிகளைக் கைவிட்டார் என்பது இப்பொழுது புரிகிறது அல்லவா?

### பொழுதுபோக்கு

'இதிலே என்ன இருக்கிறது? சிரிப்பு, சிந்துபாத், தொடர் கதை, திரைப்படம்! இதுதான் செய்தி இதழா?" என்று

சொன்னவர்களும் இருக்கிறார்கள். காலையில் எழுந்ததும் காப்பி குடிப்பதுபோல 'தினத்தந்தி'யைப் படிக்க வேண்டும் என்பது ஆதித்தனாரின் விருப்பம். கனமாக இருந்தால் அது முடியுமா? 'இந்து' இதழைப் பெரும்பாலானோர் ஓய்வு நேரத்தில் தானே படிக்கிறார்கள்? அதனால்தான் பொழுது போக்குக்கு அதிக இடம் கொடுத்தார்.

நாளிதழ் என்பது காப்பி குடிப்பது போல இருக்கவேண்டுமே தவிர, கஷாயம் குடிப்பதுபோல இருக்கக்கூடாது. இருந்தால், சாதாரண மக்கள் படிக்கமாட்டார்கள். சாதாரண மக்களுக்கு நாளிதழ் படிப்பது என்பது திரைப்படம் பார்ப்பதுபோலப் பொழுதுபோக்காக இருக்க வேண்டும். இதுதான் அய்யா கொள்கை.

''வீட்டில் ஒரு வானொலிப்பெட்டி இருந்தால், எப்படி உலகச் செய்திகளிலிருந்து கலை, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வரை கேட்டு இன்புற முடிகிறதோ, அப்படிப்பட்ட அனுபவத்தை 'தினத்தந்தி' நாளேட்டைப் படிக்கும் இலட்சக் கணக்கான மக்கள் பெறுகிறார்கள்'' என்கிறார், அறிஞர் அண்ணா. ('தினத்தந்தி' வெள்ளிவிழா வாழ்த்துச் செய்தி) தினத்தந்தி வாசகர்கள் மட்டுமல்ல; அமெரிக்கர்கள் கூட நாளிதழ்களில் செய்திகளைவிடப் பொழுது போக்குப் பகுதிகளையே அதிகம் விரும்புகிறார்கள். (''இஸ்பான்'' இதழ் சூலை, 1984). சப்பானியரும் அப்படியே.

ஸ்பெயின் நாட்டில் எட்டு விழுக்காடு மக்கள்தான் செய்தித் தாள் படிக்கிறார்கள். இது ஏன் என்று மக்களிடமே கேட்டார்கள். அதற்குப் பெரும்பாலான மக்கள் சொன்ன பதில்- ''சுத்த அறுவை'', உலகம் முழுக்கவே வாசகர்கள் நாளிதழ்களில் பொழுது போக்குப் பகுதிகளை அதிகம் விரும்புகிறார்கள் என்பதைத்தானே இது காட்டுகிறது? ஸ்பெயினில் இந்த உண்மையைக் கண்டுபிடித்தது, 1983ஆம் ஆண்டில். அதற்கு நாற்பது ஆண்டுக்கு முன்பே அய்யா இதை உணர்ந்து, தமது தினத்தந்தியில் செயல்படுத்தியும் காட்டினார்.

**பரபரப்பாக**

''அது சரி அய்யா, அதற்காகச் செய்திகளைப் பரபரப்பாக வெளியிட வேண்டுமா?'' என்று கேட்பீர்கள். ஏனென்றால், செய்திகளைப் பரபரப்பாக வெளியிடுவதே குற்றமாகக் கூறப்பட்டது. செய்தித்தாள்களைப் பார்த்தே இராதவர்களைக்

கூடக் காசு கொடுத்து செய்தித்தாள் வாங்கிப் படிக்கத் தூண்டியது, இந்தப் பரபரப்பான செய்திகள்தான். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்கூட, பிறரைப் படிக்கச் சொல்லிக் கேட்டார்கள். (எட்டய புரத்தில் இருந்தபொழுது பாரதியார் கூட இப்படிப் படித்தது உண்டு. இதனால், அவர் 'செய்தி வாசிப்பாளர்' என்று அழைக்கப்பட்டார்). ஒரு தினத்தந்தியைப் பத்துப்பேர் படித்தார்களே, எதுக்காக? இந்தப் பரபரப்பான செய்திகளுக்காகத்தானே!

''பொதுவாக நமக்குப் புதிதாகத் தந்தி வருகிறது என்றால், முதலில் பரபரப்பு அடைவோம். நாள்தோறும் தந்தி வரத் தொடங்கினால், தந்திக்கே கூடப் பரபரப்பு அடங்கிவிடும். ஆனால், ஒவ்வொரு நாளும் 'தினத்தந்தி'யைப் பார்க்கும் நேரத்தில் எல்லாம் அதைப் பரபரப்போடு படிக்கத் தொடங்கு கிறோம். பரபரப்பான செய்திகளால் தமிழ்நாட்டில் இதழுலகில் ஒரு புதிய முறுக்கை உண்டாக்கிய பெருமை தினத்தந்தி ஒன்றுக் குத்தான் உண்டு'' என்கிறார், முதல்வர் கருணாநிதி. (''தினத் தந்தி'' வெள்ளிவிழாச் சொற்பொழிவு)

**ஆபாசம்**

''செய்தியிலே ஆபாசம்!'' இது மற்றொரு குற்றச்சாட்டு, செய்தியிலோ, படத்திலோ கொஞ்சங்கூட ஆபாசம் கூடாது என்று அய்யா கண்டிப்பாக ஆணையிட்டிருந்தார். ஆனால், கவர்ச்சி இருக்க வேண்டும் என்றார்.

கவர்ச்சிக்கும், ஆபாசத்துக்கும் வேறுபாடு அறியாதவர்கள் தான் கவர்ச்சியை 'ஆபாசம்' என்பார்கள். பாலுணர்வைக் காட்டுவது கவர்ச்சி, பாலுறவைக் காட்டுவது ஆபாசம். ஒரு பெண் கட்டிலில் படுத்திருப்பதுபோலக் காட்டினால், அது கவர்ச்சி. அந்தப் பெண்ணுடன் ஓர் ஆணும் படுத்திருப்பதுபோல் காட்டினால், அது ஆபாசம். பாமரமக்களுக்குக் கவர்ச்சி தேவை. இது காலங்காலமாக இருந்துவரும் வழக்கந்தான். ''ஆதித்த னாரின் செய்தி மரபு ஒரு வகையில் நாட்டுப்புற இயல் மரபுதான். அதில் ஊடாடிய ஆபாச நெடியும் பாமர மக்களைக் கவர்ந்தது உண்டுதான்'' என்கிறார், சாலை. இளந்திரையன். (''ஆதித்த னாருக்கு அஞ்சலி'')

இவரது மற்றொரு கருத்தும் இங்கே குறிப்பிடத்தக்கது. ''ஒரே கருத்தைப் பலமுறை அடுக்கி அடுக்கிச் சொல்லுவது நாடோடிப் பாடல்களில் கையாளப்படும் ஓர் உத்தி. ஆதித்த

னாரின் நாளிதழ்களில் இந்த உத்தி, பரவலாகப் பின்பற்றப்படுகிறது. ஒரே செய்தி முதலில் நாலு வார்த்தைகளில் தரப்படுகிறது. தொடர்ந்து இரண்டு வாக்கியங்களில் அது சொல்லப்படுகிறது. அடுத்து வரும் ஒரு பெரிய பத்தியும் அதே செய்தியைத்தான் விவரித்துத்தருகிறது. படிப்பாளிகளின் பார்வையில் இது 'கூறியது கூறல்' என்னும் குற்றமாகப்பட்டாலும், ஓரளவு எழுதப் படிக்க (அல்லது மற்றவர்கள் படிப்பதைக் கேட்க) மட்டுமே தெரிந்த பாமரர்களுக்கு இதுவே இனிய முறையாக உள்ளது என்பதை ஆதித்தனார் உணர்ந்தது போல வேறு எந்த இதழாளரும் உணரவில்லை'', (ஷி)

### பொய்ச் செய்தி

'தினத்தந்தியில் வருவதெல்லாம் பொய்ச் செய்தி' என்ற பழியும் கூறப்பட்டது. இதற்கு இரண்டு காரணம். ஒன்று, 'தினத்தந்தி'யில் வெளிவரும் செய்திகள் மற்ற நாளிதழ்களில் வருவதில்லை. இரண்டு, தினத்தந்தியில் பரபரப்பாகக் கொடுக்கப்படும் செய்திகளைப் படிப்பவர்கள், 'இப்படியும் நடக்குமா?' என்று வியப்படைந்தார்கள்.

அய்யா செய்தி தவறாக இருந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார். என்னிடம் செய்தித் துறையை ஒப்படைத்தபொழுது, அவர் கூறிய அறிவுரைகளில் ஒன்று-''ஒரு செய்தியை வெளியிடலாமா, வேண்டாமா என்ற ஐயப்பாடு ஏற்பட்டால், வெளியிடவேண்டாம். செய்தியைத் தவறாக வெளியிடுவதைவிட வெளியிடாமலே இருப்பது நல்லது.''

அவர் உண்மைக்கு எவ்வளவு முதன்மை அளித்தார் என்பதைத் ''தமிழன்'' இதழில் பார்த்தோம். 'வீட்டில் கல் வந்துவிழுகிறது'', ''வீட்டில் திடீர் திடீர் என்று தீப்பிடிக்கிறது' என்பன போன்ற செய்திகளை வெளியிடக்கூடாது என்று விதி செய்திருக்கிறார். ஏனென்றால், இந்தச் செய்திகள் உண்மையாக இருப்பதில்லை என்பதால்தான்.

சென்னைக் கடற்கரையில் உள்ள காந்தி சிலை ஆபாசமாக இருக்கிறது என்று கூறி, அதை அகற்றக் கோரி சாகும்வரை உண்ணாநோன்பு இருக்கப்போவதாக ஒருவர் அறிவித்திருந்தார். அதை ''இன்று உண்ணா நோன்பு'' என்று 'தினத்தந்தி'யில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துகளில் எட்டுப் பாத்திச் செய்தியாக வெளியிட்டார். ஆனால், அடுத்த நாள் அவர் அறிவித்தபடி

உண்ணாநோன்பு இருக்கவரவில்லை. 'தினத்தந்தி' வெளியிட்ட செய்தி பொய்யாகிவிடக்கூடாதே. அய்யா ஒரு செய்தியரை அனுப்பி, அந்த ஆளுடன் பேசச் செய்து, ''நீங்கள் உண்ணா நோன்பு இருங்கள். நீங்கள் உட்கார்ந்த உடனேயே உங்களைக் கைது செய்யக் காவலரிடம் கூறியிருக்கிறோம். காவல் நிலையத்துக்குச் சென்றதும் உங்களை விட்டுவிடவும் ஏற்பாடு செய்திருக்கிறோம்'' என்று அவரிடம் சொல்லி, அய்யா அனுப்பிய காரிலேயே அவரைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று உட்காரச் செய்தார்கள். முன்னேற்பாட்டின்படி காவலர்கள் உடனடியாக அவரைக் கைது செய்து, அழைத்துச் சென்று, வழக்குப்பதிவு செய்துவிட்டு வெளியில் விட்டுவிட்டார்கள். மறுநாள் ''உண்ணா நோன்பு இருந்தவர் கைது!'' என்றுபடங்களுடன் 'தினத்தந்தி'யில் செய்தி வெளிவந்தது. செய்தி பொய்யாகி விடக்கூடாது என்பதில் இந்த அளவுக்கு அவர் கவனமாக இருந்தார்.

**தவறு ஏற்படுவது ஏன்?**

செய்திகளை முந்தித்தரும் வேகத்தில் சில நேரம் தவறு ஏற்பட வாய்ப்பு உண்டு. கேரளாவில் முதல் முதல் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு அமைச்சரவை அமைந்தபொழுது, அதை எதிர்த்துக் காங்கிரசார் போராட்டம் நடத்தினார்கள். நம்பூதிரிபாடை நீக்கிவிட்டு, குடியரசுத்தலைவர் ஆட்சி ஏற்படுத்த வேண்டும் என்று கோரினார்கள். ஒரு நாள் நள்ளிரவு வந்த செய்திகளை மோப்பம் பிடித்து ''நம்பூதிரிபாடு இன்று டிஸ்மிஸ்! ஜனாதிபதி ஆட்சி அமுல்'' என்று நான் எட்டுப்பாத்திச் செய்தி வெளியிட்டேன். செய்தி வெளி வந்த ஒரு சில மணி நேரத்தில், நம்பூதிரிபாடு முதல்வர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

நாடக நடிகர் நவாப் இராச மாணிக்கம் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் மரணப்படுக்கையில் இருந்தார். ஒரு நாள் இரவு இப்பொழுதோ பிறகோ என்ற நிலை. இரவு முழுக்கச் செய்திக்காக நான் காத்திருந்தேன். அதிகாலை மூன்று மணி அதற்கு மேல் காத்திருக்க முடியாது. 'இரவைத் தாண்ட மாட்டார். மரணம் என்று போட்டுவிடலாம்' என்று மருத்துவர் சொல்லிவிட்டார். அதை நம்பி நானும் 'நவாப் இராசமாணிக்கம் மரணம்' என்று செய்தி போட்டுவிட்டேன்! காலையில் அந்தச் செய்தியைப் படித்த பின்னேதான் அவர் மரணமடைந்தார்!

எந்நேரமும் பகடை ஈராறு போடாது அல்லவா? ஆனால், இதை வைத்துக்கொண்டு, செய்திகளை முந்தித்தருவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தப் போதுமான ஆதாரமற்ற செய்திகளை வெளியிடத் 'தினத்தந்தி' தயங்குவதில்லை என்றும், செய்திகளை முந்தித் தருவதற்காக ஆதாரமற்ற செய்திகளையும், தவறான செய்திகளையும் தரும் ஆரோக்கியமற்ற இதழியல் போக்குக்குத் தினத்தந்தி ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்றும் சாந்தா கூறுகிறார்-குற்றஞ்சாட்டுகிறார். அய்யா இன்று இருந்தால், "நாங்கள் அரசாங்க கெஜட்டு நடத்தவில்லை, நாளிதழ் நடத்துகிறோம்" என்று பட்டென்று பதில் அளிப்பார். அந்தத் துணிச்சல் எனக்கு இல்லை.

''கண்ணால் பார்ப்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரித்து அறிவதே மெய்'' என்று சொல்லுவார்கள். ஒரு செய்தி மெய்யா, பொய்யா என்று தீர விசாரித்து ஒரு நாளிதழில் வெளியிடமுடியுமா? "கொலை செய்தார்" என்று செய்தி வந்தால், அதை வெளியிடுவார்கள். "கொலை செய்யவில்லை" என்று தீர்ப்புக் கூறினால், அதையும் வெளியிடுவார்கள். ஒரு நாளிதழ் செய்யக் கூடியது இதுதானே? எந்த நாளிதழிலும் சில நேரம் தவறு வரத்தான் செய்யும். அது தவறே தவிர, "பொய்" அல்ல. அரசிதழுக்கு ஈடாக எண்ணப்படும் ''இந்து'' இதழில் திருத்தமே வெளியிடப்படுவது இல்லையா, என்ன? யானைக்கும் அடி சறுக்குமே!

### பொய் அல்ல

இதழ் நடத்துவது போட்டி நிறைந்த ஒரு தொழில் செய்தியை முந்திக் கொடுப்பதில் கடுமையான போட்டி. தேர்தல் நடந்த ஒரு தொகுதியில் வாக்கு எண்ணிக்கை முடியவில்லை. காலையில் இதழ் வெளிவருமுன் முடிவு வெளிவந்துவிடும். அந்த நிலையில் முன்னணியில் இருக்கும் வேட்பாளர் வெற்றி என்று முந்திரிக்கொட்டை இதழ் செய்தி வெளியிடத்தான் செய்யும். செய்தி அச்சான பின்பு, தேர்தல் முடிவு மாறி, அந்தச் செய்தி தவறாகவும் ஆகிவிடக்கூடும். குதிரைப்பந்தயத்தில் கண் இமைக்கும் நேரத்தில் இரண்டாவது குதிரை முதலாவதாக வந்து விடுவதில்லையா? இதனால் அந்த இதழ் 'பொய்ச் செய்தி' வெளியிட்டதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. வழக்கறிஞர்கள் சொல்லும் "பொய்"களை யாரும் பொய் என்று சொல்வதில்லையே. 'அவர் கில்லாடி' என்றுதானே பாராட்டுகிறார்கள்!

நெருப்பு இல்லாமல் புகையாது என்பார்கள். ஆனால், புகைவது எல்லாம் நெருப்பாகப் பற்றி எரிவதில்லை. புகையும் பொழுதே 'தீ' என்று செய்தி வெளியிடும் போக்கு இப்பொழுது உலகம் முழுக்கவே இதழ்களிடம் இருந்துவருகிறது. ஒரு தலைவர் கையூட்டு வாங்குகிறார் என்று கிசுகிசு கிளம்பினால்போதும், அது செய்தியாகிவிடும். இறுதியில் அது தவறான செய்தியாகக்கூட இருந்துவிடும். 90 விழுக்காடு சரியாகவே இருக்கும். புகையைப் பார்த்ததுமே, "தீ! தீ!" என்று கூச்சல் போட்டுவிடுவது நல்லது அல்லவா?

"நாரதர் கலகம் நன்மையில் முடியும்" என்பது போல இதை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, கேடான இதழியல் என்று இதைச் சொல்லமுடியாது. முதலில் வதந்திபோலக் கிளம்பிய செய்திகளால் பல அரசியல் குற்றவாளிகள் கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதழ்களைக் "காவல் நாய்" என்பார்கள், நாய் திருடனைப் பார்த்துத்தான் குரைக்கும் என்பதில்லை; ஒருவர் திருடனைப் போலத் தெரிந்தாலும் அவரைப் பார்த்தும் குரைக்கும். இதழ்களில் வெளிவரும் வதந்திச் செய்திகளும் அப்படிப்பட்டவைதான்.

இங்கே இன்னொன்றையும் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். செய்தித்தாள்களில் வெளிவரும் செய்திகளை வாசகர்கள் எவ்வளவு தூரம் நம்புகிறார்கள் என்பதை அறிய, 1984இல் அமெரிக்காவில் ஒரு கணக்கு எடுத்தார்கள். அப்பொழுது தெரிய வந்த உண்மை: மூன்றில் ஒரு வாசகர்தான் செய்திகளை உண்மை என்று நம்புகிறார்கள்!

**கவர்ச்சியான தலைப்புகள்**

செய்திகளுக்குத் 'தினத்தந்தி' தந்த தலைப்புகளைக்கூட சில பேர் குறை கூறினார்கள். தலைப்புகள் மொச்சைக் கொட்டை போல இருக்கின்றன! கதவு அகலத்தில் மூன்று பாத்தி, நாலு பாத்தித் தலைப்புகள்! "சதக் சதக்", "குபீர் பாய்ச்சல்!" இதெல்லாம் என்னய்யா தலைப்பு! இப்படிக் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

தலைப்பு என்பது ஒரு செய்தியின் தலைவாயில். செய்தியைப் படிக்கும்படி வாசகர்களைத் தூண்டுபவை தலைப்புகளே. தலைப்பு கவர்ச்சியாக இருந்தால்தானே செய்தியைப் படிக்கும் ஆர்வம் ஏற்படும்? பெண் அழகாக இருந்தால்தானே அவளைப்

பார்ப்பவனுக்கு அவளைக் கட்டிக் கொள்ளும் ஆசை வரும்! அதற்காகத்தானே பெண் பார்க்கும்பொழுது பெண்ணை அலங்காரம் செய்கிறோம். ஆராவரத் தலைப்புகளும் அப்படிப் பட்டவையே. மலரில் உள்ள தேன்தான் செய்தித் தலைப்பு.

தலைப்புப் பெரிதாக-பெரிய எழுத்துக்களுடன் இருக்க வேண்டும் என்பது மக்கள் இதழின் இலக்கணங்களில் ஒன்று. சில நேரம் செய்தியை விடத் தலைப்பு அதிக இடத்தைப் பிடித்துக் கொள்ளும். சரக்கு முறுக்கா இருக்க வேண்டுமா? செட்டியார் முறுக்கா இருக்க வேண்டுமா? சரக்கு செய்தி என்றால், செட்டியார்தான் தலைப்பு! இரண்டு பாத்தி, மூன்று பாத்தி என்று தலைப்புப் பெரிதாக இருந்தால்தான், செய்தி எடுபடும். காந்தியடிகள் கொல்லப்பட்டதையே மூன்றாம் பக்கத்தில் ஒரு பாத்தித் தலைப்புடன் செய்தியாக வெளியிட்ட ''இந்து'' இதழ், இன்று முதல் பக்கத்தில் மூன்று பாத்தி, நாலு பாத்தித் தலைப்பு களுடன் செய்திகள் வெளியிடுகிறதே! அய்யா செய்தது சரி என்பதை மட்டுமல்ல, அவர் முன்னோடியாகவும் இருந்தார் என்பதைத்தானே இது காட்டுகிறது.

இதைத்தான் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ''மக்கள் மனங் கவரும் வகையில் செய்திகளுக்குத் தலைப்புகள் தரும் புதுமையை யும் ஆதித்தனார் கடைப்பிடித்தார். முதலில் இந்த முறை குறை பாடு உடையதெனக் கருதப்பட்டாலும், பின்னால் மற்ற இதழ் களும் இந்த முறையைப் பின்பற்றின'' என்கிறார். (''செங்கோல்'' 31-5-1981)

**சுவரொட்டி**

தலைப்புகளைப் போலவே சுவரொட்டியையும் (போஸ்டர்) அய்யா சூடாக வெளியிட்டார் ஏனென்றால், சுவரொட்டியைப் பார்த்துவிட்டுத்தான் இதழ்களை வாங்கும் நாடு, இது. பின்னணிப் பாடகர்களான ராஜா-ஜிக்கி திருமணம் செய்து கொண்டபொழுது, ''ராஜா ஜிக்கி திருமணம்'' என்று சுவரொட்டி வெளியிட்டுப் பரபரப்பு ஏற்படுத்தினார்.

தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக (பின்பு அமைச்சராக வும்) இருந்த ஏ. கோவிந்தசாமி ஒருமுறை சட்ட மன்றத்தில் பேசுகையில் (அப்பொழுது ராஜாஜி முதல்வராக இருந்தார்) ''சினிமாவுக்குப் போவது கெடுதி என்று ராஜாஜி சொல்லுகிறார். ஆனால், அவரது அமைச்சரவையைச் சேர்ந்த ஓர் அமைச்சர்

நடிகை அஞ்சலிதேவிக்குப் பரிசு வழங்குகிறார். திரைப்படம் பற்றி அரசாங்கத்தின் கொள்கைதான் என்ன?'' என்று கேட்டார். இதற்குமேல் கோவிந்தசாமியே கூறுகிறார்: ''அடுத்தநாள் காலையில் 'தினத்தந்தி' சுவரொட்டியில் 'ராஜாஜியும் அஞ்சலி தேவியும்' என்று தலைப்புப் போட்டிருந்தார்கள். என்ன ஏது என்று அறிவதற்காக ஓடோடிப் போய்த் 'தினத்தந்தி' வாங்கி னேன்'' (தினத்தந்தி வெள்ளிவிழாச் சொற்பொழிவு).

ஒரு சட்ட மன்ற உறுப்பினரே சுவரொட்டியைப் பார்த்து விட்டு ''ஓடோடிச் சென்று'' தினத்தந்தி வாங்கினார் என்றால், சாதாரண வாசகர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? சாந்தா சொல்லுகிறார். ''மாதச் சந்தா, ஆண்டுச் சந்தா செலுத்தும் வழக்கமான வாசகரைவிட, சுவரொட்டியைப் பார்த்துச் செய்தித் தாளை வாங்கும் தற்செயல் வாசகரையே தினத்தந்தி பெரிதும் நம்பியிருக்கிறது எனலாம். இதனால் வாசகரைக் கவரும் வண்ணமும், அவரது ஆர்வத்தைத் தூண்டும் வண்ணமும் சுவரொட்டிகள் அன்றாடம் தயாரிக்கப்படுகின்றன.''

**புதிய உத்தி**

செய்தி எழுதும் பொழுது கதாபாத்திரங்களைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் ஓர் உத்தியையும் அய்யா பின்பற்றி னார். எடுத்துக்காட்டாக, ஒரு நடிகை ஒரு விழாவுக்கு வந்தால், ''அந்த நடிகை தலை நிறைய மல்லிகைப் பூ வைத்திருந்தார். சிவப்புப் பட்டுச் சேலை கட்டியிருந்தார். கருப்பு நிறக்காரில் வந்து இறங்கினர்'' என்று எழுத வேண்டும். ஒரு விருந்து நடந்தால் அந்த விருந்தில் ''பதினெட்டு வகை பதார்த்தங்கள் பரிமாறப்பட்டன'' என்று எழுதினால் போதாது; லட்டு, பூந்தி, இனிப்புப் பொங்கல், தக்காளி ரசம், காரட்டுப் பாயசம் என்று பண்டங்களைப் பட்டியல் போட்டுக் காட்ட வேண்டும்.

இப்படி எழுதுவதையும் சிலர் குறை கூறினார்கள். மதுரை யில் நடந்த ஒரு விருந்தில் கலந்து கொண்ட இந்தியத் தலைமை ஆளுநர் ராஜாஜி தினத்தந்திச் செய்தியாளரை அழைத்து ''ராஜாஜி விருந்து சாப்பிட்டார் என்று செய்தி போட்டால் போதும். இன்னென்ன சாப்பிட்டார் என்று பட்டியல் வேண்டாம். நான் சொன்னேன் என்று ஆதித்தனிடம் கூறுங்கள்'' என்று சொல்லி அனுப்பினார்.

''ஒரு நிகழ்ச்சி என்றால், அதைச் சார்ந்து நடக்கும் நிகழ்ச்சி களையும் கவனிக்க வேண்டும், விவரங்களையும் சேகரிக்கவேண்டும்.

அவற்றையும் செய்தியாக்க வேண்டும், அந்தச் செய்தியையும் வாசகர்கள் விரும்பிப் படிப்பார்கள்,'' என்று அய்யா சொன்னார்.

இது அவருக்குப் புதிதாக ஏற்பட்ட கருத்து அல்ல. அவர் இலண்டனில் படித்துக் கொண்டிருந்த பொழுது, அங்கு வட்ட மேசை மாநாடு நடந்தது. மாநாட்டில் கலந்து கொண்ட காந்தியடிகள், இடையில் எழுந்து வெளியே போய் வந்தார். ஆடிக்கொண்டிருந்த பல்லைப் பிடுங்கத்தான் அவர் வெளியில் போய் வந்தார் என்ற செய்தியைக் கொடுத்த ஒரே செய்தியர் அய்யாதான்.

தனுஷ்கோடியில் புயல் அடித்த செய்தியை மட்டும் கொடுத்தால் போதாது; அந்தப் புயலில் சிக்கிக் கொண்ட நடிக தம்பதியர் ஜெமினிகணேசனும் சாவித்திரியும் என்ன ஆனார்கள் என்ற செய்தியையும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். ஏனென்றால், அந்தச் செய்தியும் வாசகர் விரும்பக் கூடியதே.

## திரைப்படச் செய்திகள்

''தமிழன்'' காலத்தில் இருந்தே திரைப்படச் செய்திகளுக்கு அய்யா முதலிடம் கொடுத்து வந்தார். குறை கூறுகிறவர்கள் இதையும் குறை கூறினார்கள். ஆனால், இன்று, ''பருப்பு இல்லாமல் சாம்பார் இல்லை'' என்பது போல, திரைப்படச் செய்தி இல்லாமல் எந்தத் தமிழ் இதழும் இல்லை. ஏன்?

இந்தியாவில் மக்களுக்கு மலிவான பொழுது போக்காக இருப்பது திரைப்படங்களே. இந்திய மக்களின் முதல் பொழுது போக்கும் திரைப்படம் பார்ப்பதுதான். படம் பார்த்துவிட்டு, படம் பற்றியும் படத்தில் நடித்த நடிகர் நடிகைகளைப் பற்றி பேசுவதும் ஒரு பொழுதுபோக்கு. நடிகர் நடிகைகள் சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். முதல்வர்களாக நாட்டை ஆளுகிறார்கள். அந்த அளவுக்கு நடிகர் நடிகைகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்று விட்டார்கள்.

செய்தி என்பது மக்களுக்கு நெருக்கமாக இருப்பதுதான். மக்கள் அறிந்த தெரிந்தவர்களைப் பற்றிச் செய்தி வெளியிட்டால் தான் வாசகர்கள் படிப்பார்கள். இந்த வகையில்தான் திரைப் படச் செய்திகளுக்கு அய்யா முதன்மை அளித்தார். 'அனுராதாவைப் பற்றிச் செய்தி வெளியிடுங்கள். அதுக்காக அனுராதா நாய் குட்டி போடுவதைக்கூட செய்தியாக வெளியிட

வேண்டுமா?' என்று கேட்பீர்கள். செய்தி என்பது வாசகரைப் பொருத்ததுதான் என்று முன்பே சொன்னேன். அனுராதா நாய் குட்டி போட்டாலும் அது தினத்தந்தி வாசகர்களுக்குச் செய்திதான். அனுராதாவே குட்டி போட்டாலும் அந்தச் செய்தியை ''இந்து'' இதழில் வெளியிட மாட்டார்கள். ஏனென்றால், அது தங்கள் வாசகர்களுக்குச் செய்தி அல்ல என்று அவர்கள் கருதுகிறார்கள். இது பூனை கண்ணை மூடிக் கொண்டு 'உலகமே இருண்டுவிட்டது' என்று எண்ணுவது போலவும் இருக்கலாம்.

''இந்து''வில் நடிகைகளைப் பற்றிய செய்தியே வருவது இல்லையா, என்ன? தமிழ்நாட்டு நடிகை நளினி திருமணம் செய்து கொண்டால், அந்தச் செய்தி ''இந்து''வில் வருவதில்லை. ஆனால், அமெரிக்க நடிகை எலிசபெத் டெய்லர் திருமணம் செய்து கொண்டால்-அது எலிசபெத் டெய்லரின் பத்தாவது திருமணமாக இருந்தாலும்கூட-அதை ''இந்து''வில் செய்தியாக வெளியிடுகிறார்களே! மாஸ்கோவில் மழை பெய்தால், மதுரையில் குடைபிடிப்பவர்களை நாம் தடுக்கவே முடியாது!

திரைப்படச் செய்திகளை எழுத 'தினத்தந்தி' ஒரு புதிய முறையைக் கையாண்டது. கதாபாத்திரங்களின் பெயர்களைத் தலைப்பில் பயன்படுத்துவதில்லை. அந்தப் பாத்திரங்களை ஏற்று நடித்த கலைஞர்களின் பெயர்களைப் பயன்படுத்தினார்கள். இதையும் குறை கூறினார்கள். அ. சாந்தா "படாபட் ஜெயலட்சுமி காதல் திருமணம்", "வேலை தேடுகிறார் ஜெயசித்ரா" என்றெல்லாம் தலைப்புப் போடுவதைக் குறை கூறுகிறார்.

வாசகர்கள் அந்தச் செய்தியைப் படிக்கவேண்டும், ''அருந்ததி காதல் திருமணம்'' என்று தலைப்புப் போடுவதைவிட வாசகர்களுக்குத் தெரிந்த "படாபட் காதல் திருமணம்'' என்று தலைப்புப் போட்டால், கவர்ந்து இழுக்கும் அல்லவா? அருந்ததி யார் என்று குழம்புவதைவிட, படாபட் என்றால் புரியும் அல்லவா? அதற்காகத்தான் இந்த முறையில் எழுதப்பட்டது. இப்பொழுது ஏறத்தாழ எல்லா இதழ்களுமே இந்த முறையைத் தான் பின்பற்றுகின்றன.

இது உண்மைச் செய்தி போன்ற மயக்கத்தை வாசகர்களிடம் ஏற்படுத்தாது. ஏனென்றால், வழக்கமான செய்திப் பக்கங்களில் இச்செய்தி வெளிவருவதில்லை. திரைப்படப் பகுதியில்தான் வெளிவரும்.

தினத்தந்தியில் படங்களுக்கு அடிக்குறிப்பு எழுதும் முறையையும் அ. சாந்தா குறை கூறுகிறார். அந்த அடிக்குறிப்புகள் பாலுணர்வைத் தூண்டும் முறையில் அமைகின்றன என்கிறார். ''ரவிகுமார் கைபட்டதும் ஸ்ரீதேவியின் உடலில் காந்த சக்தி பாய்ந்து விட்டதோ'' (16-2-1979) என்ற அடிக்குறிப்பையும் எடுத்துக் காட்டுகிறார். இந்த அடிக்குறிப்பைப் படித்ததும் யார் உடலில் காந்த சக்தி பாய்ந்து விட்டதோ, எனக்குத் தெரியவில்லை!

''குமுதம்'' இதழிலும் இதுபோன்றுதான் எழுதுகிறார்கள் என்று குறிப்பிடும் அ. சாந்தா, ''இது வாசகர்கள் மிகவும் விரும்பும் கூறு என்பது புலனாகும்'' என்று முடிக்கிறார். வாசகர் விருப்பந் தானே முக்கியம்?

அதற்காக ஆபாசமாக இருக்கக் கூடாது. ''கவர்ச்சிப் படங்களுக்கு எடுத்துக் கொடுக்கும் முறையில் அடிக்குறிப்பு எழுதக் கூடாது'' என்று அய்யா கண்டிப்பாக ஆணையிட்டிருக்கிறார். ''நடிகை அமலாவின் கவர்ச்சியைப் பாருங்கள்'' என்று எழுதுவதில்லை. ''மேலேயுள்ள படத்தில் தோன்றுகிறவர் நடிகை அமலா'' என்று அடக்கமாக எழுதுவதை இன்றும் பார்க்கலாம்.

**மீண்டும் குற்றச்சாட்டு**

பழைய குற்றச்சாட்டு ஒன்றை இங்கே மீண்டும் கூறுகிறார், சாந்தா. ''நடிகர் நடிகையரது சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறுதல், சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறுவது போன்ற தோற்றம் ஏற்படுத்துதல், பாலுணர்வைத் தூண்டும் முறையில் எழுதுதல் ஆகியவற்றால் ஆரோக்கியமற்ற இதழியல் வளர்வதற்குத் தினத்தந்தியின் திரைப்படப்பகுதி துணையாகிறது'' என்கிறார். நடிகர்-நடிகையரின் சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறக்கூடாதா? அது எப்படிக் கேடான இதழியல் ஆகும்? எலிசபெத் அரசியின் குதிரை குட்டி போட்டால் இலண்டன் இதழ்கள் செய்தியாக வெளியிடுகின்றனவே! ஏன்? வாசகர்கள் விரும்பிப் படிக்கிறார்கள், அனுராதா நாய் குட்டி போடும் செய்தியும் அப்படிப்பட்டதுதான்.

படப்பிடிப்புச் செய்திகளை நடிகர்-நடிகைகளின் சொந்தப் பெயரை வைத்து எழுதுவது ஏன் என்பதை முன்பே விளக்கி விட்டேன். எனக்கு எத்தனையோ புனைபெயர்கள் இருந்தாலும், ''அ.மா. சாமி'' என்று சொன்னால்தானே உங்களுக்குத்

தெரியும்? அது போன்றதுதான் இதுவும். ''இது வாசகர்கள் மிகவும் விரும்பும் கூறு என்பது புலனாகும்'' என்று கூறிவிட்டு, அடுத்த வரியிலேயே ''இது ஆரோக்கியமற்ற இதழியல்'' என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? இதழியலுக்கு அடிப்படையே வாசகர்கள் அல்லவா?

''கவர்ச்சி'' என்பது காப்பியில் இருக்கும் ''காபின்'' போன்றது. ஒருவாய் குடித்ததும், உவகைதந்து, சுறுசுறுப்பு உண்டாக்கி, முடுக்கிவிடுவதுடன், நாளையும் காப்பி குடிக்க வேண்டும் என்று உந்துவது 'காபின்' அல்லவா? அரைகுறைப் படிப்பாளிகளுக்கு அந்த உந்துதல் தேவை அல்லவா? பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்! எனவே, இதிலே கேடான இதழியலும் இல்லை! 'தினத்தந்தி' அதற்கு வழிகாட்டி வளர்க்கவும் இல்லை!

**ராஜாஜி சொன்னது**

இப்படியெல்லாம் சிலபேர் குறை கூறினார்களே தவிர அவர்களால்கூடத் 'தினத்தந்தி'யைப் படிக்காமல் இருக்க முடியவில்லை. அவர்கள் போகும் இடங்களில் ஏழெட்டு நாளிதழ்கள் கிடந்தால், 'தினத்தந்தி'யைத்தான் முதலில் எடுத்துப்பார்ப்பார்கள். காரிலே போனால், ஓட்டுநரிடம் இருந்து 'தினத்தந்தி'யை வாங்கிப் புரட்டுவார்கள். முதல்வர் கருணாநிதி இதை ஒரு பாட்டாகவே பாடிவைத்தார்.

''என்ன இருக்குது இதிலே என்று
முன்னும்பின்னும் பார்த்துவிட்டு
முணகுகின்ற மனிதர்கூடக்
கன்னலை எறும்பு சுவைப்பதுபோல்
கடைசி எழுத்துவரை படிக்கின்றார்—தம்
கட்சி சிறிது நேரம் மறக்கின்றார்''

(''தினத்தந்தி'' வெள்ளிவிழா மலர்)

''கல்கி'' (14-6-1981) ஒரு சுவையான தகவலைச் சொல்லுகிறது: ''தினத்தந்தியில் கருத்தைவிடக் கவர்ச்சி அதிகம் என்பர், சிலர். கவர்ச்சி காட்டிக் கருத்தைக் கூறவந்தார் ஆதித்தனார் என்று இதற்குப் பதில் கூறுவாரும் உண்டு. இந்தக் கவர்ச்சி பாமரரை மட்டுமின்றிப் படித்தவரையும் ஈர்த்தது. உயர் வகுப்பினர் தினத்தந்தி படிக்கமாட்டார்கள் என்று ஒருவர் ராஜாஜியிடம் குறிப்பிட்டபோது மூதறிஞர் வேடிக்கையாகச் சொன்னார்: 'படிக்காமலென்ன, 'இந்து' பேப்பருக்கு இடையே வைத்துப்பார்ப்பார்கள்.'

இப்படிப் படித்ததால் ஒரு நல்ல பயனும் விளைந்தது. அது என்ன? சாண்டில்யன் சொல்கிறார்: "முதலில் தினத்தந்தியில் வரும் செய்திகளின் தரத்தைப்பற்றிக் குறை கூறிய மேல்தள மக்களும் காலக்கிரமத்தில் அதைப் படிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் படிக்கப் படிக்க செய்திகளின் தரமும் லேசாக யாரும் உணராவண்ணம் உயர்த்தப்பட்டது. இன்று நீதிபதிகள், வழக்கறிஞர்கள் முதலியோர் முதல் ரிக்ஷாக்காரர்கள் வரை "தினத்தந்தி", "மாலை முரசு", "ராணி" படிக்கிறார்கள். காரணம், வெளியாகும் விஷயங்களின் சுருக்கம், சுவை, தலைப்புகளின் தெளிவுதான்." (ஆதித்தனாருக்கு அஞ்சலி)

## இதழாளர் கருத்து

"பாம்பறியும் பாம்பின்கால்" என்பார்கள். அய்யா இவ்விதம் செய்திகளைக் கொடுத்தது பற்றி மற்ற இதழாளர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "குமுதம்" (4-6-1981) கூறுகிறது: "படிப்பதற்குத்தான் பத்திரிகை-படித்ததாகப் பேர் பண்ணுவதற்கு அல்ல: படிக்காதவர்கள் என்று ஒதுக்கப்படுகிறவர்களுக்கும் ஒரு செய்தித்தாள் தமிழில் வேண்டும்-இப்படி நினைத்து, நினைத்ததைச் செய்து காட்டியது, ஆதித்தனாரின் புரட்சி நம்பர் ஒன்று.

அய்யா போன்றே சுடச் சுட செய்திகள் கொடுத்துப் பரபரப்பு ஏற்படுத்தியவர், "சங்கு" கணேசன். அவர் சொல்கிறார்: "செய்திகளைக் கொடுப்பதில் புதுமை செய்தவர்-புரட்சி செய்தவர், ஆதித்தனார். நானும் இதழ் நடத்தியவன் என்ற முறையில் இதை நன்றாக அறிவேன். அனுபவப்பூர்வமாகவும் உணர்ந்திருக்கிறேன். தமிழ்நாட்டில் எவ்வளவோ இதழ்கள் இருந்திருக்கின்றன. புதிய முறையில் செய்திகள் கொடுத்து, அந்தச் செய்திகளுக்குப் புதுமையான முறையில் தலைப்புகள் தந்து, இதழ் உலகில் புரட்சி செய்தவர், ஆதித்தனாரே."

"ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுபதம்" என்பார்கள். நாம் இரண்டுசோறு பதம் பார்த்துவிட்டோம், போதும் அல்லவா!

## ஆய்வாளர் முடிவு

"தினத்தந்தி"யின் செய்திகள் பற்றியும் அ. சாந்தா தனது ஆய்வு ஏட்டில் ("தினத்தந்தியின் இதழியல் உத்திகள்") அலசி ஆராய்கிறார். இறுதியில் அவர்கண்ட முடிவுகள்-

'தினத்தந்தி' குறுகிய காலத்திற்குள் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்த தமிழ் இதழ்களில், விற்பனையில் முதலிடத்தைப்

பெறும் நிலை எய்தியுள்ளது. பெரும் குறிக்கோள்களுடன் தோன்றுவதும், பின் விரக்தியில் வாழ்ந்து அவ்விரக்தியில் மடிந்து போவதுமே, வளரும் நாடுகளில் பெரும்பாலான இதழ்களின் நிலையாகும். இவ்வாறு வளரத் தினத்தந்திக்கு மட்டும் எங்ஙனம் முடிந்தது என்ற வினாவே இவ்வாய்வுக்குரிய அடிப்படை உந்துதல் ஆகும்.

இங்குக் கண்டறியக்கூடும் தினத்தந்தியின் இதழியல் உத்திகள் இந்தியாவின் பிற தாய்மொழி இதழ்களுக்கும், பின்தங்கிய பிற நாடுகளில் உள்ள இதழ்களுக்கும் முன் மாதிரியாக அமையக்கூடும். தமிழ் இதழ்களின் வரலாறு, அவற்றின் மொழி நடை பற்றிப் பல ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன. ஆனாலும், தனிப்பட்ட ஒரு தமிழ் இதழின் இதழியல் உத்திகளைக் காண முயலும் முதல் ஆய்வு இதுவேயாகும்.

தினத்தந்தி, தனது சமகால இதழ்களில் வெற்றிகரமான நாளிதழ்கள் இருப்பின் உருவம், உள்ளடக்கம், வாசகர் ஆகிய அனைத்து நிலைகளிலும் அவற்றிலிருந்து வேறுபட்டு நிற்பதையே விரும்புகிறது. செய்திகளையே மையமாகக் கொண்டு வெளிவந்த முதல் செய்தித்தாள் தினத்தந்திதான் என்று கூறமுடியும். விடுதலைக்கு முன்பே கட்சி சார்பின்றி எழுதிய ஒரே நாளிதழ் 'தினத்தந்தி' எனலாம். பிற செய்தித்தாள்களிலிருந்து வேறு பட்டு நிற்பதைத் தொடக்கம் முதலே கொள்கையாகத் தினத்தந்தி கொண்டுள்ளது.

'உயிர்த்துடிப்புள்ளநாள்தாள்' என்று தன்னை விளம்பரப் படுத்திக்கொள்ளும் தினத்தந்தி, உயிர்த்துடிப்புச் செய்திகளான வழக்கு, விபத்து போன்றவற்றுக்கே முதலிடம் தருவதால் எல்லா வகையான வாசகரையும் கவர முடிகிறது. செய்திகளை மனித நேய நோக்கில் நின்று, இரக்கம், மகிழ்ச்சி, துன்பம், பாலுணர்வு போன்ற அடிப்படையான மனித உணர்வுகளைத் தூண்டும் (''தொடும்'' என்று இருக்கவேண்டும். அ.மா. சாமி) வகையில் எழுதுவதால், அனைத்து வகையான வாசகர்களும், வழக்கமாக வாங்காவிடினும், பயணம் செய்தல், பேருந்துக்காகக் காத் திருத்தல் போன்ற சூழல்களாயினும் வாங்க இயலுகிறது.

பெண்களுக்குச் செய்தித்தாள் படிப்பதைவிட, பொழுது போக்கு இதழ்களைப் படிப்பதில்தான் ஆர்வம் அதிகமாக இருக் கிறது. தினத்தந்தியில் ஏராளமான பொழுதுபோக்குக் கூறுகள்

வெளிவருவதால், பெண்களும் தினத்தந்தியைப் படிக்க முன்வருகின்றனர். அத்துடன் செய்திகள் மனித நேய நோக்குடன் எழுதப்படுவதால், பெண்கள் விரும்பிப் படிக்கின்றனர்.

உலகச் செய்திகளையும், நாட்டுச் செய்திகளையும் அறிந்து கொள்ளும் ஆவல் ஏற்படப் பரந்த அனுபவம் தேவை. அந்த அனுபவம் பெறாத வாசகர்களே மிகுதியாக உள்ள சூழலில் வாசகர்களுக்கு விருப்பமான வட்டாரச் செய்திகளையே மிகுதியாகத் தருவது நல்லதெனக் கருதி தினத்தந்தி வட்டாரச் செய்திகளுக்குச் சிறப்பிடம் தருகிறது.

உந்துதல் இல்லாத வாசகர்களை அவர்களுக்குப் பிடித்தமான சில பொழுதுபோக்குக் கூறுகள் வாயிலாகக் கவர்ந்து, அவர்களுக்கு விருப்பமான வட்டாரச் செய்திகளையும் பரபரப்பான செய்திகளையும் தந்து, அவர்களிடம் இதழ்படிக்கும் பழக்கத்தைத் தினத்தந்தி ஏற்படுத்துகிறது. தமிழ்ச் செய்தித்தாள்களில் மிகவும் அதிகமாக விற்பனையாவது தினத்தந்தி என்பதால், இதில் வெளியாகும் செய்திகளை மிகுதியான மக்கள் விரும்புகிறார்கள் என்பதே பொருளாகும்.

செய்தித்தாளைப் படிப்பதை எளிமையாக்கும் உத்திகளில் ஒன்றாகத் தினத்தந்தியில் படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிறுவர்கள் இடையே இதழ் படிக்கும் பழக்கங்களைக் கண்டறிய நடந்த கள ஆய்வு ஒன்றில் 'படக்கதைகளே செய்தித்தாள்களைப் படிக்கச் சிறுவர்களைத் தூண்டுகின்றன' என்று கண்டறியப் பட்டுள்ளது. இச்சிறுவர்களில் பெரும்பாலோர் (73 விழுக்காடு) தினத்தந்தியையே வழக்கமாகப் படிப்பது தெரியவந்தது.

இதழ்படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதில் தினத்தந்தியின் பொழுதுபோக்குக் கூறுகளில் படக்கதைகள் முக்கியபங்கு வகிக்கின்றன. சிறுவர்களாக இருக்கும்போது தினத்தந்தியின் படக் கதைகளைப் படித்தவர்களைத் தொடர்ந்து படிக்கச் செய்யவே 'கன்னித்தீவு' என்ற படக்கதை முடிவின்றித் தொடர்ச்சியாக வெளியிடப்படுகிறதோ என்று கருத இடமிருக்கிறது, (நீதிபதி ச. மோகன், 19-5-90, பெங்களூர் தமிழ்ச் சங்க உரை) வளரும் நாடுகளில் இதழ் படிக்கும் உந்துதல் இல்லாத வாசகர்களை ஈர்ப்பதற்குப் படக்கதைகள் பெரிதும் உதவக்கூடும் என்பதற்குத் தினத்தந்தி எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தினத்தந்தியின் விற்பனை மிகுதியில் அதில் வெளிவரும் தொடர்கதைகளுக்கு முக்கியமான பங்கு உண்டு. தினத்தந்தியின் தொடர் கதைகளின் உரையாடல்கள் நகைச்சுவையும் சொல் லோட்டமும் உடையவை. இதனால் கதையைத் தொடர்ச்சி யாகப் படிக்காதவர்கள்கூட மேற்போக்கான அறிமுகத்தோடு படித்துச் சுவைக்க முடிகிறது. தற்செயலாகத் தினத்தந்தி வாங்குவோருக்கு "முன் கதைச் சுருக்கம்" துணை புரிகிறது. ஒரு முறை தினத்தந்தி வாங்கியோரைத் தொடர்ந்து வாங்கத் தூண்டுவதற்குத் தொடர்கதைகளில் உள்ள மறைபொருள் உதவுகிறது.

சிக்கனத்தைப் பற்றிக் கவலைப்படாது, படிக்கும் தன்மையில் மட்டும் கவனம் செலுத்துவது தினத்தந்தியின் பக்க வார்ப்பு உத்திகளில் மேலோங்கி நிற்கும் கொள்கையாகும். தலைப்புகளில் பெரிய எழுத்துக்கள் பயன்படுத்துவது, பயிற்சியற்ற வாசகர்களின் முயற்சியை எளிமையாக்குகிறது. தலைப்புகளுக்கு இடையேயும், வரிகளுக்கு இடையேயும் தாராளமாக இடைவெளி விடப்படு கிறது. இது போதுமான பயிற்சியற்ற வாசகர்கள் படிப்பதற்கு எளிமையாக இருக்கிறது. அதிகக் கல்விப் பயிற்சியற்ற தொடக்க நிலை வாசகர்களுக்கு உரிய முறையில் செய்திகளை வெளியிடுவது, தமிழ் இதழ்களில் தினத்தந்தி மட்டுமேயாகும். இதனால் பிற எந்த இதழாலும் அடைய முடியாத ஒரு வாசகர் கூட்டத்தைத் தினத்தந்தி அடைந்துள்ளது.

ஒருமுறை தினத்தந்தியை வாங்கியவர்கள் அதைத் தொடர்ந்து வாங்கத் தூண்டும் முறையில் அதன் உள்ளடக்கம் இருக்கிறது. பிற இதழை வாங்குகிற ஒருவர் வாய்ப்புக் கிடைக்கும்பொழுது தினத்தந்தியைக் கூடுதலாக வாங்கத் தயங்குவதில்லை."

இந்த ஆய்வு முடிபுகள் ஒரு சிறந்த மதிப்பீடு என்றே நாம் சொல்லலாம்.

இந்த ஆய்வு முடிவுகளை வழிகாட்டியாகக் கொண்டு தினத் தந்தியைப் போன்ற வேறோர் இதழை இன்னொருவர் தொடங்க முடியுமா? இதற்கு அறிஞர் அண்ணா பதில் அளிக்கிறார்!

# இதழாளர் கையேடு

ஆதித்தனார் இதழாளர்தான்; எழுத்தாளர் அல்லர். என்றாலும், பல நூல்கள் எழுதியிருக்கிறார். அவற்றில் மூன்று நூல்கள் என்றென்றும் அவரின் பெயரைச் சொல்லிக் கொண்டு நிலைத்து நிற்கக் கூடிய முத்துக்கள். அவற்றில் முதல் நூலாக ''தமிழப்பேரரசு'' என்ற நூலை எடுத்துக் கொள்ளலாம். இந்நூலை அவரின் ''அரசியல் அறிக்கை'' என்றே சொல்ல வேண்டும். சுதந்திரத் தமிழ்நாடு என்ற குறிக்கோளுக்காகப் போராடிய அவர் தனது கொள்கை விளக்க நூலாக இதை எழுதினார். சுதந்திரத் தமிழ்நாடு ஏன் வேண்டும் என்பதை இந்நூலில் தெளிவாக விளக்கியிருக்கிறார். ''தமிழப்பேரரசு'' என்ற தனது கனவையே இந்நூலுக்குப் பெயராகச் சூட்டினார்.

70 பக்கமுள்ள சிறிய நூல், இது. அரசியல் விளக்க-கொள்கை விளக்க நூலாக இதை அவர் எழுதவில்லை. சுதந்திரத் தமிழ்நாடு ஏன் வேண்டும்-தமிழ்நாடு தனித்து வாழ முடியுமா என்பதை மட்டுமே இந்நூலில் விளக்குகிறார். சாதாரண மக்களுக்கு இது போதும் அல்லவா? அதனால்தான் சிறிய நூலாக இருக்கிறது. நூற்றுக்கணக்கான பக்கமுள்ள நூலாக இருந்தால், நூலின் கனத்தைப் பார்த்தே பாமர மக்கள் பயந்துவிடக்கூடாதே!

தமிழரசுக் கட்சி தொடங்கிய 1942ஆம் ஆண்டிலேயே இந் நூலை அவர் எழுதினார். அதே ஆண்டில் இந்நூல் இரு பதிப்புகள் வெளிவந்தது. 1958இல் 'நாம்-தமிழர்' இயக்கம் தொடங்கிய நேரத்தில், மீண்டும் இந்நூலை, வெளியிட்டார். அதே ஆண்டில் இருபதிப்பும், அடுத்த ஆண்டில் மறுபதிப்பும் வெளிவந்தன.

"தமிழன்", "தந்தி", "தினத்தந்தி"க்குப் பயன்படுத்திய அதே உயிருள்ள தமிழைத்தான் இந்த நூலுக்கும்-மற்ற நூல் களுக்கும்கூட அவர் பயன்படுத்தியிருக்கிறார். எவரும் படிக்கக் கூடிய, படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றோட்டமான எளிய-இனிய தமிழ். அந்நூலில் ஒரு பகுதியைப் பார்ப்போமா? அவரின் எழுத்து நடைக்கு எடுத்துக்காட்டாகவும் அதை வைத்துக் கொள்ளலாம்.

"தமிழ்நாட்டின் வரலாற்றில், 600 ஆண்டு என்பது ஒரு 'கால வட்டம்'. அதாவது 600 ஆண்டு வாழ்வும், அதன்பின் 600 ஆண்டு தாழ்வுமாக மாறிமாறி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், 600 ஆண்டு, 'அடிமைக்கால வட்டம்' இப்போது முடிந்துவிட்டது.

**தமிழ்த்தாயின் கண்ணீர்**

இந்த 600 ஆண்டுகளில் தமிழ் மக்களின் அடிமை வாழ்வை நினைத்துப் பார்த்தால் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது. கி.பி. 14ஆம் நூற்றாண்டுவரை வெற்றிக் கொடி நாட்டி, உலகம் எல்லாம் வியக்கும்படியாக மேன்மை அடைந்த நாம், முதலில் விஜயநகர ஆந்திரர்களுக்கு அடிமையானோம். அதன் பின் உருதுக்காரர்களும், பின்னர் ஆங்கிலேயர்களும், நம்மை அடிமை ஆக்கினார்கள்...... தமிழர்களின் மானம் பறி போயிற்று! தமிழ்த் தாயின் மானத்தைக் காக்க முடியாமல், தமிழ் மக்கள் வேதனைக்கு உட்பட்டோம்!

**உறுதி! உறுதி!!**

அந்தக் 'கறுப்பு'க் கால வட்டத்தை இப்போது கடந்து விட்டோம். தமிழ் நாட்டின் 'பொற்காலம்' மீண்டும் தோன்ற வேண்டிய நேரம், நமது காலத்தில் வந்துவிட்டது. 600 ஆண்டு காலம் முடிந்துவிட்டதால், தமிழ் மக்கள் விழித்து எழுவது உறுதி! மீண்டும் உலகத்தின் உச்சியை எட்டிப் பிடிப்பது உறுதி! இதுதான் வரலாற்றின் வலுக்கட்டாயமான போக்கு! இதைத் தடுத்து நிறுத்த எந்த மனிதராலும் முடியாது!"

எப்படி எழுத வேண்டும் என்று சொல்லுவாரோ, அப்படியே உயிர்த்துடிப்புடன் எழுதிக்காட்டியிருக்கிறார்.

அரசியல் வாதியாக அய்யா எழுதிய ஓரே நூல், இதுதான்.

**சட்டமன்ற விதிகள்**

ஆதித்தனாருக்குச் சட்டமன்ற அனுபவம் நிறைய உண்டு. 1947 முதல் 1953 வரை அவர் தமிழ்நாடு மேலவை உறுப்பினராக இருந்தார். 1957 முதல் 1962 வரை சட்டப் பேரவை உறுப்பின ராகப் பணியாற்றினார். 1964இல் மீண்டும் மேலவைப் பணியைத் தொடர்ந்தார். 1967இல் பேரவைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டு, பேரவை உறுப்பினர்களால் தங்கள் தலைவராகவும் (பேரவைத் தலைவர்) தேர்ந்து எடுக்கப்பட்டார்

பேரவைத் தலைவராக அவர் பணியாற்றியது, 17 மாதமே. (17-3-1967 முதல் 12-8-1968 வரை). இந்தக் குறுகிய காலத்துக் குள் பேரவை வரலாற்றில் பல முத்திரைகளைப் பதித்தார். பேரவையை மாண்புடையதாகச் செய்ததே அய்யாதான். "மாண்புடைய" என்று அழைக்கும் மரபை அறிமுகப்படுத்தினார். பேரவை நிகழ்ச்சிகளைத் தமிழில் நடத்தத் தொடங்கியவர் அவரே! நாள்தோறும் ஒரு குறளைக் கூறிப் பேரவை நிகழ்ச்சி களைத் தொடங்கும் மரபை ஏற்படுத்தியவரும் ஆதித்தனாரே!

அவர் அவைத்தலைவராக இருந்தபொழுதுதான் தமிழ் நாட்டுக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டும் தீர்மானம் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இந்தி ஒழிப்புத் தீர்மானம் (இரு மொழிக் கொள்கைத் தீர்மானம்) நிறைவேற்றப்பட்டதும் அவர் அவைத்தலைவராக இருந்த நாளில்தான். இது இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றிய மும்மொழித் தீர்மானத்துக்கு எதிரானது. இந்திய நாடாளுமன்றத்துக்கு எதிராக மாநில சட்ட சபை ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இந்தியாவில் இது தான் முதல் தடவை. இவையெல்லாம் தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

"சட்டப் பேரவை நடவடிக்கைகளை இப்பொழுது தமிழிலேயே நடத்தி வருகிறார், ஆதித்தனார். இதைப் பார்க்கும்பொழுது சட்டப் பேரவையில் தமிழ்த்தாயே வந்து பாடம் சொல்லிக் கொடுப்பதுபோல இருக்கிறது" என்று, அறிஞர் அண்ணா பாராட்டினார். "ஆதித்தனார் பேரவைத் தலைவராக இருப்பதால், பேரவையில் தமிழ்மணம் கமழுகிறது. தமிழ்த்தாய் புன்னகை பூக்கிறாள். தமிழர்கள் உவகை கொள்ளு கிறார்கள்" என்று கலைஞர் கருணாநிதி புகழ் மாலை சூட்டினார்,

இவை அனைத்திற்கும், ஆங்கிலத்தில் இருந்த சட்டப்பேரவை விதிகளைத் தமிழ்ப்படுத்தி, ''தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகள்'' என்று நூலாக அய்யா வெளியிட்டது, இமயமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு சட்டசபைக்கு என்றென்றும் வழி காட்டிக் கொண்டிருக்கும் நூல், இது. ஆதித்தனாரின் பெயரைக் காலத்துக்கும் சொல்லக்கூடியது, இந்நூல். இருபது ஆண்டு காலச் சட்ட மன்ற அனுபவத்தைக் கொண்டு அவர் எழுதிய ஒரே நூல், தமிழ்த்தாய்க்குக் கிடைத்த புதிய அணி, இந்நூல். இந்நூலை எழுதவும் உயிர்த் தமிழையே அவர் பயன்படுத்தினார். அந்நாள் வரை இருந்த ''பிரேரணை'யைத் ''தீர்மானம்'' என்று மாற்றினார். இதுதானே மக்கள் தமிழ்?

இது ஒரு மொழி பெயர்ப்பு நூல். ஆங்கிலத்தில் இருந்த சட்டமன்ற விதிகளை அவர் தமிழ்ப்படுத்தினார். இதழாளர்கள் எப்படி மொழி பெயர்க்க வேண்டும் என்று சொல்லுவார்களோ, அந்த முறையைத்தான் இந்த மொழி பெயர்ப்பிலும் அவர் பின் பற்றினார். மொழி பெயர்ப்பாளர் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய முறை, இது. நூலின் முன்னுரையில் இதுபற்றி அவர் குறிப்பிட்டிருப்பது:

''தமிழ் நாட்டுச் சட்டப் பேரவையின் நடைமுறை விதிகளைத் தமிழாக்கம் செய்யும்போது, இரண்டு குறிக்கோள்களை நினைவில் இருத்திக் கொண்டேன். ஒன்று, ஆங்கிலத்திலுள்ள விதிகளின் கருத்துக்கள் சிதையாதிருக்க வேண்டும். இரண்டாவது தெளி வாகத் தெரியும்வண்ணம் தன்னிறைவு பெற்றிருத்தல் வேண்டும். புதிய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்த நேரிட்டதால், அவற்றுக்கு நேரான ஆங்கிலச் சொற்களை அடைப்புக்குள் எழுத வேண்டியதாயிற்று. நாளடைவில் இவ்வடைப்புகளை நீக்கிவிட முடியும்.

எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் பொருட்டு, நீண்ட நாட் களாக வழக்கத்தில் உள்ள ''மசோதா'', ''நிதி'', ''விவாதம்'' போன்ற சில சொற்களைச் ''சட்ட மூலம்'', ''பணம்'', ''சொல் லாட்டம்'' என்று மாற்றாமல் விட்டு வைத்திருக்கிறேன்.''

பேச்சுத் தமிழே உயிர்த்தமிழ் என்பதால், எந்த இடத்திலும் அந்த உயிர்த் தமிழையே அவர் பயன்படுத்தினார். தனது மொழி யில், நடையில் முழு நம்பிக்கை இருந்ததால், சட்டப் பேரவை விதிகளைக் கூடத் தமிழில் ஆக்க அந்த மொழி-நடையையே பின் பற்றினார். பேச்சுத்தமிழில் இல்லாத எந்த நூலும் மக்களிடம்

இருந்து விலகிச் சென்று அலமாரிகளில் அடக்கமாகிவிடும்; இந் நூலுக்கு அறிஞர் அண்ணா அணிந்துரை அளித்திருக்கிறார். இந் நூலின் சிறப்புகளை எடுத்துக்காட்டுவதாக அவ்வுரை அமைந் துள்ளது. அதன் ஒரு பகுதி:

''தமிழ் ஆட்சிமொழியாகிவிட்ட பிறகும் சட்டப் பேரவைக் கான விதிமுறைகள் ஆங்கில மொழியிலேயே இருந்துவருவது பொருந்தாது என்பதனை உணர்ந்த சட்டப் பேரவைத் தலைவர், தமிழிலேயே விதிமுறைகள் இருந்திட வேண்டுமென விழைந்தார். வேறுபலர் அந்த அளவோடு தமது பணி முடிந்ததாகக் கருதிக் கொண்டு, அதன் தொடர்பான பணிகளை மற்றவர்களிடம் தந்து விடுவர். ஆனால், சி.பா. ஆதித்தனார் தமிழார்வ மிகுதி காரண மாகத் தாமே அந்தப் பணியினையும் மேற்கொண்டு, விதிமுறை களைத் தமிழாக்கம் செய்து அளித்துள்ளார்கள்.

தமிழாக்கம் மிகுந்த கவனத்துடனும், தரம் நிரம்பியதாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம். ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக் கும் தமிழாக்கம் தரப்பட்டுள்ள பாங்கு பாராட்டத்தக்கதாக இருக்கிறது. ஆர்வத்துடன் இப்பணியினை மேற்கொண்ட நம் முடைய நண்பர் இந்நூலின் மூலம் சட்டப்பேரவையின் நடவடிக் கைகளில் தமிழ் மணம் கமழ்ந்திட வழி வகுத்துத் தந்துள்ளார். தமிழ்நாட்டில் தமிழறிந்தோர் ஆட்சி வேண்டுமென்று அன்று பாவேந்தர் கூறினார். இன்று அந்நிலை வடிவமெடுத்துள்ளது. அதற்கு வண்ணம் கிடைத்திட இந்நூல் பெரிதும் பயன்படும்.

நீண்ட நாட்களாக நிலவிவரும் குறையினைக் களைந்தெறியும் முறையில் கிடைத்துள்ள இந்தத் தமிழாக்கம் தந்துள்ள சி. பா. ஆதித்தனாருக்குத் தமிழ்நாடு மிகவும் கடமைப்பட்டுள்ளது.''

**இதழாளர் கையேடு**

அய்யா எழுதியுள்ள மூன்றாவது நூல், ''இதழாளர் கையேடு''. அவர் உயிர்மூச்சாக விளங்கியது, இதழியல். அந்த இதழியல் பற்றி அவர் எழுதியுள்ள ஒரே நூல், இந்த ''இதழாளர் கையேடு''தான்!

அய்யா ஒவ்வொரு துறையிலும் ஒரு நூல்தான் எழுதியிருக் கிறார். ஒரே நூல் என்றாலும், அந்தத்தத் துறையில் அந்நூலே திருக்குறள்.

''இதழாளர் கையேடு'' இதழாளர்களுக்கு உறுதியாக ஒரு திருக்குறள்தான். இதற்கு முன்பும் இப்படி ஒரு நூல் தமிழில்

வெளிவரவில்லை; இதற்குப் பின்பும் இன்று (1990) வரை இப்படி ஒரு நூல் தமிழில் வெளியாகவில்லை. இந்நூல் வெளிவந்த பொழுது (1971) தமிழில் இதழியல் நூலே இல்லை என்று சொல்லலாம். அதன்பின் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், இப்பொழுதுங்கூட, "பத்தோடு ஒன்று பதினொன்று, அத்தோடு இது ஒன்று" என்று இல்லாமல், "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" என்பது போல இந்நூல் தனித்தே திகழ்கிறது.

இந்நூலுக்கு இணையான இன்னொரு நூல் இன்றுவரை தமிழில் வரவில்லை. வந்துள்ள நூல்கள் எல்லாம், ஆங்கிலநூல் களைப் படித்துவிட்டு, படித்ததைத் தங்கள் மொழியில், நடையில் எழுதிய நூல்களே ஆகும். அவர்போல அனுபவ அறிவுடன் எவரும் நூல் எழுதவில்லை. "ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறளும் பாயிரத்தினோடு பகர்ந்ததன்பின் போய் ஒருவர் வாய்க் கேட்க நூல் உளவோ" என்றபடி, இந்நூலைப்படித்து உணர்ந்து விட்டால், போய் ஒருவர் வாய் கேட்க இதழியல் நூல் இல்லை. இதழியலைப்பற்றி அனா முதல் ன்னா வரை எல்லா விவரங்களை யும் நறுக்காக இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**அனுபவக் களஞ்சியம்**

ஆதித்தனாரின் அனுபவக்களஞ்சியம், "இதழாளர் கையேடு."

அனுபவ வாயிலாகத்தான் அவர் இதழியலைக் கற்றுக் கொண்டார். அவர் இதழியலைப் படித்ததும் இல்லை; அதில் பயிற்சி பெறவும் இல்லை. ஆங்கில இதழியல் நூல்களைக் கற்றதும் இல்லை. தண்ணீரில் இறங்கி நீந்தக்கற்றுக்கொள்வது போல, இதழ்கள் தொடங்கி இதழியலை அறிந்துகொண்டார். தவறு களில் இருந்து சரியானவற்றைக் கற்றுக்கொண்டார்.

வெளிநாட்டுச் செய்திகளை வெளியிடும் பொழுது இடம் காட்டும் படம் போடவேண்டும் என்பது ஒரு விதி. இது எப்படிப் பிறந்தது? வி. சின்னசாமி சொல்லுகிறார் : இரண்டாவது உலகப் போர் நடக்கும் காலம். "ஆமா, சின்னசாமி ரஷியா, ஜெர்மனி, இங்கிலாந்து என்று தினமும் செய்தி போடுறிங்க. அவை எங்கே இருக்கு?" அய்யா அவர்களின் கேள்வி. நான் தயங்கிக்கொண்டே "இந்தியாவுக்கு மேற்கே" என்றேன், "சரி, அந்த நாடுகள் எங்கே இருக்குன்னு சாதாரண மக்களுக்குப் புரியுமா? போய் வாட்ச்மேன் கிட்டே முதலில் கேட்டுவாங்க". நான்போய்க் கேட்டேன் தெரியலைங்க ]) 1 வாட்ச்மேன் பதில். அய்யா அவர்களிடம் சொன்னேன்.

''பார்த்தீங்களா, யாருக்கும் தெரியல்லே. எந்த நாடு இந்தியாவுக்கு எந்தப் பக்கம் இருக்கு, எத்தனை மைல் தூரம்னு எழுதிப் போடுங்க'' இப்படியாகத்தான் அந்த விதி பிறந்தது.

ரஷியாவுக்குப் போய்வந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனைக் கலைஞர் கருணாநிதி சென்னை விமான நிலையத்தில் கட்டித்தழுவி வரவேற்றார். அதை ''ஆலிங்கனம் செய்து வரவேற்றார்'' என்று ஒரு துணை ஆசிரியர் எழுத, ''ஆலிங்கனம் என்றால் யாருக்குப் புரியும்? ''கட்டித்தழுவி என்று எழுத வேண்டும்'' என்று அய்யா ஆணை பிறப்பித்தார்.

''பகாளாபாத்'' தயிர்ச்சோறு என்று மாறியதும் அப்படித்தான். இருவர் நிர்வாணச் சாமியார் பற்றிப் பேசிக்கொண்டு போனதைக் கேட்ட அய்யா ''நிர்மாணத் திட்டம்'' என்பதை ''ஆக்க வேலை'' என்று மாற்றினார்.

('ஆனந்தவிகடன் - 7-6-1981)

''வேறு ஒரு ஆளுடன் கட்டிலில் படுத்திருந்தாள்'' என்ற தலைப்புடன் ஒரு செய்தி, அதைப் படித்த அய்யா ''இப்படித் தலைப்புப் போடக்கூடாது. இது ஆபாசம்'' என்று உடனே விதி பிறப்பித்தார். (அய்யா ஆபாசத்தை எதிர்த்தார் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு)

''பிற இதழ் ஆசிரியர்களைப் பற்றித் 'தினத்தந்தி'யில் செய்தி வெளியிடக்கூடாது'' என்று ஒரு விதி. இந்த விதி ஏற்பட நான் தான் காரணம். ஓர் இதழின் ஆசிரியர் ஓர் இரவில் ஒரு துணை நடிகையுடன் களித்திருந்தபொழுது கைது செய்யப்பட்டார். இரவே எனக்கு இச்செய்தி எட்ட, மறுநாள் காலையில் 'தினத்தந்தி'யில் வெளிவந்துவிட்டது. அடுத்த வாரமே அந்த ஆசிரியரின் இதழில்—அது ஒரு ''பச்சை இதழ்''. மாடிலெட்சுமியுடன் மாரிசாமி ஜல்சா!'' என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுவிட்டார்!

மாரிசாமி என்பது எனது முழுப்பெயர். மாடிலட்சுமி ஒரு துணை நடிகை. இந்த அழகில் அப்பொழுதுதான் எனக்குத் திருமணம் நிச்சயமாகியிருந்தது! ''மாடிலட்சுமி வீட்டுக்கு வர மாரிசாமி பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள் இதுதான்'' என்று செய்தியுடன் ஒரு படமும் வெளியிடப்பட்டிருந்தது. என்னிடம் மோட்டார் சைக்கிளே இல்லாததால், என் தலை தப்பியது. அந்தச் செய்தி அய்யாவின் பார்வைக்கு வந்தது. உடனே மேற்படி விதியைப் பிறப்பித்தார்.

அய்யா ஒரு நெருப்புப்பந்து போல. தவறுதான் அவர் கண்களுக்கு முதலில் தெரியும். தெரிந்ததும், எரிமலைபோல வெடித்து விடுவார். உடனே ஒரு விதி தோன்றிவிடும். ஒரு தவறு மீண்டும் ஏற்படக்கூடாது என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார்.

### விழிப்புடன் இருக்கவேண்டும்

முதலில் ஆதித்தனாரே விதிகளை எழுதி அனுப்பினார். பிறகு ஆசிரியரை எழுதச் சொல்லி, கையெழுத்திட்டார். அதன்பின் ஆசிரியரே கையெழுத்திட்டு, "அய்யா அவர்களின் ஆணைப்படி" என்று அனுப்பிவைத்தார்.

விதி எப்பொழுது பிறக்கும் என்று சொல்லவே முடியாது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டபொழுது அய்யா காரில் கோவைக்குப் போய்க் கொண்டிருந்தார். இரவு தாமதமாகப் போய்ச் சேர்ந்தார். காலையில் "தினத்தந்தி"யைப் பார்த்துத்தான் அய்யா அவர்களுக்குச் செய்தி தெரிந்தது, உடனே தொலைபேசியை எடுத்து "இரவே எனக்கு ஏன் சொல்லவில்லை?" என்று ஆசிரியரிடம் கேட்டார். "தூங்கிக்கொண்டு இருந்த உங்களை எழுப்ப வேண்டாம் என்று எண்ணினேன்" என்றார் ஆசிரியர். அதைக் கேட்டதும், அய்யா வெடித்தார் "தூங்குகிறவன் இதழாளன் அல்ல. இதழாளன் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும். எழுதிக்கொள்ளுங்கள்" ஒரு புதிய விதி பிறந்தது. தூங்காமை, துணிவுடைமை இரண்டும் இதழாளர்களுக்கு வேண்டும் என்று அடிக்கடிச் சொல்லுவார்.

"கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார்" என்று அந்த செய்திக்குத் தலைப்பு இருந்தது. "சுட்டுக் கொலை என்று இருந்தால் போதுமே, தலைப்புகள் ஆணி அடித்தது போல இருக்க வேண்டும். எழுதிக்கொள்ளுங்கள்" அந்தக் கோபத்திலும் அடுத்த விதி பிறந்தது!

இப்படியாக எது செய்தி, அந்த செய்தியை எப்படிச் சேகரிப்பது, எப்படிப் பதிப்பது என்று அய்யா அடிக்கடி விதி செய்துகொண்டே வந்தார். செய்தித்துறைக்கு மட்டுமல்ல; விளம்பரம், விற்பனை, நிர்வாகம் என்று எல்லாத்துறைக்கும் ஏறத்தாழ முப்பதாண்டுக்காலம் இப்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளைத் தொகுத்து, தலைப்புவாரியாக வகுத்து, நூலாக வெளியிடும் பணியை அடியேன் ஏற்றுக்கொண்டேன்.

1971இல் இந்நூல் வெளிவந்தது. அப்பொழுது இதற்கு "நாள் தாள் எழுத்தாளர் கையேடு" என்று அய்யா பெயரிட்டார். இரண்டாம் பதிப்பு 1978இல் வெளிவந்தது. அப்பொழுது நூலின் பெயரைப் "பத்திரிகை எழுத்தாளர் கையேடு" என்று மாற்றினார். மூன்றாம் பதிப்பு 1986இல் வெளிவந்தது. இப்பொழுது நூலின் பெயர் "இதழாளர் கையேடு" என்று மாற்றம் பெற்றது. அய்யா செய்த மாற்றம், இது. வாசகர் தரம் உயர உயரத்தினத்தந்தித் தமிழும் உயர்கிறது என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

**குறைதீர்ந்தது**

அய்யா சிறந்த இதழாளராக இருந்தும்-இதழுலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தும், தமது அனுபவங்களை எழுதிவைக்காமல் போய்விட்டாரே என்று நான் வருந்துவது உண்டு. "ஆனந்த விகடன்" கூட, "பட்டி தொட்டிகளில் எல்லாம் "தினத்தந்தி" இதழ் பரபரப்புடன் விற்கும் சாதனையைச் சாதித்த சி. பா. ஆதித்தனார், தமது வெற்றியின் இரகசியத்தை அதிகம் விளம்பரம் படுத்திக்கொண்டதில்லை. அவரிடம் குட்டுப்பட்டு வளர்ந்த பத்திரிகையாளர்கள் பலர் அவரைப்பற்றிச் சொல்லித்தான் அவரது பல பெருமைகள் வெளிப்பட்டன" என்று கூறுகிறது. (7-6-1981 இதழ்)

இந்தக் குறையை "இதழாளர் கையேடு" நீக்குகிறது. தனது அனுபவங்களில் இருந்து இதழாளர்களுக்கு எதைச் சொல்ல வேண்டுமோ அதை இந்நூலில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

இந்நூலின் முதல் பதிப்பு வெளிவந்தபொழுது துணைவியார் ஆச்சியம்மா "உங்கள் தொழில் இரகசியத்தையெல்லாம் இப்படிப் பகிரங்கப்படுத்திவிட்டீர்களே!" என்று சொன்னார். அதற்கு அய்யா "இருக்கட்டுமே, ஆச்சி. என்னைப்போல இன்னும் பலர் தோன்றினால், இதழ்த் தொழிலுக்கு நல்லதுதானே. நம் தமிழ் வைத்தியர்கள் தாங்கள் அறிந்த மருத்துவ முறைகளை மற்றவர்களுக்குச் சொல்லித்தராமல், மறைத்து மறைத்து வைத்த தால்தானே தமிழ் மருத்துவமே அழிந்துவிட்டது" என்று கூறினார்.

எவ்வளவு பெரிய உள்ளம். தனக்குத் தெரிந்ததை மற்றவர் களுக்குச் சொல்லிக்கொடுப்பதில் அய்யா எப்பொழுதுமே மகிழ்ச்சி அடையவே செய்வார். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பரந்த உள்ளம் அவருக்கு இருந்தது.

"உங்கள் தொழில் இரகசியத்தை எல்லாம் வெளியில் சொல்லி விட்டீர்களே" என்று கலைஞர் கருணாநிதி ஒருமுறை குறிப்பிட்டார். அதற்கு அய்யா "வாசல் வரைதான் அழைத்துப் போயிருக்கிறேன்" என்று அடக்கமாகச் சொன்னார். அய்யா இருந்திருந்தால், இதழியல் பற்றி இன்னும் பல நுட்பங்களைக் கூறியிருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனாலும், இந்நூல் வழியாக இதழியல் உலகின் வாயிலைத் திறந்துவிட்டிருக்கிறார். திறமையுள்ளவர்களுக்குக் கையைக் காட்டினால் போதாதா?

**பாராட்டு**

"இதழாளர் கையேடு" நூலை இதழ்கள் வரவேற்றன. இதழாளர்கள் பாராட்டினார்கள். "முறையான பயிற்சி இல்லாமல் தமிழ் இதழ்களில் செய்தியராகவும், துணை ஆசிரியராகவும் பணியாற்றுகிறவர்களுக்கு இந்நூல் பயனுள்ள கையேடு" என்று "இந்து" இதழ் எழுதியது. (23-5-1978) "அனுபவமிக்க ஆதித்தனார் எழுதியுள்ள இந்நூல் செய்தித்தாள் துறையில் உள்ளோர் அனைவருமே போற்றிப் பாதுகாக்க வேண்டிய நூலாகும். இதழியல் படிப்புக்குப் பாடநூலாக வைக்கத் தகுந்தது" என்று "தினமணி" இதழ் (23-7-1978) எழுதியது. இதழியல் மாணவர்களுக்குச் சிறந்த நூலாக இந்நூல் இப்பொழுதும் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. எப்பொழுதும் பயன்படும் என்பது உறுதி.

"தமிழ்த் தினசரிகளில் 'தினத்தந்தி" அதிகமாக விற்பதற்குக் காரணம் என்ன?" என்று ஒரு வாசகர் கேட்க, "கல்கண்டு" 20-10-1977 இதழில் புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன் பின் வருமாறு பதில் அளித்தார்.

"நாளிதழில் வெளிவரும் செய்திகள், சொற்கள், தலைப்புகள், துணைத்தலைப்புகள், படங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி 'தினத்தந்தி' நிறுவனர் ஆதித்தனார், "எழுத்தாளர் கையேடு" என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்த நூலில் உள்ளபடித் 'தினத்தந்தி' நடத்தப்படுவதால், தமிழ் நாளிதழ்களில் தினத்தந்தி அதிகமாக விற்பனையாகிறது."

"இந்த நூல் என்னிடம் இருக்கிறது. இதைப் பொதுவாக 'எழுத்தாளர் கையேடு' என்றே சொல்லலாம். எல்லா எழுத்தாளர்களுக்கும் பயன்படக்கூடிய நூல், இது" என்கிறார்.

எழுத்தாளர், சுஜாதா. (''நெல்லை மாலை முரசு வெள்ளிவிழா மலர்'' —சுஜாதா சொல்லும் ஒரு தகவல்: எனது கதைகளை மொழிபெயர்க்கும் மலையாள நண்பர் வேணுகொடுங்களூர் தமிழ் கற்றுக்கொண்டது, 'தினத்தந்தி'யிலிருந்து! ''முதலில் படக் கதையை எழுத்துக்கூட்டிப் படிக்கத் தொடங்கினேன். அப்புறம் மெல்ல மெல்ல தலைப்புச் செய்திகள்' மற்றச் செய்திகளைப் படிக்கக் கற்றுக்கொண்டேன்! என்கிறார். )

அ. சாந்தா சொல்லுவது: ''விதிமுறை ஏடு ஒன்றினை சி.பா. ஆதித்தனார் எழுதியுள்ளார். இத்தகைய முயற்சி வேறு எந்தத் தமிழ் நாளிதழிலும் செய்யப்படவில்லை. செய்தியாளர்களும், துணை ஆசிரியர்களும் பின்பற்ற வேண்டிய விதிகளைக் கொண்ட நூலை ஒவ்வொரு தமிழ் இதழ் நிறுவனமும் உருவாக்க வேண்டும். இதற்குத் தினத்தந்தியின் விதிமுறை நூலான இதழாளர் கையேட்டை முன் மாதிரியாகக் கொள்ளலாம்.''

பள்ளிப் பருவத்தில் இருந்தே ''முரசொலி'' இதழ் நடத்தி வரும் முதல்வர் கருணாநிதி இந்நூல் பற்றிக் குறிப்பிடுகையில், ''இது பயனுள்ள பணி'' என்கிறார். அவர் சொல்லுகிறார்: ''இதழ்களை எப்படி நடத்தவேண்டும், இதழ்களுக்கு எப்படி எழுதினால் வெற்றி கிடைக்கும் என்பதையெல்லாம் விளக்கி ஆதித்தனார் ஒரு நூல் ('இதழாளர் கையேடு') எழுதியிருக்கிறார். இதழாளர் தங்கள் திறமையை இவ்வளவு வெளிப்படையாகச் சொன்னது கிடையாது. பழைய காலத்தில் சித்த வைத்தியர்கள் தாங்கள் கற்ற வைத்திய முறைகளை மற்றவர்களுக்குச் சொல்லித் தராமல் போய்விடுவார்கள், அவர்களுக்குப் பிறகு அவர்களின் அறிவும் அனுபவமும் யாருக்கும் பயன்படாமலே போய்விடும். சித்த வைத்தியம் ஒழிந்து சிதைந்ததற்கு இதுவும் ஒரு காரணம். ஆதித்தனார் அவர்கள் அப்படியில்லாமல், தனது தொழில் இரகசியம் முழுவதையும் எல்லாரும் அறிந்து பின்பற்றிப் பயன் அடையும் முறையில் எழுதி வெளியிட்டு இருப்பது பயனுள்ள சிறந்த பணியாகும்.''

**அறிஞர் அண்ணா**

''இதழாளர் கையேடு'' நிச்சயம் பயனுள்ள பணிதான். தமிழ் இதழ் உலகிற்கு அய்யா அளித்துள்ள ஈடு இணையற்ற மிகப் பெரிய நன்கொடை, ''இதழாளர் கையேடு''. இதழாளர்களும், எழுத்தாளர்களும் அந்நூலில் இருந்து நிறையக் கற்றுக்கொள்ள முடியும், ''கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக''

என்றபடி, தாங்கள் கற்றதைத் தவறாமல் பின்பற்றுவார்களே யானால் அவர்கள் வெற்றி பெறுவது உறுதி.

ஆனால், இந்நூலைப் படித்து முடித்துவிட்டு, ஒருவர், இன்னொரு 'தினத்தந்தி' தொடங்கமுடியுமா? ஆதித்தனாரைப் போல அதிலே வெற்றிகாண முடியுமா? புதிதாக ஓர் இதழ் தொடங்கி, இப்படிச் சொல்லியிருக்கிறார்களே, அப்படிச் சொல்லியிருக்கிறார்களே என்று இந்நூலில் அவர் கூறியுள்ள விதி களை எழுத்துக்கு எழுத்து அப்படியே பின்பற்றி அந்த இதழை நடத்துவதன் வாயிலாக, அவர் அடைந்த அதே வெற்றிகளை இவர்களும் எட்ட இயலுமா?

தினத்தந்தியின் வெள்ளிவிழாவில் பேருரை ஆற்றிய அறிஞர் அண்ணா இதனையும் தொட்டுப் பேசினார். அப்பொழுது இந்நூல் வெளிவரவில்லை. அவரின் உத்திகளை அப்படியே எடுத்துக்கொண்டு, ஒருவர் ஓர் இதழ் தொடங்கினால் அவர் வெற்றி பெற முடியுமா என்ற கேள்வியை அண்ணாவே எழுப்பி, அதற்கு அவரே விரிவாக விடையும் அளித்தார். அந்த உரைப் பகுதி :

''எப்படி இதழ் நடத்தினால் வெற்றியுடன் நடத்த முடியும் என்பதை மட்டும் எண்ணிக் கொண்டு, ஒரு வாரத்துத் தினத்தந்தி படிகளை வாங்கி மேசையிலே வைத்துக் கொண்டு, இப்படி இப்படி தலைப்பு இருக்கவேண்டும், முழு நீளத் தலைப்பு இருக்க வேண்டும்; ஆறு பாத்தித் தலைப்பு இருக்க வேண்டும்; ஏதாவது ஒரு கொலை வழக்கைப் பற்றிய செய்தி இருக்க வேண்டும் என்று எண்ணி ஒரு புதிய நாளிதழ் தொடங்குவார்களேயானால், அது தோல்வி அடைந்து, 'இது என்ன! தினத்தந்தி நடக்கிறபொழுது வெற்றி ஆகிறது. அதே முறையில் நாம் நடத்தினால் வெற்றி ஆகவில்லையே', என்று வருத்தப்பட்டுக்கொள்ளக் கூடும்.

ஒரு முறை வடஆற்காடு மாவட்டத்துக்குத் தேர்தல் பிரச்சாரத்துக்காக நான் சென்ற பொழுது என்னுடன் என் கல்லூரி நண்பன் ஒருவனும் வந்தான். 'நீ வேறு ஏதும் செய்ய வேண்டாம். இன்றைய தினம் அண்ணாதுரை என்ன பேசுகிறானோ அதை அப்படியே கவனமாகக் கேட்டுக்கொண்டு, நாளைய தினம் அதையே நீ பேசு. பேச்சிலே வெற்றி கிடைக்கும்' என்று அவனுடைய நண்பர்கள் சொல்லிவைத்திருக்கிறார்கள்.

நான், ஒரு நாள் இரவு ஒரு மணி, இரண்டு மணி இருக்கும், ஒரு சிற்றூருக்குச் சென்று பேசினேன். கூட்டத்துக்கு வந்தவர்

களில் பாதிப்பேர் தூக்கத்தில் இருந்தார்கள். ''நீங்கள் எல்லாம் அயர்ந்து தூங்க வேண்டிய நேரம். இந்த நேரத்திலே உங்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காக மன்னிக்கவேண்டும்'' என்று நான் பேச்சைத் தொடங்கினேன். கூட்டத்தினர் ஆரவாரம் செய்து அகமகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

மறுநாள் காலை ஆறு மணிக்கெல்லாம் மற்றோர் ஊரிலே கூட்டம். என் நண்பனை முதலில் பேசச் சொன்னேன். நேற்றைய என் பேச்சைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அவன், 'நீங்கள் எல்லாம் அயர்ந்து தூங்கவேண்டிய நேரம். இந்த நேரத்தில் உங்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டும்' என்று பேச்சைத் தொடங்கினான். எல்லாரும் கேலியாகச் சிரித்தார்கள்.

''இந்த மக்கள் பொல்லாதவர்கள். நீங்கள் பேசினால் கைதட்டுகிறார்கள்; நான் பேசினால் கேலி பண்ணுகிறார்களே'' என்று என்னிடத்திலே கூறி நண்பர் வருத்தப்பட்டார். அதைப் போலவே எந்த நாளிதழாவது, தினத்தந்தியிலே வருகிற தலைப்பையே போட்டு நாமும் விற்பனையை அதிகப்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணுவார்களேயானால், என் நண்பனுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவந்தான் அவர்களுக்கும் ஏற்படும்.

ஏனென்றால், தலைப்பு மட்டுமல்ல, தினத்தந்தியின் வெற்றிக்குக் காரணம்; செய்திகளில் சூடு பறப்பது மட்டுமல்ல தினத்தந்தியின் வெற்றிக்குக் காரணம்; உடனுக்குடன் செய்திகளைத் தருவது மட்டுமல்ல தினத்தந்தியின் வெற்றிக்குக் காரணம்; எதை எதை எந்த முறையில் அமைத்தால் இழப்பு ஏற்படாமல் இருக்கும் என்ற வியாபாரத்திறமை மட்டுமல்ல தினத்தந்தியின் வெற்றிக்குக் காரணம்; இந்த அத்தனையும் சேர்ந்த ஒட்டு மொத்தந்தான் தினத்தந்தியின் வெற்றிக்குக் காரணமே தவிர வேறொன்றுமில்லை.

ஒரு வீணையின் நரம்புகள் அத்தனையும் வேலை செய்ய வேண்டிய முறையில் வேலை செய்தால்தான் இசை பிறக்கும். செய்தியாளர்களிலிருந்து விளம்பரம் தேடித் தருவோர் வரையில் விற்பனையாளர்களிலிருந்து, தலைப்புகளை எடுப்பாகப் போடுகிறவர்கள் வரையில் எல்லாருடைய கூட்டு முயற்சிதான் தினத்தந்தியின் வெற்றிக்குக் காரணம் இந்தக் கூட்டு முயற்சி யாராலே ஏற்பட்டது என்பதைப் பார்க்கிற பொழுதுதான், நாம் ஆதித்தனாரைப் பாராட்ட வேண்டியிருக்கிறது.

எதை எதை எந்த இடத்தில் பொருத்தினால் சரியாக இயங்கும் என்பதுதான் திறமைக்கு எடுத்துக்காட்டு. ஒரு கார் பழுது பட்டுவிட்டது. அதன் உரிமையாளர் அதைக் கொண்டு போய்ப் பழுதுபார்ப்போனிடம் காட்டி, பழுது பார்க்கச் சொன்னார். பழுது பார்ப்பவர் 'பானட்'டைத் தூக்கி, ஒரு பத்து நிமிடம் இங்கும் அங்குமாகத் தொட்டுப்பார்த்து, கடைசியில் ஒரு சிறிய சுத்தியல் கொண்டுவந்து ஓரிடத்தில் ஒரு தட்டு தட்டினார். பழுது சரியாகிவிட்டது. பதினைந்து ரூபாய் கொடுங்கள் என்று கேட்டார். சொந்தக்காரருக்கு மிகவும் கோபம், 'சுத்தியலால் ஒரு தட்டுத்தானே தட்டினாய்? இதுக்கா பதினைந்து ரூபாய்? என்று சீறினார். அதற்குப் பழுதுபார்ப்பவர், 'ஒரு தட்டுக்குப் பதினைந்துரூபாய் அல்ல. எந்த இடத்திலே தட்ட வேண்டும் என்று கண்டுபிடித்தேனே, அதற்குத்தான் பதினைந்து ரூபாய் என்று பதில் சொன்னாராம். அதைப்போல, நண்பர் ஆதித்தனார் ஒரு தட்டுத்தட்டி தினத்தந்தி வந்துவிடவில்லை அதை எந்த இடத்திலே தட்டினால் இதழ் வெற்றி பெறும் என்பதைக் கண்டுபிடித்ததிலேதான் அவரது திறமை இருக்கிறது. நமது பாராட்டுரைகளுக்கு அவர் உரியவர் ஆகிறார்''.

''காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே'' என்பார்களே, அதைத்தான் அறிஞர் அண்ணா சொல்லியிருக்கிறார். எதுகை மோனைகளைத் தேமா, கூவிளங்காய் என்ற இலக்கணங்களைக் கற்றுக்கொள்வதாலேயே ஒருவர் கவிஞர் ஆகிவிட முடியுமா? ''உள்ளத்து உள்ளது கவிதை'' என்பார், கவிமணி. அந்தக் கவி உள்ளம் அல்லவா முதலில் வேண்டும்?

தொழில் நுட்பங்களைக் கற்றுக்கொள்வதாலேயே ஒருவர் தொழில் தொடங்கிவிட முடியாது. தொழிலிலே வெற்றி காணவும் முடியாது. அய்யா வெற்றி பெற்றார் என்றால், அதிலே அவரின் உழைப்பு இருக்கிறது. திறமை என்பது வேறு ஒன்றுமில்லை; உழைப்புதான். அந்தக் கடுமையான உழைப் பினால்தான் அவர் வெற்றிபெற முடிந்தது.

எப்படி உழைக்கவேண்டும்; பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சுவது போல அந்த உழைப்பை எப்படி எப்படிச் சீர்படுத்திப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற வழிமுறைகளை வகுத்துத் தொகுத்துத் தருவதுதான், ''இதழாளர் கையேடு''.

ஆதித்தனாரின் நிர்வாகத் திறமையும் அவரின் வெற்றிக்கு ஆதாரமாக அமைந்தது. இதழாளனாக வெற்றி பெறுவது வேறு. நிர்வாகியாக வெற்றி காண்பது வேறு. இந்த இரண்டும் இணைந்தால்தான் ஓர் இதழ் வெற்றியை ஈட்ட முடியும். ''கல்கி''க்குச் சதாசிவம் நிர்வாகியாக அமைந்தார். வாசன் நிர்வாகத்தைத் தம் கையில் வைத்துக்கொண்டு, ஆசிரியர் பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைத்தார். இன்றைக்குக்கூட ''குமுதம்'' அண்ணாமலை ஆசிரியராக இருந்தாலும், நிர்வாகப் பொறுப்பு பார்த்தசாரதியிடம். ஆனால், அய்யா செய்தித்துறை-நிர்வாகத்துறை இரண்டையுமே தனது பொறுப்பில் வைத்துக் கொண்டு வெற்றி பெற்றார். இந்த இரட்டைத் திறமை இருந்ததால்தான் தனி ஒரு மனிதனாக நின்று அவர் வெற்றி களைக் குவிக்க முடிந்தது.

## சில செய்திகள்

ஆதித்தனார் சிறந்த இதழாளர் மட்டுமல்ல; சீரிய நிர்வாகி மட்டுமல்ல; வேறு பல உயர்ந்த குணங்களும் அவரிடம் நிறைந்து காணப்பட்டன. அவர் ஒரு மனித அன்பர். கண்டிப்பானவர்; ஆனால், கருணை உள்ளம் படைத்தவர். சிக்கனக்காரர்; ஆனால், இக்கட்டான நிலையில் இருப்பவர்களுக்கு உதவத் தயங்காதவர்.

**''ஆறுமுகமான பொருள் நாம் உணர வேண்டும்**
**ஆதித்தன் எனும் பெயரில் அமைந்த பெரியாரே''**

என்பார், உணர்ச்சிக்கவிஞர் காசி. ஆனந்தன். அதற்கு ஏற்பப் பன்முக மனிதராக அய்யா விளங்கினார். சில செய்திகளைச் சொன்னால், அந்த இதழாளரின் அருங்குணங்களை நீங்களே உய்த்துணர முடியும்.

**காந்தியைப் போல**

அய்யா காந்தியடிகளைப் போன்றவர் என்று நான் சொல்வது உண்டு.

காந்தியைப் போன்றே இலண்டனுக்குப் போய்ப்படித்து, ''பாரிஸ்டர்'' ஆனார். பட்டம் பெற்றதும், காந்தி தென் ஆப்பிரிக்காவுக்குப் போய், அங்குப் பாரிஸ்டர் தொழில் செய்தார். அய்யா சிங்கப்பூர் போய்ப் பாரிஸ்டர் தொழில் செய்தார்.

இந்தியாவுக்கு வந்ததும் இந்தியாவின் விடுதலைப் போரில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார், காந்தி. பாரிஸ்டர் தொழிலை அடியோடு கைவிட்டார். அய்யா தமிழ் நாட்டுக்குத் திரும்பியதும், பாரிஸ்டர் தொழிலை முற்றுமாகக் கைவிட்டுவிட்டு, தமிழ்நாட்டின் விடுதலைப்போரில் முழுமையாக ஈடுபட்டார்.

விடுதலைப் போர்க்கருவிகளாகக் காந்தியார் இதழ்கள் நடத்தியது போன்றே, அய்யாவும் இதழ்கள் நடத்தினார். அந்த இதழ்களைத் தமது விடுதலைப் போருக்கு வாளாகவும், கேடய மாகவும் பயன்படுத்திக்கொண்டார்.

**உதவுவதிலும் ஒரு நெறி**

சிக்கனத்தில் தந்தை பெரியாருடன் அய்யாவை ஒப்பிடலாம். ஒவ்வொரு காசையும் எண்ணிச் செலவு செய்வார். ஒரு காசைக் கூட வீணாக்கமாட்டார். 'ஆகாறு அளவிட்டதாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை' அல்லவா? ''அய்யா அவர் கள் அப்படி இருந்ததால்தான் 'தினத்தந்தி' இன்று தலைநிமிர்ந்து நிற்க முடிகிறது'' என்கிறார், பால்வண்ணன்.

அய்யா சிக்கனக்காரராக இருந்தாரே தவிர, ஒருநாளும் கஞ்சனாக இருந்ததில்லை. உதவ வேண்டிய நேரத்தில் உதவத் தயங்கமாட்டார். ஆனால், உதவுவதற்கும் சில வழிமுறைகள் வைத்திருந்தார். 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்று சொல்லி யிருக்கிறார்களே!

யாராவது பத்து ரூபாய் கடன் கேட்டால், இரண்டு ரூபாய் கொடுத்து ''இனாமாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லுவார். இதனால் கடன் திரும்பி வரவில்லையே என்ற கவலை நமக்கு இல்லை. கடனைக் கொடுக்கவேண்டிய கவலை வாங்கியவருக்கும் இல்லை. நமக்குப் பயந்துகொண்டு அவர் ஒளிய வேண்டிய அவசியமுமில்லை.

நெருங்கிய உறவினர் ஒருவர் தன் மகள் திருமணத்துக்குக் கடன் கேட்டார். கடன் உறவை முறிக்கும் என்பது அய்யா கருத்து. எனவே, வங்கியில் சொல்லி அவருக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்தார். கடனை வங்கிக்கே திருப்பிச் செலுத்தும் படி உறவினரிடம் கூறினார்.

''துன்பப்படுகிறேன், உதவுங்கள்'' என்று எழுத்தாளர்கள் வந்தால், அவர்களின் கதையை வாங்கிக்கொண்டு, நூறோ இருநூறோ கொடுத்து அனுப்புங்கள். ஆனால், அந்தக் கதைகளை வெளியிடாதீர்கள். வெளியிட்டால், ஒருவருக்கு உதவப்போய், பல ஆயிரம் வாசகர்களை இழந்துவிடுவீர்கள்'' என்று அவர் எனக்கு அறிவுரை கூறியிருக்கிறார். நல்ல கதைகளுக்கு விதி விலக்கு உண்டு.

அய்யாவிடம் கொண்டுபோய் யாராவது கதைகள், கட்டுரைகள் கொடுப்பார்கள். அவரும் வந்தவர்கள் எதிரிலேயே அதன் மீது ''அ. மா. சாமி'' என்று எழுதி எனக்கு அனுப்புவார். இப்படி அனுப்புவதாலேயே அதை வெளியிட வேண்டும் என்பதில்லை என்று ஏற்கனவே என்னிடம் அய்யா சொல்லியிருக்கிறார்! ஒருவருக்கு உதவி செய்யப்போய் வாசகர்களை இழந்துவிடக் கூடாது என்ற அதே கொள்கைதான்!

பின் தங்கிய பகுதி மாணவர்கள் படித்து முன்னேற திருச்செந்தூரில் அய்யா கல்லூரி அமைத்தது, அவர்களின் கருணை உள்ளத்திற்குக் கல்மேல் எழுத்துப்போல் அழியாத சான்றாக உயர்ந்து நிற்கிறது.

**தமிழ் மரியாதை**

ஒரு நாள் அய்யா அலுவலகத்துள் நுழைந்த பொழுது வழியில் நின்ற ஒரு துணை ஆசிரியர்-புதிதாக வேலைக்குவந்தவர்-அவருக்குச் சலாம் போட்டார். அய்யா என்னை அழைத்தார். ''அவர் என்னைப் பார்த்துச் சலாம் போடுகிறார். எனக்கு மரியாதை செலுத்த விரும்பினால், 'வணக்கம்' சொல்லச் சொல்லுங்கள்'' என்றார்.

**காலத்தின் மாறுதல்**

ஆதித்தனாருக்கு நகைச்சுவை நிரம்பப் பிடிக்கும். எழுத்திலும், பேச்சிலும் நகைச்சுவை வேண்டும் என்பார். அவரும் அப்படியே பேசக்கூடியவர்.

தினத்தந்தி வெள்ளிவிழாவில் அய்யா, நாவலர் நெடுஞ்செழியன் இருவரும் கலந்து கொண்டார்கள். அப்பொழுது காலத்தின் மாறுதலைக் கீழ்க்கண்டவாறு அய்யா குறிப்பிட்டார்.

''காலத்தின் மாறுதலைப் பார்த்தீர்களா? இருபத்தைந்து ஆண்டுக்கு முன்பு நாவலர் தாடி வைத்திருந்தார். இப்பொழுது அவருக்குத் தாடியில்லை. அப்பொழுது நான் தாடி வைத்திருக்கவில்லை. ஆனால், இப்பொழுது நான் தாடி வைத்திருக்கிறேன்''.

''நாம்-தமிழர்'' இயக்கத்தை வலுப்படுத்த ஊரெங்கும் தமிழன் கோழிப் பண்ணைகளை அய்யா தொடங்கினார். ஒரு பொதுக்கூட்டத்தில், ''தமிழ்நாட்டின் விடுதலைப் போருக்கும், கோழிப்பண்ணைக்கும் என்ன தொடர்பு?'' என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் சொன்னார் ''கோழி முட்டையால் அடித்தே டெல்லிக்காரனை விரட்டுவோம்''.

## திருக்குறள் தாடி

அய்யா தாடி வளர்த்தார். "நீங்கள் தாடி வளர்ப்பது ஏன்?" என்று ஒரு கூட்டத்தில் ஒருவர் கேட்டார். அவர் சட்டென்று அளித்தபதில் : "நான் வளர்க்கவில்லை, தாடி தானாக வளர் கிறது!" அடுத்தவர் கேட்டார்—"வள்ளுவர் வழியில் நடக்கும் நீங்கள் தாடி வைத்துக்கொள்ளலாமா?" அய்யா சொன்னார் : 'இது திருக்குறள் தாடி. 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். நான் ஒட்டமழிக்கவும் இல்லை, நீளமாகத் தாடி வளர்க்கவும் இல்லை. குறுந்தாடிதான் வைத்திருக்கிறேன்".

குறுந்தாடியைக் "குறள்தாடி" என்றும் கூறலாம் அல்லவா?

## பிழைத்துப் போகட்டும்

அய்யா தாடி வைத்திருந்தது பற்றி எழுதிய ஓர் இதழ், "ஆதித்தனாருக்கு முகத்தில் தோல் நோய் வந்திருக்கிறது. அதை மறைக்கவே தாடி வளர்க்கிறார்" என்று குறிப்பிட்டது. அந்த இதழ்மீது வழக்குத் தொடர வேண்டும் என்று எஸ். டி. ஆதித்தன் சொன்னார். ஆனால், அய்யா "வேண்டாம்" என்று தடுத்து விட்டார். "என்னைப்பற்றி எழுதினால், நாலுபடி கூடுதலாக விற்கக்கூடும். அதனால்தானே எழுதுகிறார்? பிழைத்துப் போகட்டும்" என்று சொன்னார்.

பிற இதழாளர்களுக்கு எந்த உதவியும் செய்ய எப்பொழுதும் அய்யா தயாராக இருந்தார். "ஓர் இதழ் மற்றோர் இதழை அழித்து விடாது. அது அதற்கு வாசகர்கள் இருக்கத்தான் செய் வார்கள்" என்று கூறுவார்.

## படித்துக் கழிப்பார்கள்

படித்துக்கிழிப்பவர்களைப் பார்த்திருக்கிறீர்கள். படித்துக் கழிப்பவர்களைத் தெரியுமா? ஆதித்தனாருக்கு நிறையப் படிக்க வேண்டும் என்று ஆசை. ஆனால், நேரம் இருக்காது. எனவே, படிக்கவேண்டிய இதழ்களை மேசை மீது அடுக்கிவைத்துக் கொண்டே வருவார். அந்த அகன்ற மேசையும் மூன்று, நான்கு மாதத்தில் நிரம்பி வழியும். ஒருநாள் எல்லா இதழ்களையும் ஒழுங்காக அடுக்குவார். அடுக்கிவிட்டு, "இப்படித்தான் படித்துக் கழிக்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே, கையால் வேகமாகக் கீழே தள்ளிவிடுவார். பையனை அழைத்து, "அள்ளிக் கொண்டுபோ" என்பார்.

அய்யா கடைசிக் காலம்வரை இரு இதழ்களை விடாது தொடர்ந்து படித்தார். ஒன்று, தமிழில் வெளிவரும் உடல்நல இதழான "நல்வழி"; மற்றொன்று "ரீடர்ஸ் டைஜஸ்டு".

**கண்ணாடி**

"தினத்தந்தி"யின் தரம் உயர்ந்துவிட்டது. என்றாலும், பழைய 'தந்தி' போன்ற தரத்தில் தமிழ்நாட்டில் ஒரு நாளிதழ் நடத்த வாய்ப்பு இருக்கிறது என்றே கருதினார். அந்த முயற்சியில் அவர் ஈடுபட்டார்.

இலண்டனில் வெளிவரும் "டெய்லி மிரர்" என்ற பரபரப்பு நாளிதழை அதற்கு முன் மாதிரியாக எடுத்துக்கொண்டார். "கண்ணாடி" என்று பெயர் சூட்டினார். "தினத்தந்தி"யை இரண்டாக மடித்தது போன்ற அளவு. எட்டுப்பக்கம். தனி அலுவலகம் அமைத்து, ஊழியர்கள் நியமித்து, மாதிரி இதழ்கள் கூட அச்சிட்டுப் பார்த்தார். இதழ் வெளிவருமுன். உடல்நலம் மிகவும் குன்றி, காலமாகிவிட்டார்.

**பொருத்தமான சொல்**

பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தவேண்டும் என்பதில் அவர் அழுத்தமாக இருந்தார். "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து" என்ற குறளை எடுத்துக்காட்டுவார். "தமிழகம் என்று எழுதக்கூடாது. தமிழ்நாடு என்று எழுதவேண்டும்" என்பார். தமிழ்நாடு ஒரு நாடு என்பதை உணர்த்தவேண்டும் என்று விரும்பினார்.

அய்யாவைப் பார்க்கவந்த ஒரு நடிகர், "தமிழ் வாழ்க' என்று முழக்கமிட்டுக் கொண்டே வந்தார். "தமிழ் வாழும். அது காலத்தாலும் அழியாத கன்னித்தமிழ். ஆனால், தமிழ் வாழ்ந்தால் மட்டும் போதாது, வெல்லவேண்டும். எனவே, 'தமிழ் வெல்க' என்று முழங்க வேண்டும்" என்று கூறி, அவ்விதமே முழக்கமும் செய்தார்.

**பாமரன்**

அய்யா எம்.ஏ. படித்தவர். பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். ஆனாலும், தன்னை ஒரு 'பாமரன்' என்றே சொல்லிக்கொள்வார். அவரின் தோற்றமும் அப்படித்தான் இருக்கும்.

"சாதாரண நாலுமுழ வேட்டியும், தொழ தொழ சட்டையும் அணிந்திருக்கும் ஆதித்தனாரைப் பார்க்கும் யாரும், அவர் பாரிஸ்டர் படித்தவர்–சிங்கப்பூரில் பெரும் வழக்கறிஞராகத் திகழ்ந்தவர்—ஆங்கிலத்தில் புலமை நிறைந்தவர் என்று சொன்னால், நம்ப மாட்டார்கள். அவ்வளவு எளிய தோற்றம் உடையவர், ஆதித்தனார்" என்று அறிஞர் அண்ணாவே ஒருமுறை சொன்னார்.

அய்யாவை நேர்கண்ட தமிழ்வாணன், "ஆதித்தனார் மண் குடிசையில் வாழும் ஓர் ஏழைத் தமிழன்போல இருக்கிறார்" என்றார். மேலும் சொன்னார்—"மிகச் சாதாரணத் துணியில் தைக்கப்பட்ட தொழ தொழ ஜிப்பா. மிக மலிவான விலையுள்ள நாலுமுழக் கைத்தறி வேட்டி. கையில் சாதாரண எழுத்தர் கட்டிக்கொள்ளும் மலிவான கடிகாரம். தாடையிலே வெண்மையும் கறுமையும் கலந்த விடுதலை வீரனின் குறுந்தாடி. தலையிலே வரலாறு காண விழையும் வழுக்கை. வாயிலே தமிழ். கண்களிலே கனிவு. இவரே ஆதித்தனார்".

### மனித அன்பு

அய்யா மனித அன்பு நிறைந்தவர். மனிதர்களை மதிக்கக் கூடியவர். மனித குணங்களுக்கு மதிப்பு அளிக்கக் கூடியவர்.

ஒருமுறை செய்தியர் தேர்வு நடந்தது. தேர்வுக்கு வந்த ஓர் இளைஞர் மிகவும் சோர்ந்திருந்தார். "சோர்ந்திருக்கிறீர்களே, காலையில் சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார். "நேரமாகி விட்டதால், சாப்பிடாமல் வந்துவிட்டேன்" என்று இளைஞர் கூறினார். உடனே அய்யா இளைஞரிடம் பணம் கொடுத்து, "முதலில் சாப்பிட்டு வாருங்கள்" என்று அனுப்பிவைத்தார். சாப்பிட்டு வந்தபின்பு, அவரை வேலைக்கும் எடுத்துக் கொண்டார்.

நான் திருச்சியில் செய்தியாளராக இருந்தபொழுது, ஒரு செய்தியில் தவறு ஏற்பட்டுவிட்டது. என்னைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தார். இது அய்யா எடுத்த நடவடிக்கை என்பதால், அவரிடம் நேரில் முறையிட நான் சென்னைக்கு வந்தேன். அவரைப் பார்த்ததும், என் நா அசையவில்லை. என் கண்கள் கலங்கின. என் கண்ணீரைக் கண்ட அய்யா, என்னிடம் எதுவும் கேட்கவில்லை. "திருச்சிக்குப் போய் வேலையைப் பாருங்கள்" என்று அனுப்பிவைத்தார். அப்பொழுதே நான் "உடல்மண்ணுக்கு உயிர் தந்திக்கு" என்று உறுதி எடுத்துக்கொண்டுவிட்டேன்.

**தவறு செய்தால்**

தவறு செய்வது மனித இயற்கை. எனவே, முதல் முறை தவறு செய்கிறவர்களை அய்யா கண்டிப்பது இல்லை. அவர்களைத் திருத்த முயற்சிப்பார். ''ஒரு தவறு நடந்தால், அந்த தவறு மீண்டும் நடக்காமல் இருக்க என்ன செய்யவேண்டும் என்பதையே யோசிக்க வேண்டும்'' என்பார்.

செய்த தவறை மீண்டும் செய்தால், கண்டிப்பார். மூன்றாவது முறையாக அதே தவறைச் செய்தால், எரிமலையாக வெடித்து விடுவார். செய்த தவறை உணர்ந்து, சொன்னால், அய்யா மகிழ்ச்சி அடைவார். தவறை உணர வேண்டும் என்பதே அவரின் நோக்கம். தவறை உடனே நம் கவனத்துக்குக் கொண்டு வந்து விடுவார். வெளியூரில் இருந்தால்கூட, ''பேசி''யில் சொல்லுவார்.

**பயிற்சி அளிக்கும்முறை**

அய்யா பயிற்சி அளிக்கும் முறையே தனி. அது குழந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு எழுதக் கற்றுக்கொடுப்பது போல இருக்கும்.

ஒரு முறை ஓர் ஓவியர் கலங்கரை விளக்குப் படம் வரைய வேண்டியிருந்தது. அந்த ஓவியரோ கலங்கரை விளக்குப் பார்த்தது இல்லை. அவர் கையில் பணம்கொடுத்து, பேருந்தில் கடற்கரைக்கு அனுப்பிக் கலங்கரை விளக்கைப் பார்த்து வரச்செய்தார்.

பவுன் விலை ரூ. 100 ஆக ஆன நேரம். அதைச் செய்தியாக வெளியிடப் பவுன்படம், வேண்டும். ஓவியரோ பவுன் பார்த்ததில்லை. அவரிடம் ரூ. 100 கொடுத்து, பவுன் வாங்கிவரச் சொல்லி, அதைப்பார்த்து வரையச் சொன்னார். பின்பு அந்தப் பவுனை ஓவியருக்கே கொடுத்துவிட்டார்.

ஒருமுறை அய்யா வெளியூரில் இருந்து திரும்பிய வேளையில் காரில் இருந்த இதழ்கள், ஏடுகள், மருந்துக்குடுவைகளை கைநிறைய வீட்டுக்குள் அள்ளிச்சென்ற பையன், மருந்துக் குடுவையைத் தவறவிட்டு உடைத்துவிட்டான். வீட்டுக்குள்ளிருந்து மூன்று காலிக் குடுவைகளை எடுத்து வரும்படி பையனிடம் அய்யா சொன்னார். அவனும் எடுத்து வந்தான். ஒரு குடுவையை அவனிடம் கொடுத்து, இருகைகளாலும் இறுகப்

பிடித்துக் கொள்ளச் சொன்னார். அப்படியே மாடியில் போய் வைக்கக் கூறினார். மற்ற இரு குடுவைகளையும் அதே முறையில் எடுத்துப்போகச் சொன்னார். ''கண்ணாடிக் குடுவைகளை இப்படித்தான் எடுத்துப்போக வேண்டும், தெரிகிறதா?'' என்று பாடம் நடத்தினார்.

மதுரை 'தந்தி'யில் ஒருமுறை கணக்கில் ரூ. 19 குறைந்தது. ''காசாளர் எடுத்திருப்பார். அவரை வீட்டுக்கு அனுப்பவேண்டும்'' என்று எல்லாரும் சொன்னார்கள். ஆனால், அய்யா, ''அவரிடம் சாவியைக் கொடுங்கள். இனி கவனமாக இருப்பார்'' என்று நம்பிக்கையுடன் சொன்னார். அந்த நம்பிக்கை வீண்போக வில்லை. அந்தக் காசாளர் பின்பு கணக்கில்—காசில் கவனமாக இருந்தார்.

**பாரதிதாசன் பாடல்கள்**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு இன்று (1990) நூற்றாண்டு விழா எடுக்கிறோம். ஆனால், அரைநூற்றாண்டுக்கு முன்பே அய்யா அவரைச் சிறப்பித்தார். ''தமிழன்'' முதல் இதழில் பாவேந்தரின் படம் அட்டைப் படமாக இடம் பெற்றது. அவரைப் பற்றிய சிறப்பான குறிப்புகளும் அந்த இதழில் வெளியாயின.

பாவேந்தரின் பாடல்கள் மீது அய்யாவிற்குத் தீராக் காதல். பாரதிதாசன் இயற்றிய தமிழ்நாடு விடுதலையை வலியுறுத்தும் வீரக்கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து ''தாயின் மேல் ஆணை'' என்ற பெயரில் தனி நூலாக வெளியிட்டார்.

**கண் கண்ட தெய்வம்**

தெய்வ நம்பிக்கை கொண்டவர். ஆனால், கோவில் களுக்குப் போவதில்லை. அவருக்குச் செய்யுந்தொழிலே தெய்வம். ''எழுத்தும் தெய்வம், எழுதும் கோலும் தெய்வம்'' என்றார், பாரதியார். ஆதித்தனாருக்கு அச்சும் தெய்வம், அச்சிடும் தாளும் தெய்வம்!

தாளே அவர்களுக்குக் கண்கண்ட தெய்வம். யாரும் தாளை மிதித்துவிடக்கூடாது. மிதித்துவிட்டால், தொட்டுக் கும்பிடச் சொல்லுவார். 'தினத்தந்தி' அலுவலகத்தில் ஆயுத பூசையை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார். பிறந்த ஊரான காயா மொழியில் ஆண்டுதோறும் நடக்கும் அம்மன் கொடைத் திருவிழா வில் கலந்து கொள்ளத் தவற மாட்டார். திருச்செந்தூர் தேரோட்டத்திற்கும் வடம் பிடித்துக் கொடுப்பார்.

**தைரியசாலி**

அய்யா மிகவும் தைரியசாலி. உச்சிமீது வானிடிந்து வீழ்ந்த போதிலும் அச்சத்தை அவரிடம் காண முடியாது. அதனால்தான் எத்தனையோ இடர்கள்- இன்னல்கள்- இழப்புகளைச் சமாளித்து வெற்றி கண்டார்.

ஒருமுறை அவர் மதுரையில் இருந்து சென்னைக்குக் காரில் வந்து கொண்டிருந்தார். செங்கல்பட்டு அருகே கார் கவிழ்ந்து விட்டது. அக்கம் பக்கத்தவர்கள் அலறியடித்துக் கொண்டு உதவி செய்ய ஓடிவந்தார்கள். அதற்குள் அய்யா காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். ஓட்டுநரையும் வெளி யேற்றினார்.

அய்யாவிற்குச் சிறிய காயங்கள். அதுபற்றிக் கவலைப் படாமல், காரை எடுத்துவரும்படி ஓட்டுநரிடம் சொல்லிவிட்டு, அவர் ஒரு வாடகைக் கார் பிடித்துக் கொண்டு, நேராகத் தினத்தந்தி அலுவலகத்துக்கு வந்துவிட்டார். எட்டுப்பாத்திச் செய்தி என்ன, வேறு என்ன முக்கியச் செய்திகள் என்று வழக்கம் போல விசாரித்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார். விபத்து நடந்ததை யாரிடமும் காட்டிக் கொள்ளவில்லை.

**ஆளை எடை போடுவார்கள்**

ஆட்களை எடை போடுவதில் அவர்க்கு இணை அவரேதான். ஓர் ஆளைப் பார்த்ததும் அவர் எப்படிப்பட்டவர், எதற்காக வந்திருக்கிறார் என்று சொல்லிவிடுவார். அவரும் நானும் ஒருமுறை மதுரை 'தினத்தந்தி' அலுவலகத்துக்குப் போயிருந் தோம். அய்யா அலுவலகத்துக்குள் நுழைந்தபொழுது, எதிரில் ஓர் ஊழியர் பட்டுச்சட்டை அணிந்து, வெற்றிலை போட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தார். அய்யாவைப் பார்த்ததும் பதைபதைத்து, வெற்றிலையை மறைத்துக்கொண்டு, கும்பிடு போட்டார். அவரது நலனை விசாரித்த அய்யா, "சென்னைக்கு வந்து என்னைப் பார்" என்றார்.

அவர் சென்னைக்கு வரும் முன் அந்த ஊழியர் என்ன வேலை செய்கிறார் என்று அய்யா விசாரித்தார். பழைய பேப்பர் வியாபாரிக்குப் பழைய பத்திரிகைகளை அவர் நிறுத்துப் போடு கிறார் என்று தெரிந்தது. மேலும் விசாரித்ததில், வியாபாரி களிடம் பணம் வாங்கிக் கொண்டு, நூறு கிலோ பேப்பரை எழுபத்தைந்து கிலோ என்று நிறுத்துப் போடுவதும் தெரிந்தது.

சென்னைக்கு வந்த அவரை அய்யா எச்சரித்து அனுப்பியதுடன், பழைய பத்திரிகைகளை வியாபாரிகளுக்கு நிறுத்துப் போடும் பொழுது இரண்டு ஊழியர்கள் நிற்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்.

அவர் கூட்டுறவு அமைச்சராக இருந்தபொழுது, ஒருநாள் வீட்டில் அவர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது இருவர் அவரைப் பார்க்க வந்தார்கள். அவர்களை உள்ளே வரச் சொன்னார். உடனே நான் எழுந்தேன். "நீங்கள் இருங்கள்" என்றார். அமர்ந்து கொண்டேன்.

வந்தவர்கள் 10-15 நிமிடம் ஏதேதோ பேசினார்கள். அய்யாவும் அவர்களுடன் சிரித்து சிரித்துப் பேசினார். பிறகு இருவரும் விடை பெற்றுச் சென்றார்கள். அவர்கள் போனதும் அய்யா என்னிடம் சொன்னார், "கூட்டுறவுச் சங்கப் பணத்தைக் கையாடியதாக இருவர் மீதும் புகார் இருக்கிறது. அதுபற்றி என்னிடம் தனியாகப் பேச வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். அதனால்தான் உங்களை இருக்கச் சொன்னேன். நீங்கள் இருந்த தால், அதுபற்றிப் பேசாமல் போய் விட்டார்கள்".

எந்த ஊழியராவது கொஞ்சநாள் அவரைப் பார்க்கா விட்டால், "அவர் ஏதோ தப்பு செய்திருக்கிறார். அதுதான் என் கண்ணில் படாமல் இருக்கிறார்" என்று சொல்லுவார். அது சரியாகவும் இருக்கும்!

**நம்பிக்கை**

அய்யா யாரையும் எளிதில் நம்பிவிட மாட்டார். நம்பி விட்டாலோ அவர்கள் மீது ஐயப்பட மாட்டார்; முழுமை யாக நம்புவார். "தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்" என்ற குறளை அப்படியே பின்பற்றினார்.

வைக்கோல் வாங்க நியமிக்கப்பட்ட பால்வண்ணன் தலைமைக் காசாளர் ஆனார் என்றால், அதற்கு அவர்மீது அய்யா வைத்த நம்பிக்கைதான் காரணம். பிழை திருத்த வந்த ஆர். எஸ். இரத்தினம் ஆசிரியரானார். எப்படி? அய்யா நம்பிக்கையைப் பெற்றதால்தான்.

திறமையைவிட நம்பிக்கையையே அவர் முதன்மையாகக் கருதுவார்.

**கலைஞரைப் பிடிக்கும்**

கலைஞர் கருணாநிதியை அய்யாவிற்கு மிகவும் பிடிக்கும். காரணம்- கலைஞரின் தமிழ்ப் பற்றுதான்! "பொடி வைத்து

எழுத வேண்டும்'' என்று அய்யா சொல்லுவார். ''எப்படிப் பொடி வைத்து எழுதுவது என்பதைக் கலைஞரின் எழுத்திலும் பேச்சிலும் பார்க்கலாம்'' என்பார்.

**வேலை வாங்குவதில் கண்டிப்பு**

வேலை வாங்குவதில் அய்யா மிகவும் கண்டிப்பாக இருப்பார். எந்த வேலையும் உடனே நடந்தாகவேண்டும். ''சனிக்கிழமை பிற்பகல் சாப்பிடப் போகும்பொழுது ஒரு வேலையைச் சொல்லி விட்டுப் போவார். திங்கட்கிழமை காலையில் போன் செய்து விடுவார் வேலை முடிந்ததா என்று. ''நான் சொல்லி மூன்று நாள் ஆகிவிட்டதே! என்றும் கூறுவார்கள்'' என்கிறார், 'தினத் தந்தி'யின் தலைமை மேலாளர் சோமசுந்தரம்.

அய்யா எந்த வேலையையும் உடனே செய்யக்கூடியவர். அவர் சென்னையில் இருந்தபொழுது, மதுரை மேலாளருக்கு ஏதாவது சொல்ல நினைப்பார். அதை உடனே ஓர் அஞ்சலாக எழுதிவிடுவார். பிறகு வேறு ஏதாவது நினைப்பார். அதையும் உடனே எழுதுவார். இப்படியாக ஒரே நாளில் மதுரை மேலாள ருக்குப் பத்து அஞ்சல்கூடப் போகும்!

யாரிடமும் எந்த வேலையையும் இலவசமாகப் பெற மாட்டார். அந்த வேலைக்கு உரிய ஊதியத்தை அப்பொழுதே கொடுத்து விடுவார். அமைச்சராக இருந்தபொழுது கூட கூடுதல் நேரம் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அப்பொழுதே கையில் இருந்தே பணம் கொடுப்பார். ''தமிழன்'' இதழில் எழுத்தாளர் களுக்கு அன்பளிப்பு கொடுத்ததும் இதே முறையில்தான்.

மணி பார்த்து வேலை செய்கிறவர்களை அவருக்குக் கொஞ்சமும் பிடிக்காது.

**மக்களைப் புரிந்தவர்**

அய்யா மக்களைப் புரிந்தவர். அதனால்தான் இதழ் நடத்து வதில் வெற்றி பெற்றார்.

அவர் வாழ்க்கை வரலாற்றை (''அமைச்சர் ஆதித்தனார்'') நான் எழுதிக் கொண்டிருந்தபொழுது, அறிஞர் அண்ணா உயிருடன் இருந்தார். 'இந்நூலுக்கு நீங்கள்தான் முன்னுரை தரவேண்டும்'' என்று அண்ணாவிடம் கேட்டிருந்தேன். அவரும் ''நூல் அச்சானதும் கொண்டு வாருங்கள்'' என்று சொன்னார். ஆனால், நூல் அச்சாகி வருமுன் காலமாகிவிட்டார் அண்ணா.

"இந்நூலுக்கு அண்ணா முன்னுரை எழுதிக் கொடுப்பதாக இருந்தார் என்று எனது முன்னுரையில் குறிப்பிடப் போகிறேன்" என்று அய்யாவிடம் சொன்னேன். அதற்கு அவர் சொன்னார், "மக்கள் அதை நம்பமாட்டார்கள். இறந்தவர் சொன்னதாக என்ன வேண்டுமானாலும் எழுதலாமே என்று மக்கள் நினைப்பார்கள்".

## நூலாம்படைத் தலைப்பு

வீட்டிலோ, அலுவலகத்திலோ நூலாம்படை இருந்தால் அவருக்குப் பிடிக்காது. அதைத் "தரித்திரம்" என்பார்.

அதேபோல, கதை, கட்டுரைத் தலைப்புகளை அச்செழுத்தில் அடுக்கிப் போடுவதையும் அவர் விரும்பமாட்டார். அதை "நூலாம்படைத் தலைப்பு" என்பார். "தலைப்புகளை அச்சு செய்து போடக்கூட வசதி இல்லாதவன்தான் எழுத்துக்களை அடுக்கிப் போடுவான்" என்று கூறுவார்.

## இதழை வெளியேற்றிவிட்டு...

ஆதித்தனாரைப் பார்க்க அலுவலகத்துக்கு நிறையப் பேர் வருவார்கள், வருகிறவர்களுடன் அமர்ந்து நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டு இருப்பார். இது எட்டுப் பாத்திச் செய்தி முடிந்த பின்புதான்.

அதற்கு முன் யாராவது பார்க்க வந்தால், கோபப்படுவார் "பேப்பர் வெளியாக வேண்டாம்? மெஷினை ஓட்டிவிட்டுத்தான் நான் உங்களுடன் உட்கார்ந்து பேச முடியும்" என்று திருப்பி அனுப்பிவிடுவார்.

## பார்க்கப் போகும்பொழுது

அவரைப் பார்க்கப் போகும் ஊழியர்கள் தாளும் எழுதுகோலும் கொண்டு போகவேண்டும். அவர் சொல்லுவதைக் குறித்துக் கொள்ள வேண்டும். இடையில், "என்ன எழுதியிருக்கிறீர்கள், படியுங்கள்" என்பார். படித்துக்காட்ட வேண்டும். காதில் வாங்கிக் கொள்வதைவிட ஒருமுறை எழுதினால் மனதில் பதியும் என்று அவர் கருதினார். அதோடு அவரின் அறிவுரை-ஆலோசனைகளை எழுதி வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் விரும்பினார்.

நானோ, நண்பர் பீம்சிங் போன்றவர்களோ பார்க்கப் போனால், தாள் போதாது. நிரந்தரமான குறிப்பேடு வைத்

திருக்கவேண்டும். ஒற்றைத் தாளுடன் போய் நின்றால், ''எழுதிக் காற்றில் பறக்க விட்டுப் போங்கள்!'' என்று கடிந்து கொள்ளுவார்.

அய்யா யாரிடமாவது ஏதாவது கூறினால், அதைத் திரும்பச் சொல்லச் சொல்லுவார். சரியாகச் சொல்லாவிட்டால், அவரே மீண்டும் சொல்லுவார். இப்பொழுதும் சரியாகத் திருப்பிக்கூறா விட்டால், ''உங்களுக்கு விளங்காது, போங்கள்'' என்று சொல்லி விடுவார். அப்படிப்பட்ட ஆட்களை வைக்க வேண்டிய இடத்தில் தான் வைப்பார்.

### பரிசு கொடுப்பார்

நன்றாகப் பணியாற்றும் ஊழியர்களை அழைத்து, பாராட்டு வார். கை நிறையப் பரிசும் அளிப்பார்.

கென்னடி சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியை அன்று கோவையில் இருந்த அய்யா 'தினத்தந்தி'யில் பார்த்தார். வேறு எந்த ஆங்கில, தமிழ் நாளிதழ்களிலும் அச்செய்தி வெளிவர வில்லை. கோவையிலேயே அச்சாகும் வேறொரு தமிழ் நாளிதழில் கூட அச்செய்தி வெளியாகவில்லை. விழிப்புடன் இருந்து இச் செய்தியை அச்சேற்றியதற்காக ஆசிரியர் ஐ. சண்முகநாத னுக்கு ரூ. 100 பரிசு கொடுத்தார்.

### நாம்-தமிழர்

எதிலும் வெற்றி பெற்றவர்களைப் பின்பற்றும் அய்யா அரசியல் இயக்கத்துக்குப் பெயர் சூட்டுவதிலும் வெற்றி பெற்ற ஒரு பெயரையே பின்பற்றினார்.

அயர்லாந்து நாட்டில் டிவேலரா நடத்திய விடுதலை இயக்கத் துக்குச் ''சின்பின்'' (நாம் அயர்லாந்து மக்கள்) என்று பெயர். அந்த இயக்கம் விடுதலைப் போரில் வெற்றி பெற்றது. அதன் பெயரைப் பின்பற்றியே ''நாம் தமிழர்'' என்று தமது இயக்கத் துக்கு அவர் பெயர் வைத்தார். ''உலகத்தில் எனக்குப் பிடித்த தலைவர் டிவேலரா. அவரை என் நெஞ்சம் என்றும் மறக்காது'' என்று சொல்லுவார்.

### படிக்கும்பொழுதே குறிப்பு

அய்யா காலையில் 'தினத்தந்தி' படிக்கும்பொழுது, அன்று யார் யாரிடம் என்னென்ன கூற வேண்டும் என்பதைத் 'தினத் தந்தி'யின் முதல் பக்கத்தில் உள்ள வெள்ளை இடத்தில் வரிசை

யாகக் குறித்துக் கொள்வார். அன்றைய இதழில் உள்ள தவறுகளும் இந்தக் குறிப்பில் இடம் பெறும். பொடி எழுத்தில் எழுதுவார். அப்படியிருந்தும் சில நாளில் முழுப்பக்கமும் குறிப்புகள் நிறைந்துவிடும். அலுவலகத்துக்கு வந்ததும் யார் யாரிடம் என்னென்ன சொல்ல வேண்டுமோ, அவர்களை அழைத்துச் சொல்லுவார். சொன்னதும் குறிப்பை அடித்து விடுவார்.

"தினத்தந்தி" படிக்கும்பொழுது ஒவ்வோர் எழுத்தாக வட்டம் போட்டுப் பார்ப்பார். அச்சு சரியாக இருக்கிறதா என்று; அப்படித்தான் ஒவ்வோர் எழுத்தாகப் பார்க்க வேண்டும் என்பார். ஓட்டு மொத்தமாகக் கண்ணால் பார்த்தால், அச்சு சரியாக இருப்பது போலத்தான் தோன்றும் என்றும் கூறுவார்.

நாளிதழ்கள் - வேறு இதழ்கள் படிக்கும்பொழுது, தேவையான தகவல்கள் இருந்தால், கிழித்து எடுத்துக்கொள்வார். கிழிப்பதற்குப் பேனா முனையையே (நிப்பு) பயன்படுத்துவார்.

**நூறு படிகள்**

சென்னையில் "நவசக்தி" நாளிதழ் வெளியீட்டு விழா நடந்தது. அதற்கு அய்யா போயிருந்தார். வெளியீட்டு இதழ் என்பதால், நிறைய பக்கங்கள். விலையோ பத்துக் காசுதான். அய்யா பத்து ரூபாய் கொடுத்து, "எனக்கு நூறு படிகள் எடுத்து வையுங்கள்" என்றார். "எதற்கு?" என்று "நவசக்தி" உரிமையாளர் தனுஷ்கோடி கேட்டார். "பழைய பேப்பராகப் போட்டால்கூட, ஒரு பேப்பருக்கு இருபத்தைந்து காசு கிடைக்கும்" என்று அய்யா சிரித்துக்கொண்டே சொன்னார்! அதன்பின் ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு இதழ் கொடுத்தார்கள். அதுவும் ஆளுக்கு ஒரே படி.

**'ஓய் ராஜாஜி!"**

ராஜாஜி முதலமைச்சராக இருந்தபொழுது "ஓய் ராஜாஜி!" என்ற தலைப்பில் 'தினத்தந்தி'யில் நாள்தோறும் ஒரு தலையங்கம் எழுதினார். நாள்தோறும் ஒரு குற்றச்சாட்டைக்கூறி, அதற்கு ராஜாஜியின் பதில் என்ன என்று கேட்டார். ஏழெட்டு நாளில் ராஜாஜியைத் தனிப்பட்ட முறையில் தாக்குவதுபோல தலையங்கங்கள் அமைந்தன. உடனே, அந்தத் தலையங்கத்தை நிறுத்தும்படி சொல்லிவிட்டார்.

நான் ஆசிரியராக இருந்தபொழுது, எனக்கும், குத்தூசி குருசாமிக்கும் தலையங்கப்போர் நடந்தது. குடும்பக்கட்டுப்

பாட்டை எதிர்த்துத் தலையங்கம் 'தினத்தந்தி'யில் நான் எழுத, அதற்குக் குத்தூசி குருசாமி ''விடுதலை'' தலையங்கத்தில் பதில் சொல்ல, இதற்கும் நான் பதில்கூற, தலையங்கம் தொடர்கதை ஆயிற்று. ஒரு பத்து நாளைக்குப்பிறகு அய்யா என்னை அழைத்து ''வேண்டாம், விட்டுவிடுங்கள்'' என்று சொன்னார். நானும் நிறுத்திவிட்டேன்.

### அரசியல் இதழ்கள்

அரசியல் இதழ்கள் - அல்லது, ஒரு கட்சியை ஆதரிக்கும் இதழ்கள், அலைகடலில் போகும் கப்பல் போன்றவை என்று அய்யா சொல்லுவார். அலை உயரும்பொழுது, கப்பலும் உயரும். அலை தாழும்பொழுது கப்பலும் தாழும். அந்த இதழ்களின் நிலையும் இதுதான் என்பார்.

### உண்மையில் உறுதி

மதுரையில் 'தந்தி' தொடங்கப்பட்ட வேளையில், டி.வி.எஸ். அதிபர் சந்தானத்தைச் சந்தித்து, அய்யா விளம்பரம் கேட்டார். ''எத்தனை படி விற்பனையாகிறது?'' என்று சந்தானம் விசாரித்தார். ''ஏழாயிரம்'' என்று சொன்னார். சந்தானம் இதை நம்பவில்லை. ''சென்னையில் அச்சாகும் நாளிதழ்களே பத்தாயிரம்தானே விற்பனையாகின்றன'' என்றார். ''நீங்கள் வேண்டுமானால் என்றாவது ஒருநாள் இரவு திடீர் என்று தந்தி அலுவலகத்துக்கு வாருங்கள். எவ்வளவு அச்சாகிறது என்று நேரில் பாருங்கள்'' என்று அவர் சொன்னார். ''சரி, பார்த்துச் சொல்லுகிறேன்'' என்றார், சந்தானம்.

அன்றே நள்ளிரவு மூன்று மணி அளவில் சந்தானம் திடீர் என்று 'தந்தி' அலுவலகத்துக்கு வந்தார். எவ்வளவு படி அச்சாகிறது என்று நேரில் பார்த்தார். அய்யா சொன்னது உண்மைதான் என்று கண்கூடாகக் கண்டார். மறுநாள் விளம்பரம் அனுப்பி வைத்தார்.

## விழுதுகள்

''அமைச்சர் ஆதித்தனார்'' என்ற நூலை நான் எழுதிய பொழுது, வாழ்க்கை வரலாற்று நூற்களை எப்படி எழுத வேண்டும் என்று அய்யா எனக்கு வழி காட்டினார். வரலாற்றுத் தலைவரின் சாதனைகளை முதலில் சொல்லிவிட்டுப் பிறகுதான் அவரது பிறப்பு, வளர்ப்பு, பெற்றோர் முதலிய விவரங்களைக் குறிப்பிடவேண்டும் என்று சொன்னார். ஒருவரின் வரலாற்றில் அவரின் சாதனைதான் முக்கியமே தவிர, பிறப்பு வளர்ப்பு அல்ல என்பது அவர் கருத்து. அந்த முறையைப் பின்பற்றிதான் ''அமைச்சர் ஆதித்தனார்'' என்ற நூலை எழுதினேன்.

இந்தச் சொற்பொழிவில்கூட, எடுத்துக் கொண்ட தலைப்புக்கு ஏற்ப அவரை ஓர் இதழாளராக அறிமுகப்படுத்தவே முயற்சி செய்திருக்கிறேன். அவர் எப்படி இதழாளர் ஆனார், எப்படி வெற்றி பெற்றார், அதற்காக எப்படி எப்படியெல்லாம் உழைத்தார் என்பதையே விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன். இப்பொழுது அவரின் பிறப்பு வளர்ப்பு பற்றியும் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முன்பே அங்கங்கே சுட்டிக்காட்டியிருந்தாலும், மீண்டும் முறையாகக் குறிப்பிடுகிறேன். திக்கெல்லாம் புகழ்பெற்ற திருநெல்வேலிச் சீமையில், சீரலைவாய் என்று சிறப்பிக்கப்படும் திருச்செந்தூரை அடுத்த காயாமொழியில் 1905 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் நாள் ஆதித்தனார் பிறந்தார். திருச்செந்தூர் முருகனிடம் அளவற்ற பக்தி கொண்ட பெற்றோர், இவருக்குப் ''பாலசுப்பிரமணியம்'' என்று பெயரிட்டார்கள். தந்தையார்

பெயர், சிவந்தி ஆதித்தன். ''ஆதித்தன்'' என்பது குடும்பப் பெயர். ''சிவந்தி பாலசுப்பிரமணிய ஆதித்தன்'' என்பதையே ''சி. பா. ஆதித்தனார்'' என்று சுருக்கமாகப் பெருமையுடன் சொல்லுகிறோம். வீட்டில் அழைத்த பெயர், அப்புலிங்கம்.

தந்தை சிவந்தி ஆதித்தன், நாடார் சமுதாயத்தில் ''பி.எல்.'' பட்டம் பெற்ற முதல்வர். தாயார் கனகம் அம்மையார் காயா மொழியில் ரெயில் பயணம் செய்த முதல் பெண்மணி. அய்யா வுடன் பிறந்தோர் தமையனார் ஒருவர், தம்பி ஒருவர், தங்கைகள் இருவர்.

தந்தையார் வழக்கறிஞர் தொழில் நடத்திய திருவைகுண்டத் தில் ஆதித்தனாரின் படிப்பு தொடங்கியது. படிப்பில் படு கெட்டியாக விளங்கினார். நாலு வயதில், அரை (குழந்தை) வகுப்பில் சேர்க்கப்பட்டு, பத்தாம் நாளே முதல் வகுப்புக்கு அனுப்பப்பட்டார். இதன் காரணமாகப் பொதுத்தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) எழுத வயது போதவில்லை என்று நிறுத்தி வைக்கப்பட்டு, மறு ஆண்டு எழுதித் தேறினார். கணக்கில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றார்.

பள்ளிப் பருவத்திலேயே ஆதித்தனாரிடம் தமிழ்ப்பற்று இருந்தது. அந்நாளில் பெரும்பாலானவர்கள் வடமொழியைச் (சமஸ்கிருதம்) சிறப்பு மொழியாக எடுத்துப் படிப்பது வழக்கம். தமையனார் எஸ். டி. ஆதித்தன்கூட வடமொழியைத்தான் சிறப்பு மொழியாக எடுத்துப் படித்தார். ஆனால், ஆதித்தனாரோ சிறப்பு மொழியாகவும் தமிழையே எடுத்துக் கொண்டார்.

திருச்சி சென்று, புனித சூசையப்பர் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்து, எம்.ஏ. பட்டம் பெற்றார். நாடார் சமுதாயத்தின் முதுகலை பட்டம் பெற்ற முதல்வர் என்ற சிறப்பிற்கும் உரியவரா னார். கல்லூரியில் இலக்கியக் கழகச் செயலாளராகப் பணி யாற்றினார். கால்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கினார். சேக்ஸ்பியரின் நாடகங்களில் நடித்தார். பழைய நூற்கள் வாங்கிப் படிப்பதைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தார்.

சட்டக் கல்லூரியில் சேர, திருச்சியில் இருந்து சென்னைக்கு வந்தார். ''பாரிஸ்டர்'' பட்டம் பெற ஆசைப்பட்டு, 1928இல் இலண்டனுக்குக் கப்பல் ஏறினார். டெல்லி அமைச்சராக இருந்த எஸ். வி. இராமசாமி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த சீனிவாசன், இலங்கையில் இந்தியத் தூதராக இருந்த

கண்டேலியா ஆகியோர் இலண்டனில் உடன் படித்தவர்கள். இலண்டனில் சதுரங்க ஆட்டத்தில் சிறந்து விளங்கினார் கால்டுவெல் எழுதிய ஒப்பிலக்கண நூலைப் பதிப்பித்த முனைவர் பெர்த் என்ற பேராசிரியர், தமிழ்ச் சொற்களை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை ஆங்கிலேயருக்குக் கற்றுத் தர, ஆதித்த னாரைக் கொண்டு தமிழ்ச்சொற்களை உச்சரிக்கச் செய்து, அதை ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொண்டார்.

பாரிஸ்டர் பட்டம் பெற்றுக் கொண்டு, 1933இல் சென்னைக்குத் திரும்பினார். சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். அப்பொழுதுதான் சிங்கப்பூரில் இந்தியர் சங்கத் தலைவராக இருந்த ஓ. இராமசாமி நாடாரின் மூத்த மகளான ஆச்சியம்மாள் என்ற கோவிந்தம் மாளுக்கும், ஆதித்தனாருக்கும் திருமணம் நிச்சயமாயிற்று. 1933 செப்டம்பர் 1இல் சிங்கப்பூரில் திருமணம் நடந்தது. மனைவி யுடன் சென்னைக்குத் திரும்பினார். இதழ் நடத்த பணம் திரட்ட 1934இல் சிங்கப்பூர் சென்றார். அங்குப் ''பாரிஸ்டர்'' தொழில் செய்து, ஏராளமாகச் சம்பாதித்தார். 1942இல் தமிழ்நாட்டுக்குத் திரும்பி, முழுக்க முழுக்க இதழாளர் ஆன வரலாற்றை ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

**அரசியல் வாழ்வு**

''உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு'' என்பதே ஆதித்த னாரின் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. ''சுதந்திரத் தமிழ் நாடு'' என்பதே அவரின் அரசியல் கொள்கை. அதற்காகத் தமிழ் நாடு நீங்கிய இந்திய தேசப்படத்தை எரித்து (1960) சிறை சென்றார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் (1960) கைது செய்யப்பட்டார். மீண்டும் 1966இல் இந்தி எதிர்ப்புப் போரில் கைது செய்யப்பட்டு, தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். மாத்தூர் உழவர் போராட்டத்தில் (1955) கைவிலங்கிடப்பட்டு, சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1947 முதல் 1953 வரை தமிழ்நாடு மேலவை உறுப்பினராக இருந்தார். மேலவையில் எதிர்கட்சித் தலைவராகவும் பணி யாற்றினார். அப்பொழுதுதான் கோவில்களில் உயிர்ப்பலியிடத் தடைச்சட்டம் கொண்டு வந்து, நிறைவேறத் துணையாக இருந் தார். ஏழைத் தொழிலாளரைப் பாதித்தப் பனைமர வரியை எதிர்த்து, உறுப்பினர் பதவியை விட்டு விலகினார். 1957 முதல் 1962 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி

னார். 1964இல் மீண்டும் மேலவையில் பணியைத் தொடர்ந்தார். 1967இல் திரும்பவும் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவைத்தலைவராகவும் ஆனார். 1969இல் கலைஞர் கருணாநிதி தலைமையில் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றார். 1972இல் சட்டப் பேரவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைச்சராகத் தொடர்ந்தார். 1976இல் ''நெருக்கடி'' நேரத்தில் கலைஞர் அமைச்சரவையை இந்திராகாந்தி அம்மையார் நீக்கும் வரை ஆதித்தனாரின் பணி தொடர்ந்தது.

அதன் பின்னும் பிற்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காக ஆதித்தனார் பாடுபட்டு வந்தார். 24-5-1981 அன்று புகழுடம்பு எய்தினார்.

சென்னை எழும்பூரில் ஆதித்தனாரின் சிலை நிறுவப் பட்டுள்ளது. அந்தச் சிலையை அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். 24-5-1987 அன்று திறந்து வைத்து, சிலை நிறுவப்பட்டுள்ள சாலைக்கு ''ஆதித்தனார் சாலை'' என்று பெயரும் சூட்டிச் சிறப்பித்தார்.

**தனிச்சிறப்பு**

ஆதித்தனாருக்கு மூன்று குழந்தைகள் - இரண்டு மகன்கள். ஒரு மகள். அத்தனை பேரும் இதழ்த் தொழிலில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டது ஆதித்தனாரின் தனிச்சிறப்பு ஆகும்.

மூத்த மகன் பா. இராமச்சந்திர ஆதித்தன் சென்னை, திருச்சி, மதுரை நகரங்களில் ''மாலை முரசு'' நடத்துகிறார். ''தேவி'' வார இதழ், ''கண்மணி'' மாத இதழ் ஆகியவையும், இவருக்கு உரியவை.

ஆதித்தனார் முழுநேரமாக அரசியலில் ஈடுபட்டதும், ''தினத்தந்தி''யின் நிர்வாகத்தை இளைய மகன் பா. சிவந்தி ஆதித்தன் (1961) ஏற்றுக் கொண்டார். அப்பொழுது சென்னை மதுரை, திருச்சி ஆகிய மூன்று நகரங்களில் மட்டுமே ''தினத்தந்தி'' அச்சாகி வெளிவந்தது. அந்த மும்மணிகளைச் சிவந்தி ஆதித்தன் ஒன்பான்மணிகளாக மாற்றினார். இப்பொழுது சென்னை மதுரை, திருச்சி, கோவை, சேலம், வேலூர், கடலூர், நெல்லை, பெங்களூர் ஆகிய ஒன்பது ஊர்களில் ஒரே நேரத்தில் ''தினத்தந்தி'' அச்சாகி வெளிவருகிறது. தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும் அல்லவா?

நாளிதழ் நடத்துவதில் பயிற்சி பெறுவதற்காக 1959இல் நெல்லையில் முதல் ''மாலை முரசை''ச் சிவந்தி ஆதித்தன் தொடங்கினார். அவ்விதழ் வெள்ளிவிழா கண்டு, வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கிறது.

1962-இல் ''ராணி'' வார இதழைச் சிவந்தி ஆதித்தன் தொடங்கினார். இதன் வாயிலாகச் சாதாரண மக்களைப் பருவ இதழ் படிக்கவைத்த பெருமை இவருக்கு உண்டு. இன்று பட்டினத்தில் மட்டுமின்றிப் பட்டிதொட்டி எங்கும் ''ராணி'' படிக்கப் படுகிறது.

''மாதம் ஒரு நாவல்'' என்ற முழக்கத்துடன் 1969-இல் ''ராணி முத்து''என்ற மாத இதழைச் சிவந்தி ஆதித்தன் தொடங்கினார். இம் முயற்சியில் இவ்விதழே முன்னோடி. ''ராணி முத்து''வின் பாணியில் பின்பு புற்றீசல் போல எத்தனையோ இதழ்கள் தோன்றின.

''ராணி காமிக்ஸ்'' என்ற திங்கள் இருமுறை படக்கதை இதழையும் சிவந்தி ஆதித்தன் 1984இல் தொடங்கினார். இலட்சம் படிகளையும் தாண்டிய படக்கதை இதழ் என்ற பெருமை இவ்விதழுக்கு உண்டு.

''மாலை மலர்'' என்ற மாலைச் செய்தித்தாளையும் சிவந்தி ஆதித்தன் தொடங்கினார். இப்பொழுது (1990) சென்னை, திருச்சி, பாண்டி, வேலூர், சேலம் ஆகிய ஐந்து ஊர்களில் இம்மாலை இதழ் வெளிவந்துகொண்டிருக்கிறது.

தந்தை இதழ்தாள் தொழிற்சாலை நிறுவியது போன்று சிவந்தி ஆதித்தன் இதழ்கள் அச்சிடும் மை ஆலை ஒன்றை அமைத்திருக்கிறார். ''சன்''தாள் ஆலையையும் இவரே நிர்வாகித்து வருகிறார்.

விளையாட்டுகளில் விருப்பம் உள்ள சிவந்தி ஆதித்தன் இந்திய ''ஒலிம்பிக்'' சங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார். இப்பதவி பெற்ற முதல் தமிழர் இவரே. இருமுறை (1982, 1983 சென்னை மாநகர ''செரீப்'' ஆகவும் பணியாற்றினார். இருநூறு ஆண்டு காலமாக இடிந்து மொட்டைக்கோபுரமாக இருந்த தென்காசி காசி விசுவநாதர் ஆலயத்திற்கு ஒன்பது நிலை கொண்ட இராசகோபுரம் கட்டி, குடமுழுக்கு நடத்தி, ''இருபதாம் நூற்றாண்டின் இராச இராசசோழன்'' என்ற

சிறப்பும் பெற்றார். தந்தையைப் போன்றே இவரும் திருச்செந்தூரில் ஒரு கல்லூரி (கோவிந்தம்மாள் மகளிர் கல்லூரி) நிறுவியுள்ளார்.

ஆதித்தனாரின் மகள் சரசுவதியை மணந்துகொண்ட கே. பி. கந்தசாமி கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். அவரையும் ஆதித்தனார் இதழாளராக மாற்றினார். வேலூர், சேலம், கோவை ''மாலை முரசு''கள், ''தினகரன்'' (சென்னை, திருச்சி, மதுரை, நெல்லை, கோவை, சேலம், வேலூர் ஆகிய நகரங்களில் அச்சாகிறது). ஆகியவை இவருக்கு உரியவை. ''சன்'' என்ற ஆங்கில நாளிதழையும் சிலகாலம் நடத்தினார். இப்பொழுது (1990) தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை அமைச்சராக இருக்கிறார்.

மூன்றாவது தலைமுறையும்-ஆதித்தனாரின் பேரப்பிள்ளைகளும்-இதழ் தொழிலில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடவேண்டிய சிறப்புச் செய்தியாகும்.

பா. இராமச்சந்திர ஆதித்தனாருக்கு இரு மகன்கள். கண்ணன் ஆதித்தன், சந்திரசேகரன் ஆதித்தன் என்ற இவர்கள் இருவருமே ''மாலை முரசு'', ''தேவி'', ''கண்மணி'' இதழ்களின் ஆசிரியர்-இயக்குநர் பொறுப்புகளை ஏற்றுள்ளார்கள்.

சிவந்தி ஆதித்தனாருக்கு ஒரே மகன். 'பெயரன்' என்பது தான் ''பேரன்'' என்று ஆயிற்று என்று சொல்லுவார்கள். இவர் பெயர், சிவந்தி பாலசுப்பிரமணிய ஆதித்தன்! ''சி. பா. ஆதித்தனார்'' என்ற பெயர் அப்படியே இருக்கிறது அல்லவா? இந்தப் பேரன், சி. பா. ஆதித்தன் இப்பொழுது ''மாலை மலர்'' நிர்வாக இயக்குநராகப் பணிபுரிகிறார்.

கே. பி. கந்தசாமி மகன் குமரன், ''தினகரன்'' நிர்வாக இயக்குநராக இருக்கிறார்.

ஆதித்தனார் ஓர் ஆலமரம். இவர்கள் எல்லாம் அந்த ஆலமரத்தின் விழுதுகள்.

### வழி காட்டும் ஒளி விளக்கு

ஆதித்தனார் குடும்பத்தினர் நடத்தும் ''ராணி'', ''ராணி முத்து'', ''ராணி காமிக்ஸ்'', ''மாலை மலர்'', ''மாலை முரசு'', ''தினகரன்'', ''தேவி'', ''கண்மணி'' ஆகிய எல்லா இதழ்களுமே வெற்றியுடன் நடந்துவருகின்றன. இவற்றின் வெற்றிக்குக்

''குலத் தொழில் கல்லாது பாகம்படும்'' என்று சொன்னாலும், இன்னொரு காரணமும் கூறலாம். அய்யா காடு திருத்தி, கழனி ஆக்கி, விதைத்து, நீர் பாய்ச்சி, உரமிட்டு, களை எடுத்து, துளிர்த்த பயிர் கருகிவிடாமல், வளர்ந்த பயிரை ஆடு மாடு மேய்ந்து விடாமல் இரவு பகலாகக் கண் விழித்துக் காவல் காத்து, ''தினத்தந்தி''யை வளர்த்தார். வளர்ந்த முருங்கை மரத்தில் இருந்து ஒரு கிளையை ஒடித்து நட்டுப் புதிய மரம் உண்டாக்குவது போல, மற்ற இதழ்கள் தோன்றின. அதனால்தான் தோன்றியதுமே மரமாகிவிட்டன.

இந்த இதழ்கள் அனைத்தும் ஆதித்தனாரையே வழிகாட்டியாகக் கொண்டுள்ளன. இந்த இதழ்களை நடத்துவோருக்கு அய்யா ஒளிவிளக்கு. அவரின் கொள்கைகளே இவர்களுக்கும். அய்யா கண்ட கனவுகளை நனவு ஆக்குவதே இவர்களின் நோக்கம்.

அய்யா அமரராகி ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் தொடங்கிய ''தினத்தந்தி'' எவ்விதத் தொய்வும் இன்றித் தொடர்ந்து வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அருகு போல வேரூன்றி ஆல்போலத் தழைத்துக் கிளைத்து விழுதுவிட்டு விரிந்து பரவுகிறது. அவர் காலத்தில் போன்றே இன்றும் (1990) தமிழ் நாளிதழ் விற்பனையில் ''தினத்தந்தி'' முதலிடத்தில் நிலைத்து நிற்கிறது.

இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் ''தினத்தந்தி''யில் எவ்வளவோ வளர்ச்சி. பதிப்புகள் ஒன்பது ஆனது மட்டுமல்ல; செய்திகளின் தரம் உயர்ந்திருக்கிறது. தமிழின் தரம் உயர்ந்திருக்கிறது. நிழல் அச்சு, வண்ண (''ஆப்செட்'') சுழல் அச்சு என்று இன்றைய மின்னணு-கணினி தொழில்நுட்பம் புகுத்தப்பட்டிருக்கிறது. எல்லா ஊர்களிலும் சொந்தக் கட்டிடம்.

''இன்று போலவே 'தினத்தந்தி' என்றும் பதினாறாக இளமையோடு இருக்க வேண்டும் என்ற வாழ்த்துக்களை நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று வெள்ளிவிழாவிலே அய்யா வாழ்த்தினார். அந்த வாழ்த்தின்படி குன்றாத இளமையும், குறையாத வளமையுமாகத் ''தினத்தந்தி'' இன்றும் விளங்குகிறது.

''கால் நூற்றாண்டு காலப் பணியை வெற்றியுடன் முடித்துள்ள 'தினத்தந்தி' தொடர்ந்து தமிழ்ப் பெருமக்களின் பேராதரவைப்பெற்று மேலும் வளர்ச்சி அடையும் என்பது உறுதி''

என்று அன்றே அறிஞர் அண்ணா நம்பிக்கை தெரிவித்தார். (வெள்ளிவிழா வாழ்த்துச் செய்தி) அந்த நம்பிக்கைப்படியே தமிழ் மக்களின் பேராதரவுடன் தொடர்ந்து 'தினத்தந்தி' வளர்ந்துவருகிறது.

'தினத்தந்தி'யில் பணியாற்றும் அத்தனைப்பேரும் - நிர்வாகிகள், ஆசிரியர், ஊழியர்கள் அனைவரும் - அய்யாவைத் தங்கள் இதய தெய்வமாகக் கொண்டு, அவரின் கொள்கைகளையே தங்களது கொள்கைகளாக ஏற்றுக்கொண்டு, அவர் காட்டிய வழியில் அணுவும் தவறாமல் நடைபோடுகிறார்கள். தமிழர்களுக்கு வாளாகவும், கேடயமாகவும் இன்றும் 'தினத்தந்தி' திகழ்கிறது. அதனால்தான் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று, தொடர்ந்து வெற்றிகளைக் குவிக்க முடிகிறது.

1992இல் "தினத்தந்தி"க்குப் பொன் விழா. வெள்ளிவிழாவிலே முதல்வர் கலைஞர் கவிபாடி வாழ்த்திய பொன்னான வரிகளை நினைவு கூர்ந்து, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

"வெள்ளியல்ல; பொன், வைர விழாக்கள்
எல்லாம் கொண்டாட
அள்ளி நான்வழங்குகிறேன் இதயவாழ்த்து!"

# ஆதித்தனார் ஆண்டுகள்

1905 சிவந்தி பாலசுப்பிரமணிய ஆதித்தனார் செப்டம்பர் 27இல் காயாமொழியில் (சிதம்பரனார் மாவட்டம்) பிறந்தார்.
தந்தை : சிவந்திஆதித்தன்.
தாய் : கனகம் அம்மையார்.

1909 திருவைகுண்டத்தில் பள்ளிப்படிப்பு தொடக்கம்.

1923 திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் படிப்பு தொடர்தல்.

1928 "பாரிஸ்டர்" படிப்புக்கு இலண்டன் பயணம்.

1933 சென்னை திரும்புதல். நாடார் மகாசன சங்க மாநாட்டுக்காகச் சென்னையில் "மகாசனம்" வார இதழ் தொடங்குதல். செப்டம்பர் 1 : சிங்கப்பூரில் திருமணம். மணமகள் கோவிந்தம்மாள். திருமணத்துக்குப் பின் சென்னை திரும்புதல். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோருடன் முதல் சந்திப்பு.

1934 இதழ் தொடங்கப் பணம் சேர்க்க "பாரிஸ்டர்" தொழில் செய்ய சிங்கப்பூர் பயணம்.

1942 உலகப் போர் சிங்கப்பூர் வரை விரிவடையவே, பிப்ரவரி 4இல் சிங்கப்பூரில் இருந்து கிளம்புதல். ஏப்ரல் 4இல் தமிழ்நாடு வந்து சேருதல். தமிழரசுக் கட்சி தொடங்குதல். சூலையில் "மதுரை முரசு" வாரமிருமுறை செய்தித்தாள் தொடங்குதல்.

ஆகஸ்டு 23 "தமிழன்" வார இதழ் தொடங்குதல்.
நவம்பர் 1ஆம் நாள் "தந்தி" நாளிதழ் தொடங்குதல்.

1947 தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்.

1952 பொதுத் தேர்தலில் போட்டியிட எதிர்க்கட்சிகளின் கூட்டணி அமைத்தார். அதன் செயலராகப் பணியாற்றினார்.

1953 உலக அமைதி மாநாட்டில் கலந்து கொள்ள தமிழ் நாட்டின் பேராளராக வியன்னாவுக்குப் பயணம். உருசியா உள்பட ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம்.

1955 மாத்தூர் உழவர் போராட்டத்தில் கைது. கைவிலங்கிட்டு அழைத்துச் செல்லல். சிறைவாசம்.

1956 உலகப் பயணம்.

1957 தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்.

1958 "நாம்- தமிழர்" இயக்கம் தொடக்கம்.

1960 இந்தி எதிர்ப்புப் போரில் சிறை. இந்திய தேசப்பட எரிப்புப் போரில் சிறை.

1964 மேலவை உறுப்பினர்.

1965 இந்தி எதிர்ப்புப் போரில் கைது. 91 நாள் தனிமைச் சிறை. தி.மு.க.வில் சேருதல்.

1967 சட்டப் பேரவை உறுப்பினர். சட்டப்பேரவைத் தலைவராகத் தேர்வு.

1969 பிப்ரவரி 1ஆம் நாள் கூட்டுறவு அமைச்சர், பின்பு உழவுத்துறை அமைச்சர்.

1972 சட்டப்பேரவை உறுப்பினர். அமைச்சராக நீடித்தல்.

1981 மே 24இல் இயற்கை எய்துதல்.


வார வெளியீடு
தமிழன்
2 அணா

# "தந்தி"யின் வளர்ச்சி

Regd. No. — 8 பக்கம் விலை 1½ அணா

| விளம்பர விகிதம் | தந்தி "THANTHI" | சந்தா விபரம் |
|---|---|---|

| மலர் 1 | மதுரை, சித்திரபானுஹு கார்த்திகை 16வ. செவ்வாய்க்கிழமை (1—12—42) | இதழ் 29 |
|---|---|---|

தோன்றியபொழுது (1-12-1942 இதழ்)




## 18—2—43 வியாழக்கிழமை

தமிழ்க் கொடியுடன்

RLCD No. M 5044

# தினத் தந்தி

DAILY THANTHI — நிறுவியவர் S. B. ஆதித்தன்

அசோகச் சக்கரம்

- தினத்தந்தி. ஒவ்வொரு அங்குலமும் தங்க நகை போல அலங்கரிக்கப்படுகிறது -

# தினத் தந்தி

DAILY THANTHI

| | | | |
|---|---|---|---|
| சென்னை (25-4-90) புதன்கிழமை | மலர் 48<br>இதழ் 296 | பிரமோதூத வருஷம் சித்திரை மீ 12உ<br>ஹிஜ்ரீ 1410 ரமலான் 28 | ஞாயிறு 175 காசு<br>வெள்ளி 175 காசு<br>மற்ற நாட்கள் 140 காசு |

இப்பொழுது

## தொடக்க காலத் தந்தி



★ நாஜிபடை வரிசையில் 20 மைல்

தந்தி

குறிப்பு

(நாட்டுக் காகிதத்தில் அச்சிட்டது)

4-பக்கங்கள் விலை ஒரு அணா

28-9-43 செவ்வாய்க்கிழமை

புரட்டாசி 12உ

★ பகோவில் 60,000 இத்தாலியர்கள்

★ தேசபக்தர்களுடன் சேர்ந்தனர்

★ போலீஸுக்கு 'டிமிக்கி' கொடுத்தவர்

## ஆதித்தனார் கையெழுத்து



# துணை நூற்பட்டியல்

அமைச்சர் ஆதித்தனார், குரும்பூர் குப்புசாமி, ராணி பதிப்பகம், சென்னை, 1969.

ஆதித்தனாருக்கு அஞ்சலி, குரும்பூர் குப்புசாமி, ராணி பதிப்பகம், சென்னை, 1982.

இதழாளர் கையேடு, சி. பா. ஆதித்தனார், ராணி முத்து வெளியீடு, சென்னை, 1971.

எனது இராசினாமா, தெ. ச. சொக்கலிங்கம், 1943.

ஒரு காக்கிச் சட்டையின் கவிதைகள், கவிஞர் குளச்சல் குமரேசன், 1989.

தமிழ் இதழ்கள் தோற்றம்-வளர்ச்சி, அ. மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 1987.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், சி. பா. ஆதித்தனார், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை, 1967.

தமிழப் பேரரசு, சி. பா. ஆதித்தனார், 1942.

''தினத்தந்தி''யின் இதழியல் உத்திகள்'', அ. சாந்தா, மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, 1980.

''தினத்தந்தி'' வெள்ளிவிழா, திரட்டு நூல், 1968.

நாள், கிழமை, திங்கள் இதழ் வரிசை, க. அ. இராமசாமிப் புலவர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1961.

பாண்டிய தேச ஆதித்த வம்ச சரித்திரம், பண்டித. தா. மாசில்லாமணி, 1931.

மக்கள் அரசில் இதழ்களின் பணி, டுவானே பிராட்லி (அமெரிக்கா) தமிழில் : ஏ. ஜி. வெங்கடாச்சாரி.

விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ம. பொ. சிவஞானம், இன்ப நிலையம், சென்னை, 1970.

## நேர்காணல்

எஸ். டி. ஆதித்தன் (ஆதித்தனாரின் அண்ணன், நெல்லை)

ஆர். சோமசுந்தரம், (தலைமை மேலாளர், ''தினத்தந்தி'', சென்னை.)

ஆர். பால்வண்ணன் (தலைமை காசாளர்) ''தினத்தந்தி'', சென்னை.)

டி. சாரங்கபாணி, ''தினத்தந்தி'' முகவர், திண்டுக்கல்.

எஸ். கணேச நாடார் தலைமையுரை (15-5-1970) கோவிந்தம்மாள் ஆதித்தனார் திருமண மண்டபத் திறப்பு விழா, திருச்செந்தூர்.

## மலர்கள்

''தினத்தந்தி'' வெள்ளிவிழா மலர்—1968

நெல்லை மாலை முரசு வெள்ளிவிழா மலர்—1984

''ராணி'' வெள்ளிவிழா மலர்—1987

ஆதித்தனார் கல்லூரி வெள்ளிவிழா மலர்—1990 (திருச்செந்தூர்)

''தமிழ்க்கொடி'' ஆதித்தனார் மணிவிழா மலர்—1965

ஆதித்தனார் பாராட்டு மலர்—எம். திருமாறன் 1965.

## ஆதித்தனாரைப் பற்றிய பிற நூல்கள்

தமிழர் தந்தை ஆதித்தனார் பாமாலை
(புலவர் ஏ. ஆலோசனை மரியான், வளர்மதி வெளியீடு, திருமலைக்குளம்-1975)

செந்தமிழ்ச் சிங்கம்
(கவிஞர் க. குழந்தைவேலன். பகலவன் பதிப்பகம், சென்னை-1983)

ஆதித்தனார் பாதை
(அழகை ப. நீலகண்டன், முத்துநாயகம் பதிப்பகம், அழகிய பாண்டியபுரம்-1959)

மாத்தூர் உழவர் போராட்டம்
(துரை. ஏழுமலை, மாத்தூர்-1960)

பேராற்றல் பெற்ற பெரியார்
(எஸ். நடராசன், அசோகன் பதிப்பகம், சென்னை-83)

ஆதித்தனார் அம்மானை
'நல்லைக்கவி' அ. இளங்கோவன் (அச்சில்).

# ஆதித்தனார் எழுதிய நூல்கள்

ஆதித்தனார் திருச்சியில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுதே "தீப்பெட்டி செய்வது எப்படி?", "சோப்பு செய்வது எப்படி?", "ஊதுபத்தி செய்வது எப்படி?" முதலிய கைத்தொழில் நூல்களை எழுதி வெளியிட்டார். அந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை.

சென்னையில் சட்டக் கல்லூரியில் படிக்க வந்தபொழுது, "இதழியல்" என்ற ஆங்கில நூலை எழுதினார். அந்நூலும் இன்று கிடைக்கவில்லை.

இப்பொழுது கிடைக்கும் நூல்கள்—

தமிழப் பேரரசு (1942)

ஆஸ்பத்திரித் தொழிலாளரின் அவல நிலை (சட்டப்பேரவை சொற்பொழிவு-1957)

இதழாளர் கையேடு-1971

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை விதிகள்-1987

Wind Energy Pump-1971

# சொல்லகராதி

(எண் - பக்க எண்)


அப்துல் சமது ஆ.கா.அ. 53
அறிஞர் அண்ணா 18,59,70,75, 88, 91, 98, 99, 120, 127,146, 151,158,160,167,172
ஆதித்தனாருக்கு அஞ்சலி 90
ஆனந்த விகடன் 44, 155
ஆஜ் 8
இதழாளர் கையேடு 151, 152, 155,160
இதழியல் 7
இந்தியாவில் இதழியல் 118
இந்து 44, 118, 122, 131, 135, 137
இரத்தினம் ஆர்.எஸ். 16
இரபீல்டு 7
இரவாய் மாணிக்கம் 78
இராமசாமி ஏ.ஆர். 106
இராமமூர்த்தி பி. 127
உமன் 69
உழவர் போராட்டம் 105
ஊழியன் 45
எக்ஸ்பிரசு 130
ஒரு பைசாத்தமிழன் 21
கண்ணாடி 166
கருணாநிதி 100, 132, 142, 157
கருமுத்து தியாகராசன் 86
கல்கண்டு 97, 111, 156
கல்கி 22, 30, 43, 44, 52, 56, 57, 142, 161
கவிமணி தேசிகவிநாயகம் 38, 45,160
காந்தியடிகள் 41, 62, 63, 124, 139, 162
காமராசர் 127
காயிதேமில்லத் 127
கிருஷ்ணன் என். எஸ். 50
குத்தூசி குருசாமி 176
குமுதம் 112, 141, 143, 161
குறள் 48, 79, 151, 166, 171
சங்க இலக்கியம் 48
சங்கப் பாடல் 117
'சங்கு' கணேசன் 143
சண்முகம் ஔவை தி.க. 45, 108
சாண்டில்யன் 98, 143
சாந்தா அ. 94, 96, 121, 122, 135, 141, 143, 157
சாரங்கபாணி கோ. 11, 16, 59
சாலை இளந்திரையன் 2, 95, 114
சாவி 47
சிதம்பரம் 45
சிப்பாய் 17, 47, 59, 60
சின்பின் 174
சின்ன அண்ணாமலை 7
சுத்தானந்த பாரதியார் 37
சுதேசமித்திரன் 8, 20
சுப்பிரமணியம் ப. 45
சுப்பிரமணியம் வ.அய். 112 114
சுவாமி எஸ்.கே. 45, 46
சுஜாதா 157
சொக்கலிங்கம் தெ.ச. 15, 72
டிவேலரா 174
டுவானே பிராட்லி 128
டெய்லிமிரர் 69, 166
டைம்ஸ் ஆப் இந்தியா 8
தங்கமணி கே டி.கே. 13
தமிழ்க் கொடி 61
தமிழ் நாடு 86
தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை 150
தமிழ்ப் பேரரசு 147
தமிழ் முரசு 11, 16
தமிழ்வாணன் 167
தமிழர் சீர்திருத்தச் சங்கம் 11
தமிழரசுக் கட்சி 61, 62
தமிழன் தாள் 24, 25
தமிழன் தீபாவளி மலர் 30
தாயின்மேல் ஆணை 169

திராவிட நாடு 44
திருக்குறளார் 97, 144
திருவாடுதுறை இராச
ரத்தினம் 38
திரு.வி.க. 70, 95, 117
தினத்தந்தி வெள்ளிவிழா மலர் 75
தேசபக்தன் 117
தொழில் நூல் வெளியீட்டகம் 6
நம்நாடு 93
நம்பூதிரிபாடு ஈ.எம்.எஸ். 134
நல்வழி 166
நவசக்தி 173
நவாப் இராசமாணிக்கனார் 134
நாட்டுத்தாள் 79
நாம் தமிழர் 59, 60, 61, 93, 147, 174
நாமக்கல் கவிஞர் 38, 59
நாயுடு ஜி.டி. 106
நாவலர் சோமசுந்தர
பாரதியார் 38
நாள், கிழமை, திங்கள் இதழ்
வரிசை 54
நாள் தாள் எழுத்தாளர்
கையேடு 155
நெடுஞ்செழியன் 79, 164
பகை நடுக்கம் 27
பண்டித அயோத்தியாதாசு 21
பத்திரிகை எழுத்தாளர்
கையேடு 155
பாண்டிய தேச ஆதித்த வம்ச
சரித்திரம் 6
பார்த்த சாரதி ரெ. 118
பார்த்திபன் கனவு 57
பாரதிதாசன் 26, 27, 169
பாரதிமலர் 25, 28, 29
பாரதியார் 27, 28
பிரின்சஸ் 69
பெரியார் 9, 11, 36, 58, 101, 127, 163
மக்களரசில் இதழ்களின் பணி 128
மக்கள் குறள் 16
மகாசனம் 18, 19
மதுரை முரசு 16
ம. பொ. சி. 15, 92, 99, 115, 137
மாத்தூர் 105
மாஜினி 47
முத்துசாமி எஸ். 45
முத்தையா சர். அ. 38
முரசு 63
முரசொலி 157
மு.வ. 92
ராணி வெள்ளிவிழாமலர் 23
ராஜாஜி 7, 99, 138, 175
ரீடர்ஸ் டைஜஸ்டு 166
வரத ராசலு ப. 4
வாசன் எஸ்.எஸ். 7, 35, 44, 49, 52
விசுவநாதம் கி.ஆ.பெ. 26, 38, 72, 95
விடுதலை 22, 36, 176
விபுலானந்த அடிகள் 38
விவேகசிந்தாமணி 49
வீரமணி கி. 102
ஜின்னா 124
ஸ்பெக்டேட்டர் 8

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1. சமயச் சொல்லகராதி ... 35-00
2. தொல்காப்பியம்—உயிரியல் ... 20-00
3. மங்கலதேவி கண்ணகி கோட்டம் ... 15-00
4. தமிழில் கதைப்பாடல் ... 25-00
5. வாத்திய மரபு ... 20-00
6. கு பு நாயகம் ஆய்வுரை ... 15-00
7. உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு ... 15-00
8. தமிழ் தந்த வ. உ. சி. ... 15-00
9, தொல்காப்பியம் சொல்லதிகாரம்—எச்சவியல் ... 45-00
10. மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை ... 15-00
11. உலக முதன்மொழி தமிழ் ... 12-00
12. மகாமதிப்பாவலர் ... 11-00
13. உ. வே, சா இலக்கணப் பதிப்புகள் ... 12-00
14. பாவாணர் ஆய்வு நெறி ... 22-00
15. செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் ... 15-00
16. மருந்து செய்முறைகள் ... 45-00
17. அகலமும் ஆழமும் ... 12-00
18. தமிழ் நாவல் (அகர வரிசை) ... 40-00
19. தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் ... 35-00
20. எண்பத்திரண்டில் தமிழ் ... 90-00
21. மொழி பெயர்ப்பியல் ... 10-00
22. நெல்லை மாவட்ட நாட்டுப்புறத்தெய்வங்கள் ... 15- 0
23. செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள் ... 25-00
24. விவிலியம்—திருக்குறள்—சைவசித்தாந்தம் —ஓர் ஒப்பாய்வு ... 20-00
25. டாக்டர் உ. வே. சா, காப்பியப் பதிப்புகள் ... 10-00
26. தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு ... 10-00
27. இனிக்கும் இராசநாயகம் ... 12-00
28. பாவாணரும் தனித்தமிழும் ... 50-00
29. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்—தொகுதி 2 ... 22-00
30. தமிழர் இசை ... 70-00
31. இளங்கோவின் இலக்கிய உத்திகள் ... 12-00
32. வர்ம சூத்திரம் ... 10-00
33. தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 9 ... 20-00
54. தொல்காப்பியம்—வினையியல் ... 20-00
35. தன்வந்தரி குழந்தை வாகடம் ... 14-00
36. தொல்காப்பியம்—பெயரியல் ... 12-00
37. தமிழரின் தாயகம் ... 10-00
38. தொல்காப்பியம்—விளிமரபு ... 6-00
39. தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல் ... 12-00
40. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்—தொகுதி 1 ... 12-00
41. உ. வே. சா. சங்க இலக்கிய பதிப்புகள் ... 10-00
42. இஸ்லாம் வளர்த்த தமிழ் ... 15-00
43. திராவிட மொழி இலக்கியங்கள் ... 35-00
44. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் ... 12-00
45- தமிழ்ச்சுவடிகள் அட்டவணை ... 6-00
46. Tamilnadu Bengal Cultural Relations ... 35-00
47. Tamil Verse in Translation ... 40-00
48. Education&Vocation (Heritage of the Tamils) ... 50-00
49. Tolkappiyam—(Phonology & Morphology) ... 25-00
50. Heritage of the Tamil—Temple Arts ... 60-00
51. Karaikkal Ammaiyar ... 6-00
52. A Tamil Reader Vol. 1&2 ... 65-00
53. பண்டைத்தமிழர் தொழில்கள் ... 45-00